# திருப்பாற்கடல்

வித்வான்
ல. சண்முகசுந்தரம்

சண்முகம் பதிப்பகம்

4, ஆர்க்காடு ஜம்புலிங்கம் தெரு,
ராதா நகர் : குரோம்பேட்டை,
சென்னை - 600 044

திருப்பாற்கடல்
முதல் பதிப்பு

உரிமை ஆசிரியருக்கே

| | | |
|---|---|---|
| நூல் | : | திருப்பாற்கடல் |
| பதிப்பாண்டு | : | டிசம்பர் 1992 |
| ஆசிரியர் | : | ல. சண்முகசுந்தரம் |
| பதிப்பாளர் | : | சண்முகம் பதிப்பகம்<br>4, ஆர்க்காடு ஜம்புலிங்கம் தெரு,<br>ராதாநகர் : குரோம்பேட்டை<br>சென்னை - 600 044 |
| உரிமை | : | ஆசிரியருக்கே |
| நூல்வகை | : | இலக்கியம் |
| அளவு | : | 1 × 8 கிரவுன் |
| பக்கங்கள் | : | 320 |
| தாள் - நிறை | : | 11.6 கிலோ |
| அச்சு | : | 10 பாயிண்ட் |
| கணிப்பொறி அச்சு | : | எல். கே. எம். கம்ப்யூட்டர் பிரிண்ட்ஸ்,<br>சென்னை – 600 017. |
| பைண்டிங் | : | கார்டு போர்டு |
| அச்சிட்டோர் | : | சக்தி பிரண்டர்ஸ்<br>208 திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை<br>திருவல்லிக்கேணி, சென்னை - 600 014 |
| நூல் வடிவமைப்பு | : | அமுதோன்<br>அமுதாலயம் – 2, சிவஞானம் சாலை,<br>தி. நகர், சென்னை - 600 017 |
| விலை | : | ரூ. 50/– |

# முகவுரை

மனிதன் என்றால் உணர்ச்சிகளின் மொத்த வடிவம் என்று பொருள். நினைத்தமாத்திரத்தில் திடுதிப்பென்று உண்டாகிவிடவில்லை மனிதன். கோடான கோடி வருடங்களாகக் கடவுள் தொடர்ந்து செய்த யோகமும் தவமுந்தான் மனிதன்.

பேரண்டம் முழுவதும் - அதாவது கடவுள் தத்துவம் என்று சொல்லுகிறோமே அது ஒரே உணர்ச்சிமயந்தான். அதனுள் ஒரு எண்ணம் உண்டாகியது. அந்த எண்ணமே அண்ட பிண்ட சராசரங்கள்.

உணர்ச்சி தத்துவமே நட்சத்திரங்கள் முதலிய ஜடப் பொருள்களாகவும், புல், பூண்டு, பூச்சிபுழு முதலிய உயிர்ப்பொருள்களாகவும் முடிவில் மனிதன் என்னும் உணர்ச்சிகளின் வடிவமாகவும் வட்டம் போட்டு வருகிறது.

இனி, தாவரத்திலிருந்து தாவரந்தான் உண்டாகும், புழுப்பூச்சிகளிலிருந்து புழுப்பூச்சிகள்தாம் உண்டாகும். விலங்குகள், பறவைகள் மூலம் அவை அவையே உண்டாகும்.

ஆனால் மனிதர்களிடமிருந்து மனிதர்கள் மட்டும் உண்டாவதில்லை. உணர்ச்சிகளே நவ நவமாக உண்டாகின்றன.

கலை, பண்பாடு, நாகரிகம் அவ்வளவுக்கும் மனிதனே ராஜா. அவ்வளவையும் அவன்தான் உண்டாக்கினான். அவன்தான் பாதுகாக்க வேண்டும்.

இது கருதியே மனுசனிடம் ஒரு தனித்த பண்பை இயற்கையானது ஒப்படைத்திருக்கிறது. அது என்ன?

புழுவிலிருந்து ஆலமரம்வரை அவ்வளவும் குலவிருத்தி செய்வதோடு சரி, அதனால் ஒரு குறிப்பிட்ட பருவம் மட்டும் போதும். உடலுறவை முடித்துக்கொண்டு ஒதுங்கி விடும். ஆனால் மனுச காரியம் அப்படி இல்லை. அதனால் வாழ்நாள் முழுவதும் கொஞ்சிக் குலாவ வேண்டி இருக்கிறது. அதனால் மனைவி என்றும், மக்கள் என்றும், குடும்பம் என்றும் நிரந்தரமாக வேண்டியிருக்கிறது.

அப்படி அமைந்தது வெறும் உடலுறவுக்காக மட்டும் இல்லை. குலவிருத்தி ஒன்றுக்காக மட்டும் இல்லை. பொங்கித் ததும்பும் உணர்ச்சிகளுக்கு கலை, இலக்கியம், சமயம், பண்பாடு முதலிய வடிவம் உண்டாவதற்காகவே.

உணர்ச்சிமயமான அந்த உண்மைகள் மேலும் மேலும் ஜொலிக்கவும் பூரிக்கவும் மேலே குறிப்பிட்ட வாழ்க்கை முறை தேவை.

இனி, ஸ்பென்சர் கம்பெனியில் போய் கட்டில் வேண்டும், மெத்தை வேண்டும் என்றால் விதவிதமாய்க் காட்டுவார்கள். ஆனால் மகிழ்ச்சி, துன்பம், எரிச்சல், உல்லாசம் ஆகிய உணர்ச்சிகளை இதோ பார் என்று காட்டவும் முடியாது, பார்க்கவும் முடியாது.

உணர்ச்சிகளைப் பார்ப்பதற்கு கலைகள்தாம் சாதனம். கண்ணாடி என்றால் கலைகள்தாம்.

கலைகளின் மூலம் உணர்ச்சிகளின் தாண்டவக் கோலத்தைப் பார்க்கப் பார்க்க ஆணவம் கரைந்துவிடும்.

'நான்' என்னும் தனிநிலை ஓடிவிடும். வெறுப்பு, பயம், எதுவும். இருக்காது. எல்லாம் ஒன்று அவ்வளவும் கடவுள் மயம் என்பது விளங்கிவிடும். அப்புறம் கடவுளுக்கு காணிக்கையாக அதை வழங்கினேன், இதை வழங்கினேன் என்பது எப்படி இருக்கும்?

இது சம்பந்தமாக ஒரு பாடல்,

வழிப்போக்கராய் நடந்து போய்க் கொண்டிருந்தார் கம்பர். கடும் கோடைவெயில். அலுத்துப் போனார். அப்படியே ஒரு பெருமாள் கோவிலில் ஒதுங்கினார்.

அர்ச்சகர் கம்பரிடம் வந்தார்;

"உச்சிக்காலம் வரப்போகிறது. உங்களுடைய கைங்கர்யம் என்ன? புளியோதரை போடலாமா? ததியோதனம் பண்ணலாமா" என்று கேட்டார் அர்ச்சகர்.

கம்பருக்குச் சிரிப்பு வந்துவிட்டது.

நான் என்பதே இல்லை. எல்லாம் அவன் மயம். இந்த உண்மையை உணரவே (என்னிடம்) திராணி இல்லை.

அப்படிக் கண்ணைக் கட்டி விளையாடுகிறான் அவன். அவனுக்குக் கொடுக்க அவன் விளையாடுகிற

விளையாட்டு - அதாவது நான், நான் என்னும் (பேதைமை) அறியாமை ஒன்றுதான் இருக்கிறது.

அறியாமை ஒன்றுதான் நான். மற்றவை எல்லாம் அவன். அப்படியானால் காணிக்கை அறியாமை ஒன்றுதான்.

உண்மை இப்படிப் பளிச்சென்று தெரிந்து விட்டால் சிரிப்புத்தானே வரும்.

அந்தச் சிரிப்பே பாடலாய் உருவெடுத்து வருகிறது. எப்படி?

**நாராய ணாய**
**நமஎன்று விண்ணோடு**
**பாராளும் பாதம்**
**பணிந்தேத்தும் ஆறறியேன்;**
**காராளும் மேனிக்**
**கருணா கரமூர்த்திக்கு**
**ஆரா தனைஎன்**
**அறியாமை ஒன்றுமே !**

அறியாமை இன்னதென்று தெரிந்தால் போதும். ஆணவம் கழலும். அது கழலக் கழல அறிவு வந்துவிடும். ஒரே ஆனந்த பரவசந்தான்.

இதுதான் ஆனந்த பரவசம் என்று கையைத் திறந்து நம்மால் காட்ட முடியுமா?

கம்பர் போன்ற தெய்வக் கலைஞர்களின் பாடல்கள் தாம் காட்ட முடியும்.

பெரியாள்வார், ஆண்டாள் இவர்களுடைய பாசுரங்கள் ஒவ்வொன்றும் ஆனந்த பரவசத்தைக் காட்டும் சாதனங்கள்.

ஆள்வார்கள் பன்னிரண்டு பேர். அவர்களில் பெரியாள்வாரும் ஆண்டாளும் முக்கியமானவர்கள்.

அவர்கள் பாடியனவாக உள்ள பாசுரங்களில் எனக்கு விளங்கியவற்றைத் தொகுத்து அவற்றுக்கு என் அனுபவத்தையே விளக்கமாகக் கொடுத்து வெளியிடுகிறேன்.

திருப்பாற்கடல் முதல் பாகம் என்று இதற்குப் பெயர் வைத்திருக்கிறேன். ஏனைய ஆள்வார்களின்

பாசுரங்களில் எனக்கு விளங்கிய பாடல்களுக்கு விளக்கம் கொடுத்து வெளியிட இருக்கிறேன். அதற்குத் திருப்பாற்கடல் இரண்டாம் பாகம் என்று பெயர்.

'திருப்பாற்கடல்' என்னும் இந்நூலில் உள்ள ஆண்டாள் பாடல்களும் விளக்கங்களும் 'ஓம் சக்தி' மாத இதழில் இரண்டரை வருடங்களுக்கு மேல் தொடர்ந்து எழுதி வந்தேன்.

'யமுனைத்துறைவன்' என்னும் புனை பெயரில் ஆண்டாள் பாடல் விளக்கக் கட்டுரை எழுதி வந்தேன்.

தொடர்ந்து வெளியிட்ட ஓம்சக்தி மாத இதழுக்கு என் மனப்பூர்வமான நன்றி.

குழந்தை ஒன்று உருவாகி வருவது அற்புதம். அது போன்றதோர் அற்புதந்தான் நல்ல நூல் ஒன்று அழகாய் உருவாகி வருவது.

ஆசிரியர் ஒருவரால் மட்டும் இது நடக்காது. கனிந்த மனம் படைத்த அன்பர் பலர் முன்வர வேண்டும்.

அப்படி ஓடி வந்தவர்களில் முக்கியமான அன்பர் கவிஞர் உயர்திரு அமுதோன் (அமுதபாரதி) அவர்கள்.

இனி அச்சில் விழுந்த பிழைகளை நீக்கி ஒவ்வொரு அம்சத்தையும் சுவைக்க வழி வகுத்தவர் திருவாளர் இராம கண்ணப்பன் அவர்கள்.

இவ்விருவருக்கு என் மனம் உவந்த நன்றி.

குறித்த காலத்தில் திருத்தமாகவும், செழிப்பாகவும் நூலை அச்சிட்டு உதவிய திருவல்லிக்கேணி சக்தி அச்சகத்தாருக்கு நன்றி உரித்தாகுக.

'யமுனைத்துறைவன்' என்ற பெயரில் ஒளிந்திருப்பவர் யார் என்பதை விசாரித்து என்னைப் பாராட்டிய நண்பர்களும் அன்பர்களும் பலர். அவர்களில் திருவனந்தபுரம் கலைக்களஞ்சியம் ஏ. சுப்பிரமணியம் முக்கியமானவர். தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம், மலையாளம் ஆகிய நான்கு மொழிகளிலும் புலமை மிக்கவர். அவருடைய பாராட்டை மேலட்டையில் குறிப்பிட்டுள்ளேன். அன்னாருக்கு என் நன்றி.

**இப்படிக்கு**
**ல. சண்முகசுந்தரம்**

# திருப்பாற் கடல்

# பெரியாள்வார் பாடல்கள்
# பிள்ளைத் தமிழ்

1 அழகான பொருள்கள் உலகில் எத்தனையோ இருக்கின்றன. ஒரு புஷ்பத்தை எடுத்துக் கொண்டால் "அழகு கொலுவிருக்கும் கோயில்" என்று சொல்லலாம்.

நன்றாகப் பூத்து விரிந்த செந்தாமரை மலரையோ வெண் தாமரை மலரையோ பார்க்கிறோம். அதன் அழகில் சொக்கிப் போகிறோம். சில விநாடிகளாவது நாம் நம்மை மறந்து விடுகிறோம்.

அழகுக்கு அப்படி ஒரு சக்தி - 'நான்' என்பதைச் சுருட்டி மடக்குகிற சக்தி – இருக்கிறது.

இனி, அழகும் இளமையும் பூத்துக் குலுங்கும் ஒரு பெண்ணை அவள் காதலன் பார்க்கிறான். அவளும் அவனை ஆசையோடு பார்க்கிறாள். அவ்வளவுதான்; பையன் அப்படியே சொக்கி மயங்கி விடுகிறான்.

மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும ஐம்புலன்களும், அவற்றின் செயல்களும் அப்படியே ஒடுங்கி விடும் பையனிடம்.

அரிய யோக சாதனங்களின் மூலம் சித்தத்தை ஒரு முனையில் நிற்க வைக்கும் ஞானிகளுக்குக் கூட புலன் உணர்வுகள் அப்படியும் இப்படியுமாகத் திமிறும். பையன் விசயத்தில் அப்படி எதுவுமே இல்லை.

கண்கள் அவளைப் பார்க்கும். வாய் பேசும். செவி கேட்கும். மூக்கோ வாசனையை நுகரும். கை அவளைத் தொட்டுத் தொட்டுச் சுகம் காணும். ஆனாலும் அவனுடைய ஐம்புலன்களும் செயலற்றே கிடக்கும்.

காரணம் அங்கே 'நான்' என்பது இல்லை. அது அப்பொழுது கரைந்து விடுகிறது.

இனி, காதலன், காதலி, உற்றார், உறவினர், வேண்டியவர், வேண்டாதவர் எல்லோரையும் ஒரே யடியாய் மயக்குகிற அற்புதம் ஒன்றிருக்கிறது. அதுதான் குழந்தை.

குழந்தையைப் பார்க்கப் பார்க்க கல்நெஞ்சும் கரைந்துவிடும். குழந்தையின் பொக்கை வாயும், புன்சிரிப்பும், பட்டுப்போன்ற பாதங்களும், பிஞ்சு விரல்களும், நீலமணி போன்ற கண்களும் பார்ப்பவர்களை உருக்கி விடும்.

குழந்தை படுத்துத்தான் கிடக்கும். ஆனாலும் அது கையை உதறும், காலை உதறும். துள்ளி எழுவதற்கு அப்படியும் இப்படியும் புரளும். கூர்ந்து பார்க்கும். வாய் திறந்து சிரிக்கும். காலின் பெருவிரலை கை விரலால் பிடிக்கும். குப்புற விழும். மல்லாந்து படுக்கும். எல்லாம் அற்புதமாக இருக்கும்.

குழந்தையைப் பார்த்து அனுபவிக்கிறவர்களுக்கு நேரம் போவதே தெரியாது. அவசரமாய் டிக்கெட் எடுக்கப் போகிறவர்கள்கூட அதை மறந்து விடுவார்கள். ரயில் நிலையம், பஸ்நிலையம், சினிமாக் கொட்டகை ஒன்றுமே ஞாபகத்தில் நிற்காது.

குழந்தையைப் பார்க்கப் பார்க்க அதிசயமாக இருக்கும். "இது எங்கிருந்து வந்தது, எப்படி வந்தது?" என்று யோசிக்க யோசிக்க புளகாங்கிதமாக இருக்கும்.

"கடவுள் கொடுத்த செல்வம், அவர் கொடுத்த வரப்பிரசாதம், தெய்வம் எடுத்த திரு அவதாரம்" என்று மனம் தெளியும்.

ஒரு பெண் கர்ப்பவதியாய் இருக்கிறாள். அவளைப் பார்க்கிறவர்கள் ஒவ்வொருவருக்கும் இதயத்தில் ஒரு பரிவு உண்டாகும். "பிள்ளையும் தாயும் பழுதில்லாத படி சௌகர்யமாய் இருக்க வேண்டும்" என்று அருள் உணர்வு சுரக்கும்.

இப்பொழுது பெண்ணானவள் தாயாகி விட்டாள். குழந்தை பிறந்து விட்டது. 'குவா, குவா' என்று குழந்தை சத்தம் போடுகிறது.

விபரம் தெரிந்தவுடன் எல்லோரும் ஓடி வருவார்கள். நாலா திசையிலிருந்தும் ஓடி வருவார்கள். பாவாடை கட்டிய சிறுமிகளிலிருந்து அறுபது எழுபது வயதைத்தாண்டிய மூதாட்டிகள் வரை ஒவ்வொருவரும் ஓடிவருவார்கள்.

உடைமாற்றம், அலங்காரம் ஒன்றையும் கவனிக்க மாட்டார்கள். தோசைக்கு அரைத்துக் கொண்டிருந்த வர்கள்கூட, மாவை வழித்துப் போடாமல் அப்படி அப்படியே ஓடி வருவார்கள்.

குழந்தையைப் பார்ப்பதில் அப்படி ஒரு ஆர்வம். ஒரு கிண்ணத்தில் எண்ணெய், இன்னொரு கிண்ணத்தில் வாசனைப் பொடி இவைகளை எடுத்துக்கொண்டு பெண்டுகள் ஓடி வருவார்கள்.

வேகமாக ஓடி வரும்பொழுது இன்னொரு பெண்மேல் மோதுவதும் உண்டு. குழந்தையைப் பார்க்கப் போகிற ஆனந்தத்தில் பெண்கள் ஒருவரை ஒருவர் ஆலிங்கனம் செய்து கொள்வதும் உண்டு. கையில் உள்ள வாசனைப் பொடியும் எண்ணெயும் சிந்தி சகதி ஆவதும் உண்டு. அதில் வைத்த கால் வழுக்குவதும் உண்டு.

இந்த உல்லாசத்தையும் எக்களிப்பையும் நெடுகிலும் மக்கள் அனுபவித்து வந்திருக்கிறார்கள். பெயர் சூட்டல், காது குத்தல், முடி எடுத்தல் என்றெல்லாம் விழா எடுத்தே அனுபவித்து வந்திருக்கிறார்கள்.

கவிஞர்கள் ஆனந்தமாய் அனுபவித்திருக்கிறார்கள். பக்தர்களும் ஞானிகளும் அப்படியே அனுபவித்து வந்திருக்கிறார்கள்.

பரமபக்தரும் ஞானியுமான பெரியாள்வார் ஆனந்தமயமாய் அனுபவிக்கிறார். ஒரு பெண் தாயாகிற அற்புதம் ஒன்று, இறைவனே குழந்தையாக அவதரித்தான் என்னும்படி குழந்தை வந்த அற்புதம் ஒன்று, உற்றாரும், உறவினரும் துள்ளி மகிழும் அற்புதம் ஒன்று எல்லாவற்றையும் பார்த்துப் பார்த்து அனுபவிக்கிறார் பெரியாள்வார்.

வடமதுரையில் வசுதேவருக்கும், தேவகிக்கும் மகனாகப் பிறந்து ஆயர்பாடியில் யசோதையிடம் வளர்ந்த கிருஷ்ண பகவானே இங்கே குழந்தையாக வந்து அவதரித்து விட்டான் என்று அனுபவிக்கிறார்.

ராமேஸ்வரம் போகிற வழியில் இருக்கிறது மானாமதுரை. மானாமதுரைக்கு வடகிழக்கே இருபத்து ஐந்து மைல் தொலைவில் இருக்கிறது திருக்கோட்டியூர்.

வைஷ்ணவர்களுக்கு மிக முக்கியமான புண்ணிய ஸ்தலம் திருக்கோட்டியூர்.

தெய்வீகமான மூல மந்திரத்தை கண்டு தெரிந்த உடனேயே எல்லோரும் இதன் பலனை அனுபவிக்க வேண்டும் என்ற தயாளத்தில் கோபுரத்தில் ஏறி நின்று அந்த மந்திரத்தை ராமானுஜர் முழக்கினார். அந்த இடம் இந்தத் திருக்கோட்டியூர் தான்.

அதே திருக்கோட்டியூர் ஆயர்பாடியில் அதே கிருஷ்ண பகவான் வந்து அவதரித்து விட்டான் என்று அனுபவிக்கிறார் பெரியாள்வார்.

திருக்கோட்டியூர், ஆயர்பாடி, கிருஷ்ண பகவான், ஆயர்கள் எல்லாமே குழந்தையை அனுபவிக்கும் அனுபவத்தில் வருகிற ஆனந்த சொரூபங்கள் தாம்.

தாயின் ஆனந்தமயமான பார்வையோடு கவிஞர்களும் பக்தர்களும் சேர்ந்து பார்க்கிறார்கள்.

அப்படிப் பார்ப்பதால் சாதாரணக் குழந்தை தெய்வம் ஆகிவிடுகிறது.

இனிப் பாடலைப் பார்ப்போம்.

குழந்தை பிறந்து விட்டது என்று கேள்விப்பட்டார்களோ இல்லையோ, பெண்கள் தங்கள் காரியங்களை அப்படி அப்படியே போட்டுவிட்டு ஓடி வருகிறார்கள்.

பாடல்கள் கலிவிருத்தம் என்னும் இனத்தைச் சேர்ந்தவை.

**தான தன்னன**
**தன்னன தானன**

**வண்ண மாடங்கள்**
**சூழ்திருக் கோட்டியூர்**
**கண்ணன் கேசவன்**
**நம்பி பிறந்தினில்**
**எண்ணெய் சுண்ணம்**
**எதிர்எதிர் தூவிடக்**
**கண்ண முற்றம்**
**கலந்தள(று) ஆயிற்றே ! 1**

**குறிப்பு :** வரலாறு என்று ஒன்று இருக்கிறது. கலை, இலக்கியம், பக்தி, விவசாயம், வாணிகம், போர், காதல், ஞானம், விஞ்ஞானம் எல்லாவற்றினுடைய வரவு செலவும் அதில்தான் அடக்கம்.

வண்ண மாடங்கள் சூழ் திருக்கோட்டியூர் - அழகிய மாட மாளிகைகள் நிறைந்த திருக்கோட்டியூரில், கண்ணன் ... பிறந்தினில் - கிருஷ்ண பகவானே அவதரித்து விட்டான். அவன் அவதரித்த அந்த வீட்டில், சுண்ணம் - வாசனைப்பொடி, கண்ண முற்றம் - விசாலமான முற்றம் முழுவதும், கலந்து அளறு ஆயிற்று - எண்ணெயோடு வாசனைப் பொடி சேர்ந்து தரையில் விழுந்ததால் எங்கும் ஒரே சேறும் சகதியும் ஆய்விட்டது

மனிதன் என்றால் வரலாற்றின் அத்தியாயம் என்று பொருள். வரலாறு என்னும் மாகாவியத்தின் ஒவ்வொரு வரியையும் ஒவ்வொரு எழுத்தையும் மனிதனே விதியின் கையைப் பிடித்து எழுதுகிறான்.

மனிதன் பிறக்கிறான் என்றால் சாதாரண காரியமா? அவதார மகிமையை மேளதாள முழக்கத்தோடு வரவேற்கிறது தமிழ்.

கைதட்டி வரவேற்கும் தமிழின் உல்லாசம் தாளத்திலும், இசையிலும் கிடக்கிறது.

**2** நான் முந்தி, நீ முந்தி என்று பெண்கள் ஓடி வருகிறார்கள். குழந்தை பிறந்த வீட்டின் உள்ளும், வெளியிலும் ஒரே நெரிசல். கூட்டம் கூடி விட்டதால் குழப்பம் வந்துவிடுகிறது.

ஆவலோடு குழந்தையை எடுத்து பெண்டுகள் அனுபவிக்கிறார்கள். மற்றப் பெண்களும் குழந்தையை எடுத்துப் பார்க்கத் துடிக்கிறார்கள்.

புதிதாக வந்த பெண்கள் தாயைப் பார்க்கிறார்கள். தாயின் பக்கம் குழந்தையைக் காணவில்லை. "எங்கே போய் ஒளிந்து கொண்டான். உறியில் இருக்கும் வெண்ணெயைத் தேடிப் போய்விட்டானா" என்றெல்லாம் நொடியும் மடக்குமாய் வருகிறது பேச்சு.

பேச்சின் உல்லாசத்தில் எல்லோருக்கும் ஒரு கிளுகிளுப்பு. அப்படியே சந்தோஷ மிகுதியில் ஒருவரை ஒருவர் அணைத்துத் தழுவிக் கொள்கிறார்கள். குழந்தையை எடுத்து ஆலிங்கனம் செய்கிற பாவனையில் பெண்கள் தழுவிக் கொள்கிறார்கள்.

முற்றத்தில் இளைஞர்களின் ஆட்டமும் பாட்டமும் ஒரே அமர்க்களந்தான்.

**ஓடு வார்விழு**
**வார், உகந்(து) ஆலிப்பார்,**
**நாடு வார், நம்**
**பிரான்எங்குத் தான்என்பார்,**

பாடு வார்களும்,
பல்பறை கொட்டநின்(று)
ஆடு வார்களும்
ஆயிற்றப் பாடியே! 2

**3** குழந்தை பிறந்த உடன் தெருவில் உள்ளவர்கள் பக்கத்துத் தெருவில் உள்ளவர்கள் எல்லோரும் அவசரம் அவசரமாக வந்தார்கள். ஆரவாரமாய் இருந்தது வீடு.

குழந்தை பிறந்து இரண்டுநாள், மூன்று நாள் என்று ஆகிறது. பக்கத்து ஊர்களில் உள்ளூர் உறவினர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு குழந்தை பிறந்த விபரம் தெரிகிறது.

குடும்பத்தோடு அவர்கள் புறப்பட்டு வருகிறார்கள். மூட்டை முடிச்சுகளோடு புறப்பட்டு வருகிறார்கள். வெற்றிலைக்கட்டு, பழக்குலை, சர்க்கரைப் பொங்கல் இப்படி எதை எதையோ அவர்கள் எடுத்துக் கொண்டு வருகிறார்கள்.

மகனைப் பார்க்கணும், பேரனைப் பார்க்கணும், மருமகனைப் பார்க்கணும்; தம்பியைப் பார்க்கணும், மைத்துனனைப் பார்க்கணும் என்னும் ஆவலோடு வருகிறார்கள்.

பிறந்த குட்டிப் பாப்பாவை வைத்து எதை எதையோ அவர்கள் உல்லாசமாகப் பேசி வருகிறார்கள். உல்லாசத்தில் சிரிப்பும் கும்மாளியும் கட்டிப்புரள்கின்றன.

விரிந்த முல்லை மலர்களைப் போல வெள்ளை வெளேர் என்று அப்பொழுது பற்கள் ஜொலிக்கின்றன.

---

ஓடுவார் விழுவார் - வருகிற வேகத்தில் ஒருவர் மேல் ஒருவர் விழுந்து சாய்கிறார்கள். உகந்து ஆலிப்பார் - சந்தோஷத்தில் தழுவிக் கொள்கிறார்கள். நாடுவார் - குழந்தையை எடுத்துப் பார்க்கத் துடிக்கிறார்கள். நம்பிரான் எங்குத்தான் என்பார் - குட்டித் தெய்வம் எங்கே போய் ஒளிந்து கொண்டது என்று ஆவலோடு கேட்கிறார்கள். குழந்தை பிறந்த ஆயர்பாடியில் பாட்டும் ஆட்டமும் ஜாம் ஜாம் என்று இருக்கின்றன.

பனையோலை, தென்னை ஓலை கொண்டு முடைந்த பாயை தலையில் போட்டிருக்கிறார்கள். வெயில் மழை இரண்டுக்கும் உபயோகம் அந்த ஓலைப்பாய்.

கையில் கம்பும் வைத்திருக்கிறார்கள். கோடாலி போன்ற கத்தியும் வைத்திருக்கிறார்கள்.

உற்றார், உறவினர்களாகிய ஆயர்கள் இப்படி வந்தார்கள். தலையில் வைத்திருந்த மூட்டையையும் தோளில் போட்டிருந்த நெய் உறியையும் எடுத்து குழந்தை முன் வைத்தார்கள். ஆரவாரித்து மகிழ்ந்தார்கள்.

பிறகு தலையில் போட்டு உடம்பை மூடி இருந்த ஓலைப்பாயை எடுத்துத் தரையில் போட்டார்கள். வரிசையாக உட்கார்ந்தார்கள். சர்க்கரைப் பொங்கலும், புளியோதரையும், ததியோதனமுமாக விருந்துண்டார்கள்.

குழந்தையை வாழ்த்தி வாழ்த்தி விருந்துண் டார்கள்.

**கொண்ட தாள்உறி**
**கோலக் கொடுமழு**
**தண்டி னர், பறி**
**ஓலைச் சயனத்தர்,**
**விண்ட முல்லை**
**அரும்பன்ன பல்லினர்,**
**அண்டர் மிண்டிப்**
**புகுந்துநெய் ஆடினார்! 3**

**4** பிரசவத்துக்கு இரண்டு மாதங்களுக்கு முன்பே தாய்வீட்டார் தங்கள் வீட்டுக்குப் பெண்ணை அழைத்துப் போவார்கள். பிரசவம் அங்கேதான்.

---

உறி - நெய், பால் ஊற்றி வைக்கும் கலையம். கொண்டதாள் உறி - கலையம் வைத்திருக்கிற கயிற்றுப் பின்னலோடு தோளில் போட்டுவந்தனர் ஆயர். மழு - கோடரி. கோலம் - அழகு, தண்டு - கம்பு, விண்ட - விரிந்த, அண்டர் - ஆயர், இடையர். மிண்டி - நெருங்கி இருந்து, நெய் ஆடினர் - விருந்துண்டனர்.

இரண்டு மூன்று பிரசவம் ஆனபின் புகுந்த இடத்திலேயே பிரசவம் ஆவதும் உண்டு. அப்பொழுதும் பெண்ணின் தாய் - குழந்தையின் பாட்டி அங்கு முன் கூட்டியே வந்துவிடுவாள்.

பாட்டியம்மாள்தான் தாய்க்கும் குழந்தைக்கும் உற்றதுணை. அவள்தான் பாதுகாவல்.

பிரசவ வீட்டில் தாய்க்கும் குழந்தைக்கும் பாட்டியம்மா செய்கிற காரியங்களையும், செய்முறை களையும், பக்குவங்களையும் பார்த்தால் அதிசயமாக இருக்கும்.

என்ன துள்ளியம், என்ன கணக்கு, என்ன பொறுமை, என்ன அடக்கம், எவ்வளவு ஞாபகசக்தி என்று வியந்து உருகி விடுவோம்.

அத்தனையும் ஒழுங்காக நடக்க வேண்டும். நெறிமுறையோடு நடக்க வேண்டும். மஞ்சாடிகூடப் பிசகக் கூடாது.

பொறுப்பில்லாமல் போய்விட்டால் தாயும் இல்லை, குழந்தையும் இல்லை. மனுச வர்க்கத்தில் கதையே பிறகு அப்படி அப்படித்தான்.

ஒவ்வொரு நாளும் குழந்தையை எடுத்துக் குளிப்பாட்டுவாள் பாட்டியம்மாள். அது ஒன்றைப் பார்த்தாலே போதும். 'பொறுப்பையும் நிதானத்தையும் எப்படிப் பெண்பாலரிடம் கொண்டு போய் ஒப்படைத் திருக்கிறது இயற்கை' என்பது தெரியவரும்.

குழந்தையை எடுத்துக்கொண்டு அங்கணத்துக்குப் போவாள். சிறு பலகை ஒன்றில் உட்கார்ந்து கொள்வாள். தன் இரண்டு கால்களையும், நீட்டி ஒன்று சேர்த்துக் கொள்வாள். நீட்டிய கால்களில் குழந்தையை உட்கார வைப்பாள். குழந்தையின் தலையில் எண்ணெய் வைத்து மெள்ளத் தேய்ப்பாள். பிறகு குழந்தையைத் தன் கால்களில் படுக்க வைப்பாள். குழந்தையின் கால்களையும், கைகளையும் நீட்டி நீவுவாள். எண்ணெய் வைத்துத் தேய்ப்பாள். மார்பு, முதுகு எங்கும் எண்ணெய் வைத்துத் தேய்ப்பாள்.

வெது வெது என்றிருக்கும் இளம் சூட்டு வெந்நீரை இரண்டு மூன்று செம்பு எடுத்து விடுவாள். அரைத்து வைத்த மஞ்சளைக் குழந்தையின் முகத்திலும் உடம்பிலும் பக்குவமாகப் பூசுவாள். வெந்நீரை எடுத்து விட்டுக் குளிப்பாட்டுவாள்.

கண்ணைத் துடைப்பாள், காதைத் துடைப்பாள், குழந்தையின் மூக்கிலிருந்து சளி வெளிவரும்படி மூக்கைப் பிடித்து சிந்தி விடுவாள்.

மஞ்சள் துண்டை வகிர்ந்து அதுகொண்டு குழந்தையின் நாக்கைத் தடவி விடுவாள். நாக்கில் உள்ள சளி, கோழை எல்லாம் வெளியில் வந்துவிடும்.

இவ்வளவையும் குழந்தை எப்படித் தாங்கும். விம்மி விம்மி அழும். ஆனால் வெந்நீரை விட விட அழுகை குறையும்.

குழந்தையை நன்றாகத் துவட்டி தலைமயிரைக் கோதிவிட்டு, நெற்றியைத் தடவிக் கொடுப்பாள். பிறகு பொட்டிட்டு, அண்டை கொடுத்த துணியோடு தாயின் பக்கத்தில் படுக்க வைப்பாள்.

குழந்தையைத் தாய் அணைத்துப் படுப்பாள். குழந்தையின் கோபம் எல்லாம் ஆறிவிடும். பிறகு குழந்தையைத் தடவிக் கொடுத்தபடியே அதன் கண்களை உற்றுப் பார்ப்பாள். குழந்தையும் தாயை ஆவலோடு பார்க்கும்.

அப்புறமும் குழந்தையைச் சேர்த்து அணைத்துக் கொள்வாள். குழந்தை கையையும் காலையும் உதறும்.

தாயைப் பார்த்து வாய் திறந்து சிரிக்கும் குழந்தை. அந்தப் பொக்கை வாய்க்குள்ளிருந்து என்னென்ன எல்லாமோ தெரியும். குழந்தை சிரிக்கச் சிரிக்க தாய்க்கு ஒரே அதிசயம். ஆனால் குழந்தையின் சிரிப்பில் என்ன வெல்லாமோ தெரியும்.

தன்னையே அந்தச் சிரிப்பில் தாய் பார்த்துப் பரவசப்படுவாள். அண்ட பிண்ட சராசரங்கள் எல்லாம் ஒருசேர எதிரில் வந்து நின்றால் எப்படிப் பெருமிதம்

உண்டாகும். அப்படி ஒரு பெருமிதத்துக்கு ஆளாவாள் குழந்தையின் சிரிப்பில் தாய்.

இனிப்பாடல்,

**கையும் காலும்**
**அழுக்கிக் கடாரநீர்**
**பைய ஆட்டிப்**
**பசிஞ்சிறு மஞ்சளால்**
**ஐய நாவழித்**
**தாளுக்குஅங் காந்திட**
**வையம் ஏழும்கண்**
**டாள்பிள்ளை வாயுளே ! 4**

**5** குழந்தை பிறந்து பதினோரு நாட்கள் ஆகிவிட்டன. விருந்தினர்கள் வந்து வந்து போகிறார்கள். தாயும் குழந்தையும் படுகுஷி. ஒருவரோடொருவர் பார்வை யாலேயே பேசிக் கொள்கிறார்கள். என்னென்னவோ பேசிக் கொள்கிறார்கள்.

பன்னிரண்டாவது நாளும் வந்துவிட்டது. குழந்தைக்கு இன்று பெயர் வைக்க வேண்டும். உற்றார் உறவினர் எல்லோரும் கூடி இருக்கிறார்கள்.

குழந்தையை நீராட்டி அலங்காரம் பண்ணி இருக்கிறது. குழந்தை படுத்திருக்கிறான். தவழ்வதற்கு உன்னி உன்னி முண்டுகிறான்.

---

*கடார நீர் - கொப்பரை அல்லது அண்டாவில் இருக்கிற நீர். பைய ஆட்டி - தண்ணீரை எடுத்து மெள்ள மெள்ள விட்டு நீராட்டி. ஐய - பக்குவமாக, நோவாமல் இதமாக. நாவழித்தாளுக்கு - நாக்கில் உள்ள கோழையை வழித்து எடுத்தாள் பாட்டி. அவளிடம் வாயைத் திறந்து கூப்பாடு போட்டது குழந்தை. அங்காந்திட - வாயைத் திறக்க.*

*அப்புறம் தாயிடம் வந்து சிரித்து மகிழ்ந்தது. குழந்தை சிரிக்கச் சிரிக்க, தாயும் சேர்ந்து சிரித்தாள். வையம் ஏழும் கண்டாள் பிள்ளைவாயுள் - அண்ட பிண்ட சராசரம் முழுவதையும் ஒரே உருவில் பார்ப்பதைப் போல் அதிசயம் அதிசயமாகப் பார்த்து மயங்கினாள் தாய். குழந்தையின் பொக்கை வாயும் சிரிப்பும் அப்படி இருக்கிறது தாய்க்கு.*

குழந்தையை ஒவ்வொருவராக கையில் எடுக்கிறார்கள். பாட்டன்மார், பாட்டிமார், மாமன்மார், மாமிமார், தகப்பன், தாய் என்று கைமாறிக் கைமாறிப் போய்க் கொண்டிருக்கிறான் பையன்.

கோவர்த்தனம் என்னும் மகாபர்வதத்தையே கையில் எடுத்து குடை போலத் தூக்கிப் பிடித்த கண்ணனைத் தான் - அதே கண்ணனைத்தான் ஆயர்கள் எடுத்து எடுத்துக் கொடுத்தார்கள். ஒவ்வொருவரும் ஊஞ்சலாட்டுவது போல் ஆட்டி மகிழ்ந்தார்கள்.

இப்படியாக நடந்தது பெயர் சூட்டு விழா.

**பத்து நாளும்**
**கடந்த இரண்டாம்நாள்**
**எத்தி சையும்**
**சயமரம் கோடித்து**
**மத்த மாமலை**
**தாங்கிய மைந்தனை**
**உத்தா னம்செய்து**
**உகந்தனர் ஆயரே !** 5

**6** குட்டிப்பாப்பா - கண்ணன் பிறந்து ஆறு மாதங்கள் ஆகிவிட்டன. இப்பொழுது பெற்றோர் வீட்டிலிருந்து குழந்தையும் தாயும் சொந்த வீட்டுக்கு வந்து விட்டார்கள்.

இனிமேல், "உன்பாடு, உன் பிள்ளை பாடு" என்று செல்லமாக அலுத்துச் சலுத்துச் சொல்லிவிட்டு

பத்துநாளும் ... இரண்டாம் நாள் - குழந்தை பிறந்த பன்னிரண்டாம் நாளில். எத்திசையும் சயமரம் கோடித்து - வீட்டின் முன்னும் பின்னும் வலது தெரு, இடது தெரு எல்லா இடத்திலும் மங்கலத்தூண் நட்டி. மஞ்சள் பூசி, குங்குமம் அப்பி, குழைவைத்துக் கட்டிய கம்புதான் சயமரம். கோடித்து - நட்டு, மத்த - மைந்தனை - கோவர்த்தன மலையைக் குடையாக எடுத்துப் பிடித்த கண்ணனை. உத்தானம் செய்து - எடுத்து. உகந்தனர் - மகிழ்ந்தார்கள். ஆயர் - இடையர்.

பாட்டியம்மாளும் அவள் குடும்பத்தாரும் அவர்கள் ஊருக்குப் போய்விட்டார்கள்.

அங்கொரு சமயம் இங்கொரு சமயம் என்று தகப்பனானவன் பிள்ளையைப் பார்க்கிறது உண்டு. கொஞ்சுவதும் உண்டு. விளையாடுவதும் உண்டு. ஆனால் குழந்தைக்கு தாய்தான் துணை. தாய்க்குக் குழந்தைதான் துணை.

குழந்தைக்கு இப்பொழுது வயது ஒன்றாகிவிட்டது. 'தள தள' என்று வளர்ந்து வருகிறான் கண்ணன்.

குறும்பும் சேர்ந்தே வளர்கிறது. சேட்டையும் போட்டி போட்டுக் கொண்டு வளர்கிறது. படுசுட்டியாய் '<u>துறுதுறு</u>' என்று வருகிறான் பையன்.

'கண்' எங்கே என்று கேட்டால் போதும். ஒரு சிமிட்டுச் சிமிட்டி கண்ணைக் காட்டிவிடுவான். மூக்கு எங்கே என்றால் ஒரு சுருக்குச் சுருக்கிக் காட்டுவான். வாய் எங்கே என்றால் போதும். அகலத்திறந்து காட்டுவான். உதடு எங்கே என்றால் குவித்துக் காட்டுவான்.

அம்மாவுக்கு கண் எங்கே இருக்கிறது என்றால் வெட்கப்பட்டு குனிந்து தன்னையே காட்டிவிடுவான்.

இவ்வளவையும் எளிதில் படித்துவிட்டான். நன்றாக ஞாபகத்திலும் வைத்துக் கொண்டான்.

குறும்பும் சேட்டையும் இவ்வளவோடு நிற்கவில்லை. தாயைப் பாடாய் படுத்துகிறான். ஒரு வேலையையும் ஒழுங்காய்ப் பார்க்க விட மாட்டேன் என்கிறான்.

தண்ணீர்த் தொட்டியில் கையை விடுகிறான். கொதிக்கும் குழம்புச் சட்டிக்குள்ளும் கையைவிட நீட்டுகிறான்.

என்ன செய்வாள் தாய், பாவம்.

ஒவ்வொன்றையும் ஆனந்தமாய் அனுபவிக்கிறாள்.

ஒருநாள் அவளுக்கே கோபம் வந்து விட்டது. சமையல் காரியம் ஒன்றையும் பார்க்கவிடாமல் சண்டித்தனம் பண்ணினான் பையன்.

உப்பை அள்ளி காய்ச்சிய பாலில் போட்டான். மோரை எடுத்துக் குழம்புச் சட்டியில் ஊற்றினான். எண்ணெயைத் தண்ணீரில் கொட்டினான். தண்ணீரை நெய்யில் ஊற்றிவிட்டான்.

ஒரு கயிற்றை எடுத்தாள். குழந்தையின் அரைஞாண் கயிற்றோடு சேர்த்துக் கட்டினாள். அதை அப்படியே கொண்டு வந்து நிலையின் கொண்டியில் போட்டு முடிந்துவிட்டாள்.

மரப்பாச்சி, கொலுப் பொம்மைகளை அள்ளி வந்து குழந்தையின் முன் போட்டுவிட்டாள்.

விளையாட்டுச் சாமான்கள் ஒவ்வொன்றையும் எடுத்து மூலைக்கு ஒன்றாக விட்டெறிந்தான் பையன். எறிந்த சாமான்களை எடுப்பதற்கு அப்படியும் இப்படியும் தவழ்ந்து பார்த்தான். சில பொருள் சிக்கின. சில பொருள் சிக்கவில்லை.

கையில் சிக்கவில்ல என்றவுடன் பையனுக்கு ஆத்திரம் வருகிறது. அழுகையே வந்துவிடுகிறது. கத்துகிறான். கதறுகிறான். தரையில் குனிந்து முட்டுகிறான். சாமான்களை எடுத்து குழந்தையின் முன் போடுகிறாள் தாய். மறுபடியும் சிதறுகிறது சாமான்.

அலுப்பு வருகிறவரை இப்படித்தான். சிதறுவதும், சேர்ப்பதும், அம்மா வந்து எடுத்து வைப்பதும் இப்படியாக இருக்கிறது.

குழந்தை அலுத்துப் போய்விட்டது. அப்படியே செங்கல் தரையில் படுத்துவிட்டான் பையன். தலையணை ஒன்று எடுத்து வந்து குழந்தைக்கு தலைக்கு வைத்தாள் தாய்.

இரண்டு முழந்தாள்களையும் தரையில் ஊன்றி, தலையணையில் முகத்தை வைத்து தூங்கிவிட்டான் பையன்.

இந்தக் காட்சியைப் பக்கத்தில் நின்று பார்த்துப் பார்த்து அனுபவித்தாள் தாய். அந்த வேளையில் அதே தெருவில் இருக்கிற சிநேகிதி ஒருத்தி அங்கு வந்தாள். அவளும் குழந்தை படுத்து உறங்குகிற கோலத்தைப் பார்த்து அனுபவித்தாள்.

பிறகு தாயிடம் கேட்டாள், "ஏனடி இவ்வளவு இளைத்து விட்டாய், துரும்பாய்ப் போய் விட்டாயே" என்று.

அதற்குத் தாய் சொல்லிய பதில் இதுதான்:

இந்தப் பிள்ளையை வைத்துக் கொண்டு இளைக்காமல் என்ன செய்வது? இவன் அட்டகாசத்தைத் தாங்க வேண்டுமானால் இரும்பால்தான் பிரமதேவன் என்னைப் படைக்க வேண்டும்.

அரை நாழிகையாவது சும்மா இருக்கானா? இல்லை, அரை நாழிகையாவது தொட்டிலில் கிடந்து தூங்குகிறானா?

**கிடக்கில் தொட்டில்**
**கிழிய உதைத்திடும்**
**எடுத்துக் கொள்ளில்**
**மருங்கை இறுத்திடும்**
**ஒடுக்கிப் புல்கில்**
**உதரத்தே பாய்ந்திடும்**
**மடுக்கி லாமையால்**
**நான்மெலிந் தேன்நங்காய்! 6**

கிடக்கில் ... உதைத்திடும் - தொட்டிலில் படுக்கப் போட்டால் போதும். நாலே மிதிதான். தொட்டில் வேட்டி தும்பு தும்பாய்க் கிழிந்துவிடும். எடுத்துக் கொள்ளில் - தூக்கம் வரவில்லை போலும் என்று எடுத்து இடுப்பில் வைத்தாலோ, மருங்கை இறுத்திடும் - குறுக்கெலும்பே ஒடிந்துவிடும் போல இருக்கிறது. காலாலும் கையாலும் அப்படி அடிக்கிறான். மருங்கு - இடுப்பு. ஒடுக்கிப்புல்கில் - மார்போடு சேர்த்து அணைத்து வைத்தாலோ - உதரத்தே பாய்ந்திடும் - பலத்தை எல்லாம் ஒன்று திரட்டி மூர்க்கத் தனமாக வயிற்றில் 'நை நை' என்று எத்துகிறான். உதரம் - வயிறு, மிடுக்கு இலாமையால் - அடியையும் மிதியையும் தாங்க வலுவில்லாமல், நான் மெலிந்தேன் - தேகம் இற்றுப் போய்விட்டது., நங்காய் - சகியே.

குறிப்பு : குழந்தைகளை வளர்ப்பதில் மட்டும் அல்ல, குழந்தைகளை அனுபவிக்கிற காரியத்திலும் பெண்கள் தாம் அதிகாரிகள். ஆண்கள் வழிவிட்டு விலகி நிற்க வேண்டியதுதான்.

கவிஞர்களை எடுத்துக் கொண்டால், அதில் ஆண்களும் உண்டு. பெண்களும் உண்டு. அவர்கள் யாராக இருந்தாலும், குழந்தைகளை நன்றாக அனுபவிப்பார்கள். தாய் போலவே அனுபவிப்பார்கள்.

பெரியாள்வார் மாசற்ற ஞானி. பரம பக்தர். தெய்விகக் கவிஞர். தாய் அனுபவிப்பது போலவே குழந்தையை அனுபவிக்கிறார்.

பெரியாள்வாரின் அனுபவத்தை தாளத்திலும் இசையிலும் வைத்து அபிநயம் பிடித்துக் காட்டுகின்றன பாடல்கள்.

சிருஷ்டி தத்துவம் என்பது நடந்து கொண்டே இருக்கிறது. பேரண்டம் முழுவதும் தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கிறது.

கோழி முட்டைக்குள் ஒரு சிரங்கை தண்ணீர் தான். மயில் முட்டைக்குள்ளும் ஒரு சிரங்கை தண்ணீர் தான்.

கோழி முட்டைக்குள்ளிருந்து கோழிக் குஞ்சுதான் வரும். மயில் முட்டைக்குள்ளிருந்து மயில் குஞ்சுதான் வரும்.

ஊழூழி காலமாக இந்த ஞாபக சக்தி சிருஷ்டி தத்துவத்துள் நிறைந்து நிற்கிறது. இந்த ஞாபக சக்திதான் உயிர் வர்க்கத்தைப் பாதுகாக்கிறது. தாய்மை உணர்ச்சியாய் நின்று குழந்தைகளைக் காப்பாற்றுகிறது.

தன் குட்டிகளுக்கு பூனை எப்படிப் பாய்ச்சலையும் பம்மாத்தையும் சொல்லிக் கொடுக்கிறது என்பதைப் பார்த்தாலே போதும். தாய்மை உணர்ச்சி விளங்கிவிடும்.

குட்டியை வயிற்றோடு சேர்த்து வைத்துக் கொண்டு கிளைக்குக் கிளை தாவிப்பாய்கிறது குரங்கு.

பறவைகளோ நெடுந்தூரம் சென்று, இரையைச் சேகரித்து, நன்றாக மென்று, மாவும் கூழுமாக வாயில் போட்டு ஒதுக்கி வைத்துக் கொண்டு கூட்டிலிருக்கும் குஞ்சுகளுக்கு வந்து ஊட்டுகின்றன.

எல்லாம் அதிசயந்தான்.

தாயும் குழந்தையும் அதிசயந்தான். இந்த அதிசயத்தை அனுபவிக்க அனுபவிக்க பாஷையானது கவிகளைச் சொரியத்தானே செய்யும்.

# பரவசப்படுத்தும் அழகு

**1** குழந்தையின் ஒவ்வொரு செயலையும் - ஒவ்வொரு அசைவையும் அனுபவிப்பாள் தாய். உற்றார், உறவினர், தெருக்காரர், ஊர்க்காரர் எல்லோருமே குழந்தையை அனுபவிப்பார்கள்.

பெண்களின் அனுபவம் தனி. பெற்ற தாய் போலவே ஒவ்வொரு பெண்ணும் அனுபவிப்பாள். தாயின் கண் கொண்டே அனுபவிப்பாள்.

தொட்டிலில் படுத்திருக்கிறது குழந்தை. படுத்திருக்கும் குழந்தை ஒரு காலை வளைத்து வாயின் பக்கம் கொண்டு போகிறது. காலின் கட்டை விரலை வாய்க்குள் கொடுத்து சூம்புகிறது.

இந்தக் காட்சியைப் பார்த்தவுடன் தாயின் உள்ளம் உருகாமல் என்ன செய்யும்? "வாருங்கள், வாருங்கள். பாருங்கள், பாருங்கள். போக்கிரிப் பயல் என்ன செய்கிறான் என்று பாருங்கள்" என்று சத்தம் போட்டு மற்றவர்களைக் கூப்பிடுவாள் தாய்.

சும்மா இருக்க முடியாது அவளால்.

குழந்தையின் செயலைப் பார்த்த வேறு பெண்களின் நிலையும் அப்படித்தான்.

*தாய் போலவே அவர்களும் கைதட்டிக் கூப்பிடு வார்கள். தெருவில் போகிற வருகிற பெண்களைக் கூட அழைத்துக் காட்டுவார்கள்.*

*தேவகியின் வயிற்றில் பிறந்து யசோதையிடம் வந்து வளர்ந்த கோபால கிருஷ்ணனாகவே தெரிகிறான் தொட்டிலில் கிடக்கிற பையன்.*

*இனிப் பாடலைப் பார்ப்போம் - கலித்தாழிசை.*

**தான தனன**
**தன்னான தான**

**சீதக் கடல்உள்**
**அமுதன்ன தேவகி**
**கோதைக் குழலாள்**
**யசோதைக்குப் போத்தந்த**
**பேதைக் குழவி**
**பிடித்துச் சுவைத்துண்ணும்**
**பாதக் கமலங்கள்**
**காணீ ரே !**
**பவளவா யீர்வந்து**
**காணீ ரே ! 7**

**2** *கிருஷ்ணன் பிறந்த வீட்டில் பல பசுக்கள் இருந்தன. அவன் வளர்ந்த யசோதை வீட்டிலும் அப்படித்தான்.*

---

*சீதக் கடல் உள்அமுது அன்ன தேவகி - குளிர்ச்சி பொருந்திய திருப்பாற் கடலில் உண்டான அமிர்தம் போன்ற நளினமும் ஒய்யாரமும் மிக்க தேவகி. கண்ணன் பிறந்தது தேவகி வயிற்றில்.*

*கோதைக் குழலாள் யசோதைக்கு போத்தந்த - கொத்துக் கொத்தாய் மலர்சூடிய கூந்தலை உடைய யசோதையிடம் வந்து வளர்ந்த அந்தக் கண்ணன். பேதைக் குழந்தை - விபரம் தெரியாத மதலை. விரலைச் சுவைப்பதை விட்டு விட்டு இடை இடையே தாயைப் பார்த்துக் குழந்தை சிரிக்கும். மறுபடியும் விரலைச் சுவைக்கும். இவற்றுக்கெல்லாம் நேரான பொருள் இல்லைதான். ஆனால் அந்த விபரம் தெரியாத பிள்ளைக்கு அதுதான் தொழில். பாதக்கமலம் - தாமரை மலர் போன்ற பாதமும் விரலும். கமலம் - தாமரை. காணீரே பவளவாய் - சிவந்தவாய்.*

நமது கதாநாயகன் இருக்கிறானே குட்டப்பயல், இவன் வீட்டிலும் பால் மாடுகள் பல உள்ளன.

மூலைக்கு மூலை தயிர்க் குடங்களும் மோர்க் குடங்களுமாய் இருக்கிறது. அங்கங்கே உறிகளைக் கட்டி தொங்க விட்டிருக்கிறது. உறிக் கலயங்களில் வெண்ணெயும் நெய்யுமாய் நிறைந்திருக்கின்றன.

தயிரை மோராகக் கடைகிறாள் தாய். வெண்ணெயை எடுத்து எடுத்துக் கலயத்துள் போடுகிறாள்.

எழுந்திருந்து அவசரமாய் அடுக்களைக்குள் போகிறாள். 'குடுகுடு' என்று ஓடி வருகிறான் பையன். தயிர்ச் சட்டியைக் கவிழ்த்து விடுகிறான். வெண்ணெயை அள்ளி அள்ளி வாயில் போடுகிறான். கடைவாய் எல்லாம் ஒழுகுகிறது வெண்ணெய்.

தாய்க்குக் கோபம் வந்துவிட்டது. முகத்தில் எரிச்சலை வரவழைத்துக் கொண்டு கண்களை உருட்டுகிறாள். மத்திலிருந்து கயிற்றை உருவி, நான்காக மடித்துக் கொள்கிறாள்.

'உரித்து விடுவேன் தோலை' என்று மிரட்டுகிறாள். பதறிப் போனான் பையன். முழங்கால்களைத் தரையில் ஊன்றியபடியே முன்கட்டுக்கு ஓடி வருகிறான் பையன்.

அந்த நேரம் பக்கத்து வீட்டுக் காரி வந்தாள். பையனுடைய வேகம், முழங்கால், பயம் எல்லாவற்றையும் பார்த்தாள்.

எல்லோரும் ஓடிவாருங்கள் - வந்து பாருங்கள் என்று சத்தம் போட்டுக் கூப்பிடுகிறாள்.

**உழந்தாள் நறுநெய்**
**ஓரோர் தடாஒண்ண**
**இழந்தாள் எரிவினால்**
**ஈர்த்து எழில்மத்தின்**
**பழந்தாம்பால் ஓச்சப்**
**பயத்தால் தவழ்ந்தான்**

முழந்தாள் காணீ　இருந்தவா ரே !
முகிழ்முலை காணீ　யீர்வந்து ரே ! 8

**3** குழந்தைபடுத்துகிற பாட்டை ஆடவர்களால் தாங்க முடியாது. பெண்களால் தான் அது முடியும். குழந்தையின் விஷமத்தனத்தையும் வம்பு தும்பையும் பார்த்து நன்றாக அனுபவித்தவர்கள், அதற்கு ஒரு உருவகமே பண்ணிவைத்து விட்டார்கள்.

அந்த உருவகந்தான் கிருஷ்ணன். வசுதேவருக்குத் தேவகியின் வயிற்றில் பிறந்து யசோதை வீட்டில் வளர்ந்த கிருஷ்ணபரமாத்மா தான் குழந்தைகளின் அடையாளம்.

ஒவ்வொரு வீட்டுக் குழந்தையும் ஒவ்வொரு சாதாரணக் குழந்தையும் கிருஷ்ண பரமாத்மாதான்.

குழந்தையின் குறும்பையும் அடத்தையும் தாங்க முடியாமல் தத்தளிக்கிற ஒவ்வொரு தாயும் இப்படித்தான் நினைப்பாள்: "இந்தப் பயல்தான் அந்தக் காலத்தில் யசோதையை அழ அழப்படுத்தினான். வசுதேவருக்கும் தேவகிக்கும் மகனாகப் பிறந்தான். இப்பொழுது என் கழுத்தை அறுக்க வந்திருக்கிறான்."

தன்னுடைய குழந்தை அந்தக் காலத்துக் கிருஷ்ணன்தான் என்பதை உண்மையாகவே நம்புகிறாள். உணர்ச்சிமயமாக நம்புகிறாள் தாய். அதனால் தான் யார் என்பதையே மறந்துவிடுகிறாள்.

---

உழந்தாள் நறுநெய் - கஷ்டப்பட்டுச் சேர்த்த வெண்ணெய். ஓர்ஓர்தடா உண்ண - ஒவ்வொரு சட்டியிலும் கைவிட்டு அளைந்து எடுத்து தின்றான் பையன். இழந்தாள் - கஷ்டப்பட்டு எடுத்த வெண்ணெய் போய்விட்டது. எரிவினால் - எரிச்சலில், ஈர்த்து - பையனை இழுத்து நிறுத்தி, எழில்மத்தின் பழம்தாம்பு - அழகிய மத்தோடு சுற்றிக் கிடந்த பழைய கயிறு. ஓச்ச - அடிப்பதற்கு ஓங்கினவுடன் பயந்து ஓடினான் பயல். என்ன வேகம், என்ன பயம், என்ன நடை, பார்ப்பதற்குத் தவம் செய்திருக்க வேண்டும் கண்கள்.

*'யசோதா தான் நான்' என்று எண்ணிவிடுகிறாள். இந்த எண்ணமே அவளை ஆட்டு ஆட்டு என்று ஆட்டுகிறது.*

*பூதனை என்னும் பெண்பேய் விஷப்பால் கொடுத்துக் கொல்ல தன் குழந்தையை மடியில் எடுத்து வைத்தது ஞாபகத்துக்கு வருகிறது. பதறிவிட்டாள் தாய். அப்படியே தன் மடியில் தூக்கி வைத்தாள் குழந்தையை.*

*குழந்தையின் வயிற்றில் கைவைத்து தடவிக் கொடுத்தாள். வெண்ணெய் திருடியதால் கயிறு கொண்டு கட்டப்பட்ட வயறு இது என எண்ணினாள். சிரித்துவிட்டாள் தாய்.*

**அதிரும் கடல்நிற**
**வண்ணனை ஆய்ச்சி**
**மதுர முலைஊட்டி**
**வஞ்சித்து வைத்து**
**பதறப் படாமே**
**பழந்தாம்பால் ஆர்த்த**
**உதரம் இருந்தவா**
**காணீரே !**
**ஒளிவளை யீர்வந்து**
**காணீரே ! 9**

**4** *வெண்ணெயைத் திருடினான். நெய்யைக் கொட்டினான். தயிர்ப்பானையை உடைத்து விட்டான்.*

*உரலைப் பிடித்துக் கொண்டே தொங்கும் உறிக் கலயத்து வெண்ணெயை அள்ளிச் சிந்தினான்.*

*கோபம் வந்துவிட்டது தாய்க்கு. தாம்புக் கயிற்றால் உரலோடு சேர்த்துக் கட்டிவிட்டாள் பிள்ளையை.*

---

*அதிரும் கடல் நிறவண்ணன் - 'ஓ' என்று கத்தும் கடல் போன்ற நீலநிறக் கண்ணன். மதுரம் - சுவைமிக்க. தாம்பு - கயறு, உதரம் - வயிறு.*

பலம் கொண்ட மட்டும் முண்டியது குழந்தை. உரல் சாய்ந்து விழுந்தது. அதில் சிக்கிய மரப்பலகை, பெட்டி எல்லாம் தூள் தூளாய் நொறுங்கி விட்டன.

என்ன செய்வாள் தாய்?

'இவ்வளவு தைர்யமா' என்று பிள்ளையின் நெஞ்சைப் பார்ப்பாள் தாய்.

**பெருமா உரலில்**
**பிணிப்புண்(டு) இருந்தங்கு**
**இருமா மருதம்**
**இறுத்தஇப் பிள்ளை**
**குருமா மணிப்பூண்**
**குலாவித் திகழும்**
**திருமார்(பு) இருந்தவா**
**காணீ ரே !**
**சேயிழை யீர்வந்து**
**காணீ ரே !**

**5** தவழ்ந்து கொண்டிருந்த குழந்தை எழுந்து நிற்க ஆரம்பித்து விட்டது. நடை வண்டியைப் பிடித்து தத்தித் தத்தி நடக்கவும் ஆரம்பித்து விட்டது.

நடை வண்டியிலிருந்து ஒரு சக்கரம் கழன்று விட்டது. அந்த வட்டை ஒரு கையில் எடுத்துக் கொண்டது குழந்தை. பாலுண்ணும் சிறு சங்கு ஒன்றை மற்றொரு கையில் பிடித்துக் கொண்டது.

எழுந்து நடக்கத் தள்ளாடுகிறது குழந்தை.

பெருமா உரலில் - மிகப்பெரிய உரலோடு. பிணிப்புண்டு இருந்த அங்கு - கட்டப்பட்டு இருந்தபடியே (ஒரு உன்னு உன்னினான்) உரலை இழுத்துக் கொண்டு தடதட என்று ஓடினான். இருமா மருதம் - இரண்டு பெரிய மருத மரங்களையும், இறுத்த இப்பிள்ளை - உரலைக் கொண்டு மோதி முறித்தெறிந்த கோபால கிருஷ்ணன் தான் இந்தப்பயல். குருமா மணிப்பூண் - ஒளி பொருந்திய பெரிய மரகதக்கல் வைத்துக் கட்டிய ஆரம். திகழும் திருமார்பு - கிடந்து அசையும் அழகிய மார்பு.

*சக்கராயுதத்தையும் பாஞ்ச சன்யம் என்னும் சங்கையும் ஏந்தி நிற்கும் திருமால் போலவே தெரிகிறது குழந்தை.*

*தாயின் பார்வை அப்படி.*

**மைத்தடம் கண்ணி**
**யசோதை வளர்க்கின்ற**
**செய்த்தலை நீல**
**நிறத்துச் சிறுபிள்ளை**
**நெய்த்தலை நேமியும்**
**சங்கும் நிலாவிய**
**கைத்தலங் கள்வந்து**
**காணீ ரே !**
**கனங்குழை யீர்வந்து**
**காணீ ரே ! 11**

**6** *தாயானவள் ஒரு சிறு தட்டில் சாதத்தையும் நெய்யையும் போட்டுப் பிசைவாள். நெய்யையும் அதில் ஊற்றிப் பிசைவாள். திரளை திரளையாக உருட்டி வைப்பாள்.*

*எப்படி எல்லாமோ குழந்தையை ஏமாற்றி ஒவ்வொரு கவளமாக எடுத்து ஊட்டுவாள். நாலு திரளையை ஊட்டுவதற்குள்ளாகவே போதும் போதும் என்று ஆகிவிடும் தாய்க்கு.*

*அடிக்கடி குழந்தையின் நெஞ்சைத் தடவிக் கொடுப்பாள். சண்டித்தனம் பண்ணும் குழந்தை. பொறுமையை விடமாட்டாள் தாய். ஒவ்வொரு*

*மைத்தடம் கண்ணி - மை தீட்டப்பட்டு கருகரு என்றிருக்கும் கண்களை உடைய, செய்த்தலை - வயலிலும் வரப்பிலும் வளர்கிற, நீலநிறத்துச் சிறுபிள்ளை - நீலமலர் போன்ற கண்ணனாகிய பொடிப்பயல். நெய்த்தலைநேமி - நெய் பூசப்பட்டு பளபள என்று மின்னும் சக்கரம். நிலாவிய - பொருந்திய, கனங்குழை - காதணி.*

*திரளையையும் ஊட்ட ஊட்ட குழந்தையின் வாயைப் பார்ப்பாள். சாதம் இறங்குவதை அனுபவித்து குழந்தையின் தொண்டையை அடிக்கடி பார்ப்பாள் தாய்.*

*பேரண்டம் முழுவதையும் ஒரு கவளமாய் உருட்டி திருமால் விழுங்கிய கதை அப்பொழுது ஞாபகத்துக்கு வந்துவிடும் தாய்க்கு.*

**வண்டமர் பூங்குழல்**
**ஆய்ச்சி மகனாகக்**
**கொண்டு வளர்க்கின்ற**
**கோவலக் குட்டற்கு**
**அண்டமும் நாடும்**
**அடங்க விழுங்கிய**
**கண்டம் இருந்தவா**
**காணீ ரே !**
**காரிகை யீர்வந்து**
**காணீ ரே ! 12**

7 *குழந்தையின் வாய் - அதாவது உதடு செக்கச் செவேல் என்றிருக்கிறது. பெண்களின் வாயும் அப்படித்தான். தொண்டை மலரேதான்.*

*பெண்கள் தம் சிவந்த வாயால் குழந்தையின் வாயில் முத்தம் கொடுக்கிறார்கள். மாறி மாறி முத்தம் கொடுக்கிறார்கள்.*

*குழந்தையின் வாயே தேனாக ஊறுகிறது. பெண்களோ பருகிப் பருகி பரவசப்படுகிறார்கள்.*

---

*ஆய்ச்சி மகனாகக் கொண்டு வளர்க்கின்ற கோவலக் குட்டன் - தேவகி வயிற்றில் பிறந்தவன் தான் கிருஷ்ணன். ஆனாலும் யசோதைதான் வளர்த்தாள். பெற்ற பிள்ளையாக வைத்து வளர்த்தாள். (அப்படி வளர்ந்த கிருஷ்ணன் இந்தக் குட்டைப் பயல்) கண்டம் - கழுத்து, காரிகையீர் பெண்களே.*

*அப்பொழுது அதரம் இன்னும் சிவந்து விடுகிறது.*

| | |
|---|---|
| எம்தொண்டை | வாய்ச்சிங்கம் |
| வாஎன்(று) | எடுத்துக்கொண்(டு) |
| அம்தொண்டை | வாய்அமு(து) |
| ஆதரித்(து) | ஆய்ச்சியர் |
| தம்தொண்டை | வாயால் |
| தருக்கிப் | பருகும்இச் |
| செந்தொண்டை | வாய்வந்து |
| காணீ | ரே ! |
| சேயிழை | யீர்வந்து |
| காணீ | ரே ! 13 |

*தொண்டை வாய்ச்சிங்கம் - சிவந்த அதரத்தோடு கூடிய வாயினையுடைய சிங்கக் குட்டி போன்ற கண்ணன்.*

# பரவசப்படுத்தும் அழகு

1 *ரோகிணி நட்சத்திரத்தில் பிறந்தவன் கண்ணன். ரோகிணி நட்சத்திரக் கூட்டம் வார்ப்பில் வந்த அச்சுப் போல் தெரியும்.*

*அதனால் கிருஷ்ணனுக்கு அச்சுதன் என்று பெயர் கிடைத்துவிட்டது. ஹஸ்தம் கழிந்து பத்தாவது வரும் ரோகிணி.*

*தொட்டிலில் கிடந்து உழத்துகிற குழந்தையை நோக்கித் தாய் சொல்கிறாள், "இந்தப் பயல்தான், வசுதேவருக்கும் தேவகிக்கும் மகனாக வந்தவன்" என்று.*

*அப்பொழுது பயல் சிரித்து விடுகிறான்.*

*பல் எல்லாம் முத்து முத்தாய் பிரகாசிக்கிறது.*

**மத்தக் களிற்று**
**வசுதேவர் தம்முடை**
**சித்தம் பிரியாத**
**தேவ கிவயிற்று**
**அத்தத்தின் பத்தாம்நாள்**
**தோன்றிய அச்சுதன்**

முத்தம் இருந்தவா
காணீ ரே!
முகிழ்நகை யீர்வந்து
காணீ ரே! 14

**2** குழந்தை எப்பொழுதும் அழகாகவே இருக்கும். அப்பொழுதுதான் பூத்து விரிந்த பூ எப்படி இருக்குமோ அப்படி இருக்கும் குழந்தை.

ஆனாலும் தாயானவள் குழந்தையை நீராட்டி, துவட்டி, அலங்காரம் செய்தபின் தங்க விக்கிரமாக ஜொலிக்கும் குழந்தை.

அப்பொழுது அதன் அழகு தனிதான்.

நோக்கி யசோதை
நுணுக்கிய மஞ்சளால்
நாக்கு வழித்துநீர்
ஆட்டும்இந் நம்பிக்கு
நாக்கும் நயனமும்
வாயும் முறுவலும்
மூக்கும் இருந்தவா
காணீ ரே!
மொய்குழ லீர்வந்து
காணீ ரே! 15

**3** குழந்தையைப் பார்க்கப் பார்க்க தாய்க்கு ஒரே பரவசம். கன்னத்தில் மாறி மாறி முத்துவாள். அதரத்திலும் முத்துவாள். முத்தி முத்தி ஆசையோடு

மத்தக்களிறு - மதயானை, சித்தம் பிரியாத - எப்பொழுதும் நினைவில் இருக்கிற, முத்தம் - முத்துப் போன்ற பல். *(14)*

நோக்கி - ஆசையோடு குழந்தையைப் பார்த்து. நுணுக்கிய மஞ்சளால் - நன்றாகத் தேய்த்து அரைத்த மஞ்சள் துண்டை வைத்து. நாக்கு வழித்த - கோழையைத் துடைத்த, நயனம் - கண், முறுவல் - பல், மொய்குழல் - அடர்த்தியான கூந்தல். *(15)*

*குழந்தையைப் பார்ப்பாள். குழந்தையின் கண்களை - கண்களுக்கு உள்ளே இருந்து எட்டிப் பார்க்கும் ஆனந்தத்தை தாயானவள் கண்டு களிப்பாள்.*

*அப்படிப் பார்த்து மகிழ்வதில் அவளுக்கு ஒரு வெறியே உண்டாகும். ஆசையோடு பார்க்கும் குழந்தையின் கண்கள் தாயின் நயனங்களை விட்டு விலகவே விலகாது.*

**விண்கொள் அமரர்கள்**
**வேதனை தீரமுன்**
**மண்கொள் வசுதேவர்**
**தம்மக னாய்வந்து**
**திண்கொள் அசுரரைத்**
**தேய வளர்கின்றான்**
**கண்கள் இருந்தவா**
**காணீ ரே !**
**கனவளை யீர்வந்து**
**காணீ ரே ! 16**

**4** *ஆசையோடு பார்க்கிறபொழுது எல்லாமே அழகுதான். கரு கரு என்றிருக்கிற குழந்தையின் புருவம் என்ன பாடுபடுத்துகிறது தாயின் உள்ளத்தை.*

**பருவம் நிரம்பாமே**
**பாரெல்லாம் உய்ய**
**திருவின் வடிவொக்கும்**
**தேவகி பெற்று**
**உருவு கரிய**
**ஒளிமணி வண்ணன்**

---

*திண்கொள் அசுரர் - பலம் பொருந்திய அரக்கர்கள். தேவர்களின் வேதனையை நீக்க அசுரர்களை கருவறுக்க வேண்டும். அதற்காக மண்ணுலகில் வசுதேவருக்கு மகனாக வந்து பிறந்தான்.*

*கனவளையீர் - கனத்த வளையல்களை - தங்கக் காப்புகளை அணிந்த பெண்களே.*

புருவம் இருந்தவா
காணீ ரே !
பூண்முலை யீர்வந்து
காணீ ரே ! 17

**5** குழந்தைக்கு இரண்டு வயது வந்துவிட்டது. தானாக நடந்து போகிறான். முற்றத்துக்கு வந்து விளையாடுகிறான். பக்கத்து வீட்டுச் சிறுவர்கள் முற்றத்தில் வந்து விளையாடுவார்கள்.

காயம்பூவின் காம்பைக் கொண்டே மணலில் கோடு போட்டு வீடுகட்டி விடுவார்கள். சிறுசிறு கற்களைக் கொண்டே அடுப்பு, பாத்திரம், சமையல், சாப்பாடு எல்லாம் நடத்துவார்கள்.

நம்முடைய கதாநாயகன் அவர்கள் விளை யாட்டில் பங்கு கொள்வான். கோபம் வந்துவிட்டால், அவர்கள் கட்டிய வீடு, சோற்றுப்பானை எல்லாவற்றையும் எற்றி அழித்து விடுவான்.

குழந்தையின் குறும்பை பல தடவை பார்த்திருக்கிறாள் தாய். சாதாரண நேரத்தில் தாயின் மடியில் அமைதியாக உட்கார்ந்திருப்பான் பையன். அப்பொழுதும் அவன் குறும்பு ஞாபகத்துக்கு வரும் தாய்க்கு.

அப்படியே பையனின் நெற்றியைத் தடவிக் கொடுப்பாள் தாய்.

---

திரு - லெட்சுமிதேவி, உருவு - வண்ணன் - நீலமணி போன்ற நிறத்தினன். பருவம் - உய்ய - இளைஞனாய் இருந்த போதே உலக நன்மைக்கு உதவினான்.

**முற்றிலும் தூதையும்**
**முன்கைம்மேல் பூவையும்**
**சிற்றில் இழைத்துத்**
**திருதரு வோர்களைப்**
**பற்றிப் பறித்துக்கொண்(டு)**
**ஓடும் பரமன்தன்**
**நெற்றி இருந்தவா**
**காணீரே !**
**நேரிழை யீர்வந்து**
**காணீரே ! 18**

**6** *குழந்தைக்கு கருகரு என்று தலைமுடி வளர்ந்து விட்டது. எத்தனை தடவை இறுக்கிக் கட்டினாலும் அவிழ்ந்து விடுகிறது முடி. முன்பக்கத்தில் விழுந்த முடி முகத்தையே மறைத்து விடுகிறது.*

*கையில் ஒரு சுள்ளி அகப்பட்டால் போதும். தங்கப் பூண் கட்டிய கம்பென்று அதை எடுத்து வைத்துக் கொள்கிறான் பையன்.*

*சின்னஞ்சிறு கற்களை பசு என்றும், கன்று என்றும் வைத்துக் கொள்கிறான். அவைகளைக் காட்டுக்கு ஓட்டிப் போகிறான். சண்டித்தனம் செய்கிற மாடுகளை தட்டி அதட்டுகிறான். வழிதவறி விலகும் கன்றுகளையும் மாடுகளையும் மறித்துத் திருப்புகிறான்.*

*அவ்வளவுக்கும் கல்லும் சுள்ளியுந்தான் துணை. குழந்தையின் விளையாட்டை அனுபவிக்கிறாள் தாய். அவிழ்ந்து அவிழ்ந்து விழுகிற அவன் தலைமுடியையும் அனுபவிக்கிறாள் தாய்.*

---

*குறிப்பு : முற்றில் - முற்றம், சிற்றில் - குழந்தை கட்டும் மண்வீடு, சிறுவர் கட்டும் வீடு சிற்றில்*

அழகிய பைம்பொன்னின்
கோல்அங்கைக் கொண்டு
கழல்கள் சதங்கை
கலந்தெங்கும் ஆர்ப்ப
மழகன்(று) இனங்கள்
மறித்துத் திரிவான்
குழல்கள் இருந்தவா
காணீரே !
குவிமுலை யீர்வந்து
காணீரே ! 19

---

*பைம்பொ(ன்)னின் கோல் அங்கைகொண்டு - தங்கப்பூண் கட்டிய பிரம்பைப் பிடிப்பது போல் ஒரு கம்பைக் கையில் எடுத்துக்கொண்டு, மழகன்று இனம் - இளம்கன்றுக்கூட்டம், மறித்துத் திரிவான் - பசுவும் கன்றும் பாதை மாறினால் அவற்றை மடக்கிவிடுவான்.*

# தாலாட்டு

1 தொட்டில் கம்பு, தொட்டில் கயிறு, தொட்டில் வேட்டி, தொட்டில் என்பதெல்லாம் தமிழ் நாட்டில் தான்.

உலகில் வேறு எங்குமே இவை இல்லை.

தமிழ்நாட்டுப் பழக்கத்தை அனுசரித்து அங்கங்கே சிலர் இதை வைத்திருக்கலாம். மற்றப்படி இது நூற்றுக்கு நூறு தமிழர்களுக்கே உரிய கலை.

தாயானவள் தொட்டிலை விரித்து அதில் குழந்தையைப் படுக்கப் போடுவதே ஒரு அழகு. பிறகு தொட்டிலைப் பிடித்து சொகுசாக அவள் ஆட்டுகிற அழகு இருக்கிறதே அது தனி.

ஒன்றுக்கும் மசியாமல் சில சமயம் குழந்தை முண்டும். தூங்காமல் மற்றவர்களைத் தூங்கவிடாமல் திமிறும். அப்பொழுது அழகிய பாடல்களைப் பாடி மதுரமான இசையிலும், தாளத்திலும் குழந்தையைச் சொக்க வைத்துவிடுவாள்.

தாய்க்குப் படுக்கையே தொட்டிலடிதான். குழந்தை விழிக்கும் நேரம் எல்லாம் தாயும்

விழித்துவிடுவாள். குழந்தையைத் தூங்க வைத்த பிறகுதான் தாய் தூங்குவாள்.

அவ்வளவுக்கும் பாட்டுத்தான் துணை.

தொட்டிலை ஆட்டித் தாய்மார் பாடும் பாட்டுக்கு தாலாட்டுப் பாடல் என்று பெயர்.

தாலாட்டுப் பாடல்களில் கற்பனை தாராளமாக வரும். ஒவ்வொரு கற்பனையும் உணர்ச்சிமயமாக இருக்கும். அந்த உணர்ச்சியைப் பார்க்கப் பார்க்க உண்மையின் தொனி இன்னதென்று தெரியும்.

குழந்தைகளை மட்டும் அல்ல. வயதானவர் களையும் உறங்கப் பண்ணிவிடும் பாடல்கள்.

தொட்டில், குழந்தை, தாய், தாலாட்டு எல்லா வற்றையும் நன்றாய் அனுபவித்தவர் பெரியாள்வார்.

அனுபவமானது பரம்பொருளாகிய திரு மாலையே தொட்டிலில் போட்டு ஆட்டுகிறது.

மகாவிஷ்ணு அல்லவா தொட்டிலில் படுத்திருக்கிறார் என்று பிரமன் பதறி விட்டான். உடனே தங்கத்தாலேயே வடக்கயிறை உண்டாக்கினான். தொட்டில் கம்பும் தங்கந்தான். அதில் நவரத்தினங்களைப் பதித்தான். தொட்டில் வேட்டிக்குப் பதில் குழந்தை படுப்பதற்கு ஏற்ற தங்கப் பெட்டியையும் செய்துவிட்டான்.

இத்தனையும் அவனே சுமந்து கொண்டு வந்தான். அதில்தான் குழந்தை படுத்திருக்கிறது. அதைப் பிடித்துத் தான் தாய் ஆட்டுகிறாள். பாடிக்கொண்டே ஆட்டுகிறாள்.

எப்படி என்று பார்ப்போம்.

**மாணிக்கம் கட்டி**
**வயிரம் இடைகட்டி**
**ஆணிப்பொன் னால்செய்த**
**வண்ணச் சிறுதொட்டில்**
**பேணி உனக்குப்**
**பிரமன் விடுதந்தான்**

மாணிக் குறளனே
தாலே லோ !
வையம் அளந்தானே
தாலே லோ !

**2** பிரமதேவன் கட்டிலைக் கொண்டு வந்து கொடுத்தான். இது தேவலோகம் முழுவதையும் பரபரப்பை உண்டாக்கிவிட்டது.

தேவர்கள் எல்லோரும் போட்டி போட்டுக் கொண்டு குழந்தைக்கு அது இது என்று கொண்டு வந்து கொடுக்கிறார்கள்.

தேவர்கள் என்ன செய்தார்கள்?

தெய்வீகமான வலம்புரிச் சங்கையே சிறுசிறு துண்டுகளாக அறுத்தார்கள். குழந்தையின் காலுக்கு அளவாகத் தண்டை செய்தார்கள். கைகளுக்கு ஏற்ற காப்புகளாகவும் செய்தார்கள். இடுப்பைச் சுற்றிக் கட்டுவதற்கு அரைஞாணாகவும் செய்து கொண்டார்கள்.

அவ்வளவும் வலம்புரிச் சங்கில்தான்.

அவ்வளவையும் எடுத்து மடியில் வைத்துக் கொண்டார்கள். வேகமாய் ஓடி வந்தார்கள். குழந்தைக்குப் பரிசாகக் கொடுத்து விட்டார்கள். தேவலோகம் போய்ச் சேர்ந்தார்கள்.

---

ஆணிப்பொன் - சொக்கத்தங்கம், பத்தரை மாற்று அல்ல, ஆயிரம் மாற்றுப் பசும்பொன். வண்ணச்சிறு தொட்டில் - அழகிய தொட்டில், மாணிக்குறளன் - வையம் அளந்தான் - சிறிய குள்ளனாய் வந்து உலகம் முழுவதையும் ஒரு அடியால் அளந்துவிட்டான்.

**குறிப்பு :** உணர்ச்சி இருந்தால் போதும். தொட்டில் கம்புகூடத் தங்கக் கட்டியாய் விளைந்துவிடும். வயிரமாய் ஜொலிக்கும். அப்படி ஜொலிப்பதைப் பாடலில் பார்க்கிறோம்.

*தாய் பாடுகிறாள்:*

**சங்கின் வலம்புரியும்**
**சேவடிக் கிண்கிணியும்**
**அங்கைச் சரிவளையும்**
**பொன்அரை நாணுக்கே**
**அங்கண் விசும்பில்**
**அமரர்கள் போந்(து) ஈந்தார்**
**செங்கண் கருமுகிலே**
**தாலே லோ !**
**தேவகி சிங்கமே**
**தாலே லோ !** 21

**3** *வருணன் பார்த்தான். சூடு உண்டாகி விட்டது அவனுக்கு. சமுத்திர ராஜனல்லவா அவன். களஞ்சியத்தில் இருக்கிற முத்துக்களைக் கொண்டு வரச் செய்தான். அழகிய மாலையாகக் கட்டும்படி சொன்னான். மாலை தயார். உடனே ஜாதிப் பவளங்களை வர வழைத்தான். நயமான சங்குகளையும் கொண்டு வரச் செய்தான். அலங்காரமான நகைகள் தயாராகிவிட்டன.*

*அவ்வளவும் வந்து சேர்ந்தன குழந்தையிடம்.*

**ஓதக் கடலின்**
**ஒளிமுத்தின் ஆரமும்**
**சாதிப் பவளமும்**
**சந்தச் சரிவளையும்**
**மாதக்க என்று**
**வருணன் விடுதந்தான்**

*சேவடி - சிவந்த அடி, அங்கண் விசும்பில் - விசாலமான வானுலகம், அமரர்கள் போந்து ஈந்தார் - தேவர்களே நேரில் கொண்டு வந்து கொடுத்தார்கள். செங்கண்கருமுகில் - செந்தாமரை போன்ற கண்களைக் கொண்ட கருமேகம் போன்ற நிறமுடைய பெருமானே / தேவகிசிங்கமே - தேவகியின் மைந்தனே / தாலேலோ - தாலாட்டில் உறங்கு.*

**சோதிச் சுடர்முடியாய்**
**தாலே லோ!**
**சுந்தரத் தோளனே**
**தாலே லோ!** 22

**4** *யாராரோ எதை எதையோ அனுப்புகிறார்கள். அப்படி இருக்க அருமை மனையாள் லட்சுமிதேவி சும்மா இருப்பாளா?*

*துளசி இலையைக் கொண்டு ஒரு சிறு மாலை (கண்ணி) கட்டினாள். அது கொண்டையில் சொருகவும், கொண்டையைச் சுற்றிக் கட்டவும்.*

*அப்புறம் என்ன செய்தாள்?*

*கற்பக மலர்களைப் பறித்து நீளமாக ஒரு மாலை கட்டிவிட்டாள். அது மார்பில் கிடந்து புரள.*

*இரண்டும் வந்து சேர்ந்தன பையனிடம்.*

**கானார் நறுந்துழாய்**
**கைசெய்த கண்ணியும்**
**வானார் செழுஞ்சோலைக்**
**கற்பகத்தின் வாசிகையும்**
**தேனார் மலர்மேல்**
**திருமங்கை போத்தந்தாள்**

---

*ஓதக்கடல் - அலைகள் எப்பொழுதும் வீசிக் கொண்டிருக்கும் சமுத்திரம். ஆரம் - மாலை - சந்தச் சரிவளை - இன்னொலி எழுப்பும் வளைந்த சங்குகள். சங்குகள் வளைந்திருக்கும். அதனால் அதற்கு வளை என்று பெயர். சந்தம் - இன்னொலி. சரி - சரிந்த, வளைந்த. மாதக்களன்று - இவற்றில் நல்ல ஆபரணம் உண்டாக்க வேண்டும் என்று கட்டளை இட்டான். அப்படியே உண்டாயின.*

கோனே அழேல்அழேல்
தாலே லோ !
குடந்தை கிடந்தானே
தாலோ லோ 23

*கானார் - காட்டில் விளையும், கண்ணி - தலையில் வைக்கும் பூச்சரம். வான்ஆர் - வானுலகில் உள்ள, வாசி - மார்பில் அசையும் மாலை, தேனார் மலர் - தேன் சொட்டும் செந்தாமரை மலர். திருமங்கை - லட்சுமி தேவி. போத்தந்தாள் - அனுப்பி வைத்திருக்கிறாள். அழேல்அழேல் - அழாதே அப்பா அழாதே. குடந்தை கிடந்தானே - கும்பகோணத்தில் கோவில் கொண்டு எழுந்தருளி இருக்கும் பெருமானே! ஏன் அழுகிறாய். திருமகள் அனுப்பிய பரிசைப் பார். நன்றாத் தூங்கு.*

# பிள்ளைத்தமிழ் - நிலாச்சோறு

1 உலகம் முழுவதுக்கும் சூரியன் பொதுதான். சந்திரனும் அப்படித்தான். குளிர்ப் பிரதேசங்களைச் சேர்ந்தவர்களுக்கு வெயிலைக் கண்டால் கொண்டாட்டம். உஷ்ணப் பிரதேசங்களைச் சேர்ந்தவர்களுக்கு நிழலும் குளிருமே தேவை.

இந்தியர்கள் கதை தனி. சந்திரனையும் அவனுடைய அமுத கிரணங்களையும் மாந்தி மாந்தித் திளைக்கிறவர்கள் இந்தியர்கள்.

பூர்ண சந்திரனையும் அதன் பட்டுப்போன்ற நிலாவினையும் அனுபவிப்பதில் வெறி கொண்டவர்கள் இந்தியர்கள்.

தமிழ் மக்களைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். நிலாவைக் காட்டியே குழந்தைகளை வளர்ப்பார்கள். நிலாவைக் காட்டியே சொல்லிக் கொடுப்பார்கள்.

பிசைந்த சாதத்தின் ஒவ்வொரு கவளத்தையும் நிலா ஒளியோடு சேர்த்தே குழந்தைக்கு ஊட்டுவார்கள். குழந்தையின் ரத்தத்தோடு ரத்தமாய் உணர்ச்சியோடு உணர்ச்சியாய் நிலாவும் சேர்ந்திருக்கும்.

*நிலாச்சோறு, நிலா முற்றம் என்றெல்லாம் தமிழர்கள் அனுபவிக்கிறார்கள்.*

*குழந்தைக்கும் நிலாவுக்கும் ஒரு தோழமையை உண்டாக்கி விடுகிறாள் தாய். தமிழ்நாட்டுத் தாய்.*

*"குழந்தை புழுதியை அளைந்து கொண்டிருக்கிறான். நீ வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறாயே, என்ன ஞாயம் இது? முகத்துக்குப் பின்னால் இருக்கிறதா உனக்குக் கண்" என்று சந்திரனைத் தாய் மிரட்டுவதாக விஷயம்.*

*இனிப் பாடல்,*

**தான தான**
**தான தான**
**தன்ன தன்**

**தன்முகத் துச்சுட்டி**
**தூங்கத் தூங்கத்**
**தவழ்ந்து போய்**
**பொன்முகக் கிண்கிணி**
**ஆர்ப்பப் புழுதி**
**அளைகின் றான் !**
**என்மகன் கோவிந்தன்**
**கூத்தி னைஇள**
**மாம தீ**
**நின்முகம் கண்ணுள**
**ஆகில் நீஇங்கே**
**நோக்கிப் போ! 24**

*சுட்டி - நெற்றியில் அணியும் ஆபரணம். அது தன்முகத்தில் விழுந்து தொங்கவும், தங்கத்தால் செய்து போட்ட கிண்கிணி என்னும் சலங்கை ஆரவாரிக்கவும் தவழ்ந்து ஓடுகிறான். ஓடிப்போய் புழுதியில் அளைகிறான். தூங்கத்தூங்க மாமதி - பூரண சந்திரனே. நின்முகம் கண்உளஆகில் - உன் முகத்தில் கண் இருக்கிறதா இல்லையா? இருந்தால் தோழன் இப்படிப் புழுதியில் புரள்வதைப் பார்த்துக் கொண்டிருப்பாயா? இங்கே நோக்கிப்போ - கொஞ்சம் இப்படிப்பாரு. பையன் அலங்கோலத்தைப் பாரப்பா பாரு.*

2 பையனை அடக்க முடியவில்லை தாய்க்கு. எத்தனை தடவை பிடித்து வைத்தாலும் ஓடிவிடுகிறான். புழுதியில் விழுந்து புரள்கிறான். அளைகிறான். அள்ளி அள்ளிக் கொட்டுகிறான்.

கால், கை, மேல் எல்லாம் ஒரே புழுதி.

தாய்க்கு எரிச்சல் வந்தது. பையனிடம் எப்படிக் காட்ட எரிச்சலை. அதனால் சந்திரனை நோக்கியே ஒரு அதட்டு அதட்டினாள். சந்திரன் கவனிக்கவே இல்லை.

எரிச்சல் மடங்கி விட்டது தாய்க்கு. கொஞ்சம் தாஜா பண்ணிப் பேரம் பேசுகிறாள் சந்திரனிடம் தாய்.

"சந்திரனே! கை அசைத்து உன்னை என் பையன் கூப்பிடுவது தெரியவில்லையா உனக்கு. விருப்பம் இருந்தால் தாராளமாக நீ வரலாம். வந்து விளையாடலாம்.

எதற்காக மேகக் கூட்டத்தில் ஒளிந்து விளையாட வேண்டும் நீ? பையனோடு ஆட வா."

**என்சிறுக் குட்டன்**
**எனக்கோர் இன்னமு(து)**
**எம்பி ரான்**
**தன்சிறுக் கைகளால்**
**காட்டிக் காட்டி**
**அழைக்கின் றான்**
**அஞ்சன வண்ணனோ(டு)**
**ஆடல் ஆட**
**உறுதி யேல்**
**மஞ்சில் மறையாதே**
**மாமதீ ! மகிழ்ந்து**
**ஓடி வா !** 25

**3** *கெஞ்சிக் கெஞ்சிப் பார்க்கிறாள் தாய். ஒன்றையும் காதில் போட்டுக் கொள்ளவில்லை சந்திரன். கொஞ்சம் அவமானமாய்ப் போய்விட்டது தாய்க்கு. சினம் மூண்டுவிட்டது.*

*"பதினாறு கலைகளையும் ஜோடித்துக் கொண்டு எத்தனை அலங்காரம் பண்ணினாலும் என் பையன் முன் நிற்க முடியுமா உன் ஜொலிப்பு. அவன் கண்களிலும் நெற்றியிலும் கன்னத்திலும் வீசுகிற ஒளிக்கு உன் பளபளப்பு எப்படி ஈடுகொடுக்கும்?*

*என் பையனே கையை அசைத்து - வா வா என்று உன்னை கூப்பிடுகிறான். வரவேண்டியது தான் நீ! பிறகு என்ன வேண்டிக் கிடக்கிறது'' என்று பொரிந்து தள்ளுகிறாள் தாய்.*

**சுற்றும் ஒளிவட்டம்**
**சூழ்ந்து சோதி**
**பரந்தெங் கும்**
**எத்தனை செய்யினும்**
**என்ம கன்முகம்**
**நேர்ஒவ் வாய்;**
**வித்தகன் வேங்கட**
**வாணன் உன்னை**
**விளிக்கின்ற**
**கைத்தலம் நோவா**
**மேஅும் புலீ/கடி(து)**
**ஓடி வா! 26**

**4** *நாம் சொல்வதை ஒருவர் காது கொடுக்கவில்லை என்றால் நமக்கு அவர்மேல் கோபம் வரும். நம் பேச்சை அலட்சியப்படுத்துகிறார் என்றால் அந்தக் கோபம் மேலே மேலே ஏறும்.*

*சந்திரன் மேல் தாய்க்கு கோபம் மேலே மேலே ஏறுகிறது. சொல்லில் தீப்பொறி பறக்கின்றன.*

*"நீ, என்ன பிள்ளை பெறாத மலட்டுப் பயலா?" என்றே கேட்டு விடுகிறாள். "உன் குறும்பை (சலம்) என்னிடம் காட்டாதே! வாலை ஒட்டி நறுக்கி விடுவேன் (தக்கது அறிதி) ஜாக்கிரதை" என்று சொல்லிவிடுகிறாள்.*

**சக்கரக் கையன்**
**தடங்கண் ணால், மல**
**ரவிழித் து,**
**ஒக்கலை மேல்இருந்(து)**
**உன்னை யேசுட்டிக்**
**காட்டும்; காண்**
**தக்க(து) அறிதியேல்**
**சந்தி ரா ! சலம்**
**செய்யா தே,**
**மக்கள் பெறாத**
**மலடன் அல்லையே**
**வா ! கண் டாய் ! 27**

**5** *தான் சொல்லியபடி கேட்கவில்லையே என்று சந்திரன் மேல் தாய்க்கு கோபம் வந்தது. அரட்டிப் பார்த்தாள், மிரட்டிப் பார்த்தாள். ஒன்றும் பிரயோசனப்படவில்லை. கொஞ்சம் நயந்து வருகிறது பேச்சு.*

*"குழந்தை வயிறு நிறையப் பால் சாப்பிட்டிருக் கிறான். நன்றாகத் தூங்கி எழுந்தால்தான் உண்ட பால் உடம்போடு சேரும். இல்லாவிட்டால் அஜீரணந்தான்.*

*"கொட்டாவி விடத்தான் செய்கிறான். தூக்கம் வந்து தழுவத்தான் செய்கிறது. ஆனாலும் உன்னைப்*

*பார்க்காமல் அவனுக்கு என்னவோ போலிருக்கிறது. தூக்கத்துக்கு இடம் கொடுக்காமல் உலாத்துகிறான்.*

*உடனே ஓடிவா சந்திரனே!" என்கிறாள்*

**தண்டொடு சக்கரம்**
**சார்ங்கம் ஏந்தும்**
**தடக்கை யான்,**
**கண்துயில் கொள்ளக்**
**கருதிக் கொட் டாவி**
**கொள்கின் றான்,**
**உண்டமு லைப்பால்**
**அறாகண் டாய்உறங்**
**காவி டில்**
**விண்தனில் மன்னிய**
**மாம தீ! விரைந்(து)**
**ஓடி வா! 28**

*சார்ங்கம் - சங்கு. சங்கு, சக்கரம், கதை ஏந்தி திருமால்தான் தன் குழந்தை என்கிறாள் தாய். ஒவ்வொரு தாயும் அப்படித்தான் சொல்வாள். கண்துயில் கொள்ளக் கருதி - தூக்கம் வந்துவிட்டது. அது தெரிந்து, அறா - ஜீரணம் ஆகாது.*

குறிப்பு : *சந்திரன் (நிலா) இப்பொழுது வருவான். அவன் வருவதற்குள் நீ உறங்கி விடு. இல்லாவிட்டால் உன்னைத் தூங்கவிட மாட்டான். தொந்தரவு பண்ணுவான் என்று குழந்தையிடம் நயமாய்ச் சொல்லுவாள் தாய். தாயின் உல்லாசம் பாடலில் அப்படியே கிடக்கிறது.*

# மறக்க முடியுமா குழந்தையின் விளையாட்டை

1 இரண்டு வயது ஆகிவிட்டது பையனுக்கு. ஓடி ஆடி விளையாடுகிறான். அடிக்கடி தாயைத் தழுவிக் கொள்கிறான். அதில் எவ்வளவோ இதம் குழந்தைக்கு. தழுவித் தழுவிக் குழந்தையை அணைத்து மகிழ்வாள் தாய். அதில் எவ்வளவோ இதம் தாய்க்கும் இருக்கிறது.

முற்றத்தில் விளையாண்டு கொண்டிருக்கும் பையன் அப்படியே ஓடி வருகிறான். முன்கட்டைப் பெருக்கிக் கொண்டிருக்கிறாள் தாய். அவள் பின்னாடியே வந்து அவளுடைய இரண்டு கால்களையும் சேர்த்து இறுகப் பிடித்துக் கொள்கிறான்.

தாய் மெள்ள மெள்ளப் பெருக்குவாள். பையனும் பிடித்துக் கொண்டே மெள்ள மெள்ளப் பின்னாலே தொடர்ந்து போவான்.

இரண்டு பெண்களுடன் உட்கார்ந்து கொண்டிருப் பாள் தாய். ஓடிவருவான் பையன். அம்மாவின் கழுத்தை கட்டுவான். கட்டிக் கொண்டே தாயின் மடியில் ஏறி

நிற்பான். அவள் உட்கார வைக்க மடியில் ஜம் என்று உட்கார்ந்து கொள்வான்.

அவசரமாக ஒரு காரியத்தில் ஈடுபட்டுக் கொண்டிருப்பாள் தாய். வேகமாக ஓடிவருவான் பையன். அவள் முன்தானைச் சேலையில் முகத்தை வைத்து மூடிக் கொண்டு, அவள் இரண்டு கால்களையும் சேர்த்துப் பிடிப்பான். பிறகு திரும்பி நிற்பான். அவள் முன்தானைச் சேலையை இழுத்து தன்னை மூடிக் கொள்வாள்.

தயிர் கடைந்து வெண்ணெய் எடுத்துக் கொண்டிருக்கிறாள் த்தாய். அவளுக்கு பின்பக்கத்திலிருந்து ஓடி வந்தான் பையன். அம்மாவின் கழுத்தை தன் இரண்டு கைகளாலும் சேர்த்துக் கட்டிக் கொண்டான். அவள் முதுகின் மேல் சாய்ந்து இறுக்கிக் கொண்டான்.

இப்படிக் கழுத்தைக் கட்டி முதுகில் சாய்ந்து தொங்குவதற்கு புறம்புல்குதல் என்று பெயர்.

குழந்தையின் காரியம் ஒவ்வொன்றும் தாய்க்கு ஆனந்தமாக இருக்கும். நினைக்க நினைக்க நெஞ்சில் மதுரம் ஊறும். மறக்க முடியாது தாயால்.

ஒருநாள் பையனை வீட்டில்விட்டு விட்டு அவசரமாகப் பக்கத்து ஊருக்குப் போனாள் தாய். பையனுடைய தந்தையும் சேர்ந்துதான் போனார்.

மாலையில் திரும்பி வந்து விடுவதாகத்தான் போனார்கள். ஆனால் வர முடியவில்லை. குழந்தையை மாமியும் மாமனும் பார்த்துக் கொள்வார்கள். ஆனாலும் தாய்க்கு அங்கே இருக்க முடியவில்லை. தவியாய்த் தவிக்கிறாள்.

சாப்பாடு இறங்க மாட்டேன் என்கிறது. உறக்கம் வரமாட்டேன் என்கிறது. தாயிடம் கூடக் கலகல என்று பேச முடியவில்லை. சகோதர சகோதரிகளிடமும் அப்படி அப்படித்தான்.

கண்ணுக்குள்ளேயே இருக்கிறான் பையன். எங்கு பார்த்தாலும் அவன் விளையாண்டு கொண்டு வருவதே தெரிகிறது.

அவன் ஓடி வருவது, கழுத்தைக் கட்டுவது, மடியில் உட்கார்வது, சேலையைப் பிடிப்பது, காலைக் கட்டுவது இப்படியே தெரிகிறது. அடிக்கடி அவன் ஓடிவந்து முதுகின் மேல் ஏறி சவாரி செய்கிறதாகவே இருக்கிறது.

கண்ணை மூடிக் கொண்டபிறகும் இதுதான் தெரிகிறது. விழித்துப் பார்த்தாலும் இப்படித்தான் இருக்கிறது.

நினைக்க நினைக்க கல்கண்டாய் இனிக்கிறது தாய்க்கு. சொட்டுச் சொட்டாகத் தேன் இறங்கி நெஞ்சை நிறைக்கிறது.

அனுபவிக்கிறாள் தாய்.

கல்கண்டின் மேனி முழுவதும் ரசம் ஊறி கண் கண்ணாக இருக்கும். வயிரம் போலவும் முத்துப் போலவும் அது ஜொலிக்கும். வாயில் போட்டால் போதும். நாவெல்லாம் தேனூறும்.

பையன் வந்து முதுகைக் கட்டிப் பிடிக்கிறது அப்படித் தேனூற வைக்கிறது.

**தான தான**
**தானன தானன**

**வட்டு நடுவே**
**வளர்கின்ற மாணிக்க**
**மொட்டு நுனையில்**
**முளைக்கின்ற முத்தேபோல்**
**சொட்டுச்சொட் டென்னத்**
**துளிக்கத் துளிக்களன்**

குட்டன்வந் தென்னைப்
புறம்புல்கு வான்;
கோவிந்தன் என்னைப்
புறம்புல்கு வான்! 29

**2** குழந்தைக்கு அலங்காரம் செய்வதில் தாய்க்கு ஒரு வெறியே உண்டாகும். குழந்தையை அலங்காரப் படுத்தி அவள் பார்க்கும் பொழுது இறைவனே எழுந்தருளிக் காட்சி கொடுப்பது போல இருக்கும்.

காலில் தண்டை (கிண்கிணி), கையில் மோதிரம் (கங்கணம்), மார்பில் பவள மாலை (கிறி), இப்படி நகைகளைக் குழந்தைக்குப் பூட்டுவாள் தாய்.

தங்கச் சங்கிலி (தொடர்) யும் போட்டு விடுவாள்.

ஆபரணங்கள் பூட்டியவுடன் பையனுக்கும் ஒரு பெருமிதம் வந்துவிடும். பெருமிதத்தில் ஒரு அலங்கார நடையே நடப்பான் பையன்.

கலீர் கலீர் என்று நாட்டிய ஒலியை எழுப்பிக் கொண்டு அவன் அங்கு போவதும் இங்கு வருவதுமாக இருப்பான்.

தாய் பார்ப்பாள். அவன் மனம் உருகும்.

இத்தனை அலங்காரத்தோடு பூனைபோல பின்னால் வந்து முதுகில் தொத்துவான். அதுவும் மனசை உருக்கும்.

---

வட்டு - கல்கண்டு, நடுவே வளர்கின்ற மாணிக்க மொட்டு - கல்கண்டு முழுவதும் இடைஇடையே தோன்றும் ரசம் ஊறிய கண்கள். நுனியில் முளைக்கின்ற முத்து - கடிக்கக் கடிக்க இனிக்கும் தேன். சொட்டு - துளிக்க என் - தேனானது சொட்டுச் சொட்டாய் நாவில் விழுவது போல் இனிக்கிறது. எது, குட்டன் - பொடியன், புறம்புல்குதல் - கழுத்தைக் கட்டி முதுகில் வந்து சாய்வது. கோவிந்தன் - கண்கண்ட தெய்வம் இவன்தான்.

கிண்கிணி கட்டிக்
கிறிகட்டிக் கையினில்
கங்கணம் இட்டுக்
கழுத்தில் தொடர்கட்டி
தன்கணத் தாலே
சதிரா நடந்துவந்து
என்கண்ணன் என்னைப்
புறம்புல்கு வான்;
எம்பிரான் என்னைப்
புறம்புல்கு வான் ! 30

**3** *பாரத யுத்தம் தொடங்கப் போகிறது. அருச்சுனன் கிருஷ்ணனிடம் வந்தான். "நீ ஒருவன் எனக்குத் துணையாக இருந்தால் போதும்" என்று வேண்டினான். கிருஷ்ணனும் உடன்பட்டுவிட்டான்.*

*அருச்சுனனுக்கு தேரோட்டியாக வந்தான். துரியோதனாதியர்கள் பதறிப் போனார்கள்.*

*பாண்டவர்கள் ஜெயித்தார்கள்.*

*தேரோட்டிய அந்தப் பரந்தாமன் இந்தப் பிள்ளை தான் என்று தாய் மயங்குகிறாள். முதுகின் மேல் ஏறி விளையாடும் பிள்ளையின் பாய்ச்சலை எண்ணி எண்ணி நெகிழ்கிறாள்.*

நாந்தகம் ஏந்திய
நம்பி சரண்என்று
தாழ்ந்த தனஞ்சயற்(கு)
ஆகித் தரணியில்
வேந்தர்கள் உட்க
விசயன் மணித்திண்தேர்

*கிண்கிணி - சலங்கை, கங்கணம் - மோதிரம்.*

ஊர்ந்தவன் என்னைப்
புறம்புல்கு வான்;
உம்பர்கோன் என்னைப்
புறம்புல்கு வான்! 31

**4** *உரலைக் குப்புறக் கவிழ்த்து அதன்மேல் ஏறிநின்று உறிக் கலையங்களில் வைத்த வெண்ணெயை அள்ளி அள்ளி உண்டான் கிருஷ்ணன்.*

*இவன்தான் அந்தக் கிருஷ்ணன் என்பது தாயின் முடிவு. அவன் முதுகின் மேல் ஏறி நின்றதை எப்படி மறக்க முடியும்?*

பொத்த உரலைக்
கவிழ்த்ததன் மேலேறித்
தித்தித்த பாலும்
தடாவினில் வெண்ணெயும்
மெத்தத் திருவயி(று)
ஆர விழுங்கிய
அத்தன்வந் தென்னைப்
புறம்புல்கு வான்;
ஆழியான் என்னைப்
புறம்புல்கு வான்! 32

---

*நாந்தகம் - வாள் போல பளபளப்பும் கூர்மையும் கொண்ட சக்கரம்.*

*பொத்த - பெரிய, தடா - வெண்ணெய் வைத்த உறிக் கலயம், மோர்ப்பானை என்றும் சொல்லலாம்.*

# பால் குடிக்காமல் ஓடிவிட்டான்

1 ரசிகமணி டி.கே.சி. கீழ்க்கண்டபடி சொல்வார்கள்.

"கரும்பும் நாணலும் ஒரு இனந்தான். ஆனால் இரண்டுக்கும் எவ்வளவோ வித்தியாசம். கரும்பைப் பிழிந்தால் மாகாணிப்படி அரைக்கால்படி என்று சாறு வரும். தேனாய் இனிக்கும் கருப்பஞ்சாறு."

நாணலைப் பிழிந்தால் ஒரு சொட்டுக்கூட சாறு இருக்காது. சோளத்தட்டை மாதிரித்தான்.

பெண்களும் ஆண்களும் ஒன்று போலவே தோன்றலாம். ஆனாலும் பெண்களின் காரியம் தனி.

பெண்களின் தேகம் முழுவதும் அமுதப் பால் ஊறும். கருணைப் பாலும் ஊறும். ஆண்களிடம் ஒரு சொட்டு இருக்குமா?

உண்மையான ஞானி ரசிகமணி. அவர்கள் சொல் ஒவ்வொன்றும் வேத மந்திரங்கள் தாம்.

* * *

தாயானவள் குழந்தையை மடியில் வைத்து மார்போடு சேர்த்து அணைத்து பால் கொடுக்கிற அழகே அழகு.

குழந்தை எதை எதைச் சாப்பிட்டாலும் சரி, வெண்ணெய், தயிர், சாதம், பருப்பு, பணியாரம் என்னென்ன சாப்பிட்டாலும் சரி, ஒரு வேளையாவது குழந்தைக்கு பால் கொடுக்க வேண்டும். ஒரு வேளைாவது தன்னிடம் குழந்தை பால் குடிக்காவிட்டால் என்னவோ போலிருக்கும் தாய்க்கு.

* * *

பால் குடிக்காமல் ஓடுகிறான் பையன். ஆயர்பாடிக் கண்ணன் தானே இவன்! பதறுகிறாள் தாய்.

"நான் சொல்வதைக் கேள். ஒழுங்காக இருந்து பாலைக் குடி. நான் சொல்வதைக் கேடகாமல் ஓடினால், உன்னை வஞ்சகனாகிய கஞ்சன் பிடித்துக் கொண்டு போய்விடுவான்."

**தானன்ன தானன்னன**
**தன்னாதன தன்னனதன்**

**தீயபுந்திக் கஞ்சன்உன்மேல்**
**சினம்உடையன் சோர்வுபார்த்து**
**மாயந்தன்னால் வலைப்படுக்கில்**
**வாழகில்லேன் வசுதேவா !**
**தாயர்வாய்ச்சொல் கருமம்கண்டாய்**
**சாற்றிச்சொன்னேன் போகவேண்டா;**
**ஆயர்பாடிக்(கு) அணிவிளக்கே**
**அமர்ந்துவந்தென் முலைஉணாயே ! 33**

---

தீயபுந்தி கஞ்சன் - கெட்ட எண்ணம் கொண்ட கம்சன்.

# அபிஷேகம் பண்ணுவது மாதிரித்தான்

1 உலகில் உள்ள எல்லா நாடுகளிலும் பெண்கள் இருக்கிறார்கள். கல்யாணம் பண்ணிக் கொள் கிறார்கள். குழந்தைகளும் பெறுகிறார்கள்.

தாய்ப்பாசம் என்று ஒன்று அடிப்படையாய் எல்லாப் பெண்களிடமும் இருக்கவே செய்கிறது.

ஆனாலும் குழந்தைகளை வளர்க்கும் முறையில் வேறுபாடு இருக்கிறது.

பெரும்பாலான நாடுகளில் - அதுவும் ஆடம் பரமும் படாடோபமும் நிறைந்த குடும்பங்களில் குழந்தைகளை வளர்க்கும் பெண்கள் அகம்பாவம் காட்டுகிறார்கள்.

வேலைக்காரப் பெண்களிடம் குழந்தையை ஒப்படைத்து விடுகிறார்கள். பால் புட்டியையும் கண்ணாடிப் பாட்டிலையும் அவர்களிடம் கொடுத்து விடுகிறார்கள். அப்படியே சபாவுக்கும் கிளப்புக்கும் ஓடிவிடுகிறார்கள். ஐந்து மணி நேரம் ஆறுமணி நேரம் கழித்து வருகிறார்கள். பென்சிலைக் கொண்டோ, பேனாக் கத்தியைக் கொண்டோ குழந்தையின் கன்னத்தை ஒரு

தட்டுத் தட்டுகிறார்கள். "எப்படி இருக்கிறாய், சௌகர்யந் தானே" என்று இன்னொரு பாஷையில் கேட்கிறார்கள்.

அப்படியே தனி அறைக்குப் போய் நாவலிலோ சிறுகதையிலோ மூழ்கிவிடுகிறார்கள். அது இல்லாமல் பள்ளி அறையில் போய் தூங்கி விடுபவர்களும் உண்டு.

தாய்ப்பாசம் நூல் இழையில் தொங்குகிறது.

இனி லட்சோபலட்சம் சாதாரணப் பெண்கள் அப்படி இல்லை. பாரத தேசத்துப் பெண்கள், தமிழ் நாட்டைச் சேர்ந்த பெண்கள் இவர்களுக்கு குழந்தைதான் தெய்வம். குழந்தைதான் உயிர். லட்சியமே குழந்தைதான்.

குழந்தையை அணு அணுவாய் வளர்ப்பார்கள். ஆனந்தமாய் வளர்ப்பார்கள். அவர்கள் வளர்க்கிற காரியம் முழுவதும் பக்திமயமாக இருக்கும்.

குழந்தையை விட்டுத் தாய் பிரிய மாட்டாள். தாயை விட்டுக் குழந்தை பிரியாது.

குழந்தை தவழ்வதும், நிற்பதும், விழுவதும், ஓடுவதும் எல்லாம் தாயின் இதயத்துள்தான். தொட்டில் கட்டித் தாலாட்டுவதும் அவள் தன் இதயத்தில்தான்.

குழந்தைக்கு ஆகாரம் கொடுப்பது, தலை பின்னுவது, அலங்காரம் செய்வது, நடை பழக்குவது, விளையாட்டுக் காட்டுவது ஒவ்வொன்றையும் திருவிழா நடத்துவது போல் நடத்துவாள் தாய்.

குழந்தையை தினந்தோறும் நீராட்டுவாள். எண்ணெய் தேய்த்தும் நீராட்டுவாள். சுவாமிக்கு அபிஷேகம் பண்ணுவது போல குழந்தையை நீராட்டுவாள்.

குழந்தையைக் குளிப்பாட்டி, குழந்தையின் தலையையும் உடம்பையும் நன்றாகத் துவட்டி ஆசையோடு தலைக்கு மேலே குழந்தையைத் தூக்கிப் பார்ப்பாள். அப்படிப் பார்க்கிறதைப் பார்த்தாலே போதும். நமக்கும் பக்தி வந்துவிடும்.

கண்ணனை - தன் செல்வக் குமரனை 'குளிக்க வா' என்று தாய் கூப்பிடுகிறாள். பையன் சண்டித்தனம்

*பண்ணுகிறான். தாயின் ஆற்றாமை பட பட என்று வருகிறது.*

*"வாயிலிருந்து வெண்ணெய் வடிந்து உடம்பு முழுவதும் திட்டுத் திட்டாய்க் கிடக்கிறது. தெருப்புழுதி அத்தனையும் அதில் விழுந்து காய்ந்துவிட்டது.*

*இவ்வளவையும் எப்படி நான் துடைத்துக் கழுவ? எண்ணெயும் சீயக்காய்ப் பொடியும் எடுத்து வைத்திருக்கிறேன். வெந்நீரும் ஆறுகிறது.*

*இரவு வந்தும் உனக்கு குளிக்க முடியவில்லை!*

*குளிக்கவில்லை என்றால் என் பக்கத்தில் நீ வரக்கூடாது."*

*தாயின் கண்டிப்பு எப்படிக் கவியில் வந்து நிற்கிறது என்று பார்ப்போம்.*

**தானன தானன**
**தானா**
**தானன தானன தானா**

**வெண்ணெய் அளைந்த குணுங்கும்**
**விளையாடு புழுதியும் கொண்டு**
**திண்ணென இவ்விரா உன்னைத்**
**தேய்த்துக் கிடக்கநான் ஒட்டேன்;**
**எண்ணெய் புளிப்பழம் கொண்டிங்(கு)**
**எத்தனை போதும் இருந்தேன்;**
**நண்ணல் அரிய பிரானே !**
**நாரணா ! நீராட வாராய் ! 34**

குணுங்கு - வெண்ணெயின் நெடி, திண்என - திடமாக, புழுதியும் வெண்ணெயும் சேர்ந்து காய்ந்துவிட்டது. அமுத்தித் தேய்த்தாலும் அது மசிய மாட்டேன் என்கிறது. இவ்இரா உன்னை தேய்த்து கிடக்க ஒட்டேன் - எண்ணெய் தேய்த்துக் குளிக்காவிட்டால் இன்று என்னுடன் நீ ஒட்டக்கூடாது. இரவு முழுவதும் நீ வேறு இடத்தில் படுக்க வேண்டியதுதான். புளிப்பழம் - புளியைப் போட்டுத்தான் கறையைத் தேய்த்து எடுக்க வேண்டும். அதனால் புளையையும் (சீயக்காய் பொடியுடன்) வைத்திருக்கிறாள். நண்ணல் அரியபிரான் - யாரும் எளிதில் நெருங்க முடியாது. தள்ளியே நிற்பான் இறைவன்.

**2** *“இன்றைக்கு உனக்குப் பிறந்தநாள். குளிக்காமல் இருக்கலாமா? ஓடி வா” என்கிறாள் தாய்.*

**கன்றினை வால்ஓலை கட்டிக்**
**கனிகள் உதிர எறிந்து**
**பின்தொடர்ந்(து) ஓடிஓர் பாம்பை**
**பிடித்துக்கொண் டாட்டினாய் போலும்;**
**நின்திறத் தேன்அல்லேன் நம்பீ!**
**நீபிறந் ததிரு நன்நாள்**
**நன்றுநீ நீராட வேண்டும்**
**நாரணா ஓடாதே வாராய்! 35**

**3** *மாட்டுத் தொழுவத்துள் போகிறான் பையன். சாணம், புழுதி எல்லாவற்றையும் அள்ளுகிறான். கை, கால், மேல் எல்லாம் சேறாகி விடுகிறது பையனுக்கு.*

*பையனுடைய மும்முரத்தைப் பார்த்தால் தாய்க்கு ஊக்கம் உண்டாகிறது. ஆனாலும் மற்றவர்கள் ஏளனம் பண்ணுவார்களே என்று மடங்குகிறாள்.*

*பையனுடைய கையைப் பிடித்து கரகர என்று இழுத்து வருகிறாள். “உனக்குக் கொஞ்சம்கூட வெட்கம்*

---

*கன்றினை ... ஆட்டினாய் போலும் - குழந்தை களுக்கு இருக்கிற ஆவேசமும் வேகமும் தனியானவை. இளம் ரத்தம். அதுக்கு பயம் இன்னதென்று தெரியாது. கொழுகொழு என்று திமிறிக் கொண்டிருக்கும் கன்றின் வாலில் ஓலையைச் சுற்றிக் கட்டுவான். இரண்டு மூன்று பேர் சேர்ந்து தரையில் அதை உருட்டுவார்கள். பிறகு செந்தூக்காகத் தூக்கி மரத்தில் எறிவார்கள். பாம்பைக் கண்டால் படையும் நடுங்கும் என்பது உண்மைதான். ஆனால் இளம் வயது பயம் அறியாது. உருவி ஓடும் பாம்பை விரட்டி அதன் வாலைப் பிடித்து கிறு கிறு என்று சுற்றி விடுவான். பாம்புக்கு நாக்கு வெளியே தள்ளிவிடும்.*

*நின்திறத்தேன் அல்லேன் நம்பீ - உன்னோடு போட்டி போட முடியாதப்பா என்னால் என்கிறாள் தாய். நீ பிறந்த ... நாள் - இன்று உனக்குப் பிறந்த நாள். தயவு செய்து நீராட வா என்று கெஞ்சுகிறாள் தாய்.*

*இல்லையே! பக்கத்து வீட்டு நப்பின்னை பார்த்தால் சிரிப்பாள். வா, குளிக்க" என்று இடித்துச் சொல்கிறாள்.*

**பூணித் தொழுவினில் புக்கு**
**புழுதி அளைந்தபொன் மேனி**
**காணப் பெரிதும் உகப்பன்**
**ஆகிலும் கண்டார் பழிப்பர்**
**நாண்இத் தனையும் இலாதாய்!**
**நப்பின்னை காணில் சிரிக்கும்;**
**மாணிக்க மே! என் மணியே!**
**மஞ்சனம் ஆடநீ வாராய். 36**

*பூணி - பசு, புக்கு - உள்ளேபோய், உகப்பன் - மகிழ்வேன், நாண் இத்தனையும் இலாதாய் - கடுகளவு கூட வெட்கம் இல்லாத பயலே.*

# ரோமம் ஒவ்வொன்றும் பவுன்தான்

1 குழந்தையை நீராட்டி தலையை நன்றாகத் துவட்டுவாள். உடம்பையும் துவட்டி விடுவாள்.

மடியில் பையனை உட்கார வைப்பாள். தலையில் உள்ள ரோமத்தை ஒவ்வொன்றாக எடுத்துப் பிரிப்பாள். கருகரு என்று வளர்ந்து வரும் தலைமுடியைப் பார்த்து பூரித்துப் போவாள் தாய்.

தலைமுடியைப் பிரிக்கும் பொழுதும், சீவும் பொழுதும் திமிறி உளத்துவான் பையன்.

காக்கை, குருவி முதலியன முற்றத்தில் விளையாண்டு கொண்டிருக்கும். அவற்றைப் பார்த்து மகிழ்வான் பையன்.

தாய்க்கு அதுபோதும். "காக்காய், காக்காய் இங்கே வா, இந்தப் பையனுக்குத் தலைசீவி விடு" என்று சொல்லிக் கொண்டே பையனுக்கு தலை கோதி விட்டு, கொண்டையும் கட்டிவிடுவாள்.

இப்பொழுது காக்காயை அழைக்கிறதைப் பார்ப்போம்.

பின்னை மணாளனைப்
பேரில் கிடந்தானை
முன்னை அமரர்
முதல்தனி வித்தினை,
என்னையும் எங்கள்
குடிமுழு(து) ஆட்கொண்ட
மன்னனை வந்து
குழல்வாராய் அக்காக்காய் !
மாத வன்தன்
குழல்வாராய் அக்காக்காய் ! 37

**2** *உயரமாகத்தான் கட்டித் தொங்க விட்டிருக்கிறது உறியை. அதில் உள்ள தாழியும் வலுவானதுதான். ஆனாலும் எப்படியோ ஏறி எடுத்து விழுங்கி விடுகிறான் வெண்ணெயை.*

*ஒன்றும் தெரியாதவனைப் போல் கண்ணை மூடியும் உறங்கி விடுகிறான்.*

*சிக்கெடுத்துச் சீவும்போது ஒவ்வொன்றாய் ஞாபகத்துக்கு வருகிறது தாய்க்கு.*

---

*பின்னைமணாளன் - நம்பின்னையின் கணவன். முன்னைஅமரர் - பூர்வத் தத்துவங்களாகிய தேவர்களுக்கும், முதல்தனிவித்து - மூலகாரணமான தெய்வம். அக்காக்காய் - அழகிய காக்கையே, குழல்வாராய் - கூந்தலை வாரிவிடு.*

குறிப்பு: *குழந்தை ஒன்று கிடைத்தால் போதும். ஆயிரம் திருநாமம் சூட்டி மகிழ்வாள் தாய். கரும்பு என்பாள், முத்து என்பாள், தங்கக்கட்டி என்பாள், ராஜா என்பாள், சாமி என்பாள், நப்பின்னை என்பாள், யசோதைக்கு மகன் என்றும் சொல்வாள்.*

திண்ணக் கலத்தில்
திரைஉறி மேல்வைத்த
வெண்ணெய் விழுங்கி,
விரைய உறங்கிடும்
அண்ணல் அமரர்
பெருமானை ஆயர்தம்
கண்ணனை வந்து
குழல்வாராய் அக்காக்காய் !
கார்முகில் வண்ணன்
குழல்வாராய் அக்காக்காய் ! 38

---

*திண்ணக்கலம் - வலுவான பானை, திரைஉறி - முறுக்கிய கயிறால் கட்டித் தொங்க விட்ட உறி. விரைய உறங்கிடும் - வெண்ணெயைத் திருடி உண்டுவிட்டான். அதைக் கண்டு பிடிப்பதற்குள் தூங்கியும் விட்டான். விரைய - வேகமாக.*

# விளையாட்டு மயம்

1 கை நிறைய கூளாங்கற்களை அள்ளி வைத்துக் கொண்டான் பையன். ஐந்தாறு கற்களை கீழே வைத்தான். அவை ஒவ்வொன்றையும் பசு என்றான். பிறகு ஐந்தாறு கற்களை வைத்து கன்றுகள் என்றான். கடைசியாக நான்கைந்து கற்களை வைத்தான். ஒவ்வொன்றையும் காளை என்று சொல்லிவிட்டான்.

பக்கத்தில் ஒரு சட்டி உடைந்து கிடந்தது. அதில் நீளமாக ஒரு ஓட்டை தட்டி நொறுக்கினான். அதையே மாடுமேய்க்கும் கம்பாக வைத்துக் கொண்டான்.

வீடே மேய்ச்சல் நிலம். பையன் மாடு மேய்க்க ஆரம்பித்து விட்டான்.

தாய் பார்த்தாள். சந்தோஷம் ஒரு பக்கம் வெட்கம் ஒரு பக்கம். ஒரு சிறு குச்சியை எடுத்து அவன் கையில் கொடுத்து ஓட்டினை வாங்கி வெளியில் எறிந்து விட்டாள்.

காக்காய் முற்றத்தில் இருக்கிறது.

பையனுக்கு ஒரு கம்பு கொண்டு வந்து கொடு மாடு மேய்க்கட்டும் என்று சொல்வதாக பாவனை.

வேலிக்கோல் வெட்டி
விளையாடு வில்லேற்றி,
தாலிக் கொழுந்தை
தடங்கழுத் திற்பூண்டு,
பீலித் தழையை
பிணைத்துப் பிறகிட்டு,
காலிப்பின் போவாற்கோர்
கோல்கொண்டு வா!
கடல்நிற வண்ணற்கோ
கோல்கொண்டு வா! 39

**2** *மாடல்லவா மேய்க்கிறான் பையன்! அப்படியானால் பையன் கண்ணபிரான் தானே! கும்பகோணம், திருக்கோட்டியூர் இப்படிக் கோயில் கொண்டு எழுந்தருளி உள்ள பெருமான் தான் பையன்.*

*அவனுக்கு இப்பொழுது வேண்டியது ஒரு கம்பு. வழுவழு என்று இருக்க வேண்டும் கம்பு. கணுக் கணுவாக இருக்க வேண்டும் கம்பு.*

*காக்காயிடம் சொல்கிறாள் தாய்.*

கொங்கும் குடந்தையும்
கோட்டியூ ரும்பேரும்
எங்கும் திரிந்து
விளையாடும் என்மகன்

---

*வேலிக்கோல்வெட்டி - வேலியில் வைத்த குச்சியை முறித்து, விளையாட்டு ஏற்றி - சாதாரண வில்லாக வளைத்தான். தாலிக்கொழுந்தை - தாயத்துக் கயிற்றை எடுத்தான். தடம்கழுத்தில்பூண்டு - கழுத்தில் மாட்டிக் கொண்டான். பீலித்தழையை - மயில் இறகுகளை எடுத்தான். பிணைத்து பிறகிட்டு - அவற்றை ஒன்று படக் கட்டினான். முதுகில் அசையும்படி போட்டுக் கொண்டான். காலிபின்போவான் - இத்தனை அலங்காரத் தோடு மாடு மேய்க்கப் புறப்பட்டு விட்டான். காலி - பசு. கோல்கொண்டுவா - கம்பு ஒன்று, எடுத்துவா.*

சங்கம் பிடிக்கும்
 தடக்கைக்கு தக்கநல்
அங்கம் உடையதோர்
 கோல்கொண்டு வா !
அரக்கு வழித்ததோர்
 கோல்கொண்டு வா ! 40

**3** குழந்தைக்கு முடி எடுப்பது, காது குத்துவது, காப்புப் போடுவது எல்லாம் விழாத்தான். கோலாகலமாக நடக்கும் திருவிழாத்தான். ஆனால் குழந்தைகள் பிகுப் பண்ணும். பெற்றோர்களுடன் ஒத்துழைக்காமல் உளத்தும்.

காப்பு அணிய மறுக்கும் பையனிடம் தாய் கெஞ்சுவதாகப் பாடல்.

தானன தானன தானா
 தானன தானன தானா

இந்திர னோடுபி ரமன்
 ஈசன்இ மையவர் எல்லாம்
மந்திர மாமலர் கொண்டு
 மறைய வராய்வந்து நின்றார்
சந்திரன் மாளிகை சேரும்
 சதுரர்கள் வெள்ளறை நின்றாய் !
அந்தியம் போதிது வாகும்
 அழகனே காப்பிட வாராய் ! 41

---

குடந்தை - கும்பகோணம், கோட்டியூர் - திருக் கோட்டியூர், மானாமதுரைப் பக்கம் உள்ளது. சங்கம் - சங்கு, பாஞ்ச சன்யம், தக்க - பொருத்தமான, அங்கம் உடைய - கணுவுடன் கூடிய, அரக்குவழித்த - இழைத்தும் மெருகுதாள் போட்டுத் தேய்த்தும் பளபளக்கும். *(40)*

மந்திரமாமலர் - பூசனைக்குரிய மலர், மறையவராய் - குருக்கள் மார் போல, சந்திரன் மாளிகை சேரும். *(41)*

# தலையை வெளியே காட்டமுடியவில்லை - தாயை அப்படிப் படுத்துகிறான் பையன்!

**1** வயது ஆக ஆக பலவகையான சட்டதிட்டங்களுக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டி இருக்கிறது. இது இது ஒவ்வாத செயல்கள் என்று நமது மூளை ஒரு பட்டியல் போட்டு வைத்திருக்கிறது.

இன்னின்ன காரியங்களில் இப்படி இப்படி நெளிவு சுழிவாய் நடந்து கொள்ள வேண்டும் என்று ஒரு வரன்முறையை நாம் வைத்திருக்கிறோம்.

அந்த வரன்முறையை மீறாமல் வண்டியை ஓட்டிக் கொண்டு போவதுதான் வாழ்க்கையின் நெறிமுறை.

குழந்தைகளுக்கு மேலே சொன்ன சட்ட திட்டங்கள் ஒன்றும் இல்லை. நெறி முறைகளைப்பற்றி குழந்தைகளுக்கு கவலை இல்லை.

உத்சாகம், ஓரே உத்சாகம், உத்சாகம் ஒன்றுதான் குழந்தைகளை ஆட்டி வைக்கும்.

உத்சாகத்தில் என்ன வேண்டுமானாலும் செய்வார்கள். எப்படி வேண்டுமானாலும் செய்வார்கள்.

குழந்தைகள் என்றால் தவழ்ந்து கொண்டிருப்பவர்கள் மட்டும் இல்லை, பத்து வயது பன்னிரண்டு வயது வரை உள்ளவர்கள் கூட குழந்தைகள் தான்.

கண்ணன் கண்ணன் என்று ஒரு பையன் வீட்டுக்குள் அவன் பண்ணுகிற தொல்லைகளைத் தாங்க முடியவில்லை. மடித்து வைத்த ஆடைகளை ஒவ்வொன்றாய் எடுத்து உலைத்துப் போடுகிறான். காயப் போட்ட ஈர உடைகளை உருவி சுருட்டி வைக்கிறான். காய்ச்சிய பாலை மடமட என்று குடித்து விடுகிறான். கண்காணிக்கிறாள் தாய் என்று தெரிந்தால், பால் சட்டியை காலால் ஒரு தட்டுத்தட்டி தலைகுப்புறக் கவிழ்த்து விடுகிறான்.

தாங்க முடியவில்லை தாய்க்கு. சேக்காளிகளோடு சேர்ந்து விளையாடுவதற்கு வெளியில் போகிறான் என்று வைத்துக் கொள்வோம். அவன் வீட்டுக்குத் திரும்புவதற்குள் அடுக்கடுக்காய் பல புகார்கள் அவனைப்பற்றி வந்து விடுகின்றன.

வெண்ணெய்ச் சட்டியை உடைத்துவிட்டான் என்று ஒருத்தி வந்து, இடித்துச் சொல்கிறாள். காயப் போடுவதற்கு குவித்து வைத்திருந்த உளுந்தை கன்னா பின்னா என்று சிதறவிட்டு ஓடிவிட்டான் என்று இன்னொருத்தி வந்து அங்கலாய்க்கிறாள்.

என் தொழுவில் புகுந்து கன்றை அவிழ்த்து எங்கோ விரட்டி விட்டான், நான் எங்கு போய்த்தேட என்று மற்றொருத்தி வந்து நொந்து புலம்புகிறாள்.

"கழுவி காய வைத்திருந்த பாத்திரங்களை எடுத்து கல்லில் போட்டுப் போட்டு உடைத்துவிட்டான் உன் மகன்" என்று கோபத்தோடு சொன்னாள் ஒரு பெண்.

"கொஞ்சம் அடக்கி ஒடுக்கி வையம்மா உன் பிள்ளையை" என்று எல்லோரும் குத்திக் குத்திச் சொல்கிறார்கள்.

என்ன செய்வாள் பாவம்.

பையன் வெளியில் போகிறான் என்றாலே தாய்க்கு ஒரே பயந்தான். அவள் குலையே நடுங்கும்.

இனி, பையனைப் பற்றி வருகிற புகழுரைகளைக் கவியில் கேட்போம்.

தானன தானன தானன் னா
தானன தானன தானன் னா

வெண்ணெய் விழுங்கி
வெறுங்கலத் தை
வெற்பிடை இட்டதன்
ஓசைகேட் கும்;
கண்ண பிரான்கற்ற
கல்விதன் னைக்
காக்ககில் லோம்உன்
மகனைக்கா வாய்!
புண்ணில் புளிபெய்தால்
ஒக்கும் தீ மை
புரைபுரை யால்இவை
செய்யவல் ல
அண்ணல் கண்ணான் ஓர்
மகனைப்பெற் ற
யசோதைநங் காய்! உன்
மகனைக்கூ வாய்! 42

*வெறும் கலம் - வெண்ணெய் இல்லாத வெறும் சட்டி. வெற்பிடை இட்டு - கல்லில் மோதி. ஓசை கேட்கும். மோதும்போது உண்டாகும் சத்தத்தைக் கேட்டு ரசிக்கிறான். கண்ணபிரான் ... காக்ககில்லோம் - கதையில் வரும் கோபால கிருஷ்ணன் செய்யும் லீலைகளை உன்மகன் செய்கிறான். அதை என்னால் சகிக்க முடியவில்லை. புண்ணில் புளிபெய்தல் - அடிபட்ட காயத்தில் புளிச் சாற்றைவிட்டால் தீயாய் பொசுக்கும். புரைபுரை - மாறி மாறி - தொடர்ந்து, அண்ணல் கண்ணான் - அருமைக் கண்ணன் என்றும், நாய்காய் - பெண்ணே, மகனைக் கூவாய் உன் பிள்ளையைக் கூப்பிடு வீட்டினுள் அடக்கிவை.*

**2** பையன் இன்னும் வீடுவந்து சேரவில்லை. ஆனால் புகார்கள் மேலும் மேலும் வந்து கொண்டே இருக்கின்றன. பக்கத்து வீட்டுப் பெண்கள் மட்டும் அல்ல, அடுத்த தெருவைச் சேர்ந்த பெண்டுகள் கூட நேருக்கு நேராய் வந்து புகார் சொல்கிறார்கள்.

என்னென்ன அக்கிரமம் பண்ணுகிறான். கையும் களவுமாய்ப் பிடித்து விசாரித்தாலும் அசைய மாட்டேன் என்கிறான். வாயைத் திறந்து ஒருவார்த்தை கூட சொல்ல மாட்டேன் என்கிறான். "பொல்லாத கல்லுளிமங்கன்" உன் மகன்.

இந்த அளவுக்குப் பெண்கள் பேசிவிடுகிறார்கள்.

ஆத்திரம் ஆத்திரமாக வந்தது தாய்க்கு. "வரட்டும் பயல். நன்றாக அவனுக்கு பாடம் புகட்டுகிறேன்'' என்றெல்லாம் ஆத்திரப்பட்டாள் தாய். ஆனால் பையன் வரவில்லை. நீண்ட நேரம் ஆகியும் பையன் வரவில்லை.

நேரம் ஆக ஆகப் பையன் மேல் பரிவு உண்டாகி விட்டது. கோபம் முழுவதும் கரைந்து விட்டது தாய்க்கு. எங்கு போனான், ஏன் வரவில்லை என்றும் ஆத்திரம் உண்டாகிவிட்டது தாய்க்கு.

மற்ற அம்சங்களை ஒதுக்கிவிட்டு பரிவும் ஆத்திரமும் மேலே எழுந்து வருவதைப் பாடலில் பார்க்கலாம்.

**வருக வருகவ**
**ருகஇங் கே**
**வாமன நம்பீ !**
**வருகஇங் கே;**
**கரிய குழல்செய்ய**
**வாய்முகத் துக்**
**காகுத்த நம்பீ !**
**வருகஇங் கே;**

அரியன் இவன்எனக்(கு)
இன்றுநங் காய்!
அஞ்சன வண்ணா!
அசல்அகத் தார்
பரிபவம் பேசத்
தரிக்ககில் லேன்;
பாவியே னுக்(கு) இங்கே
போதரா யே! 43

**3** *பிள்ளையை நினைந்து நினைந்து தாயின் உள்ளம் இடிந்தது. இடிந்து கரைந்தது.*

*காலை பத்து மணிக்கு வீட்டை விட்டுப் போனவன். மத்தியானச் சாப்பாட்டுக்கும் வரவில்லை. பிற்பகல் இரண்டு, மூன்று மணி என்று நேரம் ஓடிவிட்டது.*

*மாலையும் வந்துவிட்டது. ஆனால் பையனைக் காணோம். தாயின் உள்ளம் தள்ளாடுகிறது. தவியாய்த் தவிக்கிறது.*

*கண்டிப்பேன் என்று பயந்து வராமல் இருக்கிறானோ என்று ஒரு நினைப்பு வருகிறது. கூடவே ஆற்றாமை வந்து விடுகிறது.*

*இப்பொழுது தத்தளித்து மறுகும்போது ஒரு வயதான அம்மா வந்தாள். "உன்மகன் என் வீட்டுக்கு*

---

*அசல் அகத்தார் - பக்கத்து வீட்டார் மட்டுமல்ல, முன்பின் தெரிய அசலிடத்தார் கூட. அரியன் இவன் - போக்கிரிப்பையன் உன்பிள்ளை என்று பரிபவம் பேச - கேவலமாய்ச் சொல்ல, தரிக்கில்லேன் - தாங்க முடியவில்லை எனக்கு, நங்காய் - யசோதையே! இன்று இவன் எனக்கு - கையும் களவுமாய் உன்மகன் இன்று என்னிடம் அகப்பட்டான். ஆனாலும் அரியன் - பதிலே சொல்லாமல் சாதித்தான். பொல்லாத போக்கிரி என்று யார் யாரோ உன்மேல் பழிபோடுகிறார்கள். என்னால் தாங்க முடியவில்லை. இங்கே போதராய் - இப்பொழுதே வந்து சேர். வாமனாதாவரம் எடுத்துவனே, காகுத்த நம்பியே உன்னைக் காணாமல் இருக்க முடியவில்லை. உடனே ஓடிவா.*

இப்பொழுது வந்து பண்ணின கூத்தைக் கேளடி அம்மா" என்று ஒரு புராணமே படிக்க ஆரம்பித்துவிட்டாள்.

"பிள்ளையாகவா பிறந்திருக்கிறான், உனக்கு! சொல்லுவதற்கு நாக்குக் கூசுகிறது. பொல்லாத முரடன், வம்பன், சுழிப்பயல் என்றால் உன்பிள்ளைதான்" இப்படிப் பீடிகை போட்டு ஆரம்பித்தாள் பெண்.

உண்மைதான். விஷயத்தை சொல்வதற்கு அவளுக்கே கசந்துதான் இருந்தது. ஆனாலும் விட்டுவிட்டுச் சொன்னாள்.

என்ன சொன்னாள் வந்தவள.

பத்து நிமிசத்துக்கு முன் உன் பையன் என் வீட்டினுள் வந்திருக்கிறான். நான் பின்கட்டில் இருந்தேன். முன் கட்டில் இருந்த என் பெண்ணை (மகளை) கட்டிப் பிடித்து மல்லுக்கட்டி இருக்கிறான்.

அவள் கையில் போட்டிருந்த வளையலைக் கழட்டிப் பறித்துக் கொண்டான். அந்த நேரம் பார்த்து ஒரு கிழவி நாவல் பழத்தை விற்க வந்தாள். அவளிடம் வளையலைக் கொடுத்துவிட்டு நாவல் பழத்தை வாங்கித் தின்று விட்டு ஓடிவிட்டான்.

முன்கட்டுக்கு வந்த நான் பெண் அழுது கொண்டிருப்பதைப் பார்த்தேன். என்னடி நடந்தது என்று திடுக்கிட்டுக் கேட்டேன். நடந்ததைச் சொன்னாள்.

ஓட்டமாய் ஓடி வந்து உன் மகனைப் பிடித்து விட்டேன். என்னடா செய்தாய் போக்கிரி என்று கேட்டேன். ஒன்றுமே தெரியாதவன் போல பாவனை பண்ணுகிறான் உன் பையன்.

"மாட்டைப் பத்திக்கொண்டு மேய்ப்பதற்கு விடியற்காலம் போனவன் இப்பொழுதுதான் திரும்புகிறேன். உன் வீட்டுக்கு நான் எப்பொழுது வந்தேன். எனக்கு ஒன்றுமே தெரியாது" என்று சாதித்துவிட்டான் உன் பையன்.

இனிப் பாடல்:

சொல்லில் அரசிப்
படுதிநங் காய்!
சூழல் உடையன்உன்
பிள்ளைதா னே,
இல்லம் புகுந்தென்
மகளைக்கூ வி,
கையில் வளையை
கழற்றிக்கொண் டு,
கொல்லையில் நின்றும்
கொணர்ந்துவிற் ற
அங்கொருத் திக்கவ்
வளைகொடுத் து,
நல்லன நாவல்
பழங்கள் கொண்டு
நான்அல்லேன் என்று
சிரிக்கின்றா னே! 44

*சொல்லில் - விஷயத்தைச் சொல்ல நேர்ந்தால் - அரசிப்படுதி - கேட்கவே சகிக்கமாட்டாய். பெற்ற எனக்கே பிள்ளையின் செயலைக் கேட்க அருவருப்பாக இருக்கும். சூழல் உடையன் - சுழியன், வம்பன், கூவி - இங்கே வா என்று அழைத்து வளை - வளையல், கொல்லையில் நின்றும் கொணர்ந்து விற்ற அங்கு ஒருத்திக்கு - கொல்லையில் உள்ள நாவல் மரத்துப்பழங்களைக் கொண்டு வந்து விற்கும் பெண்ணிடம், நான் அல்லேன் என்று சிரிக்கின்றான் - எனக்கு ஒன்றுமே தெரியாது என்று இடக்குப் பண்ணுகிறான் உன்மகன்.*

# நாடக உலகம்

**1** குழந்தைகள் மளமள என்று வளரும். இரண்டு மூன்று வயதைத் தாண்டி விட்டால் பெற்றோர்களே திகைக்கும்படி வளர்ந்துவிடும் குழந்தைகள்.

குழந்தைகளின் உருவம் மட்டுமல்ல உள்ளமும் சேர்ந்தே வளரும். குழந்தைகளின் மனம் விரிந்து பரந்து ஓடிக் கொண்டே இருக்கும். குழந்தைகளின் மனம் ஒரு தனி உலகந்தான். அந்த உலகத்துக்கு ஆரம்பம் எது, முடிவு எது என்று சொல்ல முடியாது.

நமது பார்வைக்கு குழந்தை தனி என்று தெரிகிறது. உண்மையில் எந்தக் குழந்தையும் தனியாக இல்லை. ஒவ்வொரு குழந்தையும் தன்னோடு ஒரு குழந்தையைச் சேர்த்தே வைத்திருக்கிறது. அப்படிச் சேர்த்து வைத்திருக்கும் மனக்குழந்தையோடுதான் ஒவ்வொரு குழந்தையும் உறவாடிக் கொண்டிருக்கும்.

குழந்தைக்கு விளையாட்டுத்தான் உயிர். ஆனந்தந்தான் உயிர். அதனால் எப்பொழுதும் அதனோடு இன்னொரு குழந்தை சேர்ந்தே இருக்கும்.

ஆண், பெண் என்கின்ற வித்தியாசமே குழந்தைக்குத் தெரியாது. குழந்தைக்கு வேண்டியது இன்னொரு குழந்தை. அவ்வளவுதான்.

குழந்தைக்கு வயது ஏற ஏற அதன் மனசிலுள்ள குழந்தை நழுவும். விலகி ஒதுங்கும். அப்பொழுது தன்னொத்த சேக்காளிகளைப் பிடித்துக் கொள்ளும் குழந்தை.

சேக்காளிகளுடன் சேர்ந்து விளையாடும். விளையாட்டில் குறும்புத்தனமும் இருக்கும். கோமாளித் தனமும் இருக்கும். சில சமயங்களில் விளையாட்டு போக்கிரித்தனமாகவே இருக்கும்.

இப்பொழுது குழந்தை நன்றாக வளர்ந்து விட்டான். வயது பத்தை எட்டிவிட்டது. பையன் என்று பெயர் பெற்றுவிட்டான். இளைஞன் என்றும் சொல்லலாம்.

சேக்காளிகளுடன் ' சேர்ந்து பையன் பண்ணுகிற வேடிக்கைகளுக்கு அளவே இல்லை. தானாகச் செய்கிற வேடிக்கைகளும் உண்டு. மற்றவர்கள் காரியங்களைப் பார்த்து செய்கிற வேடிக்கைகளும் உண்டு.

ஊரில் ஒரு சமயம் மந்தை நாடகம் நடந்தது. கிருஷ்ணாவதாரத்தில் கண்ணன் செய்த லீலைகளைச் சித்தரிக்கும் நாடகம் அது. அந்த நாடகத்தை பையன் பார்த்தான். நண்பர்கள் பலரோடு சேர்ந்து பார்த்தான்.

கிருஷ்ண லீலை கொஞ்சம் கொஞ்சமாய் பையனுடைய உணர்ச்சிக்குள் பாய்ந்தது. உணர்ச்சி முழுவதையும் கிருஷ்ண லீலை வசப்படுத்திக் கொண்டது.

பையனுடைய அந்த உணர்ச்சி ஒரு முறுக்கு முறுக்கியது. ஒரு ஆவேசமே உண்டாகிவிட்டது பையனுக்கு. கிருஷ்ணனாக எழுந்து விட்டான் பையன், ஊக்கமாய் எழுந்து நின்றான் பையன்.

வீட்டில் இருக்க மாட்டான் பையன். அங்கே இங்கே என்று சதா சுற்றிக் கொண்டிருந்தான்.

படித்துறையில் உடைகளை அவிழ்த்து வைத்து விட்டு, வளையல்களைக் கழற்றி ஆடைக்குள் வைத்துவிட்டு ஆற்று நீரில் மூழ்கிக் குளிக்கிறார்கள் பெண்கள்.

எங்கிருந்தோ பூப்போல நடந்து வந்தான் பையன். படித்துறையில் இருந்தவற்றைச் சுருட்டிக் கொண்டு ஓடிவிட்டான். காற்றாய்ப் பறந்தோடி விட்டான்.

யமுனைத்துறையில் கோபிகைகளிடம் கண்ண பிரான் செய்ததை நாடகத்தில் பார்த்து ரசித்திருக்கிறான் பையன்.

பறிகொடுத்த பெண்களின் புகாரை இனிப்பாடல் மூலம் பார்க்கலாம்.

**தானன தான**
**தானான தானான**

**ஆற்றில் இருந்து**
**விளையாடு வோங்களை**
**சேற்றால் எறிந்து,**
**வளைதுகில் கைக்கொண்டு,**
**காற்றின் கடியனாய்**
**ஓடி அகம்புக்கு,**
**மாற்றமும் தாரானால்**
**இன்றுமுற் றும்,**
**வளைத்திறம் பேசானால்**
**இன்றுமுற் றும் !** **45**

**2** வளையலையும் துகிலையும் பறிகொடுத்த பெண்களும் குழந்தைகள்தான். பையனை ஒத்த பருவத்தினர்தான். ஒன்றிரண்டு வயது ஒரு சிலருக்கு கூட

சேற்றால் எறிந்து - நீராடி விட்டு வெளியில் வரும் பெண்கள் மேல் சகதியை அள்ளி எறிந்தான். வளைதுகில் - வளையலையும் சேலையையும், காற்றின் கடியனாய் காற்றை விட வேகமாய். அகம்புக்கு - வீட்டினுள் வந்து ஒளிந்து கொண்டான். மாற்றமும் தாரான் ஏன் எடுத்தாய், எங்கே வைத்திருக்கிறாய் என்றால் பதிலே இல்லை. வளைத்திறம் பேசான் - விடிய விடியப் போராடி ஒரு வழியாகச் சேலையை வாங்கிவிட்டோம். ஆனால் வளையலைப் பார்க்கவே இல்லை என்று சாதித்துவிட்டான். மாற்றம் - பதில் வளை - வளையல். இன்று முற்றும் - நாள் முழுதும்.

இருக்கலாம். குறையவும் இருக்கலாம். மற்றப்படி அவர்கள் வயதான பெண்கள் அல்லர்.

பெண்களுக்கு பையன் மேல் கோபம் வந்தது உண்மைதான். ஆனால் அந்தக் கோபம் விரைவில் ஓடிவிட்டது. பையனுடைய குறும்புத்தனத்தில் பிரியமே உண்டாகிவிட்டது.

ஆற்றில் நீராடுகிற பெண்கள் ஒவ்வொருவரும் பையனை எதிர்பார்த்தே நீராடினார்கள். அவன் வருவதற்கு நேரம் ஆனால் அதுவரை நீராடிக் கொண்டே இருந்தார்கள்.

ருசி கண்ட பைய;ன் விடுவானா? எப்படியோ வந்துவிட்டான். அவர்கள் கண் காணவே அவர்களுடைய உடைமைகளை எடுத்துக் கொண்டு நடந்தான். பெண்கள் பின் தொடர்ந்தார்கள். அவனை எப்படியும் பிடித்து விட வேண்டும் என்று ஓடி வந்தார்கள்.

பெண்கள் விரட்டி நெருங்குகிறார்கள் என்றவுடன் பையன் ஒரு மரத்தின் மேல் ஏறிவிட்டான். உச்சிக்கிளைக்கே வந்து விட்டான்.

ஒரு கொப்பில் இரண்டு கால்களையும் தொங்கப் போட்டு உட்கார்ந்தான். இலைகளைச் சுருட்டி குழல் போல வைத்துக் கொண்டான். அதில் வாய் வைத்து ஊதி ராக ஆலாபனையே பண்ண ஆரம்பித்து விட்டான்.

அப்பொழுது அவன் காதில் அணிந்திருந்த குண்டலம் ஆடியது. அவன் தலைமுடியும் ஆடியது. இடுப்பில் கட்டி இருந்த தங்கச் சங்கிலியும் ஆடியது.

பெண்களின் உள்ளமும் துள்ளித் துள்ளி ஆடியது.

**குண்டலம் தாழக்,**
**குழல்தாழ நாண்தாழ,**
**எண்திசை யோரும்**
**இறைஞ்சித் தொழுதேத்த**
**வண்டமர் பூங்குழ**
**லார்துகில் கைக்கொண்டு,**

**விண்தோய் மரத்தானால்**
**இன்றுமுற் றும்;**
**வேண்டவும் தாரானால்**
**இன்றுமுற் றும்! 46**

**3** *கிருஷ்ண லீலை நாடகத்தில் இன்னொரு காட்சி. நீலமணி போன்று தெள்ளத் தெளிந்த தடாகம். தடாகத்தில் பாய்ந்து தண்ணீரை ஒரு உழக்கு உழக்குகிறான் கிருஷ்ணன். கருநாகம் ஒன்று படம் எடுத்து கிருஷ்ணன் மேல் சீறிப் பாய்கிறது. என்ன செய்தான் கிருஷ்ணன்.*

*நாகத்தின் வாலைப்பிடித்து ஒரு சுற்றுச் சுற்றினான். ஒரு சுழட்டுச் சுழட்டி தண்ணீரில் அடித்தான் நாகத்தை.*

*பாம்பு முதலில் இறங்கியது. பிறகு ஆங்காரத் தோடு படத்தை அகல விரித்துக் கொண்டு கிருஷ்ணனைக் கொத்துவதற்குத் துள்ளியது. அவ்வளவுதான். பாம்பின் தலைமேல் ஒரு தாவு தாவினான். படத்தின் உச்சியில் நின்று மாறி மாறி மிதித்தான். உடம்பை ஒரு உலுக்கு உலுக்கினான். பரத நாட்டியம் ஆடுகிற பெண் உணர்ச்சிய பாவத்துக்கு ஏற்ப அபிநயம் பிடிப்பது போல இருந்தது அசைந்து நெளிந்த கிருஷ்ணனின் திருமேனி.*

*இந்தக் காட்சியை நாடகத்தில் பார்த்து அனுபவித்தான் பையன். தானும் அப்படியே செய்ய வேண்டும் என்று ஆசைப்பட்டான். செயலிலும் இறங்கி விட்டான்.*

*அவனை ஒத்த பெண் பிள்ளைகளும் நாடகத்தைப் பார்த்திருக்கிறார்கள். பையன் போடுகிற நாடகத்தையும் பார்க்கிறார்கள் வியக்கிறார்கள்.*

---

*குண்டலம் - காதணி. குழல் - தலைமுடி. நாண் - அரஞாண். எண் திசையோரும் இறைஞ்சி தொழுது ஏத்த - மரத்தின் கீழே நின்ற பெண்கள் அங்கங்கே இருந்து வேண்ட வண்டு அமர்பூங்குழலார்துகில் - வண்டு மொய்க்கும் படி பூச்சரம் சூடிய கூந்தலை உடைய பெண்களின் உடையை. விண்தோய்மரம் - வானளாவிய உயரமான மரம்.*

*வியப்பு பாடலாய் உருவெடுக்கிறது.*

**தடம்படு தாமரைப்**
**பொய்கை கலக்கி;**
**விடம்படு நாகத்தை**
**வால்பற்றி ஈர்த்து**
**படம்படு பைந்தலை**
**மேல்எழப் பாய்ந்திட்(டு)**
**உடம்பை அசைத்தானால்**
**இன்றுமுற் றும்;**
**உச்சியில் நின்றானால்**
**இன்றுமுற் றும்! 47**

**4** *பையனுடைய அட்டகாசமும் முரட்டுத்தனமும் நாளுக்கு நாள் கூடிக்கொண்டே போகிறது. சாதாரணப் பையனாகத் தெரியவில்லை. கதையில் வருகிற கோபால கிருஷ்ணனாகத் தான் தெரிகிறது.*

*ஆயர்பாடியில் கிருஷ்ணன் செய்த லீலைகள் ஒவ்வொன்றும் பையன் மூலம் மற்றவர்கள் ஞாபகத்துக்கு வருகின்றன.*

---

*தடம்படு - விசாலமான, விடம்படு நாகம் - விஷயத்தைக்கு கக்கும் பாம்பு ஈர்த்து - கரகர என்று இழுத்து. படர்படு பைந்தலை - படத்தைத் தூக்கி ஆட வைக்கும் மெத்ததென்ற தலை. மேல் எழப்பாய்ந்து - பாம்பின் தலை மேல் துள்ளிப் பாய்ந்து, பாம்பின் உச்சியில் குதித்து அவன் வளைந்தும் நெளிந்தும் பிடித்தது போல இருந்தது. இன்று முற்றும் - நாள் முழுதும் அது கண்ணுக்குள்ளேயே இருக்கிறது.*

**குறிப்பு :** *சில காரியங்கள் பெரியவர்களைக் குடல் பதற வைக்கும். ஆனால் இளைஞர்களுக்கு விளையாட்டாக இருக்கும். இளைஞர்களின் துணிச்சலைக் கையில் எடுத்துக் காட்டுவது போல் இருக்கிறது பாட்டு.*

*பால்பானையையும் தயிர் சட்டியையும் அவன் உருட்டியது. வெண்ணெயை உருட்டி உருட்டி வாயில் அள்ளிப் போட்டது. பிறகு பிடிப்பட்டது கயிற்றால் கட்டப்பட்டது எல்லாம் ஞாபகத்துக்கு வருகின்றன.*

**ஆய்ச்சியர் சேரி**
**அளைதயிர் பாலுண்டு**
**பேர்த்தவர் கண்டு**
**பிடிக்கப் பிடியுண்டு**
**வேய்த்தடம் தோளினார்**
**வெண்ணெய்கோள் மாட்டாது,**
**ஆப்புண்(டு) இருந்தானால்**
**இன்றுமுற் றும்;**
**அடிஉண்(டு) அழுதானால்**
**இன்று முற்றும்! 48**

**5** *“மகாபலிச் சக்கரவர்த்தியிடம் திருமால் போனார். சாதாரணக் குள்ளன் போல வேஷம் போட்டுக் கொண்டு போனார். மூன்றடி மண் கேட்டார். அவனும் கொடுத்தான். ஒரு அடியால் உலகம் முழுவதையும் அளந்துவிட்டார். அப்படி அளந்தவர்தான் பையனுள் புகுந்து ஆரவாரம் பண்ணுகிறார்” இப்படி அதியசயிக்கிறார்கள் பெண்கள்.*

**மாவலி வேள்வியில்**
**மாணுரு வாய்ச்சென்று**
**மூவடி தா என்று**
**இரந்தஇம் மண்ணினை**

---

*ஆய்ச்சியர் சேரி - ஆயர்பாடி, அளைதயிர் - கட்டித்தயிர் பேர்த்து அவர் காண - தயிரைக்காண வில்லையே பாலைக்காணவில்லையே என்று அவர்கள் திகைத்து, வேய்த்தடம் தோளினார் - மூங்கில் போல வழவழ என்றிருக்கும் தோளினை உடைய பெண்கள்; வெண்ணெய் கோள்மாட்டாது - கடைந்தெடுத்த வெண்ணெய் அவர்களுக்குக் கிடைக்காதபடி ஆப்புண்டு - கட்டப்பட்டு.*

**ஓரடி இட்டிரண்**
**டாம்அடி தன்னிலே**
**தாவடி இட்டானால்**
**இன்றுமுற் றும்;**
**தரணி அளந்தானால்**
**இன்றுமுற் றும் !** 49

**6** *பையனைப் பார்க்கப் பார்க்க கதை புதிதாய் வருகிறது. இப்பொழுது வருகிற கதை யானையைக் காப்பாற்றியது. கரை எல்லாம் தாழை மடல். தண்ணீர் முழுதும் செங்குமுத மலர்கள் காடாய்ப் பூத்திருக்கிறது. அதனுள் ஒரு முதலை. பொல்லாத முதலை.*

*குளத்தில் தண்ணீர் குடிக்க வந்த யானையைக் காலைப்பிடித்து உள்ளே இழுத்தது. பலங்கொண்ட மட்டும் முண்டிப் பார்த்தது யானை. முதலை இழுத்துக் கொண்டே போகிறது.*

*பலம் அவ்வளவும் ஓய்ந்தபின் "கடவுளே! காப்பாற்றும்" என்று கூப்பாடு போட்டது யானை.*

*அவ்வளவுதான், சங்கு சக்கரதாரியாய் கரையில் வந்து நின்றான் ஸ்ரீமந்த நாராயணன்; நின்று என்ன செய்தான் பெருமான்.*

**தாழைதண் ஆம்பல்**
**தடம்பெரும் பொய்கைவாய்**
**வாழும் முதலை**
**வலைப்பட்டு வாதிப்புண்**
**வேழம் துயர்கெட**
**விண்ணோர் பெருமானாய்**

---

*வேள்வி - யாகம், மாண்உரு - சக்தி முழுதும் உள்ளடங்கிய சித்துரு. இரந்த - கேட்டுவாங்கினான். ஓரடி. இம்மண்ணினை ஓரடி இட்டு - உலகம் முழுவதையும் ஒரே அடியில் அடக்கிவிட்டான். இரண்டாம் அடிக்கு பிரபஞ்சவெளி முழுதும் இரை. தாஅடி - தாவி அளந்த திருப்பாதம். தரணி - உலகம்.*

**ஆழிபணி கொண்டானால்**
**இன்றுமுற் றும்;**
**அதற்கருள் செய்தானால்**
**இன்றுமுற் றும் !**

குறிப்பு : *இவன் பிள்ளை இல்லை. நாராயணனேதான் என்னும் ஆனந்த உணர்ச்சி கவியாய் வந்து விட்டது.*

**7** *இரணியாட்சன் என்று ஒரு ராட்சதன். ஓலைப்பாயைச் சுருட்டுவதுபோல் பூமியையே சுருட்டினான். கடலுள் கொண்டுபோய் ஒளித்து வைத்து விட்டான்.*

*திருமாலுக்கு கோபம் வந்துவிட்டது. வராக (பன்றி) அவதாரம் எடுத்தார். கொம்பால் அவனைக் குத்திக் கிழித்தார். கடலுள் கிடந்த பூமியை எடுத்துக் கொண்டு வந்தார். பழையபடி விரித்துப் போட்டு விட்டார்*

*அந்தத் திருமால் கிருஷ்ணனாக வந்தார். பசுமந்தையைக் காட்டுக்குக் கொண்டு போய் மேய்த்தார். இப்பொழுது இந்தப் பயலாய் வந்து அட்டகாசம் பண்ணுகிறார்.*

**வானத்(து) எழுந்த**
**மழைமுகில் போல்எங்கும்**
**கானத்து மேய்ந்துக்**
**களித்து விளையாடி,**
**ஏனத்(து) உருவாய்**
**இடந்தம்இம் மண்ணினை**

---

*தண் குளிர்ந்த ஆம்பல் - செங்குமுதம். தடம் பெரும் பொய்கை - விரிந்து பரந்த குளம். வாதிப்புண் வேழம் - துன்பப்பட்ட யானை, ஆழி பணி கொண்டான். சக்கரத்தைச் சுழற்றி முதலை மேல் எறிந்தான், ஆழி - சக்கரம்.*

தானத்தே வைத்தானால்
    இன்றுமுற் றும்;
தரணி அளந்தானால்
    இன்றுமுற் றும்! 51

## இசைமழை

1 பாகவதர் ஒருவர் பாடுகிறார். கல்யாண வீட்டிலோ சபையிலோ பாடுவதாக வைத்துக் கொள்வோம். வெறுமனே அவரால் பாட முடியாது. தம்புரா வேண்டும், வயலின் வேண்டும், மிருதங்கம் வேண்டும், கஞ்சிரா, கடம், மோர் சிங் இப்படி என்னென்னவோ வேண்டும்.

இல்லாவிட்டால் வராது. வந்தாலும் ஒரு பாட்டுக்கு மேல் அவரிடம் கேட்க முடியாது.

ஆனால் காட்டில் எருமைமாடு மேய்க்கிற பையனுக்கு ஒன்றும் வேண்டாம். ஒரு விருத்தத்திலோ தெம்மாங்கிலோ இரண்டு வரிகள் கிடைத்தால் போதும். அதை வைத்து அவன் பாடுவான். அவன் பாடப்பாட காடு முழுவதும் அந்த வட்டாரம் முழுவதும் மழை கொட்டுவது போலக் கொட்டும் சங்கீதம்.

வழிப்போக்கர்கள் மட்டுமல்ல, மரங்கள், செடி கொடிகள், ஆடு மாடுகள் கன்றுகள் எல்லாமே உருகிவிடும்.

எல்லாவற்றையும் மறந்து இசையோடு இசையாய் அத்தனையும் கரைந்து கலந்துவிடும்.

* * *

நாதசுரம் இல்லை. தவுல்காரர் இல்லை. சிங்கி அடிக்கிற பையன் இல்லை. நாலு முழ வேட்டியும் சிட்டித் துண்டுமாக ஒருவர் வந்தார். நண்பர் ஒருவர் அவரை அழைத்துக் கொண்டு வந்தார்.

நண்பர் அவரை அறிமுகப்படுத்தினார்.

''இவர் சங்கீதம் படிக்கவில்லை. இரண்டு கைகளிலும் உள்ள விரல்களை மடக்கிக் கொண்டு அவற்றை ஒன்று சேர்த்து பெருவிரல்களின் மேல் வாய் வைத்துப் பாடுவார். அதை நீங்கள் கேட்கவேண்டும். ராஜரத்தினத்தின் வாசிப்பு இதன் பக்கம் நிற்க முடியாது. அப்படிக் கானாமிர்தமாக இருக்கும்.''

நண்பர் சொல்லியது உண்மைதான். கைவிரல் களுக்குள்ளிருந்து வந்த அந்த இசையில் எத்தனை கமகங்கள்! எத்தனை எத்தனை கார்வைகள்!

உணர்ச்சியைப் பிசைந்து பிசைந்து கனிய வைத்தது அந்த இசை. நவரஸங்களும் அங்கங்கே நின்று அபிநயம் பிடித்தன.

தெருவில் போகிறவர்கள் எல்லோரும், உயர்ந்த நாதசுரக் கச்சேரி நடக்கிறது என்று வீட்டில் வந்து கூடி விட்டார்கள்.

கைதான் அவருக்கு குழல். சீவாளமும் அதில்தான் இருக்கிறது. சுதிப் பெட்டி, தவுல், சிங்கி எல்லாம் அந்த மூடியவிரல்களுக்கு உள்ளேதான்.

* * *

இசை வாணர்கள் காரியம் அங்கே நிற்கட்டும். எட்டு வயது முதல் பத்துப் பன்னிரண்டு வயது வரை உள்ள பையன்களைப் பார்க்கிறோம். அவர்களுக்கு ஒரு சோளத்தட்டையும் பனை ஓலையும் கிடைத்தால் போதும். காற்றாடி செய்துவிடுவார்கள். கிறுகிறு என்று காற்றில் அது வேகமாகச் சுற்றும். காய்ந்து போன ஒரு குச்சியை நான்கு துண்டுகளாய் ஒடிப்பார்கள். சம சதுரத்தில் அந்தத் துண்டுகளை வைத்துக் கட்டுவார்கள். பழைய பேப்பரை முன்னும் பின்னும் வைத்து ஒட்டுவார்கள். வலுவான

நூலில் அதைக் கட்டுவார்கள். அவ்வளவுதான் பட்டம் மேலே மேலே போய்க் கொண்டிருக்கும்.

பையன் கையில் நூலின் கடைசிப் பகுதி இருக்கும். பட்டம் வானவெளியில் மிதக்கும்.

பூவரசு இலை ஒன்று போதும். அதைக்குழல் போலச் சுருட்டுவான் பையன். ஈக்கிவைத்து வைத்து விடுவான். பிறகு வாயில் வைத்து ஊதுவான். இசையும் பாட்டும் குதித்துக் கொண்டு ஓடிவரும்.

பட்டி தொட்டிகளிலிருந்து பெரிய நகரங்கள் வரை இந்தக் காட்சியை நாம் பார்க்கிறோம். இந்த இருபதாம் நூற்றாண்டின் முடிவில் கூட நாம் பார்க்கிறோம்.

* * *

பாற்கடலில் பள்ளி கொள்ளும் பரந்தாமனே குழந்தையாகப் பிறந்து வளர்கிறான். ஆயர்பாடியிலும் அவன்தான் குழந்தையாக அவதரித்து துள்ளி விளையாடுகிறான்.

குழந்தைகள் பெரியவர்கள் - ஏன் பேரண்டம் முழுவதுமே இறைவன்தான். கடவுளைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. இந்த உண்மையில் நிற்கிறவர் பெரியாள்வார்.

ஆயர்பாடியில் வளரும் பையன். பத்துவயது அல்லது பன்னிரண்டு வயது இருக்கும். வெண்ணெயும் தயிருமாகச் சாப்பிட்டு கொழு கொழு என்றிருக்கிறான் பையன்.

இசைவாணர்கள் பாடுகிறதைக் கேட்டிருக்கிறான். அனுபவித்தும் இருக்கிறான். பஜனை கோஷ்டியார் பாடுகிறதைக் கேட்டு மனத்தையே அவர்களிடம் கொடுத்து விட்டான். அவனுக்குப் பாட்டில் ஆசை வெறி. தங்கத்தோடா, வயிரக்கடுக்கன், பட்டு வேட்டி, சால்வை, ருத்திராட்சரக் கொட்டை இவைகளுக்கு எங்கே போவான் பையன்.

இலை தழைகளை வைத்தே மாலை போலவும் சால்வை போலவும் போட்டுக் கொண்டான். காட்டுப்

பூக்களையும் குழைகளையும் தலையில் சொருகிக் கொண்டான். பூவரசு இலைதான் புல்லாங்குழல். தோழர்கள்தாம் பஜனை கோஷ்டி. அதாவது பக்கவாத்தியக் காரர்கள்.

மதுரமான தெய்வகானத்தைப் பொழிந்து கொண்டு, தெரு வழியே வருகிறான் பையன். தெருவில் போகிறவர்கள் எல்லாம் திகைத்து நிற்கிறார்கள்.

குழந்தையைத் தொட்டிலில் போட்டு ஆட்டிக் கொண்டிருந்த பெண்கள்கூட அப்படியே ஓடிவந்து வாசல் படியில் நின்றும் ஜன்னல் ஓரமாக நின்றும் பையன் பாடலை அனுபவிக்கிறார்கள்.

அவசரமாக வீட்டுக்குப் போகிற பெண்களும் வாசல் படியைத் தாண்டி உள்ளே போக முடியவில்லை. பையனுடைய பாட்டு எல்லோரையும் அப்படி வசமாக்கி விட்டது.

**தழைகளும் தொங்களும் ததும்பிஎங் கும்**
**தண்ணுமை எக்கம்அளி தாழிபீ லி**
**குழல்களும் கீதமும் ஆகிஎங் கும்**
**கோவிந்தன் வருகின்ற கூட்டம்கண் டு,**
**மழைகொலோ வருகின்ற(து) என்று சொல் லி,**
**மங்கைமார் சாலக வாசல்பற் றி**
**நுழைவனர் நிற்பனர் ஆகிஎங் கும்**
**உள்ளம்விட்(டு) ஊண்மறந்(து) ஒழிந்தன ரே. 52**

---

*தழைகள் - காட்டு மரங்களில் பறித்த இலைகள், தொங்கல் - மாலை, இலைகளால் தைத்தமாலை. ததும்பி எங்கும் - மார்புதலை எல்லாவற்றிலும் போட்டுக்கொண்டு, தண்ணுமை - மத்தளம் எக்கம் - தாளம். தாழிப்பீலி - மயிலிறகின் குருத்துப் போன்ற குழல். வாத்தியங்கள் எல்லாம், உடைந்த மரத்துண்டு, இரட்டை, இலை, ஓடு இவற்றால் ஆனவைதாம். கூட்டம் - பின்பாட்டுக்காரர் பக்கவாத்தியக்காரர் சேர்ந்த குழாம்.*

*மழை கொலோ வருகின்றது என்று - 'சுள்' என்று வெயிலடிக்கும், சில சமயம் அந்த வெயிலிலும் மேகக் கூட்டம் திரண்டு விடும். நாலாதிசைகளிலிருந்தும் அவை ஓடி வரும். மழை கொட்டுவதற்கு முன் குளிர்ந்த காற்று வீசும். மேகங்கள் திரள்வது, குளிர் காற்று, மழை எல்லாம் அற்புதந்தான்.*

**2** *கண்ணன் குழலூதி வந்தது அப்படி அற்புதமாக இருந்தது. சாலக வாசல் - ஜன்னல்பக்கம், உள்ளம் விட்டு - வசமிழந்து உண்ட உணவு மழை கொட்டுவது போல தெருவெல்லாம் இசை வெள்ளம் திரண்டோட பாடி வந்தான் பையன். போகிறவர்கள் வருகிறவர்கள் எல்லோருமே இசையில் மயங்கி நின்றார்கள். கரைந்து போனார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். அப்படிச் சொக்க வைத்துவிட்டது பாட்டு.*

*பத்து வயது அல்லது பதினோரு வயதிருக்கும் ஒரு சிறுமி. அவளும் தெருவில் நின்று இந்த இசையைக் கேட்டாள். தன்னை மறந்தாள். சங்கீதத்தோடு இந்த சங்கீதமாய் லயித்துப் போனாள் பெண்.*

*பையன் பாடிவிட்டுப் போய்விட்டான். அவன் காரியம் அதோடு முடிந்தது. ஆனால் பெண்ணின் காரியம் அப்படி எளிதில் முடிந்து விடாதே.*

*அவன் பாடிய இசையும் தாளமும் பெண்ணின் செவிகளில் ஒலித்துக் கொண்டே இருக்கின்றன. மனம் அவற்றை அனுபவித்த வண்ணமாக இருக்கிறது. பையனுடைய முகம், கண், உதடு, தலைமுடி, அலங்காரம், பார்வை அவ்வளவும் பெண்ணின் முன் நின்று நடனமாடுகின்றன. அவற்றையே பார்த்துக் கொண்டிருக்கின்றன அவள் கண்கள்.*

*சாப்பாட்டில் ஆசையில்லை. உறக்கத்திலும் நாட்டம் இல்லை. உடம்பு கொஞ்சம் கொஞ்சமாய் இளைக்கிறது. கையில் அணிந்த வளையலும் கழலும் அளவுக்கு இளைத்துவிட்டது உடம்பு.*

*மகளைப் பார்க்கப் பார்க்க தாயின் மனம் என்ன பாடுபடும்?*

**வலங்காதின் மேல் தோன்றிப் பூஅணிந்த து,**
**மல்லிகை வனமாலை மௌவல்மா லை,**
**சிலிங்காரத் தால்குழல் தாழவிட் டு,**
**தீங்குழல் வாய்மடுத்(து) ஊதிஊ தி,**

**அலங்காரத் தால்வரும் மாயப்பிள் ளை**
**அழகுகண்(டு) என்மகள் ஆசைப்பட் டு,**
**விலங்கிநில் லா(து) எதிர் நின்றுகண் டீர்**
**வெள்வளை சுழன்றுமெய்ம் மெலிகின்ற தே! 53**

*தோன்றிப்பூ - காந்தள்மலர், வனமாலை - காட்டுப்பூ, மௌவல் - காட்டு மல்லிகை, சிலங்காரத்தால் - தடபுடலான அழகோடு. காந்தாள் பூவை வலது காதில் சொருகிக் கொண்டான், காட்டு மலர்களைப் பறித்து தலைமுடியில் சூடிக் கொண்டான். கூந்தல் அப்படியும் இப்படியும் ஆடி அசைய குழல் ஊதி வந்தான் பையன், விலங்கிநில்லாது - விலகி ஒதுங்காமல், மெய் மெலிகின்றது கண்டீர் - என் பெண்ணின் தேகம் எப்படி இளைத்து விட்டது என்று பாருங்கள். பரிவை கையில் எடுத்துக் காட்டுகிறது செய்யுள்.*

# தாய்க்கு லட்சியம் தானல்ல - குழந்தையே

1 அழகுத் தத்துவம் எங்கெங்கோ சிதறிக் கிடக்கிறது. அப்படிச் சிதறிக் கிடக்கும் அழகின் அம்சங்கள் எல்லாம் ஒத்துப்பேசி பெண்ணை வந்து சேர்கின்றன. பெண்ணே தஞ்சம் என்று தங்கி விடுகின்றன.

பூத்துக்குலுங்கும் அழகின் காரணமாகவே பெண்ணுக்கு பயம் உண்டாகிறது.

ஒரு பெண் தன்னைக் காப்பாற்றிக் கொள்கிறதைப் பார்த்தால் அதிசயமாக இருக்கும்.

உயிரைக் கொடுத்துப் பாதுகாத்த தன்னை அப்படியே ஒருவனிடம் அர்ப்பணித்து விடுவாள் பெண். அதைப் பார்க்கிறபொழுது அதிசயத்துக்குமேல் அதிசயமாக இருக்கும்.

பையன் அழகாகப் பாடினான். குழலூதினான். இசையை அமிர்த மழையாகக் கொட்டினான். இசையில் வசமழிந்து போனாள் பெண்.

பையனுக்கும் பெண்ணுக்கும் உறவு ஏற்பட்டு விட்டது. தாய்க்கு மெள்ள மெள்ள விஷயம் தெரிந்தது.

*மகளைக் கண்டித்தாள். அரட்டினாள், மிரட்டினாள், வாசல் படியைவிட்டு முற்றத்துக்குக்கூட மகளை வரவிடாமல் தடுத்தாள்.*

*பெற்றதாயே மகளை இப்படி அதட்டி ஒடுக்குவது அதிசயந்தான். அடக்கு முறைக்கு ஆளான பெண்ணை எப்படியோ கடத்திக் கொண்டு போய் விட்டான் பையன். இடிவிழுந்தது போல இருந்தது தாய்க்கு.*

*எப்படியோ சமாளித்துக் கொண்டாள். மகள்மேல் இருந்த ஆங்காரம் போய்விடுகிறது. வெறுப்பும் போய் விடுகிறது. "விபரம் தெரியாத பெண்ணாயிற்றே எப்படிச் சமாளிப்பாள். என்ன செய்வாளோ என் பெண்" என்னும் ஆற்றாமையே உண்டாகிவிடுகிறது தாய்க்கு. கசப்பு கரைவதும், அன்பு ஊறுவதும் அதிசயமான காரியங்கள் தாம். இப்பொழுது தாயானவள் மகளை நோக்கித் தவிக்கிற தவிப்பைப் பாடலில் பார்க்கலாம்.*

**ஒருமகள் தன்னை உடையேன்**
**உலகம் நிறைந்த புகழால்**
**திருமகள் போல வளர்த்தேன்**
**செங்கண்மால் தான்கொண்டு போனான்;**
**பெருமக ளாய்க்குடி வாழ்ந்து**
**பெரும்பிள்ளை பெற்ற அசோதை**
**மருமக ளைக்கண்(டு) உகந்து**
**மணாட்டுப் புறம்செய்யும் கொல்லோ ? 54**

*உலகம் நிறைந்த புகழால் - எல்லோரும் மதித்துப் பாராட்டும்படி குடும்பப் பாங்கோடு (வளர்த்தேன்) திருமகள் போல வளர்ந்தேன் - செல்வமாய் வளர்த்து வந்தேன். பெருமகள் ... அசோதை - உயர்ந்த குடிப்பிறப்பும் பண்பாடும் உடையவள் அசோதை. அதுமட்டுமா? என்மகளை ஏமாற்றியவனுக்குத் தாயாகவும் இருக்கிறாள் அசோதை. இப்படி அழையாமல் வந்த பெண்ணை மருமகளாக அசோதை அங்கீகரிப்பாளா? மணாட்டுப்புறம் செய்யும் கொல் - திருமணம் ஆகி முறைப்படி வந்தவளாக இவளை ஏற்றுக் கொள்வாளா அந்த அசோதை. முன்பின் தெரியாத இடத்தில் போய் மாட்டிக் கொண்டாளே என்மகள். "ஐயோ, என்ன செய்வேன் நான்" என்று இடிகிறாள் தாய்.*

**2** *"இப்படி நடக்கும் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை. எள்ளளவு தெரிந்திருந்தாலும் போதும். மாமியார் வீட்டில் பெரியவர்களிடம் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்பதையாவது அவளுக்கு நான் சொல்லிக் கொடுத்திருப்பேன்" என்று துடிக்கிறாள் தாய்.*

*தயிர்ப்பானையை எடுத்து வைத்து, மத்தில் தாம்பைச் சுற்றி எப்படிக் கடைவாள் என் சின்னஞ்சிறு பேதை. மோர் வேறு வெண்ணெய் வேறு என்று எப்படி அவளால் பிரித்தெடுக்க முடியும்" என்றும் கலங்கி விடுகிறாள் தாய்.*

**குடியில் பிறந்தவர் செய் யும்**
**குணம்ஒன்றும் செய்திலன் அந் தோ !**
**நடைஒன்றும் செய்திலன்நங் காய் !**
**நந்தகோ பன்மகன் வீட் டில்**
**இடைஇரு பாலும்வணங் க**
**இளைத்திளைத்(து) என்மகள்ஏங் கி**
**கடைகயி றேபற்றிவாங் கிக்**
**கைத்தழும்(பு) ஏறிடும்கொல்லோ ? 55**

**3** *தாயின் உள்ளம் எங்கு எங்கோ போகிறது. தன்மகள் போய்ச் சேர்ந்திருக்கிற சம்பந்தி வீட்டுக்குப் போகிறது. அங்குள்ளவர்களின் குணபாவங்களை அளந்து பார்க்கிறது. சம்பந்தியின் உற்றார் உறவினர்களையும் நோக்கி ஓடுகிறது தாயுள்ளம். பிறகு தன்னையே நோக்கி ஓடி வருகிறது மனம். "ஒன்றுமே*

---

*குணம்ஒன்றும் செய்திலன் - பெண்ணுக்குச் செய்யும் சீர்சிராட்டு ஒன்றும்நான் செய்யவில்லையே! நடை ஒன்றும் செய்திலன் - மாமன் மாமி முதலானோரிடம் நடந்து கொள்ளும் முறையையும் நான் சொல்லிக் கொடுக்கவில்லையே.*

*இடை இருபாலும் வணங்க - இடுப்பின் வலப்பக்கம் இடப்பக்கம் வளைந்து ஆட கடைகயிறு மோர்கடைய மத்தில் சுற்றும் கயிறு.*

அவளுக்குச் சொல்லிக் கொடுக்கவில்லையே. பிறகு எப்படி அவள் சீரும் சிக்கனமுமாகக் குடித்தனம் நடத்துவாள்" என்று யோசிக்கிறது.

அப்புறம் மகளை நோக்கி ஓடுகிறது. "அப்பாவிப் பெண்ணாயிற்றே, சோம்பேறி ஆயிற்றே, விடிந்தது தெரியாமலே தூங்குவாளே! எப்படிக் கோழிகூவி எழுந்திருந்து வீட்டு வேலையைப் பார்ப்பாள்" என்றுத் தத்தளிக்கிறது தாயுள்ளம்.

கடைசியாக மருமகனை நோக்கியே போகிறது தாயின் மனம். "விபரந் தெரியாத என் மகளுக்கு ஆதரவு கொடுத்து பாதுகாப்பானா பையன்" என்று கலங்கி விடுகிறது அந்தப் பேதை உள்ளம்.

**வெண்ணிறம் தோய்தயிர்தன் னை**
**வெள்வரைப் போதின்எழுந்த து**
**கண்உறங் காதேஇருந் து**
**கடையவும் தான்வல்லளகொல் லோ ?**
**ஒண்ணிறத் தாமரைச்செங் கண்**
**உலகளந் தான் என்மக ளை**
**பண்ணறை யாப்பணி கொண்டு**
**பரிசற ஆண்டிடும்கொல் லோ ? 56**

வெள்வரைப்போது - வைகறைப்பொழுது ஒள்நிறத்தாமரை - செந்தாமரை மலர். உலகு அளந்தான், திருமால், பண் அறையாப் பணிகொண்டு பெண்ணின் சுறுசுறுப்பின்மை, அறியாமை முதலிய தவறுகளைப் பொறுத்து. பரிசற ஆண்டிடும் கொல் - அவள் நோகாதபடி ஆதரவு கொடுத்து வைத்துக் கொள்வானா ?

# உல்லாச மயம்

1 குழந்தைகள் குழந்தைகளாகவே இருக்கிறார்கள். அவர்களுக்குப் பிரச்சினை என்று ஒன்றும் இல்லை. ஆண், பெண் என்னும் வித்தியாசம்கூட குழந்தை உலகத்தில் இல்லைதான்.

எப்பொழுதும் சுதந்திரமாக இருக்கிறார்கள் குழந்தைகள். அதனால் அவர்களுடைய உலகம் ஒரே உல்லாசந்தான். ஒரே விளையாட்டுத்தான்.

விளையாட்டுத்தான் குழந்தைகளுக்கு உயிர், சாப்பாடும் அதுதான். தூக்கத்திலும் விளையாட்டுத்தான். விழிப்பிலும் விளையாட்டுத்தான். ஆட்டமும் பாட்டமுந்தான் குழந்தைக்கு மூச்சு.

வயதாக வயதாக ஆண்களுக்கு வேறு விளையாட்டு, பெண்களுக்கு வேறு விளையாட்டு என்று குழந்தைகளிடமும் பிரிவினை உண்டாகிவிடுகிறது.

கும்மி, கோலாட்டம், அம்மானை, பாண்டில் முதலிய விளையாட்டுகள் பெண் குழந்தைகளின் பாகத்தில் சேர்ந்து விடுகின்றன.

உந்தியார், அல்லது உந்தி பறப்பதும் பெண் குழந்தைகள் பிரியமாக விளையாடும் விளையாட்டுத்தான்.

பூவுக்குப் பூ தாவி மது உண்ணும் வண்டுபோல பெண்கள் தாவித் தாவிக் குதிப்பார்கள். அப்படித்துள்ளித் தாவும் பொழுது அவர்கள் கையில் ஒரு வட்டோ, வளையமோ, கயிறோ வைத்துக் கொள்வார்கள்.

உன்னி உன்னிக் குதிப்பதால் 'உந்திபற' என்று பெயர். பெண்கள் குதித்து விளையாடுகிற பொழுது அவர்கள் மனதுக்கு உகந்த அனுபவங்களை இசையிலும் தாளத்திலும் வைத்துப் பாடுவார்கள்.

ஒரு விஷயத்தை விரிவாக எடுத்துச் சொல்லி அதை அடக்கமாக முடித்து வைப்பாள் ஒரு பெண். அந்த முடிப்பின் மேல் ஒரு முத்தாய்ப்பு வைத்து அனுபவத்தை கமகம என்று மணக்க வைப்பாள் மற்றொரு பெண்.

இப்படியாக பாடலுக்குப் பாடல் உணர்ச்சி யானது மேலே மேலே ஏறிக் கொண்டே போகும்.

மனதுக்குள் அரும்பி மலர்ந்து மணங்கமழப் பூக்கும் காதல், மறைந்து மறைந்து எட்டிப் பார்க்கும் பாடலில். இப்பொழுது இரண்டு பெண்கள் திரு உந்தியார் பாடுகிறார்கள். பாடிக்கொண்டே துள்ளி விளையாடு கிறார்கள்.

பெண்கள் என்றால் வயதான பெண்கள் இல்லை. பத்து வயது பன்னிரண்டு வயது இளம் பெண்கள்தான்.

ஒரு பெண்ணுக்கு இளைஞன் ஒருவன் மேல் விருப்பம். அவனிடம் மனதைப் பறி கொடுத்துவிட்டாள். இளைஞனை கண்கண்ட தெய்வமாகவே மதிக்கிறாள் பெண். அவனில்லாவிட்டால் தான் இல்லை இப்படி ஒரு தீர்மானத்துக்கு வந்துவிட்டாள் பெண்.

கதைகளில் கேட்ட ராமபிரான் கிருஷ்ணபிரான் எல்லோருமே அவள் கண்களுக்கு இந்த இளைஞனாகவே தெரிகிறார்கள். பையனுடைய உல்லாசமும் விளையாட்டும் பெண்ணை அப்படி மயக்கிவிட்டன.

இது சம்பந்தமாக பெரியாள்வார் பாடல்களைப் பார்ப்போம்.

"நீதான் சக்கரவர்த்தி, நாளைக்கு உனக்குப் பட்டாபிஷேகம்" என்று ராமனிடம் சொல்லிவிட்டார்கள். நாடு, நகரம், அரண்மனை, மக்கள் எல்லோருக்கும் ஒரே ஆனந்தம். ராமனும் பட்டாபிஷேகத்துக்கு தயாராகி விட்டான்.

அந்த வேளை கைகேயி என்ன செய்தாள்? "அரசுரிமை உனக்கு இல்லை. நீ, பதினான்கு ஆண்டுகள் வனவாசகம் போக வேண்டும். இது உன் தந்தையின் கட்டளை" என்றே சொல்லி விட்டாள்.

பட்டாபிஷேகத்துக்கு எப்படிச் சந்தோஷமாக வந்தனோ அப்படியே சந்தோஷத்தோடு காட்டுக்குப் புறப்பட்டு விட்டான் ராமன்.

சுமத்திரை என்னும் சிற்றன்னை கதறினாள். "எங்களை இப்படித் தவிக்க விட்டு விட்டு நீ எப்படிக் காட்டுக்குப் போகலாம்" என்று தடுத்தாள். பெற்றதாயாகிய கோசலையோ, "நானும் உன்னுடன் காட்டுக்கு வருகிறேன்" என்று பின் தொடர்ந்தாள்.

எல்லோரையும் சமாதானப்படுத்திவிட்டு சந்தோஷமாகக் காட்டுக்குப் போனான் ராமச்சந்திரப்பிரபு.

காதலனை மனதில் வைத்துக்கொண்டு ராமபிரானை இப்படிப் புகழ்ந்து பாராட்டினாள் ஒரு பெண். அடுத்த பெண்ணோ அவள் புகழ்ச்சிக்கு மாலை சூட்டி கைதட்டுவது போல ஒரு முத்தாய்ப்பு வைத்தாள்.

எப்படி என்று பாடலில் பார்க்கலாம்.

**மாற்றுத்தாய் வந்து**
**வனம்போகேல் என்றிட;**
**ஈற்றுத்தாய் பின்தொடர்ந்(து)**
**எம்பிரான் என்றழ**
**கூற்றுத்தாய் சொல்லக்**
**கொடிய வனம்போன**

சீற்றம் இலாதானைப்
பாடிப் பற;
சீதை மணாளனைப்
பாடிப் பற! 57

**2** கைகேயி ராமனைக் காட்டுக்கு அனுப்பிவிட்டாள். அப்பொழுது கைகேகியின் மகன் பரதன் கேகய (காஷ்மீர) நாட்டில் பாட்டனார் அரண்மனையில் இருந்தான். விஷயம் அவனுக்குத் தெரியாது. தெரிந்ததும் நடுங்கிவிட்டான். பதறாத அவன் உள்ளம் பதறிவிட்டது.

ராமன் இருக்கும் காட்டுக்கு ஓடி வந்தான். ராமனுடைய திருவடிகளில் விழுந்து கதறினான். தேம்பித் தேம்பி அழுதான். "என்ன காரியம் செய்துவிட்டாய் அண்ணா" என்று கூப்பாடு போட்டான்.

"என்னை நீ உயிரோடு பார்க்க வேண்டும் என்றால் இப்பொழுதே பொன் முடிதரித்து ராஜ்ய பரிபாலனம் செய்யவேண்டும் நீ" என்று முண்டினான்.

புழுதியில் விழுந்து தெய்வமே, தெய்வமே என்று உருண்டான். அழுது புலம்பிய பரதனை எடுத்து மடியில் வைத்துக் கொண்டான் ராமன். மார்போடு அணைத்துத் தழுவினான். "சிம்மாசனத்தில் உட்கார்ந்தால்தான் நான் உனக்கு அண்ணனா? காட்டில் இருந்தால் நான் உனக்கு அண்ணன் இல்லையா? ஏன் இப்படிப் பைத்தியம் பிடித்துப் புலம்புகிறாய்?" என்று தம்பியைத் தேற்றினான். தம்பியின் மனசைத் தெளிய வைத்தான்.

"நான் அரசாள்வதாகவே நினைத்துக் கொண்டு நீ அரசாள்; என்னுடைய அங்கிகாரத்துக்கு இதோ அடையாளம்" என்று தன் பாதுகைகளையே கொடுத்து பரதனை அனுப்பி வைத்தான் ராமன்.

---

மாற்றுத்தாய் - சிற்றன்னை சுமத்திரை, போகேல் - போகாதே, ஈற்றுத்தாய் ஈன்றதாயாகிய கோசலை, கூற்றுத்தாய் - எமன்போல் தோன்றிய கைகேயி சீற்றம் இலாதான் - கோபம் இல்லாதவன், ராமன்.

இதை முதல் பெண் விளக்க. இரண்டாமவள் ஆமோதிக்கிறாள்.

**முடிஒன்றி மூஉல**
**கங்களும் ஆண்டுன்**
**அடியேற்(கு) அருளென்(று)**
**அவன்பின் தொடர்ந்த**
**படிஇல் குணத்துப்**
**பரதநம் பிக்கன்று**
**அடிநிலை தந்தானைப்**
**பாடிப் பற;**
**அயோத்தியர் கோமானைப்**
**பாடிப் பற ! 58**

**3** விஷயம் அப்படியே கிருஷ்ணாவதாரத்துக்குப் பாய்கிறது. பொறுப்பும் நிதானமும் நிறைந்த ராமபிரான் கிருஷ்ணாவதாரம் எடுத்து எப்படி எல்லாம் கோமாளி வேஷம் போடுகிறான்? என்று அனுபவிக்கிறாள் பெண்.

கம்சன் என்பவன் எப்படியாவது கிருஷ்ணனைத் தீர்த்துக் கட்டிவிட வேண்டும் என்று செயல்படுகிறான். அவன் காரியம் ஒவ்வொன்றையும் தவிடு பொடி ஆக்கிவிடுகிறான் கிருஷ்ணன்.

மாயச்சகடம் மருதமரம் இவை தூள்தூளாயின. தேவேந்திரன் ஏவலால் கல் மழையே பொழிந்தது மலையையே குடையாக எடுத்தும் பிடித்து மாடு மக்கள் எல்லாரையும் காப்பாற்றி இவ்வளவையும் செய்துவிட்டு கொஞ்சம் கூட கர்வம் இல்லாமல் பசு மந்தையைக் காட்டுக்குக் கொண்டுபோய் மேய்த்தான். பசுக்களே கிறங்கும்படி குழலூதி ஆடினான்.

முடிஒன்றி - பொன்முடி புனைந்து, உன்அடியேற்கு அருள் - உன் அடிமையாகிய இந்தப் பரதனைக் காப்பாற்று - படிஇல்குணம் - குற்றமற்ற நல்லபண்புகள், அடிநிலை - பாதுகை.

**மாயச் சகடம்**
**உதைத்து மருதிறுத்து**
**ஆயர்க ளோடுபோய்**
**ஆநிரை காத்(து) அணி**
**வேயின் குழல்ஊதி**
**வித்தக னாய்நின்ற**
**ஆயர்கள் ஏற்றினைப்**
**பாடிப் பற;**
**ஆநிரை மேய்த்தானைப்**
**பாடிப் பற ! 59**

**4** *கிருஷ்ணாவதாரத்தில் நின்ற மணம் அப்படியே ராமாவதாரத்துக்கு ஓடி வருகிறது. அந்தப் பக்கம் வேறு இந்தப் பக்கம் வேறு என்று சமுத்திரத்தையே மறித்து அணைகட்டுவது சாதாரண காரியமா? மயன் என்கிற கொத்தனை வைத்து அதைச் செய்துவிட்டான் ராமன்.*

*அந்த அணைவழியே நடந்து இலங்கைக்குள் புகுந்து அங்குள்ள கோட்டை கொத்தளங்களை தகர்த்தான். அரக்கர்களைக் கொன்று குறித்தான். ராவணனையே அலற அலற அடித்தான். அவனுடைய சிரசுகள் பத்தையும் ஒவ்வொன்றாக அறுத்து வைத்தன ராமபாணங்கள்.*

*இவ்வளவும் செய்தானே தவிர இலங்கையில் ஒரு அங்குல இடத்தைக் கூட அவன் எடுத்துக் கொள்ள வில்லை.*

*ராஜ்யம் முழுவதையும் அப்படியே விபீஷணனிடம் ராவணனுடைய தம்பியிடமே கொடுத்து விட்டான் ராமன்.*

---

*மாயச்சகடம் - மோசடியான (வண்டிச்) சக்கரம். மருது - மருதமரம். ஆநிரை காத்து - பசு மந்தையைப் பாதுகாத்து. வேயின் குழல் - மூங்கிலால் ஆனகுழல், ஆயர்கள் ஏறு - கிருஷ்ணன். ஏறு - காளை போன்ற கம்பீரம் உடையவன்.*

*பெரிய மனசு அவனுடைய மனசு. கருணாகர மூர்த்தி என்றால் அவன்தான். நினைக்க நினைக்கத் தெவிட்டாத அமிர்தம் போல இனிக்கும் அவனுடைய ஞாபகம்!*

*இனிப் பாடலைப் பார்ப்போம்.*

**காரார் கடலை**
**அடைத்திட்(டு) இலங்கைபுக்(கு)**
**ஓராதான் பொன்முடி**
**ஒன்பதோ(டு) ஒன்றையும்**
**ஈரா அவன்தம்பிக்**
**கேநீள் அரசீந்த**
**ஆரா அமுதனைப்**
**பாடிப் பற;**
**அயோத்தியர் வேந்தனைப்**
**பாடிப் பற! 60**

*கார் ஆர்கடல் - நீலவண்ணமாய் கருகரு என்றிருக்கிற சமுத்திரம். புக்கு - புகுந்து, ஓராதான் - அறிவில்லாதவன், ராவணன், ஈரா - ஈர்த்து துண்டு துண்டாக நறுக்கி, அவன்தம்பிக்கு - விபீஷணனுக்கு நீள் அரசு ஈந்த - சாம்ராஜ்யம் முழுவதையும் கொடுத்த*

# மரணம் இலாப் பெருவாழ்வு

**1** பாம்பென்றால் படையும் நடுங்கும் என்பது பொன்மொழி. இனி மரணம் என்றால் அந்தப் பாம்பு கூட நடுங்கும். கிடு கிடு என்று நடுங்கும்.

மலைபோன்ற யானையையே வாளால் வெட்டி வீழ்த்தி விடுவான் வீரன். புலியின் முதுகைத் தட்டிக் கொடுத்து அந்தப் புலியையே அதட்டி உட்கார வைக்கிறான் சூரன். இடையூறுகள், இழப்புகள் இவை அடுக்கடுக்காய் தொடர்ந்து வந்து தாக்குகின்றன. அவ்வளவையும் தாங்கிக் கொள்கிறான். தடுமாறுவதில்லை, இவன் பின்வாங்குவதும் இல்லை. தொடர்ந்து நல்லதையே செய்கிறான். அப்படியானால் அவன் தீரன்தான்.

வீராதிவீரர்கள் என்ன, சூரர்கள் என்ன, தீரர்கள் என்ன அவ்வளவு பேரும் மரணம் என்றால் படபட என்று துடிக்கிறார்கள்.

மருத்துவன், சோதிடன், பூசாரி, சாமியார், அரசன், ஆண்டி, ஞானி, முட்டாள், ஆண், பெண் எல்லாருமே மரணம் என்றால் அஞ்சி அஞ்சிச் சாகிறார்கள்.

மனுஷன் மட்டும் இல்லை. உயிர்வர்க்கம் அவ்வளவும் மரணம் என்றால் கலங்குகிறது.

"அந்த மரணத்தையே நான் வென்றுவிட்டேன். நீங்களும் வெல்லலாம்" வெல்வதற்கு வழி இப்படி இப்படி என்று சிலர் சொல்லிக் கொண்டு அலைகிறார்கள்.

அப்படிச் சொல்வதெல்லாம் வெறும் ஜம்பந்தான். மற்றவர்களைக் கோமாளிகளாக்குகிற மோசடிதான். அப்படிச் சொல்கிறவர்களிடம் உன்னுடைய தாய், தந்தை, பாட்டன், பாட்டி இவர்களை எங்கே என்று கேட்க வேண்டும். 'அப்படியானால் மரணத்தை வெல்ல முடியாதா?' இப்படியொரு கேள்வி எழத்தான் செய்யும்.

"மரணம் என்று ஒன்று இருந்தால் அல்லவா அதை வெல்வதற்கு ..." அப்படி ஒன்று இல்லவே இல்லை!

பிறப்பு என்று ஒன்று இருந்தால் தானே இறப்பு என்று இருக்க முடியும்.

'நான்' என்று ஒன்றிருக்கிறது. அதற்கு ஆதியும் இல்லை; அந்தமும் இல்லை. அது ஒரு அனாதி. அதனுடைய பொம்மலாட்டந்தான் பிறப்பு, இறப்பு.

ஒவ்வொருவரும் ஒரு விநாடி நேரம் யோசித்துப் பார்த்தால் போதும். தமது உயரம், கனம், பருமன், உருவம், புத்தி, கால், கை, மண்டை, எலும்பு, தசை எவ்வளவு இருக்கின்றன. இவ்வளவும் சேர்ந்து எப்படி ஒரு அரண்மனையாய் தோன்றுகிறது.

இப்படி ஒரு மாபெரும் அரண்மனை ஒரு இடத்திலிருந்து அணுவளவு கூடக் குறையாமல், கூடாமல் வேறொரு தாயின் வயிற்றுக்குள் வந்து உட்கார்ந்திருக்க முடியுமா? பிறகு வயிற்றிலிருந்து இறங்கி வந்துவிட முடியுமா?

அப்படி யோசித்தால் புரிந்துவிடும். உற்றார், உறவினர், மாடு, கன்று, உத்தியோகம், சொத்து, சுகம் மட்டும் அல்ல; நமது கண், முகம், மார்பு, ரத்தம், நரம்பு, படிப்பு, ஆராய்ச்சி ஒன்றும் போவதில்லை. எல்லாமே வேஷம் கலைந்து மண்ணோடு மண்ணாய், காற்றோடு காற்றாய் கலந்துவிடுகிற காரியம் தான்.

அப்படியானால் பிறப்பு என்பது பொய். இறப்பு என்பது அதைவிடக் கொடிய பொய்.

'நான்' என்பதோ அயோக்கியத்தனம்.

தண்ணீரில் குமிழ்கள் உண்டாகின்றன. அப்படியே மறைகின்றன. இப்படிச் சொல்வதுகூட தவறுதான்.

தண்ணீரே குமிழ்களாக ஒரு வேஷத்தைப் போடுகிறது. அப்படியே அந்த வேஷத்தைக் கலைத்தும் கொள்கிறது.

அப்படியேதான் பிரபஞ்ச காரியம்.

இறுதி இல்லாத எங்கும் நிறைந்த பேரண்டம் முழுவதும் ஒரே சக்திமயம்தான். அந்த சக்தி கோடான கோடி வஸ்துக்களாக வேஷம் போடுகின்றன. அண்டம், அகண்டங்களாகவும் வேஷம் போடுகின்றன. போட்டுப் போட்டுக் கலைத்தும் கொள்கின்றன.

இந்த லீலா விநோதந்தான் கடவுள். அது மட்டுமல்ல, ஒவ்வொரு வேஷமும் 'நான், நான்' என்று தனிமைப்பட்டு அடித்துக் கொள்ளுகிறதே அதுவும் லீலா விநோதம்தான்.

'நான்' என்னும் தனிமைதான் - வேற்றுமை உணர்ச்சியின் பொய்மைதான் - மரணம் என்று ஒன்றை ஜோடிக்கிறது. பயமுறுத்துகிறது. அதிலிருந்து தப்ப வேண்டுமானால் இப்படி இப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று பேரம் பண்ணுகிறது.

உண்மையில் மரணம் என்று ஒன்று இல்லை. ஆனால் மரணபயம் இருக்கிறது. அது உலகம் முழுவதையும் ஆட்டு ஆட்டு என்று ஆட்டுகிறது.

'நான்' என்னும் பொய்தான் மரண பயத்தின் மூலாதாரம்.

எல்லாம் கடவுளின் லீலை. 'நான்' என்று ஒன்றும் இல்லை என்னும் உண்மையில் கரையக் கரைய எமன், எருமைக்கடா, பாசக்கயிறு, கொதிக்கும் எண்ணெய்ச்சட்டி, மோட்சம், நவரத்தின மாளிகை, கால் பிடிக்க அரம்பை, கைபிடிக்கு மேனகை என்பதெல்லாம் மனசை கிச்சம் காட்டுகிற மர்மக் கதைகள் என்பது விளங்கிவிடும்.

உண்மையான பக்தி இருந்தால் - அதாவது 'நான்' என்று ஒன்று இல்லை என்பது விளங்கி விட்டால் - மரண பயம் ஒழியும். உண்மை விளங்க வேண்டுமானால் அதற்குரிய வழி பக்திதான்.

இதை நம் முன்னோர்கள் எப்படியோ தெரிந்திருக்கிறார்கள். தெரிந்தது மட்டும் அல்ல அதை மறக்காதபடி ஞாபகத்தில் வைத்து அனுபவித்து வந்திருக்கிறார்கள்.

அந்த அனுபவமே ஆனந்தமாய் உறுகிறது. கவியாய் உருவெடுக்கிறது.

இப்பொழுது பெரியாள்வார் பாடலில் ஆனந்தம் வெள்ளமாய் பெருக்கெடுப்பதைப் பார்க்கலாம்.

நான் என்பது தடிக்கத் தடிக்க தனிமை உணர்ச்சி அழுத்துகிறது. அநாதையாய்ப் போய் விட்டோமே என்று பயம் உண்டாகிறது.

பயத்தைச் சமாளிக்க மனைவி, மக்கள், உற்றார், உறவினர், சொத்து, சுகம் எல்லாவற்றையும் பக்க பலமாக வைத்துக் கொள்கிறோம்.

மரணத்தை மறக்க இவைகளை மயக்க மருந்தாக பாவிக்கிறோம். மயக்கம் காரணமாக பயம் உண்டாகிறது.

கடைசிக்காலம் நெருங்க நெருங்க தடுமாறி விடுகிறான் மனுஷன். புலப்பம், அளறல், உளறல் எல்லாம் வருகின்றன. கடைசியில் பேசமுடியாதபடி கோழை வந்தே அடைத்து விடுகிறது.

அப்பொழுது என்ன பாடுபடுவான் மனுஷன்.

அப்பொழுதாவது உண்மையைப் பார் என்கிறார் பெரியாள்வார்.

அழக்கூட முடியாமல் திக்குமுக்காடுகிற பொழுதில் கூட அவனை நினை. அவன்தான் எல்லாம் என்று நினை. நானாவது மண்ணாங்கட்டியாவது என்று தெளிவடை. அது போதும்.

உண்மையை உணர உணர பயம் ஓடிவிடும். நீ வீரனாகிவிடுவாய். ஆனந்தத்தில் மிதப்பாய் என்கிறார் ஆள்வார்.

*இனிப்பாடல்:*

**தான தானன**
**தன்னன தான**
**தான தன்னன**
**தானன தான**

**ஆசை வாய்ச்சென்ற**
**சிந்தையர் ஆகி**
**அன்னை அத்தன்என்**
**புத்திரர் பூமி**
**வாச வார்குழ**
**லாள்என்று மயங்கி**
**மாளும் எல்லைக்கண்**
**வாய்திற வாதே**
**கேச வா ! புரு**
**டோத்தமா ! என்றும்,**
**கேழல் ஆகிய**
**கேடிலீ ! என்றும்,**
**பேசு வார்அவர்**
**எய்தும் பெருமை**
**பேசு வான்புகில்**
**நம்பரம் அன்றே ! 61**

**2** *அண்டங்கள் பலகோடி. பிண்டங்கள் (வஸ்துக்கள்) பல கோடி. அண்டங்களையே பிண்டங்களாகத் தனக்குள் வைத்திருக்கும் அகண்டங்கள் பல கோடி.*

---

*ஆசைவாய் சென்ற சிந்தையர் ஆகி - அது வேண்டும் இது வேண்டும் என்று ஆசைப்பட்டு மனசை எங்கெங்கோ மேயவிடுகிறவர்கள். அத்தன் - தகப்பன், பூமி - (விளை) நிலம். வாசவார்குழலாள் - மணங்கமழும் நீண்ட கூந்தலை உடைய மனைவி. வாய்திறவாது மாளும் எல்லைக்கண் - பேசமுடியாமல் உயிர் திக்கு முக்காடும் நேரத்திலாவது. கேசவா, புருடோத்தமா - எல்லாம் திருமாலின் பெயர்கள். கேழல் - பன்றி, கேடுஇலீ - குற்றமற்ற பரம்பொருளே என்று. பேசுவார் அவர் ... நம்பரம் அன்று - உள்ளம் உருகிப் படுகிறவர்களின் பெருமையை நம்மால் விளக்கிச் சொல்ல முடியாது.*

இவ்வளவும் சதா வளர்ந்தும் நிமிர்ந்தும் பருத்தும் வளர்ந்து கொண்டே இருக்கின்றன. மேலும் மேலும் ஒவ்வொன்றும் உயர்கின்றன. ஒன்றுகூடப் பின்னோக்கித் தாழ்வது இல்லை.

வளர்ச்சிமயமான இந்த மாற்றமே மரணம் என்று சொல்லப்படுகிறது. நிலையாமை என்று சொல்லப் படுகிறது.

பேரண்டம் முழுவதிலும் நிலைத்து நிற்கக் கூடியது எது என்று கேட்டால், நிலையாமை ஒன்றுதான் நிலைத்து நிற்கிறது என்று தாராளமாகச் சொல்லலாம்.

மாற்றிச் சொல்வதற்கு வழியே இல்லை. ஐஞ்சிறு காப்பியங்களுள் ஒன்றாகிய சூளாமணியில் ஒரு இடத்தில், "நிலையாமை சால நிலைபெற்ற தன்றே" என்று வருகிறது.

அழியாமைத் தன்மைபெற்று நிரந்தரமாக இருப்பது ஒன்றுதான். அதற்குத்தான் நிலையாமை என்று பெயர்.

இந்த உண்மை அனுபவத்தை தோலாமொழித் தேவர் ஜோடித்துச் சொல்கிறார். நாடகத்தை ஜோடித்துச் சொல்வதைப்போலச் சொல்கிறார்.

எப்படி என்று பார்ப்போம்.

அரசன் ஒருவன். மகாபெரிய பராக்கிரமசாலி. அவனையே எதிர்த்து விட்டான் வேறொரு அரசன்.

அடங்காச் சினத்துக்கு ஆளாகிவிட்டான் அரசன். போர் யானையை அலங்கரித்து அம்பாரிகட்டி யுத்த சன்னத்தனாய் அதன் மீது ஏறி அமர்ந்தான். முன்னும் பின்னும் இடப்பக்கமும் வலப்பக்கமும் சிற்றரசர்கள் குட்டிக் குட்டி யானைகளின் மேல் ஏறி வருகிறார்கள்.

சர்வ வல்லமை பொருந்திய மகாராஜாவுக்கு ஜே என்று முழங்கிக் கொண்டு வருகிறார்கள்.

போர்க்களத்துக்கு உள்ளேயே வந்துவிட்டான் அரசன். போருக்கும் தயாராகிவிட்டான்.

கண்ணை மூடி முழிப்பதற்குள் எங்கிருந்தோ ஒரு வேல் சீறி வந்தது. கண்ணைப் பறிக்கும் மின்னல்போலத்

*துள்ளிவந்த வேல் அரசனுடைய மார்பில் குத்தி முதுகையே துளைத்துவிட்டது.*

*அம்மா என்று ஒரு அலறல். அப்படியே (யானை மேல் வைத்த) அம்பாரியிலேயே சாய்ந்து விட்டான் மன்னன்.*

*ஆரவாரம் எங்கே? முழக்கம் எங்கே?*

*இனிப் பாடல்:*

**பலயானை மன்னர்**
**பலர்போற்ற வந்து**
**குலயானை மீது**
**குலாவி இருந்தார்;**
**மலைஆகம் போழ**
**வடிவேலின் வீழ்ந்தார்;**
**நிலையாமை சால**
**நிலைபெற்ற தன்றே !**

*அணுவிலிருந்து அண்டம் அகண்டம் முடிய கதை இப்படித்தான். ஒவ்வொன்றும் சதா மாறிக் கொண்டே இருக்கின்றன. மாற மாற வளர்ச்சிதான். தேய்மானம் என்பது இல்லை.*

*ஆனாலும் சாதாரண மனிதர்களாகிய நம் கண்களுக்கு மாற்றம் என்பது அழிவாகவே தெரிகிறது. கொடிய மரணமாகவே பயமுறுத்துகிறது.*

*அப்பப்பா! நமக்கு வேண்டிய ஒருவர் நம்மை விட்டுப் பிரிந்துவிடுகிறார் என்றால் அந்தக் காட்சி எவ்வளவு பயங்கரமாக - எவ்வளவு காலத்துக்கு மனசை விட்டு அகலாமல் நிற்கிறது.*

*சாதாரணமாகப் பழகி உறவாடிய ஒருவரின் பிரிவே இப்படி மனசைப் பாடாய்ப்படுத்தினால், தாய்,*

---

*மலைஆகம்போழ - பாறையை ஒத்த நெஞ்சு பிளந்து வெடிக்க, வடிவேலின் - காய்ச்சி நன்றாகத் தோய்த்து வடித்தெடுத்த வேலால், சால - தெள்ளத்தெளிய.*

*தந்தை, மக்கள், மனைவி, கணவன், உடன் பிறப்புகள் இவர்களில் யாருடைய பிரிவைத் தான் தாங்க முடியும்?*

*இவ்வளவு பேரையும் விட்டு விட்டுப் போகிறோமே என்று ஒரு ஏக்கம் வந்துவிட்டால் அந்த ஏக்கத்தை போகின்ற ஆசாமியால் எப்படிச் சமாளிக்க முடியும்?*

*பிரியும் நிலை வேதனைதரும் நிலைதான்.*

*ஒரு பக்கமாகக் கோணி கசங்கி விடும் வாய். குழி விழுந்த கண்களில் நீர் கோர்த்து நிற்கும்.*

*எல்லாம் சிறிது நேரத்துக்குத்தான்.*

*பிறகு, அக்கினியோடு அக்கினியாய் கலந்து பிடிசாம்பலாய்ப் போய்விடும் இந்த மாயா (உலகு) ஜாலம்.*

*நம்முடைய காரியம் ஒன்றும் இல்லை.*

*எல்லாம் இறைவனுடைய திருவிளையாடல் என்று உண்மையைக் கண்டு ஆனந்திக்கிறவர்கள் பிறக்கவும் மாட்டார்கள். இறக்கவும் மாட்டார்கள்.*

*கடல் அலை வரும்பொழுது எவ்வி எவ்வி மிதப்பதைப் போல, நீரில் மூழ்கி மூழ்கி எழுகிறவர்கள் போல மேலும் மேலும் தெளிவு பெறுவார்கள்.*

*எமனாவது, எமன் வந்து பயமுறுத்துவதாவது.*

*அவர்களிடம் ஒன்றும் நடக்காது.*

*இனிப் பாடல்:*

**வாய்ஒரு பக்கம்**
**வாங்கி வலிப்ப**
**வாரந்த நீர்க்குழிக்**
**கண்கள் மிழற்ற,**
**தாய்ஒரு பக்கம்**
**தந்தைஓர் பக்கம்**
**தார மும்ஒரு**
**பக்கம் அலற்ற,**

தீஒரு பக்கம்
சேர்வதன் முன்னம்
செங்கண் மாலொடும்
சிக்கென(ச்) சுற்ற –
மாய்ஒரு பக்கம்
நிற்கவல் லார்க்கு
அரவ தண்டத்தின்
உய்யலும் ஆமே! 62

**3** *உண்மையை இதைவிட வேறு எப்படி விளக்கிக் காட்ட முடியும்.*

*ஒவ்வொரு மனிதனும் என்ன நினைக்கிறான்? இப்பொழுது இருக்கிற நிலையிலேயே எப்பொழுதும் இருப்போம் என்று நினைக்கிறான். காரணம் இதே நிலையில் ஊழி ஊழி காலமாக அப்படியே நிலைத்து நிற்பதாக ஒரு மயக்கம்.*

*இந்த அறியாமை காரணமாகவே மாற்றத்தைக் கண்டு பயப்படுகிறான். அதுபற்றி நினைப்புவரும் பொழுதெல்லாம் அலறுகிறான்.*

*மனிதனுடைய இந்தப் பைத்தியக்காரத்தனத்தை மிக்க இரக்கத்தோடு பார்க்கிறார் ஆள்வார். அவருடைய இரக்க உணர்வு விளையாட்டும் கும்மாளியுமாக உருவெடுத்து வந்துவிட்டது. பாடலாகவே வந்துவிட்டது.*

*மனிதனுடைய காரியத்தைப் பின்னோக்கிப் பார்க்க வேண்டும். எங்கிருந்து வந்தோம் எப்படி வந்தோம் என்று பார்க்க வேண்டும். பார்க்கப் பார்க்க அதிசயமாக இருக்கும்.*

---

*செங்கண்மால் - திருமால், சிக்கென - வேற்றுமை இல்லாது நெருக்கமாய், சுற்றமாய் ஒருபக்கம் நிற்க வல்லார்க்கு - இறைவனே உண்மை. அவனே உற்ற துணை என்று உறுதியாய் நின்று நினைப்பவர்களுக்கு (மட்டுமே) அரவதண்டத்தின் உய்யல்ஆம் - எம பயத்திலிருந்து மீள முடியும்.*

நம்மைச்சுற்றி உள்ள அத்தனை கோடி அம்சங்களும் 'நமக்கு மூலம்' என்பது விளங்கும். விளங்க விளங்க 'நாம் என்று ஒன்று இல்லை' என்பது விளங்கிவிடும். "எதுவுமே இல்லை, இறைவனைத் தவிர வேறு எதுவுமே இல்லை" என்பது விளங்கிவிடும்.

இறைவன்தான் பல்வேறு வேஷங்களைப் போடுகிறான். வானம் என்று ஒரு வேஷம், காற்று, தீ, நீர், மண் என்று புதுப்புது வேஷம். பிறகு சிற்றெறும்பிலிருந்து இமயமலை வரை கோடானகோடி வேஷம்.

கோடானகோடி அம்சங்களாக அவன் ஒருவன்தான் வேஷம் போடுகிறான். அந்தக் கோடான கோடி அம்சங்கள் ஒவ்வொன்றும் 'நான் நான்' என்று கூத்தடிக்கும்படி வேடிக்கையும் பண்ணி விடுகிறான்.

'நான் பிறந்தேன்' என்று மார் தட்ட வைக்கிறான். 'ஐயையோ நான் செத்து விடுவேனோ' என்று பொறி கலங்கவும் பண்ணிவிடுகிறான்.

யோசிக்க யோசிக்க சிரிப்புத்தான் வரும். இறைவன் தான் புதிய புதிய வேஷங்களைப் போடுகிறான். பிறகு அந்த வேஷங்களைக் களைகிறான்.

ஏன் களைகிறான்?

பழையபடி பழையபடி புதிய புதிய வேஷம் போடவே களைகிறான்.

களையாமலே இருந்துவிட்டால் புது(மை) வேஷம் உண்டாகாது.

ஓய்வே இல்லாமல் தொடர்ந்து வேஷம் போடப் போட அனுபவம் பெருகுகிறது. ஞாபகம் உண்டாகிறது. ஒழுங்கும் கணக்குமே வந்துவிடுகிறது.

இவற்றுக்குத்தான் வளர்ச்சி என்று பெயர்.

மரணம் என்று ஒன்று இல்லை. மாற்றந்தான் இருக்கிறது. சதா அந்த மாற்றம் நடந்த வண்ணமாக இருக்கிறது. அந்த மாற்றந்தான் வளர்ச்சி. அந்த மாற்றம் இல்லை என்றால் ஒன்றுமே இல்லை.

"மரணத்தில்தான் வாழ்க்கை மலர்கிறது" என்று அறிஞர்கள் சொல்வது இது கருதியே.

ஆள்வார்கள் பன்னிரண்டு பேர் என்று ஒரு கணக்கு. அவர்களில் பொய்கை ஆள்வார், பூதத்தாள்வார், பேயாள்வார் என்னும் மூவருக்கும் முதலாள்வார் என்று ஒருமுறை.

பொய்கை ஆள்வார் சொல்கிறார்:

அமேசான் முதல் தாமிரபரணி வரை உலகில் எத்தனையோ நதிகள். அத்தனையும் சமுத்திரத்தை நாடியே ஓடுகின்றன.

சூரியன் ஒன்பது கோடி மைலுக்கும் அப்பால் இருக்கிறான். ஆனாலும் தாமரை மலர் அந்தச் சூரியனை எதிர்பார்த்தே நிற்கிறது. அவனுடைய பொன்னிறக் கிரணங்கள் மேனியை வருட வருட முகம் மலர்ந்து வாய் மலர்ந்து புளகாங்கிதம் அடைகிறது தாமரை.

கூண்டுக்குள் அடைபட்ட புலி வெளியேறத் திமிறும். அப்படியே இந்த நாற்ற உடம்புக்குள் சிக்கிவிட்ட உயிர், இதை உதறி எறிய (எப்பொழுது எமதர்ம நாயகன் வருவான் வருவான் என்று) வாய்ப்பை எதிர்பார்த்து நிற்கிறது.

ஆனால் உணர்ச்சியோ - பெற்ற அனுபவமோ எம் பெருமானைக் கட்டித் தழுவத் துடியாய்த் துடிக்கிறது.

இனிப்பாடல்:

**பெயரும் கருங்கடலே**
**நோக்கும்யா(று); ஒண்பூ**
**உயரும் கதிரவனை**
**நோக்கும்; உயிரும்**
**தருமனையே நோக்கும்; செந்**
**தாமரையாள் கேள்வன்**
**ஒருவனையே நோக்கும்**
**உணர்வு**

இந்தப் பாடலைப் படித்தால் போதும். மரணபயம் ஓடி விடும். காரணம், மேலும் மேலும் அனுபவ

வளர்ச்சி நடந்த வண்ணமாக இருக்கிறது. அதுதான் நியதியி (இறைவனி) ன் விளையாட்டு.

பக்தி என்று ஒன்று இருந்தால்தான் இந்த உண்மை விளங்கும். பக்தி இல்லை என்றால் மரணத்தை வைத்து வியாபாரம் பண்ணுகிற புத்திதான் உண்டாகும்.

"மரணம் என்று ஒன்று இருக்கிறது. அது கொடியது. அதிலிருந்து விடுபட இதுதான் வழி," என்று மற்றவர்களை மயக்குவது நயவஞ்சகமான பேடித்தனம்.

மரணம் என்றால் எல்லோரும் பயப்படுகிறார்கள். அது காரணமாகவே சில மேல்நாட்டு ஆசிரியர்கள் மரணத்தைப் பற்றி உல்லாசமாக எழுத ஆரம்பித்தார்கள்.

திருமணத்தை ஜோடிப்பதைப் போல ஜோடித்தெல்லாம் எழுதினார்கள். ஆனாலும் படித்தவர்கள் மனதில் பயம்விட வில்லை.

காரணம் அந்த ஆசிரியர்களிடம் கெட்டிக் காரத்தனம் இருந்தது. பக்தி இல்லை.

ஆள்வார்கள், நாயன்மார்கள் ஆகிய தவயோகிகளிடமோ பக்தி இருந்தது. அது ஒன்றே இருந்தது. அதனால் அவர்கள் மரணம் பற்றிச் சொல்லச் சொல்ல கல்கண்டாய் இனிக்கிறது.

இனிப் பெரியாள்வார் பாசுரம்:

வேஷம் எவ்வளவு தடபுடலாக இருந்தாலும் சரி, ஒருநாள் கலைந்து விடுகிறது. கலைந்து விட்டால் போதும்.

உற்றார் உறவினர் கூடுவார்கள். அவனைப் புகழ்ந்து பாராட்டியே பேசுவார்கள்.

குளிப்பாட்டுவார்கள். கோடி வேட்டியைக் கட்டி அலங்கரிப்பார்கள். பாடையில் ஏற்றி குழிக்கோ நெருப்புக்கோ ஒப்படைத்து விடுவார்கள்.

தேன்குடத்தை நரியிடம் ஒப்படைப்பதுபோல் ஒப்படைத்து விடுவார்கள். பிறகு நீரில் மூழ்கி வீடு வந்து சேர்வார்கள்.

எல்லாம் நீரோடு நீராய்க் கரைந்துவிடும். அன்பாவது, ஆற்றாமையாவது?

கூடிக் கூடிஉற்
றார்கள் இருந்து,
குற்றம் நிற்கநற்
றங்கள் பறைந்து,
பாடிப் பாடிஓர்
பாடையில் இட்டு
நரிப்ப டைக்கொரு
பாகுடம் போல
கோடி மூடி
எடுப்பதன் முன்னம்
கொளத்து வம்உடைக்
கோவிந்த னோடு
கூடி ஆடிய
உள்ளத்தர் ஆகில்
குறிப்பிடம் கடந்து
உய்யலும் ஆமே! 63

**4** *மனுசனுடைய காரியம், ரூபாய், அணா, பைசா தான்.*

*வெள்ளி ரூபாயைக் கண்ணாடியாய் போட்டுக் கொண்டுதான் மனிதன் ஒருவனை ஒருவன் பார்ப்பான்.*

*நேர் பார்வை கிடையாது.*

*வேதாந்தம், சித்தாந்தம், பரம்பொருள் விளக்கம், வரவேற்பு, உபசரிப்பு, விழா, பாராட்டு, நட்பு, பகை அவ்வளவும் பணத்தை அடிப்படையாக வைத்தே நடக்கின்றன.*

*இவனால் நமக்கு என்ன பிரயோசனம் என்றுதான் ஒவ்வொரு மனிதனும் அடுத்த மனிதனைக் கணக்குப் போடுகிறான்.*

*லாபம் என்றால் வைத்துக் கொள்வான். நஷ்டம் என்றால் விட்டுவிடுவான்.*

பதி, பசு, பாசம் என்றெல்லாம் வாய்கிழிய மனுஷன் பிரசங்கம் பண்ணுவான். கட்டுரை எழுதச் சொன்னாலும் பக்கம் பக்கமாய் எழுதிக் காட்டுவான். ஆனால் மனுஷனுடைய நோக்கம் முழுவதும் ரூபாய், அணா, பைசாவில்தான்.

பணத்தில் குறி வைத்து விட்டால் பெண்டாட்டி யாவது, பிள்ளையாவது, தாயாவது, தந்தையாவது, கணவன், சகோதர சகோதரிகள், உற்றார், உறவினர் எல்லோருமே பிசாசுகள் ஆகிவிடுவார்கள்.

கடவுளையே பயித்தியம் பிடிக்க வைத்துவிடுவான் மனிதன்.

பணம் அந்தப் பாடு படுத்துகிறது.

ஒருவன் நன்றாக உழைத்தான். யோகமும் கை கொடுத்தது. நிறைய சம்பாதித்தான். ஆகா, ஓகோ என்று மற்றவர் பாராட்ட வாழ்ந்தான்.

குடும்பத்தை வளர்த்தான். உற்றார் உறவினர்களை உபசரித்தான். ஊருக்கும் சமுதாயத்துக்கும் உதவிகள் பல செய்தான்.

வயதாக வயதாக அப்பாவி மனிதன் தளர்ந்து போனான். நடமாட்டம் இல்லை. ஞாபக சக்தி போய்விட்டது. பசியும் இல்லை. தூக்கமும் இல்லை. பேசக்கூட முடியாத நிலை.

ஒருநாள் படபட என்று வந்தது. பரக்கப் பரக்க விழித்தான். மேல் மூச்சு கீழ் மூச்சு அடித்தது.

கண் சொருக ஆரம்பித்துவிட்டது. மனைவி, மக்கள், தாய் - தந்தையர் எல்லோரும் சுற்றி வளைத்துக் கொண்டவர்கள் போல உட்கார்ந்து விட்டார்கள்.

சும்மாவா உட்கார்ந்திருக்கிறார்கள்.

கணக்குக் கேட்க ஆரம்பித்து விட்டார்கள். சாவியை எங்கே? பத்திரத்தை எங்கே? நகையை எங்கே? ரொக்கம் எங்கே? என்றெல்லாம் வளைத்து வளைத்துக் கேட்கிறார்கள்.

*அவன் காதில் ஒன்றும் விழமாட்டேன் என்கிறது. விழுந்தாலும் புரியமாட்டேன் என்கிறது.*

*இடை இடையே விழித்துப் பார்க்கிறார்கள். கண்ணை அவன் திறந்தாலும் இந்தக் கழுகுகள் கேள்விகளுக்கு மேல் கேள்விகளைப் போட்டு கொத்திப் பிடுங்குகின்றன.*

*என்ன வாழ்க்கை? சீச்சீ! என்ன பிழைப்பு?*

*இதோ வருகிறது பாடல்:*

**சோர்வி னால்பொருள்**
**வைத்ததுண் டாகில்**
**சொல்லு சொல்லென்று**
**சுற்றும் இருந்து**
**ஆர்வி னவிலும்**
**வாய்திற வாதே**
**அந்த காலம்**
**அடைவதன் முன்னம்**
**மார்வம் என்பதோர்**
**கோயில் அமைத்து**
**மாதவன் என்னும்**
**தெய்வத்தை நாட்டி**
**ஆர்வம் என்பதோர்**
**பூஇட வல்லார்க்கு**
**அரவ தண்டத்தின்**
**உய்யலும் ஆமே! 64**

---

*சோர்வினால் - மற்றவர்களுக்குத் தெரியாமல் தனக்கென்று ஒதுக்கி வைப்பதற்கு பயம் (தளர்ச்சி) தான் காரணம். யாரையும் பூரணமாக நம்பமுடியாதபடி அல்லவா சோர்வு என்று ஒன்று இருக்கிறது.*

*அந்த . மயக்கம் காரணமாக, பொருள் வைத்தது உண்டாகில் சொல் - சொல் என்று - அது எங்கே எங்கே என்று எத்தனை தடவை கேட்டாலும் வாய்திறவாத அந்த காலம் - பேசமுடியாத கடைசிக் கட்டம்.*

*மார்வம் - இதயம், அரவதண்டம் - யம பயம்.*

5 பணம் என்று வந்துவிட்டால் போதும். பிறகு மனுஷன் மனுசனாக இருக்க மாட்டான்.

திருடன், வழிப்பறிக்காரன், கொள்ளைக்காரன், ஏன் அரசு அலுவலர் என்றெல்லாம் தனித்தனிப் பெயரிட்டு சொல்கிறோமே, அப்படி எல்லாம் ஒன்றும் இல்லை.

ஒவ்வொரு மனிதனும் பணம் என்றால் அப்படி அப்படித்தான். மனைவி, கணவன், தாய், தந்தை, சகோதரன், சகோதரி எல்லோருமே அப்படி அப்படித்தான்.

ஐந்து ஆறு குழந்தைகள் சேர்ந்து மணல் வீடு கட்டுகின்றன. கல்லையும் ஓட்டையும் வைத்து கல்யாணம் நடத்துகின்றன. விருந்தே வைத்து விடுகின்றன.

அந்த வேளை முரட்டுப் பையன் ஒருவன் வருகிறான். காலால் ஒரு ஏற்று எற்றுகிறான். வீடு, திருமணம், விருந்து எல்லாம் மாயமாய் மறைந்து விடுகின்றன.

விதியும் அப்படித்தான்.

எப்படி எப்படியோ சம்பாதிக்கிறான் மனிதன். அவ்வளவையும் விதி வந்து ஒரு தட்டுத் தட்டி விடுகிறது. ஓட்டாண்டி ஆகிறான்.

மிச்சம் ஒன்றும் இல்லை என்று ஆகிவிடுகிறது.

**காதற்ற ஊசியும்**
**வாராது காண்நம்**
**கடைவழிக் கே!**

என்று எப்படி வாழ்க்கையை அனுபவித்துச் சொல்கிறார் பட்டணத்தார்.

விதியின் விளையாட்டுக் கெல்லாம் தப்பி ஒதுங்கினான் ஒருவன். அவனுக்கும் ஓடுகிற மூச்சு ஒருநாள் நிற்கத்தான் செய்யும்.

அவ்வளவு தான்.

*அவனைச் சேர்ந்தவர்களே அவனுடைய உடமைகளை அபகரித்துக் கொள்வார்கள். விரலில் அவன் போட்டிருந்த மோதிரத்தைக் கூட விடமாட்டார்கள். கழற்றி எடுத்துக் கொள்வார்கள்.*

*நீண்ட நெடுங்காலத்துக்கு முன்பே விதிக்கும் மனிதனுக்கும் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டுவிட்டது. நாடகம் பார்ப்பதைப் போல பொருள்களை மனிதன் பார்க்கலாம். எதையும் சொந்தமாக வைத்துக்கொள்ள முடியாது.*

*விதிபோகும் இடம் எல்லாம் மனிதன் பின் தொடர்ந்து போக வேண்டும். ஆனால் எதையும் அவன் கையில் எடுத்துக் கொண்டு போக முடியாது. வழிக்குத் துணை விதி ஒன்றுதான்.*

*விதி மறந்தாலும் குடும்பத்தார் விட மாட்டார்கள். பெற்றபிள்ளை விடமாட்டாள். ஒரு துரும்பைக் கூட எடுத்துப்போக இடம் கொடுக்க மாட்டான்.*

**"காதற்ற ஊசியும் வாராது காண்நம்**
**கடைவழிக் கே !"**

*கடவுளின் வேடிக்கையே வேடிக்கை. அந்த வேடிக்கையை அனுபவித்துப் பரவசப்பட பரவசப் படத்தான் மரணம் ஒழியும். அதாவது மரணபயம் ஒழியும்.*

*இனிப்பாடல்:*

**அங்கம் விட்டணி**
**யாவும் கழற்றி,**
**ஆவி மூக்கினில்**
**சோதித்த பின்னை**
**சங்கம் விட்டவர்**
**கையை மறித்துப்**
**பைய வேதலை**
**சாய்ப்பதன் முன்னம்**
**வங்கம் விட்டுல**
**வும்கடல் பள்ளி**
**மாய னைமது**
**சூதனை மார்பில்**

தங்க விட்டுவைத்
தாவதோர் கர்மம்
சாதிப்பார்க்(கு) ஏதும்
சாதிக்க லாமே ! 65

**6** *வார்த்தைகளுக்கும் சிந்தனைகளுக்கும் எட்டாதது பேரண்டம்.*

*பேரண்டம் முழுவதும் ஒன்றுதான். அந்த ஒன்றைத் தவிர மற்றொன்று இல்லை. அந்த ஒன்றுதான் அண்டபிண்ட சராசரங்களாய் வேஷம் போடுகின்றது.*

*அந்த ஒன்றைப்பற்றி ஒன்றுமே தெரியாது. அது எப்படி இருக்கும் என்பது தெரியாது. அதற்கு என்ன பெயர் என்பதும் தெரியாது. ஆனால் அதை சக்தி என்றும், இறைவன் என்றும், திருமால், சிவன், முருகன், அல்லா, ஏசு என்று என்னென்னவோ பெயரிட்டுச் சொல்கிறோம்.*

*உருவமும் அமைப்பும் இப்படி இப்படி, அப்படி அப்படி என்றெல்லாம் சொல்கிறோம்.*

*அப்படிச் சொல்வதில் குற்றம் ஒன்றும் இல்லைதான்.*

---

*அங்கம் விட்டு அணியாவும் கழற்றி - காப்பு, மோதிரம், கடுக்கன், தண்டை முதலிய ஆபரணங்களை மஞ்சாடி கூட விடாமல் கழற்றி விடுவார்கள். கை கால் முதலிய அங்கங்களை மூளியாக விட்டுவிடுவார்கள். சங்கம் விட்டு - சங்காத்தம் - அதாவது நம்பிக்கையை விட்டு விட்டு கையை மறித்து ... முன்னம் - உயிர் போய்விட்டதா என்று மூக்கில் மூச்சோட்டத்தில் கைவைத்துப் பார்ப்பார்கள். மூச்சு அடங்கிவிட்டது என்று சந்தேகத்திற்கு இடம் இல்லாமல் தெரிந்த பின்தான், அவருடைய கையை அவர் தலையை மெல்லச் சாய்த்துப் படுக்க வைப்பார்கள். அதன் பிறகு நகைகளைக் கழற்றுவது தான் நாகரிகம். ஆனால் "பந்திக்கு முந்து" என்கிற தர்மப்படி மூச்சு அரைகுறையாய் ஓடிக் கொண்டிருக்கும்பொழுதே நகைகளைக் கழற்ற ஆரம்பித்து விடுவார்களாம்.*

*அவர்களுக்குப் பெயர்தான் உற்றார், உறவினர், மக்கள் ... வங்கம் விட்டு உலவும் கடல் பள்ளி - கப்பல் போன்ற நாவாய்கள் ஓடி உலாவரும் கடலையே படுக்கையாகக் கொண்ட. சாதிப்பார்க்கு ஏதும் சாதிக்கலாம் - பக்திமான்கள் மரணபயம் இல்லாமல் ஆனந்தமாய் வாழ முடியும்.*

இனி மனிதனை எடுத்துக் கொண்டால் அந்தக் கடவுளின் (மாபெரும் சக்தியின்) நேர் வாரிசு என்றுதான் சொல்ல வேண்டும்.

கடவுள் தன்னை முழுக்க முழுக்க மனிதனிடம் ஒப்படைத்துவிட்டார் என்று சொல்லலாம். அப்படி பேரண்டம் முழுமைக்கும் அத்தாட்சியாக விளங்குகிறான்.

அப்படியானால் மனிதனுக்கு கோவிந்தன், மாதவன், முருகன், விநாயகன், ஏசய்யா, அகமட் என்று பெயர் வைப்பதில் என்ன தப்பு.

பரம்பரைத் தொடர்புடைய இந்த நயமான பெயர்களை விட்டு விட்டு, கட்டமண், குட்டியச்சுவர், மரக்கட்டை, பாறாங்கல், போர்வாள், போர்முரசு, கழுகு, வேங்கை, சூர்ப்பணகை, தாடகை, ராவணன், துச்சாதனன் என்று பெயர் வைத்துக் கொள்வதில் என்ன ஞாயம் இருக்கிறது.

மனிதர்களுக்கு எப்படியோ இடை இடையே பைத்தியம் பிடித்து விடுகிறது.

பைத்தியத்தில் பிள்ளைகளுக்கு மட்டுமல்ல, தங்களுக்கே அசிங்கமான பெயர்களை வைத்துக் கொள்வார்கள்.

பணம், பதவி, என்றால் போதும் பெயரை இஷ்டத்துக்கு மாற்றி வைத்துக் கொள்வான்.

இவன் புதிது புதிதாக வைக்கிற பெயரைக் கேட்டால் இவனைப் பெற்றெடுத்த தாயே குலை பதறுவாள். பயல் போகிற போக்கை நினைத்து நினைத்து வேதனைப்படுவாள். அவளை நரகக்குழியில் அப்படித் தள்ளி விடுவான் அவள் வயிற்றில் வளர்ந்த பையன்.

இனி, இறைவன் பெயர் வைத்து அதையே சொல்லச் சொல்ல நாமணக்கும்.

நாவில் தேனூறும். அதைக் கேட்கக் கேட்க தாய் பரவசம் அடைவாள். அதுதானே மோட்சம்.

*இனிப் பாடல்:*

**காசும் கறைஉடைக்**
**கூறைக்கும் அங்கோர்**
**கற்றைக் கும்**
**ஆசையி னால்அங்**
**கவத்தைப் படும்**
**ஆதர் காள் !**
**கேச வன்பேர்**
**இட்டுநீர் தேனித்(து)**
**இருமி னோ;**
**நாயகன் நாரணன்**
**தம்அன் னைநர**
**கம்பு காள் ! 66**

**7** *புல் பூண்டு ஈ எறும்பு எல்லாமே கடவுள்தான். ஆனாலும் கடவுளின் முழு அவதாரம் மனிதன் தான்.*

*மனிதனாகக் கடவுள் அவதாரம் எடுத்தது இன்று நேற்றல்ல, லட்சக்கணக்கான ஆண்டுகள் ஆகின்றன.*

*மனிதனாகப் பிறந்தாலும் கடவுள் தன் பெயரை விட்டுவிடவில்லை. ராமன், கிருஷ்ணன், சங்கரன், பார்வதி, லட்சுமி என்று விடாமல் சொந்தப் பெயரையே சூட்டிக் கொண்டார்.*

*முற்பாட்டன், பாட்டன், தகப்பன், மகன், பேரன் என்று மனிதசாதியில் தொடர்ந்து நடமாடினால் பெயரை மாற்றவே இல்லை.*

*ஆனாலும் மனிதர்களுக்கு இடைஇடையே கிறுக்குப் பிடித்து விடுகிறது. கிறுக்கில் பெயர்கூட அடிபட்டு விடுகிறது.*

*இனிப்பாடல்:*

**மானிட சாதியில்**
**தோன்றிற்றோர் மானிட**
**சாதி யை**
**மானிட சாதியின்**
**பேரிட்டால் மறுமைக்(கு)**
**இல்லை யே**
**வானுடை மாதவா**
**கோவிந் தாஎன்(று)**
**அழைத்தக் கால்**
**நானுடை நாரணன்**
**தம்அன் னைநர**
**கம்பு காள்! 67**

**8** *உயிர் வர்க்கம் முழுவதுக்கும் பொதுவான காரியம் உயிர் வாழ்தல். மனிதனுக்கு அதோடு பிழைப்பு என்றும் ஒன்று இருக்கிறது. அதனால் எப்பொழுதும் பயந்து பயந்து சாவான்.*

*ஐந்து வருடமோ பத்து வருடமோ கழித்து காரியம் ஒன்று செய்ய வேண்டும் என்றால் அதற்கு இப்பொழுதே யார் யார் உதவி தேவை என்று கணக்குப் போடுவான். அவர்களை ஒட்டிக் கொள்வான். காலைக் கையைப் பிடித்தாவது ஒட்டிக் கொள்வான்.*

*நட்பு, பழக்கம், உறவு என்பவை எல்லாம் மனுசனைப் பொறுத்தவரை பெரும்பாலும் பிழைப்புக் காகத்தான்.*

*ஆள்வார் இறைவனிடம் சொல்கிறார்.*

*“உன்னை எட்டி நின்று பார்ப்பதற்குக்கூட எனக்கு அருகதை இல்லை. ஆனாலும் உன்னைப் போற்றுகிறேன். என்றைக்காவது ஒருநாள் எமன் என்மேல் பாயத்தான் போகிறான். அன்றைக்கு உன்னை நினைக்க முடியுமோ, முடியாதோ இன்றைக்கே நினைந்து போற்றுகிறேன்.”*

*இனிப்பாடல்:*

துப்புடை யாரை
நினைவதெல் லாம்
சோர்விடத் துத்துணை
ஆவர்என் றே;
ஒப்பிலேன் ஆகிலும்
நின்அடைந் தேன்
ஆனைக்கு நீஅருள்
செய்தமை யால்
எய்ப்பென்னை வந்து
நலியும்போ தங்(கு)
ஏதும்நாள் உன்னை
நினைக்கமாட் டேன்
அப்போதைக்(கு) இப்போதே
சொல்லிவைத் தேன்;
அரங்கத்(து) அரவணைப்
பள்ளியா னே ! **68**

**9** *மனுச உடம்பு ஒரு கோட்டைதான். அதற்கு வாசல்கள் பல உண்டுதான். ஆனாலும் அத்தனை வாசல்களிலும் எமன் தன் படைகளை நிறுத்திவிடுவான்.*

*தப்பி ஓடுவது என்பது நடக்காது. சலாம் போட்டோ லஞ்சம் கொடுத்தோ அவனைச் சரிக்கட்ட முடியாது.*

*இது ஆள்வாருக்கு நன்றாகத் தெரியும்.*

*அதனால் இறைவனே நீதான் தஞ்சம் என்று கெஞ்சுகிறார்.*

*இனிப்பாடல்:*

எல்லையில் வாசல்
குறுகச்சென் றால்
எற்றி நமன்தமர்
பற்றும்போ து,

நில்லுமின் என்னும்உ
பாயம்இல் லை;
நேமியும் சங்கமும்
ஆயினா னே !
சொல்லலாம் போதேஉன்
நாமம்எல் லாம்
சொல்லினேன் என்னைக்
குறிகொண்டென் றும்
அல்லல் படாவண்ணம்
காக்கவேண் டும்
அரங்கத்(து) அரவணைப்
பள்ளியா னே ! 69

**10** *மனுசன் (நான்) என்று ஒன்று இல்லை. பிறப்பு என்றும் இல்லை. நான் பிறந்தேன் என்பது மடத்தனம். இதை உணர்த்தத்தான் இறப்பு (எமன்) என்றொரு மாயையை (நாடகத்தை) உண்டாக்கினார் இறைவன்.*

*அவர் காரியம் **பொல்லாத** காரியம்.*

*இந்த வேடிக்கையை **இறைவனைப்** பார்த்தே சொல்கிறார் ஆள்வார்.*

*எப்படி?*

பைஅர வின்அணைப்
பாற்கட லுள்
பள்ளிகொள் கின்ற, ப
ரமமூர்த் தி !
உய்ய உலகு ப
டைக்கவேண் டி
உந்தியில் தோற்றினாய்
நான்முக னை;

வையம்(ம்) மனுசரைப்
பொய்யென்றெண் ணிக்
காலனை யும்உட
னேபடைத் தாய்;
ஐய ! இனிஎன்னைக்
காக்கவேண் டும்;
அரங்கத்(து) அரவணைப்
பள்ளியா னே ! 70

**11** இதே உடம்பு, இதே கண், இதே மூக்கு, பெண்டாட்டி, பிள்ளை, வீடு, வாசல், எல்லாம் இப்படி இப்படியே, தோலும், நரம்பும் இதே போலத்தான் என்று எந்த மனிதனும் விரும்பவில்லை. இப்படியே காலம் காலமாக இருக்க வேண்டும் யாருக்கும் பிரியம் இல்லை.

அப்படி ஒரு சாகாவரம் கிடைத்து விட்டால் போதும்; அதைவிட வேறு நரகமே வேண்டாம் மனிதனுக்கு.

மனிதன் வேண்டுவதெல்லாம் அவஸ்தைப் படாமல் அதிலிருந்து தப்புவதுதான்.

மரணம் என்பதாக ஒன்று பயமுறுத்துகிறது. அந்தப் பயத்திலிருந்து விடுதலை பெறுவதுதான் மனுசனுடைய ஆசை.

ஆனாலும் மரணத்தை வென்று வாழ முடியும் என்று ஜம்பம் அடிப்பான். அனுமான் இல்லையா, மார்க்கண்டேயன் இல்லையா என்று மல்லுக்கு வருவான்.

அவர்களை எங்கே என்று கேட்டால் ஒளிமயமாக இருக்கிறார்கள் என்று நழுவி விடுவான்.

ஆள்வாரும் அதைத்தான் பெருமானிடம் வேண்டுகிறார்.

“பண்பாடில்லாத முரடர்களாக இருக்கிறார்கள் எமகிங்கரர்கள். முறையோடு, அவர்கள் காரியத்தை நடத்தினால் ஒன்றும் பாதகம் இல்லை.

*முறை தவறும் போது பதட்டம் ஏற்படுகிறது. பெருமானே நீர்தான் சரி செய்ய வேண்டும் அதை."*

**தண்என இல்லை**
**நமன்தமர் கள்**
**காலக் கொடுமைகள்**
**செய்யாநிற் பார்;**
**மண்ணொடு நீரும்**
**எரியும்கா லும்**
**மற்றும்ஆ காசமும்**
**ஆகிநின் றாய்;**
**எண்ணலாம் போதேஉன்**
**நாமம்எல் லாம்**
**எண்ணினேன்; என்னைக்**
**குறிக்கொண்டென் றும்**
**அண்ணலே! நீஎன்னைக்**
**காக்கவேண் டும்**
**அரங்கத்(து) அரவணைப்**
**பள்ளியா னே! 71**

**12** *மரணத்தை நினைத்தால்போதும், மனைவி, மக்களிலிருந்து கோட் ஷுட் ஆண்ட், தலைப்பாகை, உத்யோகம், கௌரவம் அவ்வளவும் அணிவகுத்து நிற்கும்.*

*எல்லாம் நம்மைவிட்டு ஒதுங்கிவிடுமே என்கிற பயம் வந்துவிடும்.*

*பயம் அழுத்த அழுத்த அதுவே ஒரு கோலம் போடும். படுபயங்கரமான மீசை, நீண்டு வளைந்த கோரப் பல், கரும்பாறையே கையும் காலும் வைத்துக்கொண்டு அட்டகாசம் பண்ணுவது போன்ற முரட்டு உருவம்.*

*இப்படி ஒரு படம்போட்டு எமன் எமன் என்று நடுங்கும்.*

*எமன் ஒரு கற்பனைதான். வேஷம் கலைவதுதான் உண்மை. வேஷமும் மெள்ள மெள்ள ஒவ்வொன்றாகத்தான் கலையும்.*

*முதலில் கால் தள்ளாடும். ஊன்றி நடக்க முடியாது. பிறகு கை நடுங்கும். பல் ஆடும். ஒவ்வொன்றாய் கழலும். கண் ஒளி மங்கும். காது அடைக்கும். வாய் குழறும். புத்தி தடுமாறும். பிறகுதான் தலை சாயும்.*

*முதல் வழி கால்தான். அதனால் தான் என்னவோ எமனை காலன் என்று பெயரிட்டு அழைக்கிறார்கள்.*

*இப்படியாக ஒரு வேஷத்தைக் கலைப்பதற்கு இன்னொரு வேஷம் புதுப்புதுக் கோலம் எடுக்க வேண்டி இருக்கிறது.*

*கடன்காரன் போல நேருக்கு நேர் வந்து உண்டா, இல்லையா என்று கேட்கமாட்டான் எமன். காலைவாரி விட்டு, கையை வாரிவிட்டு பம்மிப் பம்மி கேடு விளைவிக்கிறான் அந்த வஞ்சகன்.*

*இனிப்பாடல்:*

**செஞ்சொல் மறைப்பொருள்**
**ஆகிநின் ற**
**தேவர்கள் நாயக**
**னே !எம்மா னே !**
**எஞ்சலில் என்னுடை**
**இன்அமு தே !**
**ஏழ்உல கும்உடை**
**யாய் !என்அப் பா !**
**வஞ்ச உருவில்**
**நமன்தமர் கள்**
**வலிந்துந லிந்தென்னைப்**
**பற்றும்போ து**

அஞ்சலை என்றென்னைக்
காக்கவேண் டும்
அரங்கத்(து) அரவணைப்
பள்ளியா னே ! 72

**13** *கேடிப்புள்ளிகளை போலீஸ்காரன் தேடிவருவது போல (காலாவதியான) நபர்களை எமன் தேடிவருவானாம். வந்து, "எங்கேடா ஒளிந்திருக்கிறாய்? வா வெளியே!" என்று இழுத்து விடுவானாம்.*

*இழுத்து நிற்க வைத்து, "நீ (இப்படி) உடம்புக்குள் போய் ஒளிந்து ஏமாற்ற மாட்டேன் என்று சொல்" என இரண்டு சாத்துச் சாத்துவானாம்.*

*பொல்லாத பயல்தான் எமன். அதனால்தானே அவனுக்கு தர்மப்பிரபு என்கிற பட்டம்.*

*எமனைவிடப் பொல்லாத ஆசாமி திருமால். இவர்தானே அவனை விடுவது. அதனால் அவன், "எமன் கையில் சிக்கி நான் திணறும்போது பெருமானே நீதான் என்னைப் பாதுகாக்க வேண்டும்" என்று முறையிடுகிறார் பெரியாள்வார்.*

*தாஜாப்பண்ணுகிறார் ஆள்வார், எப்படி?*

*இனிப்பாடல்:*

நான்ஏதும் உன்மாயம்
அறியமாட் டேன்;
நமன்தமர் பற்றி
நலிந்திட்டந் த

---

*செஞ்சொல் மறைப்பொருள் ஆகிநின்ற தேவர்கள் **நாயகனே** - செம்மையாகவும் தெளிவாகவும் உள்ள பாடல் (மறை) களின் **விளக்கமே** இறைவன்தான். அவன்தான் தேவர் (சக்தி) களுக்கெல்லாம் **தலைவன்**. எஞ்சல்இல் - குறைவில்லாத, அஞ்சலைஎன்று - பயப்படாதே என்று என்னைத் தைர்யப்படுத்தி.*

'ஊனே புகேல்'என்று
மோதும் போதங்(கு)
ஏதும்நான் உன்னை
நினைக்கமாட் டேன்.
வானே ! வானவர்
தங்கள் ஈசா !
மதுரைப் பிறந்தமா
மாயனே ! யான்
ஆனாய்நீ என்னைக்
காக்கவேண் டும்
அரங்கத்(து) அரவணைப்
பள்ளியா னே ! 73

**14** *பல்லும் நாவும் உண்டானது பிரசங்கம் பண்ணுவதற்கு இல்லை. உணவை உண்பதற்கு - பசி ஆறுவதற்குத்தான். ஆனாலும் மனிதன் கடும் முயற்சி பண்ணி அந்த நாவைக் கொண்டும் பல்லைக் கொண்டும் பிரசங்கமே பண்ண ஆரம்பித்துவிட்டான். காலப் போக்கில் நாவும் பல்லும் பேசுவதற்கு உண்டானதாகவே ஆகிவிட்டது.*

*அதுவும் நா என்றால் பேசுவதற்குத்தான் என்று ஏற்பட்டுவிட்டது. நாக்கு, பல், உதடு, அண்ணம் ஒவ்வொன்றும் பேச்சுக்குப் பயன்படும் சாதனங்கள். இத்தனையும் சேர்ந்தது தான் வாய்.*

*ஆள்வார் சொல்கிறார்:*

*"பெருமானே! நாக்கு எப்பொழுதும் உன்னை உச்சரித்தே ஆட்டம் போடுகிறது. ஆனால் இப்படி சதா உச்சரிப்பதில் உண்மை இருக்கிறதா? உன் உண்மையான பக்தியிலிருந்து வருகிறதா?*

*சொல் (வாக்கு) என்று பயப்படுகிறேன். அதனால் மனம் கூசுகிறது. வாயும் சங்கடப்படுகிறது.*

ஆனால் நாக்கோ சொல்லிக் கொண்டே இருக்கிறது. விடாமல் சொல்லிக்கொண்டு இருக்கிற செயலுக்காவது நீ இரக்கம் காட்ட வேண்டாமா?"

இனிப்பாடல்:

**வாக்குத் தூய்மை**<br>
**இலாமையினா லே**<br>
**மாத வாஉன்னை**<br>
**வாய்க்கொள்ளமாட் டேன்**<br>
**நாக்கு நின்னைஅல்**<br>
**லால்அறியா து**<br>
**நான்அ(து) அஞ்சுவன்**<br>
**என்வசம்அன் று**<br>
**மூர்க்குப் பேசுகின்**<br>
**றான்இவன்என் று**<br>
**முனியா யேலும்என்**<br>
**நாவினுக்காற் றேன்**<br>
**காக்கை வாயிலும்**<br>
**கட்டுரைகொள் வர்**<br>
**கார ணாகரு**<br>
**ளக்கொடியா னே! 74**

**15** ஒரு இடத்தில் சர்க்கரைப்பாகு சிந்திவிட்டால் போதும், எங்கிருந்து வருமோ தெரியாது. சாரை சாரையாய் வந்து மொய்த்துவிடும் எறும்பு.

---

*தூய்மை - சுத்தம்; அதாவது பக்தி. வாய்க்கொள்ள மாட்டேன் - உன்பெயரை (வாயால்) சொல்லப் பயப்படுகிறேன். நாக்கு நின்னை அல்லால் அறியாது - ஆனால் என் நாக்குக்கு உன்னைத்தவிர ஒன்றும் தெரியாது. சோறு, கறி, பண்டம், பலகாரம் இவைகளின் சுவைகூடத் தெரியாது. நான் அது அஞ்சுவன் என்வசம் அன்று - ஆனாலும் உன் பெயரை உச்சரிக்க என்ன யோக்கியதை நம்மிடம் உள்ளது என்று எனக்கு ஒரேபயந்தான். பயந்து என்ன செய்ய? நாக்கு என் கட்டுப்பாட்டில் இல்லையே! மூர்க்கும் - விதண்டாவாதம். முனியாயேலும் - நீ கோபிக்கா விட்டாலும். என் நாவினுக்கு ஆற்றேன் - என்னுடைய நாக்கின் ஆத்திரத்தை என்னால் அடக்க முடியவில்லை.*

*ஒரு சட்டியில் நெய்யை ஊற்றி வைத்தால் போதும், அந்தச் சட்டியை உயரத்தில் ஒரு பலகைமேல் வைத்தால் கூட எறும்பு வந்துவிடும். சுவர் வழியே எறும்புக் கூட்டம் ஏறி நெய்ச்சட்டியை மொய்த்து விடும்.*

*நோய்களும் அப்படித்தான். நம் உடம்பை அங்கம் அங்கமாக அணு அணுவாகச் சூழ்ந்து முற்றுகை இட்டுள்ளன.*

*அப்படி டேராப்போட்டு முற்றுகையிட்டுள்ள நோய்களைப் பார்த்து ஆள்வார் சொல்கிறார்:*

*"இப்பொழுதே இந்த இடத்தை விட்டு ஓடிப் போய்விடுங்கள். தாமதித்தால் உங்களுக்குத்தான் ஆபத்து.*

*எம்பெருமான் நாராயணனே தன் மெத்தை தலையணை (படுக்கை) சகிதமாக வந்து என்னுள் அமர்ந்து விட்டான். இனி உங்களுக்கு இங்கு இடம் இல்லை."*

*இனிப்பாடல்:*

**நெய்க்கு டத்தைப்**
**பற்றிஏ றும்**
**எறும்பு கள்போல்**
**நிரந்தெங் கும்**
**கைக்கொண்டு நிற்கின்ற**
**நோய்காள் கா**
**லம்பெற உய்யப்**
**போ மின்;**
**மெய்க்கொண்டு வந்து**
**புகுந்து வே**
**தப்பிரா னார்கி**
**டந்ந் தார்**
**பைக்கொண்ட பாம்பணை**
**பள்ளியோ டும்**
**பண்டன்று பட்டினம்**
**காப் பே! 75**

**16** ஒருதாய். அவளுக்கு ஆறு மகன்கள். ஆறுபேரும் மாண்டு போனார்கள். இடிந்து நொறுங்கி விட்டாள் அன்னை.

அவளுக்கு ஆறுதலாக அவள் வயிற்றில் ஒரு பிள்ளையாகப் பிறந்தவன் பெருமான்.

அவளிடம் சொல்கிறார் ஆள்வார்.

"எம்பெருமானே! தொல்லை மயமானது பிழைப்பு. அத்தனையையும் தட்டி நொறுக்கி உதறி விட்டேன். உன்னை நேருக்கு நேராகவே கண்டு விட்டேன்.

என்னுள்ளேயே நீ இருக்கிறாய். நீதான் நான்.

இது தெரிந்துவிட்டது. ஒரே ஆனந்த மயந்தான். உன்னால் என்னை இனி உதறிவிட்டுப் போக முடியாது.

அப்படிக் கட்டுண்டு போய்விட்டாய் நீ"

இனிப்பாடல்:

**துக்கச் சுழலையை**
**சூழ்ந்து கிடந்த**
**வலையை அறப்பறித்**
**து**
**புக்கினில் புக்குன்னை**
**கண்டுகொண் டேன்; இனிப்**
**போக விடுவதுண்**
**டோ !**
**மக்கள் அறுவரைக்**
**கல்லிடை மோத**
**இழந்தவள் தன்வயிற்**
**றில்**

நிரந்து எங்கும் கைக்கொண்டு நிற்கின்ற நோய்காள் - உடம்பு முழுவதும் ஊடுருவிப் பரவி உடம்பையே வசப்படுத்திக் கொண்ட பொல்லாத நோய்களே! காலம் உய்யப்போமின் - வேகமாக ஓடிப் பிழையுங்கள். மெய்க்கொண்டு - முழு உருவோடு. பை - (நாகப்) படம், பட்டினம் காப்பு - உடம்புக்கு பாதுகாப்பு கிடைத்து விட்டது. (75)

சிக்கென வந்து
பிறந்துநின் றாய்; திரு
மாலிரும் சோலைஎந்
தாய்! 76

மரணபயம் தொலைய வேண்டுமானால் வழி ஒன்றுதான். ஒன்றே ஒன்றுதான்.

அது என்ன?

'எல்லாம் இறைவன் செயலே' என்னும் நினைப்பு வரவேண்டும். வந்தால் மட்டும் போதாது. அந்த நினைப்பிலேயே நிற்க வேண்டும். அணுவளவு கூடப் பிசகாமல் நிற்க வேண்டும்.

லாபம், நஷ்டம், நல்லது, கெட்டது, வெற்றி, தோல்வி எல்லாம் இறைவன்தான். இறைவனுடைய காரியமே என்பது உண்மை.

உண்மை என்று ஒன்று விளங்கி விட்டால் அது எப்படி மறக்கும்.

இது நாற்காலி, இது கட்டில், இது பசு, இது யானை - எப்பொழுதோ தெரிந்து கொண்டோம். அது மறக்கவா செய்கிறது? ஆயுள் நாள் முழுவதும் மறக்க மாட்டேன் என்கிறதே!

மறக்காமலிருக்க உருப்போடுகிறோமா? இல்லையே!

நாற்காலி, கட்டில், பசு, யானை என்று உருப் போட்டு உருப்போட்டுப் பழகுவதில்லை.

---

சுழலை - சுழல், கடல். அறப்பறித்து - மிச்சம் இல்லாமல் களை எடுத்து. புக்கினில்புக்கு - இறந்து உடம்புக்குள்ளேயே (மனசை) ஓடவிட்டுத் தேடி.

திருமாலிரும்சோலை - மதுரைக்கு வட புறத்தில் பத்து மைல் உள்ள அழகர்மலை. எந்தாய் - அங்கு கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் பெருமானே.

இனிப்போகவிடுவது உண்டோ - என்னை விட்டு நீ போக விடமாட்டேன். நீயும் நானும் ஒன்று.

*உணர்ச்சியோடு ஒன்று ஒட்டி விட்டால் அது ரத்தத்தோடு ரத்தமாய்க் கலந்துவிடும். உடம்பின் ஒவ்வொரு அணுவோடும் கலந்துவிடும்.*

*பிறகு எப்படி அது நம்மைவிட்டு விலகும்?*

*எல்லாம் இறைவனின் சதுராட்டந்தான் என்பது விளங்கிவிட்டால், மனசோடு ஒட்டிவிட்டால் மரண பயம் ஓடிவிடும்.*

*இதை விட்டுவிட்டு மரணத்தை வெல்லும் வழி இது, அதற்கு இங்கே வாருங்கள், அங்கே போங்கள் என்று மக்களிடம் பொய் சொல்லக் கூடாது.*

*கொலையை விடக் கொடியது பொய்.*

# தெய்வமும் குழந்தைதான்

1 இந்தியாவின் தென்கோடியில் ஒதுங்கி இருக்கிறது தமிழ்நாடு. மற்றவர்கள் பார்வையில் பளிச்சென்று படாமல் ஒதுக்குப்புறமாய் விலகி நிற்கிறது தமிழ்நாடு.

தமிழ்நாட்டில் தொண்டை மண்டலம், சோழ மண்டலம் இவற்றைத் தாண்டி பாண்டிய நாட்டின் தென்மேற்கில் இருக்கிறது ஸ்ரீவில்லிபுத்தூர்.

ஆயிரம் வருடங்களுக்கு முன் ஸ்ரீவில்லிபுத்தூர் சிறு கிராமமாகத்தான் இருந்திருக்க வேண்டும்.

மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் இருக்கிறது ஸ்ரீவில்லிபுத்தூர். ஊரைச்சுற்றி பெரிய ஏரிகள், கடல் போல நீர் நிறைந்திருக்கும்.

நீர்வளம் காரணமாக நிலமும் வளமாக இருந்தது. ஊரைச்சுற்றி கண்ணுக்கெட்டிய தூரம் வரை நன்செயும் தோப்புமாக இருந்தன.

மாடுகளும் கன்றுகளும் மந்தை மந்தையாக இருந்தன. எங்கு பார்த்தாலும் பால் மணமும் நெய் மணமுந்தான்.

சிவன்கோவில் விஷ்ணு கோவில் எல்லாம் இருந்தன. தேர், திருவிழா, வழிபாடு, மேள முழக்கம் இப்படி வளமாய் இருந்தது ஸ்ரீவில்லிபுத்தூர்.

ஆயிரக்கணக்கில், லட்சக்கணக்கில் பணம் புரளாவிட்டாலும் மக்கள் மகிழ்ச்சியாக இருந்தார்கள். நிம்மதியாக இருந்தார்கள்.

வாழ்க்கையில் பிரச்சனைகள் இருக்கத்தான் செய்தன. ஆனால் அவை வாழ்க்கையோடு ஒட்டி இருந்தன. வாழ்க்கைக்கு விரோதமாக இருக்கவில்லை. வாழ்க்கை வேறு தான் என்று பிரிந்து நின்று வாழ்க்கையை வஞ்சம் தீர்க்கவில்லை பிரச்சனைகள்.

சோற்றுக் கஷ்டம் கிடையாது. துணிக்கஷ்டமும் இல்லை. குடி இருக்க இடம் கிடைக்கவில்லையே என்று ஒருவரும் பதறவில்லை. ரயிலில் நெரிசல், மோட்டாரில் இடி, விமானத்தில் இடம் இல்லை. தொலைபேசியின் சண்டித்தனம் இவை எல்லாம் அவர்களுக்குத் தெரியாது.

வழக்கறிஞர்களின் தொந்தரவு, நீதிமன்றங்களின் வாய்தா, டாக்டர்களின் சோதனை, கல்வி நிலையங்களின் அட்டகாசம், அதிகாரியின் கெடுபிடி இவை ஒன்றும் அவர்களுக்குத் தெரியாது.

வாழ்க்கையானது தொந்தரவில்லாமல் நிதான மாக ஓடிக்கொண்டிருந்தது. அதனால் அவர்களிடம் எரிச்சல் இல்லை. வெறுப்பும் இல்லை.

உற்றார் உறவினர்களிடம் பிரியமாக இருந்தார்கள். நண்பர்களிடம் உண்மையாக இருந்தார்கள். மனைவி, மக்களிடம் உயிரையே வைத்திருந்தார்கள்.

பெற்றோர், சான்றோர், பக்தர்கள், கலைஞர்கள் இவர்களை மதித்து வழிபட்டார்கள்.

அங்கொன்றும் இங்கொன்றுமாக பொய் இருந்திருக்கலாம். பித்தலாட்டம் கூட இருந்திருக்கலாம்.

ஆனால், பொய் சொல்லித்தான் பிழைக்க வேண்டும். பித்தலாட்டம் இல்லாவிட்டால் வாழ முடியாது

என்னும் பரிதாபம் அப்பொழுது இல்லை. அதனால் நன்றி உணர்ச்சி என்பது அவர்களிடம் ஊறிப் பெருகியது.

நீரையும் நெருப்பையும் தெய்வம் என்று போற்றினார்கள். கவியையும் கலையையும் கடவுளின் அவதாரம் என்று மதித்தார்கள். உழவு முதலிய தொழில்களை தெய்வ கடாட்சம் என்று பாராட்டினார்கள். பசுவை கண்கண்ட தெய்வமாகவே மதித்தார்கள்.

வேலையைப் பாரமாக அவர்கள் நினைக்கவில்லை. இதை இதைச் செய்து தொலைக்க வேண்டுமே என்றும் கடனாக அவர்கள் நினைக்கவில்லை.

வேலை செய்வது அவர்களுக்குச் சந்தோஷமாக இருந்தது. வேலை செய்யாவிட்டால் அவர்களுக்குப் பைத்தியம் பிடித்தது போல இருக்கும்.

செருப்புத் தைப்பதிலிருந்து கோவில் கட்டுவது வரை - இறைவனுடைய திருமேனியை அலங்கரிப்பது வரை எல்லா வேலைகளையும் அவர்கள் உத்சாகமாகச் செய்தார்கள். ஆனந்தமாகச் செய்ததால் ஒவ்வொரு காரியங்களும் கலையாக அவதரித்தன. அழகுத்தெய்வம் ஒவ்வொரு செயலிலும் தாண்டவம் ஆடியது.

ஸ்ரீவில்லிப்புத்தூரில் ஆயிரம் வருடங்களுக்கு முன் பெரியாள்வார் பிறந்தார். சாதாரணக் குடும்பந்தான்.

உயர்நிலைப்பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழகம் ஒன்றிலும் பெரியாள்வார் ஏறி இறங்கவில்லை. அலுவலகம், பைல், கேம்ப், ஆலோசனை, தர்பார் ஒன்றும் அவருக்குத் தெரியாது.

ஸ்ரீவில்லிபுத்தூரில் பெருமாள் கோயில் இருந்தது. பெரிய கோவில்தான். வடபெருங் கோயில் என்று அதற்குப் பெயர்.

பெரியாள்வார் படிக்க வேண்டிய விஷயங்களை பெற்றோர்கள், சுற்றத்தார், தோழர்கள் மூலமாகவே தெரிந்து கொண்டார்.

விபரந் தெரிந்த நாள் முதல் அவர் செய்த காரியம் வடபெரும் கோயிலை ஒட்டி இருந்த நந்தவனத்தைக்

கொத்திக் கொடுப்பது, பூஞ்செடிகளுக்குத் தண்ணீர் பாய்ச்சுவது, பூஞ்செடிகளைச் சுற்றி முளைக்கும் செடி செத்தைகளைப் பிடுங்கி எறிந்து களை எடுப்பது, மலர்களைப் பறிப்பது, மாலை தொடுப்பது, அந்த மாலையைப் பெருமானுக்கு சார்த்தி அந்த அழகில் மயங்குவது ஆகியவைதான்.

தினந்தோறும் இவற்றைச் செய்து வந்தார். தொடர்ந்து ஆசையோடு செய்து வந்ததால் ஒவ்வொரு பூவும், ஒவ்வொரு இலையும், ஒவ்வொரு தளிரும், ஒவ்வொரு துளிரும் அவருக்கு அற்புதமாய் இருந்தன.

நந்தவனத்தையும், பூவையும், பெருமாளையும் மட்டுமல்ல; பசு, கன்று, நன்செய், புன்செய், வீடு, தெரு, உற்றார், உறவினர், பெற்றோர், மலை, கடல், ஆகாயம், சந்திரோதயம், சூரியோதயம், குழந்தைகள், அவர்களுடைய விளையாட்டு எல்லாவற்றையும் அனுபவித்தார் பெரியாள்வார்.

அனுபவித்துக் கொண்டே எல்லாவற்றைப் பற்றியும் யோசித்தார். யோசிக்காமல் அவரால் இருக்க முடியவில்லை. யோசித்துக் கொண்டே தெளிவு பெறுவதற்கு வேலை சாதகமாக இருந்தது.

அதனால் நந்தவன கைங்கர்யம் தொடர்ந்து நடந்தது. யோசிக்க யோசிக்க பெரியாள்வாருக்கு உண்மை விளங்கியது. தெள்ளத் தெரிந்து சுடர்விட்டுப் பிரகாசித்தது அந்த உண்மை.

“கடவுள் ஒருவர்தான். கடவுளைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. செடியானது துளித்துக் கொண்டும், தளிர்த்துக் கொண்டும், பூவாய்ச் சொரிந்து கொண்டிருக்கிறது. அப்படியே கடவுள் தத்துவமும் உலகங்களாய், வஸ்துக்களாய், வாழ்க்கையாய் உண்டாகிக் கொண்டே இருக்கிறது.

இறுதி இல்லாதபடி எங்கும் வியாபித்து நிறைந்திருக்கிறது கடவுள் தத்துவம். குழந்தைக்குப் பெயர் சூட்டுவதில் போட்டி போடுவது போல கடவுள் தத்துவத்துக்கும் சிவன், விஷ்ணு, கணபதி, பார்வதி, லட்சுமி,

முருகன் என்றெல்லாம் பெயர் வைக்கப் போட்டி உண்டாகிறது."

இப்படியாக ஒவ்வொரு இதழாய் விரிந்து உண்மையானது பூத்து மணங்கமழ்ந்தது பெரியாள்வாரிடம்.

சகல சக்திகளுக்கும் நாயகமாகிய இறைவனே ஒன்றும் தெரியாத குழந்தைகளாக அவதரித்துக் கொண்டு இருக்கிறான் என்பதை அனுபவிக்க அனுபவிக்க புளகாங்கிதம் அடைந்தார் பெரியாள்வார்.

குழந்தைகளையும் அவர்களுடைய வேடிக்கை களையும் பார்த்துப் பார்த்து அனுபவித்தவர் பெரியாள்வார். அதனால் கடவுளே குழந்தையாக அவதரிக்கும் அற்புதம் அவரை உருக்கியது.

உள்ளம் உருக உருக தாயாக மாறிவிடுகிறார் பெரியாள்வார். தெய்வத்தையே பரிவோடு பார்த்து ஈடுபடும் தாயாக மாறிவிடுகிறார் பெரியாள்வார்.

குழந்தை கலகல என்று நன்றாகவே இருக்கும். ஆனாலும் குழந்தைக்கு அது இது என்று தோஷம் வந்துவிடக் கூடாதே என்று தாய் பதறுவாள். அதற்காகப் பல விரதங்களை மேற்கொள்வாள்.

குழந்தைக்கு கண்ணேறு பட்டு விடக்கூடாதே என்று திருஷ்டியும் கழிப்பாள் தாய்.

பெரியாள்வாரும் கடவுளாகிய குழந்தைக்கு தாயாக இருந்து திருஷ்டி கழிக்கிறார். "பெருமானே உனக்கு யாதொரு குறையும் வரக்கூடாது. நீ, ஊழி ஊழி காலத்துக்கு பழுதில்லாமல் இருக்க வேண்டும்" என்று பல்லாண்டு பாடி திருஷ்டி கழிக்கிறார்.

பெரியாள்வாரின் பரிவும் பாசமும் தமிழுக்குள் எப்படித் தாவிக் குதித்துக் கும்மாளி போடுகின்றன என்பதைப் பாடலில் பார்க்கலாம்.

**பல்லாண்டு பல்லாண்டு**
**பல்லாயி ரத்தாண்டு**
**பலகோடி நூறாயிரம்**

**மல்லாண்ட திண்தோள்**
**மணிவண் ணாஉன்**
**செவ்வடித் செவ்விதிருக்**
**காப் பு. 77**

**2** *குழந்தையை அனுபவிக்க அனுபவிக்க தாயின் உணர்ச்சியில் பெருமிதம் பொங்குகிறது. இப்பொழுது சாதாரணத் தாய் இல்லை. தெய்வத் திருத்தாய்.*

*பிள்ளையை வாழ்த்துவதோடு நிற்கவில்லை. பிள்ளையின் மனைவி - அதாவது மருமகள். பிள்ளையின் படைக்கலன்கள் எல்லாவற்றையும் சேர்த்து வாழ்த்துகிறாள்.*

**அடியோ மோடும்நின்**
**னோடும்பி ரிவின்றி**
**ஆயிரம் பல்லாண்டு;**
**வடிவாய் நின்வல**
**மார்பினில் வாழ்கின்ற**
**மங்கையும் பல்லாண்டு;**
**வடிவார் சோதிவ**
**லத்துறை யும்சுடர்**
**ஆழியும் பல்லாண்டு;**
**படைபோர் புக்குமு**
**ழங்கும்அப் பாஞ்சசன்**
**னியமும்பல் லாண்டே! 78**

---

*மல்ஆண்ட திண்தோள் - மல்யுத்தம் செய்து செய்து உரம் ஏறிய தோள். மணிவண்ணா - கண்மணி போன்ற நீலவண்ணனே! செவ்அடி - செம்மையான திருவடிகள். திருஅருளை திருவடி என்பது மரபு. செவ்வி - நலம். திருக்காப்பு - நீடூழி வாழ்க. (77)*

*அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு - தொண்டர் குழாமும் நாயகனாகிய நீயும் சேர்ந்து இப்படியே ஊழி ஊழி காலத்துக்கு இருக்க வேண்டும். மங்கை - லட்சுமி. ஆழி - சக்கரம். படை போர்புக்கு - வீரர்கள் நிறைந்த போர்க்களம் முழுவதும் வியாபித்து. முழங்கும் பாஞ்சசன்யம் - ஆரவாரிக்கும் பாஞ்சன்யம் என்னும் சங்கு.*

**3** தெய்வ உணர்ச்சி மேலே மேலே போகிறபொழுது குழந்தையைப் பற்றிய பாவனை விலகி நிற்கும். இறைவன் சம்பந்தப்பட்ட சம்பவங்கள், வரலாறுகள் வந்து உணர்ச்சியைத் தாக்கும்.

பெரியாள்வாராகிய தாயையும் தெய்வ பக்தி வந்து ஒரு ஆட்டு ஆட்டுகிறது.

வாழ்க்கையில் வசதி தேடி அலையும் போலி பக்தர்களை நோக்கிச் சொல்வதாகப் பாடல்.

சோற்றுக்கும் துணிக்கும் என்று அங்கும் இங்கும் ஓடுகிறீர்கள் நீங்கள். உங்களை எங்கள் கூட்டத்தில் நுழைய விடமாட்டோம். இப்பொழுதே வந்தால் சேர்த்துக் கொள்கிறோம். உடனே வாருங்கள்.

இலங்கையைத் தட்டி நொறுக்கி ராட்சதர்களை நாசம் செய்த பெருமானைப் பாடிப் பரவுங்கள்.

சோற்றுக்கும் துணிக்குமா கவலை?

**வாழ்ஆள் பட்டுநின்**
**நீர்உள்ளி ரேல்வந்து**
**மண்ணும்ம ணமும்கொண் மின்;**
**கூழ்ஆள் பட்டுநின்**
**நீர்களை எங்கள்**
**குழுவில் புகுதலொட் டோம்;**
**ஏழ்ஆள் காலும்**
**பழிப்பிலோம் நாங்கள்;**
**இராக்கதர் வாழ்இலங்கை**

வாழ்ஆள்பட்டுநின்று - மேலும் மேலும் சௌகர்யமாக வாழ வேண்டுமே என்று ஆசைப்பட்டு உழல்கிற பைத்தியங்களே! உள்ளிர் - யோசனை செய்து பாருங்கள். வந்து மண்ணும் கொண்மின் - இங்கே வாருங்கள். வந்து சௌகர்யத்தையும் இன்பத்தையும் தாராளமாகப் பெற்றுக் கொள்ளுங்கள். கூள்ஆள்பட்டு நின்றீர்களை - ருசியான பதார்த்தங் களுக்கு மட்டும் அடிமையாகி அலைகின்றவர்களை. புகுதலொட்டோம் - சேர்க்கமாட்டோம். ஏழ் ஆழ்காலும் பழிப்பு இ(ல்)லோம் - தலைமுறை தலைமுறையாக நாங்கள் பெருமானை வழிபட வருகிறோம்.

பாழ்ஆ ளாகப்ப
டைபொரு தானுக்குப்
பல்லாண்டு கூறுதுமே ! 79

**4** நமது உடம்பு அருமையானதுதான். ஆனால் அது நிரந்தரமானது இல்லை. நம்முடைய காரியம் ஒவ்வொன்றும் அப்படி அப்படித்தான்.

அதனால் உடம்பு திடமாக இருக்கும் பொழுதே -புத்தி தெளிவாக இருக்கும் பொழுதே எது பொய், எது உண்மை என்று நிச்சயம் பண்ணிவிடுங்கள்.

உடனே புறப்பட்டு வாருங்கள். எல்லாம் அவன் செயல் (நமோ நாராயணாய) என்று உளம் உருகி ஓடி வாருங்கள்.

ஏடு நிலத்தில்
விழுவதன் முன்மைவந்(து)
எங்கள்கு ழாம்புகுந்து
கூடும் மனம்உடை
யீர்கள் ! வரம்பொழி
வந்தொல்லை கூடுமினோ !
நாடும் நகரமும்
நன்கறி யநமோ
நாராய ணாயஎன்று
பாடும் மனம்உடைப்
பத்தருள் ளீர்வந்து
பல்லாண்டு கூறுமனே ! 80

---

இலங்கை பாழ் ஆளாக - இலங்கை முழுவதும் ஆளரவம் இல்லாத சுடுகாடாக. படைபொருதான் - சண்டை போட்டு நிர்மூலம் ஆக்கினான் ராமன்.

ஏடு - உடம்பு. வரம்பொழிவந்து - தாமதம் செய்யாமல் வந்து. ஒல்லை - விரைவாக. நமோ நாராயணா என்று - எல்லாம் இறைவன் செயல். நம் செயல் ஒன்றும் இல்லை என்று உணர்ந்து.

**5** பக்தி உணர்ச்சியானது ஆவேசத்தோடு எழுந்து நின்று முழங்கியது. அதைக் கண்குளிரப் பார்த்தோம். இனி, அந்தப் பக்தியானது பழுத்து கனிந்து பரிவை எப்படிக் கொட்டுகிறது என்று பார்ப்போம்.

தாய்ப்பாசம் அதில் பொங்கிக் கொண்டு வருகிறது.

"நீ களைந்து போட்ட உடையை நாங்கள் கட்டிக் கொள்கிறோம். நீ உண்ட கலத்திலேயே நாங்கள் உண்கிறோம். நீ எடுத்துப் போட்ட மலரும் மாலையுந்தான் நாங்கள் சூடிக் கொள்வது.

நீதான் எங்களுக்கு எல்லாம். உன்னைத்தவிர வேறு கதி ஏது எங்களுக்கு!"

**உடுத்து களைந்தநின்**
**பீதக ஆடைஉ**
**டுத்துக்க லத்ததுண்டு**
**தொடுத்த துழாய்மலர்**
**சூடிக் களைந்தன**
**சூடும்இத் தொண்டர்குழாம்;**
**விடுத்த திசைக்கரு**
**மம்திருத் தி(த்)திரு**
**வோணத் திருவிழாவில்**
**படுத்தபைந் நாகணைப்**
**பள்ளிகொண் டானுக்குப்**
**பல்லாண்டு பாடுதுமே! 81**

---

*பீதக ஆடை - பீதாம்பரம் என்னும் பட்டு. கலம் - பரிகலம். விடுத்த திசைக் கருமம் திருத்தி - வகுத்து வைத்த நல்வினை தீவினை என்னும் செயல்கள் அவ்வளவையும் இறைவனுடைய செயலே என்று மாற்றி (பல்லாண்டு பாடுகிறோம்) பைந்நாகு அணை - ஆதிசேஷன் என்னும் பாம்பையே படுக்கையாகப் போட்டு (திருப்பாற்கடலில்) பள்ளி கொண்டான் - யோக நித்திரை புரியும் திருமால்.*

**6** இன்று நேற்றல்ல. ஊழி ஊழி காலத்துக்கு முன்பே நாங்கள் உன் பெருமையை உணர்ந்து நீதான் நாயகன் என்று தீர்மானித்து விட்டோம். கை எழுத்துப் போட்டு இதை எழுதியே கொடுத்து விட்டோம்.

அன்று முதல் நாங்கள் மனுசராகி விட்டோம். எங்கள் வீடு மோட்ச சாம்ராஜ்யம் ஆகிவிட்டது.

வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் எங்களுக்கு நீ வந்து காட்சி கொடுப்பாய். எங்களுடன் உறவாடுவாய். எங்கள் கூடவே இருந்து ஓடியாடி விளையாடுவாய்.

வடமதுரையில் நீ அவதரித்து விளையாடியது அதில் ஒன்று. பொய்கையில் படமெடுத்துச் சீறிய ஐந்து தலைப்பாம்பின் மேல் பாய்ந்து அதன் உச்சியில் நின்று நடனமாடினாயே அதுவும் எங்களைப் பரவசப்படுத்தத் தான்.

உனக்குப் பல்லாண்டு பாடப் பாட எங்களுக்கு தெம்பு கூடுகிறது. ஊக்கம் பெருகுகிறது.

**எந்நாள் எம்பெரு**
**மான்உன்த னக்கடியோம்**
**என்(று)எழுத் துப்பட்ட**
**அந்நா ளேஅடி**
**யோங்கள் அடிக்குடில்**
**வீடுபெற் றுய்ந்ததுகாண்;**
**செந்நாள் தோற்றித்**
**திருமது ரையுள்சிலை**
**குனித்து ஐந்தலைய**
**பைந்நா கத்தலை**
**பாய்ந்தவ னேஉ(ன்)னைப்**
**பல்லாண்டு கூறுதமே! 82**

எழுத்துப்பட்ட அந்நாள் - ஒப்பந்தம் செய்து கொண்ட அன்று முதல். அடியோங்கள் அடிக்குடில் - எங்களின் எளிய குடிசைகள். வீடுபெற்று உய்ந்தது - நீ வந்து குடியேறிய கோயில் ஆகிவிட்டன. செந்நாள்தோற்றி - நல்ல நாளில் - திருவோணத் திருநாளில் அவதரித்து. சிலைகுனித்து - வில்லைவளைத்து. பைந்நாகத் தலை பாய்ந்தவனே - படம் எடுத்துச் சீறிய நாகத்தின் மேல் பாய்ந்து அதன் உச்சியில் நின்ற பெருமானே.

# நாச்சியார் திருமொழி

# கனவா? நனவா?

வரலாறு என்று ஒன்று எழுத ஆரம்பித்தால், அதில் கல்யாணம், கல்யாணம் சம்பந்தப்பட்ட விழாக்கள் கட்டாயம் இடம்பெறும்.

மனிதன் கண்டுபிடித்த காரியங்கள் அத்தனையிலும் உயர்ந்தது திருமணம்.

கல்யாணம் ஆனபின்தான் முழு மனிதர் ஆக முடியும். அதுவரை ஆணும் அரை மனிதர்தான். பெண்ணும் பாதி ஆள்தான்.

இளைஞனையும் யுவதியையும் மாப்பிள்ளை பெண்ணாக மாற்றி விடுகிறது திருமணம். வாழ்க்கை என்னும் அற்புதத்தை நடத்தும் நாயகர்களாகவே அவர்களை உயர்த்திவிடுகிறது திருமணம்.

அன்பு, ஒழுங்கு, மரியாதை, வீரம், தியாகம் முதலிய பண்புகள் ஊறும் ஒளி ஊற்றுகளாக ஆணையும் பெண்ணையும் ஆக்கி விடுகிறது திருமணம்.

மனிதர்களுக்கு ஒரு தெய்வ ஒளி கிடைக்கிறது என்றால் அது திருமணந்தான்.

மணமும் ருசியும் நிறைந்த வாழ்க்கை என்னும் அற்புதத்தையே மனிதர்களுக்கு அள்ளிக் கொடுக்கிறது

திருமணம். திருமணம் செய்து கொண்டவர்கள் அவதார மூர்த்திகள்தான். புத்தம் புதிய பிறவியே அவர்களுக்குக் கிடைத்து விடுகிறது.

திருமண வாழ்க்கையை நம்மவர்கள் 'குடிப்பிறப்பு' என்று அருமையாய்ச் சொல்லி இருக்கிறார்கள்.

மனிதர்களையும் வாழ்க்கையையும் வயிரம்போல் ஜொலிக்க வைக்கும் திருமண விழாவை ஒதுக்கி வைத்து விட்டு சரித்திரம் எழுதுவதற்கு வேறு என்ன இருக்கிறது.

கல்யாண வீடு என்றால் அது கோலாகலமாக இருக்கும். உற்றார்களும், உறவினர்களும், நண்பர்களும் நாலா திசைகளிலிருந்தும் கல்யாண வீட்டை நோக்கி வருவார்கள். வீடு முழுவதையும் வெள்ளையடித்து வர்ணக் குழம்புகளால் தீட்டி விடுவார்கள். அங்கங்கே பெரிய காவிப்பட்டைகளை போடுவார்கள். முற்றம் முழுவதையும் - தெருவையே வளைத்து பிரம்மாண்டமான கொட்டகை போடுவார்கள். சமையல் புரை சாப்பாட்டுப் புரை, வரவேற்புக் கூடம், மணவறை என்றெல்லாம் வகுத்து வைப்பார்கள்.

வர்ணப்பட்டைகளுடன் கோலம் போட்டி போடும். வண்ண விளக்குகளும், குலை வாழையும், கமுகம் பைளையும், பூ ஆரங்களும் எங்கு பார்த்தாலும் நிறைந்து ஒளிவீசும்.

குழை வைத்துக் கட்டிய கம்புகளில் வர்ணப்பட்டை. அடித்து கால்களாக அங்கங்கே ஊன்றுவார்கள்.

தேவதைகள் நடமாடும் கோயில் போலவே காட்சி கொடுக்கும் கல்யாணவீடு.

கல்யாண வீட்டுக்குப் போவது அங்குள்ள காட்சிகளை அனுபவிப்பது என்றால் ஆண்களுக்கு ஒரே உற்சாகம். பெண்களின் உற்சாகத்தில் ஆனந்த வெறியே இருக்கும். குழந்தைகளைப் பற்றிச் சொல்லவே வேண்டாம்.

மாப்பிள்ளை, பெண், மணவறை, திருமண நிகழ்ச்சி, கூட்டம், வரவேற்பு, உபசரிப்பு அத்தனையும்

கண்களுக்கு விருந்தாக இருக்கும். மனசுக்கும் விருந்தாக இருக்கும்.

மனதை விட்டு இந்தக் காட்சிகள் ஒருபோதும் விலகா.

கல்யாணத்தில் எத்தனையோ வகைகள் உண்டு. 'உறவுமுறை விட்டுப் போகக்கூடாதே' என்று நடக்கிற கல்யாணமும் உண்டு. 'இரு இரு' உன்னை ஒரு கை பார்க்கிறேன் என்று வஞ்சம் தீர்க்க நடத்துகிற கல்யாணமும் உண்டு.

எப்படி இருந்தாலும் சரி, திருமணம் ஆபரணத்துக்குப் பொற்சரடாய் இருப்பது காதல்தான். மாப்பிள்ளை, பெண் இவர்களுடைய ஆர்வமும் வேகமுந்தான் மூலமந்திரம்.

பெண்ணும் மாப்பிள்ளையுந்தான் மூலவர்கள். அவர்களுடைய உணர்ச்சியை நோக்கியே மற்றவர்களின் உள்ளங்கள் ஓடும்.

திருமண வைபவங்களை முன்னோர்கள் பக்தியோடு அனுபவித்திருக்கிறார்கள். வழிபடு தெய்வங்களுக்கும் திருமண விழாவைக் கோயில்களில் நடத்தி அனுபவித்து வருகிறார்கள்.

ஒரு பெண், பன்னிரண்டு வயதுகூட இருக்காது. பேதைப் பருவத்துச் சிறு பெண். தாயுடன் கோயிலுக்கு வந்தாள். உலகளந்தானாகிய நாராயண மூர்த்தியை வணங்கினாள். பெருமானின் அலங்காரத்திலும் அபிஷேகத்திலும் உள்ளம் கரைந்தாள். தீபாராதனையில் பெருமானின் கோலமும் எழிலும் கோடி சூரியப் பிரகாசமாய் ஜொலித்தது.

உட்பிரகாரங்களைச் சுற்றியபடியே ஒரு இடத்தில் வந்து தாயும் மகளும் நின்றார்கள். அங்கே பெருமாளுக்கும் தேவிக்கும் திருக்கல்யாணம் நடக்கிறது.

பெற்றோர்களுடன் கல்யாண வீடுகள் பலவற்றுக்குப் போய் வந்தவள்தான் மகள். ஆனால் இன்று பார்க்கும் தெய்வத்திருமணம் அவள் உணர்ச்சியைப் பிசைந்துவிட்டது.

வசம் அழிந்து போனாள் பெண். வீட்டுக்கு வந்ததே தெரியவில்லை. கல்யாணக்காட்சி அப்படி அப்படியே கண்முன் நடக்கிறது. பார்வையை அக்கம் பக்கம் திருப்ப முடியவில்லை.

பசிக்கவே இல்லை. சாப்பிட்ட மாதிரியே இருக்கிறது. தூக்கமும் வரமாட்டேன் என்கிறது. நீண்ட நேரம் ஆனபிறகு எப்படியோ கண்ணயர்ந்தாள்.

அப்பொழுது கனவுக்கு மேல் கனவுகள் வந்து கொண்டே இருக்கின்றன. நாராயண மூர்த்திக்கும் தனக்கும் கல்யாணம் உறுதியாகி விட்டதாக ஒரு கனவு! மாப்பிள்ளைக் கோலத்தில் அவன் தன் ஊருக்கு வருவதாக இன்னொரு கனவு. கையைப் பிடித்து, கழுத்தில் தாலி கட்டுவதெல்லாம் கனவில் வந்துவந்து போகின்றன.

காலையில் நேரம் கழித்துதான் எழுந்தாள் பெண். கண்ட கனவு ஒவ்வொன்றும் நனவாகவே இருக்கிறது பெண்ணுக்கு.

பெண்ணுக்கு ஒரே ஆனந்தம். மயக்கவெறியோடு ஆனந்தத்தைத் தோழியிடம் சொல்கிறாள் பெண்.

எப்படி என்று பாடலில் பார்க்கலாம்.

**வாரணம் ஆயிரம்**
**சூழவ லம்செய்து,**
**நாரண நம்பிந**
**டக்கின்றான் என்றெதிர்**
**பூரண பொற்குடம்**
**வைத்துப்பு ரம்எங்கும்**
**தோரணம் நாட்டக்க**
**னாக்கண்டேன் தோழிநான்!**

சீர்வரிசைகளைச் சமந்து கொண்டு பல யானைகள் எதிர் சேவை செய்து வரவேற்க, புது மாப்பிள்ளை பவனியாக வந்து இறங்குகிறான். நாராயண மூர்த்தியாகிய மாப்பிள்ளையை பூரண கும்ப மரியாதையோடு வரவேற்றார்கள். அவன் வரும் வழி எல்லாம் தோரண அலங்காரந்தான்.

மாப்பிள்ளை அழைப்பு, பெண்ணழைப்பு கல்யாணத்தில் முக்கியமான அங்கங்கள். கல்யாணத்துக்கு முதல் நாளே மாப்பிள்ளையை அலங்கரித்து ஒரு சிறுபட்டினப்பிரவேசம் நடத்துவார்கள். விளக்குகளின் ஒளி வெள்ளத்தில் மேளதாள முழக்கத்தோடு வீதி உலாவ வருவார் புது மாப்பிள்ளை.

மாப்பிள்ளையின் முகவெட்டு, பார்வை, ஒய்யாரம், தோரணை ஒவ்வொன்றையும் பார்த்துப் பார்த்து அனுபவிப்பார்கள் ஜனங்கள். அவை ஒவ்வொன்றுக்கும் புதுப்புது அர்த்தம் கொடுப்பார்கள் பெண்கள்.

சிறுமியின் கனவில் இந்தப் பட்டினப்பிரவேசமும் தெரிகிறது. தோழியிடம் அதுபற்றிச் சொல்கிறாள் பெண்.

**நாளை வதுவைம**
**ணம்என்று நாளிட்டு,**
**பாளை கமுகு**
**பரிசுடைப் பந்தர்க்கீழ்**
**கோளரி மாதவன்**
**கோவிந்தன் என்பானோர்**
**களை புகுதக்க**
**னாக்கண்டேன் தோழிநான் !**

திருமணம் நாளைக்கு என்று நிச்சயமாகிவிட்டது. புது மாப்பிள்ளை கட்டிளங்காளை போல் கம்பீரமாக நடந்து வருகிறான்.

அவனை அப்படியே பல்லக்கில் உட்கார வைத்து, அலங்கார தோரணம் கட்டிய வீதி வழியாக பட்டினப் பிரவேசம் நடத்தினார்கள்.

பல்லக்கில் சிங்கக்குட்டி உட்கார்ந்திருந்தது போல் இருந்தது மாப்பிள்ளை இருந்த தோரணை.

கல்யாணம் மனசுக்குள்ளேயே நடக்கிறது பெண்ணுக்கு. அதனால் கண்களைத் திறந்தாலும் மூடிக் கொண்டாலும் கல்யாணம் ஒன்றே தெரிகிறது.

மாப்பிள்ளை அலங்காரம் பெண்ணலங்காரம் இரண்டு கல்யாணத்தில் உயிர்.

கல்யாணத்துக்கு என்ற தனி உடை உண்டு. தனித்த ஆபரணங்களும் உண்டு.

பட்டு, தங்கம், வயிரம் முதலியவை எல்லாம் கல்யாணத்தை வைத்தே பெருமை பெறுகின்றன. சந்தனம், புஷ்பம், தேங்காய், பழம், பன்னீர், குங்குமம், மஞ்சள், வெற்றிலை, பாக்கு முதலிய பொருள்கள் கல்யாணத்தோடு உறவாடி உறவாடி மங்கலம் பெற்றுவிட்டன. புனிதப் பொருள்களாய் உயர்ந்துவிட்டன.

பெண்ணை அலங்கரிக்கத் தோழிமார் போட்டி போட்டுக் கொண்டு ஓடி வருவார்கள்.

தங்கக் கரை போட்ட பட்டுப் புடவையைப் பெண்ணுக்குக் கட்டி, உச்சி முதல் உள்ளங்கால் வரை பொன்னாபரணம் பூட்டி அலங்கரிப்பார்கள்.

வாரி முடித்த பெண்ணின் முடியில் சிங்காரச்சடை போடுவார்கள்.

மழை மேகத்தில் மல்லிகை பூத்தால் எப்படி இருக்கும், அப்படி இருக்கும் பெண்ணின் கூந்தல். புஷ்பங்களால் ஆன அலங்காரம் அப்படி இருக்கும்.

மணங்கமழும் மலர் மாலையை ஒன்றன் மேல் ஒன்றாகப் பெண்ணின் கழுத்தில் போட்டு அழகு படுத்துவார்கள்.

அந்த மாலைகள் ஆடி அசைய அசைய பார்ப்பவரின் உள்ளங்கள் எல்லாம் அசைந்து அசைந்து ஆடும்.

இத்தனை அலங்காரத்தோடு மணப்பெண் எழுந்து தலைகவிழ்ந்து நிற்பாள். மணவறையை நோக்கியே நிற்பாள்.

அப்படி நிற்பதைப் பார்த்தால் கோவிலில் எழுந்தருளிக் காட்சி கொடுக்கும் அம்மன் போலவே இருக்கும்.

பார்ப்பவர்கள் மனம் உருகிவிடும். கை எடுத்துக் கும்பிடத் தோன்றும்.

மாப்பிள்ளைக்கும் தோழர்கள் அலங்காரம் செய்வார்கள். ஆனால் பெண்ணின் அலங்காரந்தான் எல்லோரையும் பரவசப்படுத்தும்.

கல்யாணத்துக்கு முன்னாலேயே பெண்ணுக்கு அலங்காரம் செய்வது அடிக்கடி நடக்கும்; ஒத்திகை நடப்பது போலவே நடக்கும்.

மாப்பிள்ளை வீட்டார் பெண் பார்க்க வருகிறார் என்றால் இப்படி ஒரு அலங்காரம். இனி, கல்யாணத்துக்கு உறுதி பண்ண மாப்பிள்ளை வீட்டார் வருவார்கள். அப்பொழுதும் இப்படி ஒரு அலங்காரம்.

உறுதி பண்ணினதும் மாப்பிள்ளை வீட்டார் ஒரு தட்டில் வெற்றிலை, பாக்கு, பழம், தேங்காய், மஞ்சள் எல்லாம் வைத்து அதன்மேல் ஒரு பட்டுப்புடவையையும் வைப்பார்கள். பட்டுக்கு மேலே புத்தம் புதிய மணமாலையையும் பூப்பந்தையும் வைப்பார்கள்.

இரண்டு கைகளாலும் தாம்பாளத் தட்டை எடுத்து, பெண் வீட்டாரிடம் கொடுப்பார்கள்.

அந்தப்பட்டுக்கு நிச்சயதார்த்தப்பட்டு என்று பெயர். 'மந்திரக்கோடி' என்று முன்னோர்கள் சொல்லி வந்தார்கள்.

அந்தப் புடவையைப் பெண்ணுக்குக் கட்டி விடுவார்கள் தோழிமார். பிறகு பூப்பந்தை பெண்ணின் தலையில் வைத்து, மலர் மாலையைக் கழுத்தில் போட்டு விடுவார்கள்.

பெண்ணானவள் பெரியவர்களின் காலில் விழுந்து வணங்குவாள். கையால் வாய்பொத்திப் பணிவாள். பெரியவர்களின் உள்ளத்தில் பரிவும் பாசமும் பொங்கும். பக்திப் பரவசத்தோடு பெண்ணை ஆசீர்வதிப்பார்கள்.

நமது கதாநாயகிக்கு வரக்கூடிய மாப்பிள்ளை யோ ஸ்ரீமந் நாராயண மூர்த்தி. அவனுக்கு தாய் என்று யாரைச் சொல்வது? தகப்பன் என்று யாரைச் சொல்வது?

அவனுக்குப் பெண் கேட்டு வருகிறவர்களோ தேவர்கள். இந்திரன் தலைமையில் சீர்வரிசையோடு வருகிறார்கள் தேவர்கள். பெண் கேட்டு வந்த தேவர்களுடன் தெய்வலோகத்து நங்கையரும் வந்தார்கள்.

அவர்களில் ஒரு பெண்தான் நிச்சயதார்த்தப் புடைவையைப் பெண்ணுக்குக் கட்டிவிட்டாள். வாசம் மிக்க மலர் மாலையைப் பெண்ணின் கழுத்தில் சூடியதும் அவள்தான்.

அப்படி வருகிறது பெண்ணுக்குக் கனவு... இனி பாடல்:

**இந்திரன் உள்ளிட்ட**
**தேவர்கு ழாம்எல்லாம்**
**வந்திருந், தென்னை**
**மகட்பேசி மந்திரித்து,**
**மந்திரக் கோடிஉ**
**டுத்தி மணமாலை**
**அந்தரி சூட்டக்க**
**னாக்கண்டேன் தோழி நான்!**

இந்திரன் தலைமையில் தேவர்களே வந்து கல்யாணத்துக்கு உறுதி பண்ணினார்கள். தேவலோகத்து நங்கைதான் எனக்கு நிச்சயதார்த்தப் புடைவையைக் கட்டிவிட்டு மலர் மாலையைக் கழுத்தில் போட்டாள்.

கல்யாண வீட்டை அடையாளம் காட்டுவது மேளச்சத்தந்தான். நாதசுரத்திலிருந்து வருகிற தேவகானம் செவி வழியே தேனாக ஓடும். பாலாகப் பாயும். தேனும் பாலும் கலந்து மனசைத் தித்திக்க வைக்கும்.

மேள முழக்கத்தில் கல்யாண வீட்டு வேலை 'மளமள' என்று நடக்கும். பெண்களும் ஆண்களும் போட்டி போட்டுக்கொண்டு வேலை செய்வார்கள். இளைஞர்களும்

குழந்தைகளும் அங்கும் இங்குமாய் ஓடி ஆடி விளையாடுவார்கள்.

சந்தனத்தைக் கரைப்பது, பன்னீரைக் கலக்குவது, விளக்குகளைப் பொருத்துவது, மணவறை அலங்காரம், மணவறைப் பொருள்களை கொண்டு வந்து சேர்ப்பது, கோலம், தோரணம், முளை அரிசி எல்லாவற்றையும் உற்சாகத்தோடு செய்வார்கள் பெண்கள்.

முகூர்த்த நேரம் கூடி வருகிறது. மேளம் கொளுகட்டி முழங்குகிறது. மாப்பிள்ளை அலங்காரம் முடிந்துவிட்டது. கைலாகு கொடுத்து தோழர்கள் மாப்பிள்ளையை அழைத்து வருகிறார்கள்.

இளம் நங்கையர் தங்கள் இரண்டு கைகளாலும் தட்டை ஏந்தி இருக்கிறார்கள். தட்டில் முளை அரிசிக் கிண்ணங்களும், சுடர் விளக்குச் சட்டிகளும் இருந்து பிரகாசிக்கின்றன.

பெண்கள் பல்லாண்டு பாடி வரவேற்க கட்டிளங்காளை போல நடந்து வருகிறான் புது மாப்பிள்ளை.

**"கதிரொளி தீபங்க**
**லசம்உ டனேந்தி**
**சதிரிள மங்கையர்**
**தாம்வந் தெதிர்கொள"**

வடமதுரை மன்னனாகிய கோவிந்தன் மணவறையில் ஏறினான். அங்கே போட்டிருந்த மணித் தவிசுகள் இரண்டில் ஒன்றின் மேல் உட்கார்ந்தான்.

குருக்கள்மார் எதிரே இருக்கிறார்கள். அவர்கள் சில சடங்குகளை மாப்பிள்ளைக்குச் செய்தார்கள்.

அப்பொழுது பெண்ணுக்கும் அலங்காரம் முடிந்து விட்டது. தோழிமார் பெண்ணை மணவறைக்கு அழைத்து வந்தார்கள். பெண்ணுக்கும் சில சடங்குகளை குருக்கள்மார் செய்தார்கள்.

உடனே கம்பீரமாக எழுந்து நின்றான் மணமகன். மணவறையை விட்டு இறங்கினான்.

உற்றாரும் உறவினரும் நிறையப் பேர் வந்திருக்கிறார்கள். அவர்களில் வயதானவர்கள் பலர். பண்பாளர்களும், ஒழுக்க சீலர்களும், அறிஞர்களும் நிறையப் பேர் அங்கங்கே இருக்கிறார்கள்.

சிங்கக்குட்டிபோல மிடுக்கோடு அவர்கள் முன் வந்தான். பணிவோடு குனிந்தான். அவர்களுடைய திருப்பாதங்களைக் கையால் தொட்டு கண்ணில் ஒற்றி வணங்கினான்.

அவன் வணங்க வணங்க அவர்கள் ஆசிகளைப் பொழிந்தார்கள். இந்த அரிய காட்சியைப் பார்த்து விருந்தினர்கள் மனம் நெகிழ்ந்தார்கள்.

மாப்பிள்ளையின் சிறப்பையும் அந்த சிறப்புக்குள்ளே பூத்துக் குலுங்குகிற பெருந்தன்மையையும் கண்டு கண்டு களிப்புற்றார்கள்.

பெண்களின் உத்சாகத்துக்கு அளவே இல்லை. எல்லோரையும்விட பரவசத்துக்கு ஆளானவள் மணப்பெண்தான்.

தன் கைகளைப் பிடித்து தனக்கு வழிகாட்ட வந்திருக்கும் நாயகன் 'எவ்வளவு பெரியவன்? எவ்வளவு பண்பாளன்?' என்று நினைந்து நினைந்து பெருமிதப் பட்டாள் கல்யாணப்பெண்.

அப்படிப் புதுப்புது பட்டைகளோடு வருகிறது கனவு.

**கதிரொளி தீபம்க**
**லசம்உ டனேந்தி**
**சதிரிள மங்கையர்**
**தாம்வந் தெதிர்கொள,**
**மதுரையார் மன்னன்அ**
**டிநிலை தொட்டெங்கும்**
**அதிரப் புகுதக்க**
**னாக்கண்டேன் தோழிநான் !**

அகல் விளக்குகளும் முளை அரிசிக் கிண்ணங்களும் வைத்த தட்டுகளை ஏந்தியபடியே இளம் கன்னியர் மாப்பிள்ளையை வரவேற்றனர். மணமகனோ திருமணத்துக்கு வந்த பெரியவர்களை வணங்கி ஆசி பெறுகிறான்.

பெண்ணும் மாப்பிள்ளையும் சேர்ந்து மணவறையில் இருக்கிறார்கள். அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதைப் பார்ப்பதற்கு விருந்தினர்களிடம் ஒரே ஆவல்.

மற்றவர்கள் கண்டு கொள்ள முடியாதபடி மெள்ள மெள்ள பெண்ணை ஒட்டுகிறான் மாப்பிள்ளை. ஒருவரை ஒருவர் ஒட்டும் அளவுக்கு உரசி வருகிறான் பையன். பெண்ணோ குனிந்த தலை நிமிரவில்லை.

ஆனாலும் எப்படியோ ஓரம்சாரமாய் மாப்பிள்ளையை அடிக்கடி கடைக்கண்களால் பார்த்துக் கொள்கிறாள். அவள் அதரங்களின் ஓரமாய் இளம்புன் முறுவல் நெளிந்து சுழிந்து ஓடுகிறது.

விருந்தினர்களுக்கு இதைவிட வேறு என்ன வேண்டும். அவர்களுக்குப் பசி ஓடிவிடுகிறது.

**மா**ப்பிள்ளைக்கும் பெண்ணுக்கும் மாறி மாறி குருக்கள்மார் சடங்குகள் நடத்துகிறார்கள். அவர்கள் பண்ணுகிற காரியம் விநோதமாக இருக்கிறது.

தம்பதிகளை கையை விரி என்கிறார்கள். பிறகு மூடு என்கிறார்கள்.

இதை எடு என்கிறார்கள். பிறகு அதைப் போடு என்கிறார்கள்.

இப்படித் தொந்தரவு பண்ணினாலும் சிலசில காரியங்களை உபயோகமாகவும் செய்கிறார்கள் குருக்கள்மார்.

மாப்பிள்ளையைப் பெண்ணுக்கும், பெண்ணை மாப்பிள்ளைக்கும் காப்புக் கட்டச் சொல்கிறார்கள். மாலை மாற்றச் சொல்கிறார்கள். ஒருவர் கையை ஒருவர் பிடிக்கச் சொல்கிறார்கள்.

*மணவறையைச் சுற்றிவரச் சொல்கிறார்கள். ஒருவர் கையை ஒருவர் இறுகப்பற்றிக் கொள்கிறார்கள். இதைப் பார்த்த கூட்டம் ஆரவாரித்துப் பொங்குகிறது. மேள முழக்கம் விண்ணையும் மண்ணையும் தழுவி ஆலிங்கனம் பண்ணுகிறது.*

*பெண்ணின் கழுத்தில் மாப்பிள்ளை திரு நாண் பூட்டினான். கல்யாணம் ஜாம்ஜாம் என்று நடந்தது.*

*ஊஞ்சல் நலங்கு, பரதநாட்டியம், பட்டினப் பிரவேசம் எல்லாம் இனிமேல்தான். விருந்து உபசரிப்பு எல்லாம் பிரமாதம்.*

*அக்கினி சாட்சியாக மணமகளுக்குத் தாலிகட்டி அவள் கையைப் பிடித்தான் மாப்பிள்ளை.*

*பிறகு என்ன செய்தான்.*

*அம்மியின் மேல் பெண்ணின் காலை தன் கையால் பிடித்து, மெள்ள எடுத்து வைத்தான் மாப்பிள்ளை. இதை மறக்க முடியுமா பெண்ணால்.*

*கையால் காலை எடுத்து வைத்தவன் யார்? அவனுடைய கை எப்பேர்பட்ட கை?*

**இம்மைக்கும் ஏழேழ்பி**
**றவிக்கும் பற்றாவான்,**
**நம்மைஉ டையவன்**
**நாராய ணன்நம்பி;**
**செம்மைஉ டையதி**
**ருக்கையால் தாள்பற்றி**
**அம்மிமி திக்கக்க**
**னாக்கண்டேன் தோழிநான் !**

*இந்த இப்பிறவிக்கு மட்டுமல்ல, ஊழி ஊழிக்காலமாய் அத்தனை பிறவிகளுக்கும் துணையாய் நின்று நம்மைக் காத்தவன் நாராயணமூர்த்தி. அவனே என் கையைப் பிடித்தான்.*

அதுமட்டுமா, சகல நலன்களும் நிறைந்த தன் தங்கக் கரத்தால் என் காலையே பிடித்து அம்மி மேல் தூக்கி வைத்தான்.

யாருக்குக் கிடைக்கும் இந்தப் பாக்கியம்?

நாவில் வட்டம் போட்டுக் கொண்டே இருக்கும் பாடல்கள். பாடப்பாட நாவில் தேனூறும். பருகப்பருக ஆனந்தம்தான்.

## பரவசப்படுத்தும் ஆவல்

மயில் ஒரு அழகான பறவை. மயில் நடந்து போவதைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம். அவசரமாக ரயிலுக்குப் போகிறவர்கூட மயிலின் ஒய்யார நடையைப் பார்த்தால் அப்படியே நின்றுவிடுவார். ரயிலை மறந்து விடுவதும் உண்டு.

குடும்பத்தோடு கோயிலுக்குப் போகிறவர், நண்பர்களோடு உல்லாசப் பயணம் போகிறவர்கள் - ஒரு கூட்டமாக இருந்தாலும் மயிலின் உல்லாச நடையைப் பார்த்து மயங்கிவிடுவார்கள். மயங்கி அப்படியே சொக்கி நிற்பார்கள். பெரிய திருவிழாக் கூட்டத்தையே வசக்கித் தன்வயப்படுத்திவிடும் மயில்.

மயிலின் நடையில் ஒரு அடக்கம் இருக்கும். நாணம் இருக்கும். கம்பீரமும் பணிவும் சேர்ந்து பரிமளிக்கிற ஒரு சொகுசு இருக்கும்.

சின்னஞ்சிறிய கொண்டை, அதற்கேற்ற பொடிக் கழுத்து, பெட்டி போன்ற கனத்த உடம்பு, குச்சிபோன்ற கால்கள், கண்ணைக்கவரும் வண்ணத்தோகை இவ்வளவோடு மயிலானது மெள்ள மெள்ள அடி எடுத்து வைக்கும். அப்பொழுது நமது மனமும் மயிலின்

பாதங்களோடு சேர்ந்து தத்தித்தத்தி ஒதுங்கி ஒதுங்கி நடக்கும்.

மயில் நடந்து போகிற நயத்தை நம்மவர்கள் பார்த்துப் பார்த்து அநுபவித்திருக்கிறார்கள். மலர்களாலும் ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்ட இளநங்கை - கண்ணைப் பறிக்கும் அழகு மயமான கல்யாணப் பெண் மெள்ளமெள்ள நடந்து வருவதையும் அனுபவித்திருக் கிறார்கள். அனுபவமும் ஆனந்தமும் சேர்ந்து பெண்களின் வசீகரத்துக்கு மயில் போன்ற சாயல் என்று பாராட்ட வைத்திருக்கிறது.

தோட்டத்தில் அங்கங்கே தானிய மணிகள் சிதறிக் கிடக்கின்றன. ஒரு ஆண்மயில் தானிய மணிகளை இரையாகக் கொத்திக் கொத்தி உண்கின்றன. ஞாபகம் முழுவதும் தானிய மணிகளின் மேல்தான்.

அப்பொழுது ஒரு பெண் மயில் அங்கே வருகிறது. அதுவும் இரை தேடித்தான் வருகிறது. இருபது முப்பதடி தூரத்தில் நின்று இரை தேடுகிறது பெண்மயில்.

ஆண்மயில் பெண்மயிலைப் பார்க்கிறது. ஆசையோடு பார்க்கிறது. பெண்மயிலும் ஆண்மயிலைப் பார்க்கிறது. இரண்டும் ஒன்றை ஒன்று பார்ப்பதும், குனிவதும், பழையபடி பார்ப்பதுமாக இருக்கின்றன. இரண்டுக்கும் பிரியம் உண்டாகிறது. ஒன்றை ஒன்று ஆவலோடு நோக்குகின்றன. பிறகு குனிந்து இரை தேடுகின்றன.

மயில்களின் ஆசையும் வேகமும் அவற்றின் கண்களில் தெரிகின்றன. ஆடிச்சிலிர்க்கும் கொண்டையில் தெரிகின்றன. நடையிலும் தெரிகின்றன. இரையைக் கொத்துகிற பாங்கிலும் தெரிகின்றன.

ஒன்றை ஒன்று நெருங்கி வருவதிலும் தெரிகின்றன. திரும்பிப் பின்வாங்குவதிலும் தெரிகின்றன.

எவ்வளவுதான் நிச்சயமாகத் தெரிந்தாலும் அவசரப்பட்டு ஒன்றை ஒன்று கட்டிப்பிடிக்காது. கழுத்தை நெரிக்காது. மல்லுக்கட்டவும் செய்யாது.

பெண் மயில் தன்னை அங்கீகரித்துவிட்டது என்று தெரிந்த பிறகும் கூசிக்கூசியே அதனிடம் நெருங்கும். தோகையை மெள்ள மெள்ள விரிக்கும். நவரத்ன கசிதமான தோகையை ஒய்யாரமாக விரித்து பெண் மயிலின் கண்குளிர நடனம் ஆடும்.

சீருக்குச்சீர், வரிக்குவரி பொருளுணர்ந்து அபிநயம் பிடிப்பதுபோல பெண்மயிலின் உள்ளம் குளிர நடனம் ஆடிக் கெஞ்சும் ஆண்மயில்.

நடனத்தில் மயங்கும் பெண்மயில் ஆண்மயிலை நோக்கி ஒரு எட்டு இரண்டு எட்டு எடுத்து வைக்கும். அவ்வளவுதான், ஆண்மயிலின் ஆட்டத்தில் சூடுபிடிக்கும். பெண்மயிலை நெருங்கிவந்து மனம் கரைந்து ஆடும்.

பம்பரம் போல அது சுற்றிச்சுற்றி ஆடும்பொழுது அதன் தோகை அப்படியும் இப்படியுமாகப் பெண்மயிலின் மேனியில் பட்டு உரசும். கொஞ்சம் வெட்கப்பட்டு பெண் மயில் திரும்பும். அப்பொழுது பயந்தது போல ஆண் மயிலும் விலகும்.

வெட்கமும் பயமும் நிலைத்து நிற்பதில்லை. ஒன்றை ஒன்று ஆசையோடு பார்க்கும். நெருங்கும். உறவு வைத்துக் கொள்ளும். கொஞ்சுவது குலாவுவது எல்லாம் அப்புறந்தான்.

காதல் என்பது பார்ப்பதற்கு ஏதோ சாதாரண காரியம் போலத் தோன்றும். ஆனால் அதில் இறங்கிப் பார்த்தால்தான் ஆழம் இன்னதென்று தெரியும். அருமை இன்னதென்று தெரியும்.

கூச்சம், பயம், கலக்கம், சோர்வு, மயக்கம், ஆற்றாமை, வேகம், தவிப்பு, எல்லாம் காதலில் புரண்டு புரண்டு வரும். கொந்தளிக்கும் கடலில் ஒன்றை ஒன்று கட்டிப்பிடித்து அலைகள் புரள்வது போல காதலில் பயம் முதலிய உணர்ச்சிகள் உருண்டு புரளும்.

**ப**தினைந்து அல்லது பதினாறு வயதுள்ள பெண். தினந்தோறும் ஒரு குறிப்பிட்ட இடம் வந்து நிற்பாள். நகரப் பேருந்து வரும். உடனே அதில் ஏறிப் போவாள்.

அலுவலகம் ஒன்றில் வேலை பார்க்கலாம். அல்லது கல்வி நிலையத்தில் படித்துக் கொண்டிருக்கலாம்.

தற்செயலாக வாலிபன் ஒருவன் அந்தப்பக்கம் ஒருநாள் வந்தான். பெண்ணைப் பார்த்தான். அவளும் அவனை இரண்டு மூன்று தடவை விட்டுவிட்டுப் பார்க்கத் தான் செய்தாள்.

பையனுக்கு அவள் மேல் ஆசை உண்டாகி விட்டது. பேயாய்ப் பிடித்து ஆட்ட ஆரம்பித்துவிட்டது ஆசை. தினந்தோறும் அந்த இடத்துக்கு அவள் வருவதற்கு முன்பே அவன் வந்து விடுவான். புதிதுபுதிதாக அலங்காரம் பண்ணிக் கொண்டுவர ஆரம்பித்தான்.

பைத்தியம் பிடித்ததுபோல அவளையே மாறிமாறிப் பார்ப்பான். முன்னால் போவான், பின்னால் வருவான். சிரிப்பான். சிரிப்புவராது. ஏதோ ஒன்று சொல்ல நினைப்பான்; விசாரிக்கக்கூட திட்டம் போட்டு வருவான். ஆனால் வாய்கூடத் திறக்காது. அவள் கார் ஏறிப்போகும் வரை இந்தத் தடுமாற்றம். அதன் பிறகு அந்த இடத்தை விட்டுப் போவான்.

கொஞ்சநாள் கழித்து மாலையிலும் அவள் திரும்பி வருவதற்குள் வந்து காத்துக் கிடக்க ஆரம்பித்து விட்டான்.

காரை விட்டு இறங்கி அவள் வீடு போகும் வரை அவளையே பார்ப்பான். சில நாள் சில அடிதூரம் அவள் பின்னால் போய்க் கூடத் திரும்பி இருக்கிறான்.

அதற்குமேல் அவளை அவனால் பின் தொடர முடியவில்லை.

அவளும் சும்மா இருக்கவில்லை. ஓரம் சாரமாக இவனைப் பார்ப்பாள். காரில் ஏறின பிறகும் ஒருமுறை இவனைப் பார்த்துவிட்டுத்தான் போவாள்.

ஒருவர் மேல் ஒருவருக்கு ஆசை இருந்தது. பரிவு இருந்தது. ஆர்வம் பொங்கித் தவியாய்த் தவித்தது. ஆனாலும் ஒருவர் முன் ஒருவர் வந்து நேருக்கு நேராக நிற்க முடியவில்லை. "என்னுடைய விருப்பம் இது. உன்னுடைய விருப்பம் என்ன" என்று கேட்க முடியவில்லை.

காதல் என்றால் அப்படித்தான். அதற்கு வேறுமாற்றே கிடையாது.

நீயாராக இரு என்று டெலிபோனில் காதலிக்கு உத்தரவு போடுவது. காரைக் கொண்டு போய் அவளை ஏற்றி வைப்பது. ஒருவர் உடலை ஒருவர் சுற்றி வளைத்தபடியே உணவு விடுதிக்குப் போவது. சினிமாக் கொட்டகைக்குள் நுழைவது. கட்டிப்பிடிப்பது, புல்வெளியில் உருள்வது. குஷ்தி பயில்வான்கள் போல உடைதரித்துக்கொண்டு ஒருவரை ஒருவர் மோதுவது.

இதுதான் காதல் என்று படம் எடுத்து சினிமாக் காரர்கள் காட்டுவார்கள். மக்களும் ஆவலோடு போய் இந்தக் காட்சிகளைப் பார்த்து ரசிப்பார்கள்.

இப்படிக் காட்சிகளைப் பார்க்காவிட்டால் பொழுதே போகாது. ஆண்களுக்கு மட்டும் அல்ல. பெண்களுக்கும் அப்படித்தான்.

இந்த விஷயத்தில் வயதானவர் - இளைஞர் என்று வேறுபாடு இல்லை. எல்லோரும் ஒன்றுதான்.

அதாவது வெளிப்படையான உறவுகளைப் பார்த்துப் பொழுது போக்குவதோடு சரி. வாழ்க்கையில் காதல் ஒன்று வந்தால், பிரசங்கம் பண்ணுவது, தோள் மேல் கை போடுவது, தூக்கி ஊஞ்சலாட்டுவது எல்லாம் ஒளிந்து கொள்கின்றன.

ஏக்கம், தவிப்பு, ஆற்றாமை, இரக்கம், வேட்கை இவையே பொங்கிப் பூரிக்கின்றன.

அரும்பு மொட்டாகி, மொட்டு பூவாகப் பூத்து மணம் பரப்புவது வரை காதலர்கள் என்ன பாடுபடுகிறார்கள். அந்த வேதனையிலும் மயக்கத்திலும் தான் காதல் மணம், ருசி எல்லாம் வெளிப்படுகின்றன.

பச்சை, சிவப்பு, நீலம், மஞ்சள் என்று புதுப்புது ஒளிகளில் உணர்ச்சி மயமாகக் காதல் ஜொலிக்க வேண்டும். பயம் இருக்க வேண்டும். மரியாதை இருக்க வேண்டும்.

கத்திரிக்காய் வாழைக்காய் மாதிரி விலைபேசி வாங்கக்கூடிய சரக்கல்ல காதல்.

வாழ்க்கையை நன்றாகப் பார்த்து அனுபவித்தவர்கள் நம்முன்னோர்கள்.

வாழ்க்கையின் நாடி நரம்பு முழுவதும் பரந்து நிறைந்து நிற்கிறது காதல். அதைக் கண்ணாரக் கண்டு அனுபவித்திருக்கிறார்கள் முன்னோர்கள்.

ஆற்றாமை, சோர்வு, கலக்கம், இப்படி எத்தனையோ துறைகளை வகுத்து காதலின் வேகத்தையும் நயத்தையும் கையில் எடுத்துக் காட்டுவது போல் பாடல்கள் மூலம் காட்டுகிறார்கள்.

நாச்சியார் என்று போற்றப்படும் ஆண்டாள் ஆயிரம் வருஷங்களுக்குமுன் ஸ்ரீவில்லிபுத்தூரில் பிறந்தவர். எல்லாம் கடவுள்மயம். கடவுளைத் தவிர வேறு ஒன்றும் இல்லை என்னும் உண்மையை தெளிவாய்க் கண்ட ஞானி அந்த அம்மையார்.

உண்மைத் தெளிவாய்த் தெரியத் தெரிய பக்தி உண்டாகிவிட்டது. உண்மையினிடத்துக் காதலே உண்டாகி விட்டது.

கருணாகரமூர்த்தியாகிய திருமாலை விட்டுத் தனியாக இருப்பதாகவும், துணை இல்லாமல் அநாதையாக இருப்பதாகவும் ஆண்டாள் உணர்ந்தார்.

உடனே அவனோடு சேர்ந்துவிடவேண்டும், சேர்ந்து அவனுடைய எல்லையற்ற அருளையும் அழகையும் பருகிப்பருகித் திளைக்கவேண்டும் என்று துடித்தார்.

அதற்காக உடல், பொருள், உயிர் எல்லா வற்றையும் அவனுக்குத் தத்தம் பண்ணிவிட ஆத்திரப்பட்டார்.

ஆண்டாளின் இந்த வேட்கையானது பாடல்களாய் அவதாரம் எடுத்து வருகிறது.

எப்படி என்று பார்ப்போம்.

வஞ்சனையால் ஏவிவிடப்பட்ட யானையின் கொம்புகளை ஒடித்து மண்ணோடு மண்ணாய் உருட்டி விட்டான் திருமால். பிறகு, மதி மிதி என்று மிதித்து யானையைக் கொன்றுவிட்டான்.

திருமாலின் கைகளில் சங்கும் சக்கரமும் எப்பொழுதும் இருக்கும். சங்கை அடிக்கடி வாயில் வைத்து ஊதுவான். அப்பொழுது ஐந்து சுரங்கள் ஒன்று சேர்ந்து பூம்பூம் என்று முழங்கும். அதனால் பாஞ்சசன்யம் என்று சங்குக்குப் பெயர்.

தேன் கசியும் திருமாலின் அதரங்களில் தோய்ந்து தோய்ந்து ஊறி வருகிற அமுதத்தை சதா பருகிக் களிக்கிறது சங்கு. பவளம் போன்ற சிவந்த இதழ்களின் நறுமணத்தை எப்பொழுதும் அனுபவித்துத் திளைக்கின்றது சங்கு.

அந்தப் பாக்கியம் தனக்குக் கிட்டவில்லையே என்று ஏங்குகிறாள் ஆண்டாள்.

ஏக்கத்தைச் சங்கினிடமே சொல்லித் தீர்க்கிறாள். ருசியும் மணமும் எப்படி இருக்கும்? சொல்லமாட்டாயா சங்கே! என்று கெஞ்சுகிறாள்.

**கருப்பூரம் நாறுமோ ?**
**கமலப்பூ நாறுமோ ?**
**திருப்பவளச் செவ்வாய்தான்**
**தித்தித்(து) இருக்குமோ ?**
**மருப்பொசித்த மாதவன்தன்**
**வாய்ச்சுவையும் வாசமும்**
**விருப்புற்றுக் கேட்கின்றேன்**
**சொல்ஆழி வெண்சங்கே !**

ஒருபொருள் நமக்கு உகந்ததாக இருந்தால் அதனோடு ஒட்டிய எல்லா அம்சங்களும் நமக்கு உகந்ததாக இருக்கும். அழகாகவும் இருக்கும்.

நமக்கு வேண்டியவர் ஒருவர். அப்படியானால் அவருடைய மேசை, நாற்காலி, பேனா, வீடு, ஜன்னல், நாய், கார் எல்லாமே நமக்கு இனிமையாக இருக்கும்.

நாம் ஒருவரை உயிருக்கு உயிராக மதிக்கிறோம். ஆனால், நம்மை அவர் அவ்வளவாக அங்கீகரித்ததாகத்

கருப்பூரம் நாறுமோ - கர்ப்பூரவாசனை கமழுமா? கமலம் - தாமரை. மருப்புஒசித்த - தந்தத்தை முறித்த. விருப்புற்று - ஆசையோடு. ஆழிவெண்சங்கே - கடலில் பிறந்த சங்கே சொல்.

தெரியவில்லை. அப்படியானால் நமக்கு அது ஒரு பாரமாகவே இருக்கும். நாம் யாரை மதிக்கிறோமோ அவர் மேலே நமக்கு எரிச்சல் உண்டாகும். அவரோடு ஒட்டிய பொருள்களிடத்து ஆங்காரமே உண்டாகிவிடும்.

காதல் துறை இன்னும் ஒருபடிமேலே போகும்.

எதிர்பார்த்தபடி காதலின் அருள் காதலிக்குக் கிடைக்க வில்லை. அப்பொழுது பெண்ணை வாட்டி வதைக்கும் அந்தக் காதல். காதலன் மேல் எரிச்சல் உண்டாகும். ஆனால் அந்த எரிச்சல் நிலைத்து நிற்காது. அவன் அருளைப் பெற நாம் தவம் செய்யவில்லை என்னும் சோர்வு கலந்த ஆற்றாமைக்கு ஆளாவாள் பெண்.

காதலுடன் தொடர்புடைய பொருள்களிடத்து, காதலனின் அருளுக்குப் பாத்திரமான பொருள்களிடத்து வெறுப்பு உண்டாகும். அந்த வெறுப்பும் நிலைத்து நிற்காது. "அவை புண்ணியம் செய்தவை. அவற்றுக்குக் கொடுத்து வைத்துள்ளன. நமக்கு அந்தப் புண்ணியம் இல்லை" என்னும் ஆற்றாமைக்கு ஆளாவாள் பெண்.

அந்த ஆற்றாமையே பொறாமையாக எழுந்து நிற்கும்.

பொறாமையை அப்பட்டமாகக் காட்டாமல் நயமாகக் காட்டுவாள் பெண்.

சங்கினிடம் அப்படி நயமாக விசாரித்து தன்னுடைய ஆற்றாமையையும் பொறாமையையும் கொட்டுகிறாள் பெண்.

"உனக்குத் தானே தெரியும் அவனுடைய இதழின் மணமும் ருசியும். அதை வெளியில் சொன்னால் குடி முழுகியா போய்விடும்?" என்று ஒட்டி நின்று பேசுகிறாள் பெண்.

மேலும் என்னென்ன சொல்கிறாள் சங்கிடம் என்று பார்ப்போம்.

வடமதுரை மன்னனாகிய வேசுதேவனின் கையில் ஒய்யாரமாக ஏறி வீற்றிருக்கிறாய் நீ. அவனுடைய

*திருக்கரங்கள் தாம் உன்னுடைய கொலுமண்டபம். அரண்மனை.*

*மழைக்காலத்தில் மேகக்கூட்டங்களுக்கு ஊடே நுழைந்து நுழைந்து பூரண சந்திரன் வெளிப்பட்டால் எப்படி இருக்கும்? அப்படி அல்லவா அவன் கையில் நீ அமர்ந்திருக்கிறாய்!*

*நீலமேக சாமள வண்ணன் அவன். மேகக்கூட்டங்களால் சூழப்பட்ட கருநீலமலை போல விளங்குகிறான் அவன்.*

*நீயோ தூயவெள்ளை நிறம்.*

*என்ன பொருத்தம், நீயும் அவனும் சேர்ந்திருப்பது? அடடா! உன்னுடைய தடபுடலும் தோரணையும் தனிதான்.*

*இனிப் பாடல்:*

**தடவரையின் மீதே**
**சரற்கால சந்திரன்**
**இடைஉவா வில்வந்து**
**எழுந்தாலே போல்நீயும்**
**வடமதுரை யார் மன்னன்**
**வாசுதே வன்கையில்**
**குடிஏறி வீற்றிருந்தாய்**
**கோலப் பெருஞ்சங்கே !**

*நாம் என்ன சொன்னாலும் - போற்றினாலும் சரி தூற்றினாலும் சரி கேட்பதற்கு சங்கிடம் செவி இல்லை. பதில் சொல்வதற்கு நாவும் அதனிடம் இல்லை. வார்த்தையும் சங்கிடம் இல்லைதான்.*

*இது பெண்ணுக்கு நன்றாகத் தெரியும். ஆனாலும் காதலின் வேகம் பைத்தியம் ஆக்கிவிடுகிறது. வசமழிந்து போன நிலையில் சங்கிடம் பேசவைக்கும். ஏன் பதில் சொல்லமாட்டேன் என்கிறாய் என்று கேட்கவும் வைக்கும். கெஞ்சவும் வைக்கும். கெஞ்சித் தடுமாறவும் வைக்கும்.*

*காதல் வெறி புதுப்புது வர்ணங்களில் ஜொலிப்பதை மேலும் பார்க்கலாம்.*

*பேரண்டம் முழுவதுக்கும் மன்னாதி மன்னனாக இருக்கின்றான் மதுசூதனாகிய கண்ணன். அவன் இதழ்களில் ஊறும் தேனை சதா பருகித் திளைக்கும் சங்கே! உன்னுடைய யோகந்தான் யோகம்!*

*"கடலில் உன்னுடன் பிறந்த சங்குகள் லட்சோப லட்சம். அத்தனை சங்குகளிலும் உன்னைத் தவிர வேறு ஒன்றுக்கும் இந்த யோகம் கிடைக்கவில்லை.*

*அந்த சங்குகளைப் பற்றி யார் நினைக்கிறார்கள்?"*

**உன்னோா(டு) உடனே**
**ஒரு கடலின் வாழ்வாரை**
**இன்னார் இனியார்என்(று)**
**எண்ணுவார் இல்லைகாண்;**
**மன்ஆகி நின்ற**
**மதுசூதன் வாய்அமுதம்**
**பன்னாளும் உண்கின்ற**
**பாஞ்ச சன்னியமே!**

## சக்கரவர்த்திச் சங்கு!

*வாய்க்கு வந்தபடி பொறுப்பில்லாமல் பேசி விட்டோமே சங்கை, என்று கொஞ்சம் பதறிவிட்டாள் பெண்.*

*தன்னைப் பற்றி பெருமானிடம் அப்படி இப்படி என்று புகார் சொல்லிவிடக்கூடாதே இந்தச் சங்கு என்று கலங்குகிறாள் பெண்.*

*அதனால் சங்கைக் கொஞ்சம் தாஜாப்பண்ணி சமாளிக்கிறாள். சங்கின் கையைப் பிடிக்கிறாள். அதன் கன்னத்தில் கையை வைத்துத் தடவியபடியே ஆசையோடு பார்க்கிறாள்.*

*சங்குகளுக்கெல்லாம் சக்கவர்த்தி அல்லவா நீ என்று அர்ச்சனையே பண்ணிவிடுகிறாள் பெண்.*

*செந்தாமரை மலரில் வெள்ளிக் குடம் போன்ற அன்னப்பட்சி ஏறிநின்றால் எப்படி இருக்கும். அப்படி இருக்கும் கண்ணனின் செக்கச் சிவந்த கைகளில் அமர்ந்திருக்கும் வெண்சங்கே! உன்னுடைய தோற்றம்.*

*உனக்கென்ன குறை? சங்கரையா! நீ குடி இருக்கும் இடமே லோக நாயகனின் திருக்கரங்கள்தாம்.*

*அதுமட்டுமா? நீ, படுத்து உறங்கும் பள்ளி அறையே அவன் கைத்தலந்தான்!*

**உன்யோகம் யாருக்கு வரும்?**
**செங்கமல நாள்மலர் மேல்**
**தேன்நுகரும் அன்னம்போல்**
**செங்கண் கருமேனி**
**வாசுதேவன் உடைய**
**அங்கைத் தலம்ஏறி**
**அன்ன வசம் செய்யும்**
**சங்கரையா உன் செல்வம்**
**சால அழகியதே!**

*'உன் பாக்கியமே பாக்கியம்' என்று போற்றுகிறாள்.*

*ஆனாலும் உள்ளுக்குள் புகைந்து கொண்டுதான் இருக்கிறது, பொறாமை. அதன் அனலும் காற்றும் ஊடுருவி வந்து அடிக்கத்தான் செய்கிறது.*

**ஊதஊத புதுப்புது ஒலிகளை எழுப்பும் சங்கே!**
**உனக்கு ஆகாரமே அவனுடைய வாயின் ஊறல்தான்!**

*அவன் கையில் நீ தூங்குகிறாய். எல்லாமே உனக்கு அவன்தான். உலகம் முழுவதையும் ஒரு அடியில் அளந்து தீர்த்த அவன் அன்புக்குப் பாத்திரமான பெண்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள்? அத்தனை பேரையும் ஒதுக்கித் தள்ளிவிட்டாய் நீ. ஒருவரும் அவன் பக்கம் வந்து எட்டி பார்க்கக்கூட முடியாது. அப்படி நீயே அவனை அபகரித்துக் கொண்டாய்,*

*"இது உனக்கு அழகாக இருக்கிறதா? பெண்கள் கூட்டம் கூட்டமாய்த் திரண்டு உன்னுடைய அடாவடித் தனத்தை கண்டிக்கிறார்கள். உன் கொட்டத்தை அடக்க வேண்டும்" என்று துடிக்கிறார்கள்.*

**உண்பது சொல்லில்**
**உலகளந்தான் வாயமுதம்**
**கண்படை கொள்ளல்**
**கடல்வண்ணன் கைத்தலத்தே**

**பெண்படையார் உன்மேல்**
**பெரும்பூசல் சாற்றுகின்றார்**
**பண்பல செய்கின்ற**
**பாஞ்ச சன்னியமே !**

*பொறாமையும் ஆத்திரமும் ஆரம்பத்தில் பம்மித்தான் வரும். மறைந்து மறைந்து தான் வெளிப்படும். வாய்ப்புக் கிடைத்ததும் ஒரே பாய்ச்சலில் பாயும். புலி பாய்வது போலவே பாய்ந்துவிடும்.*

*சங்கினிடத்தில் பெண்ணுக்கு ஒரே வெறுப்பு. "தனக்கு அருள்புரிய வேண்டிய தன் நாயகனை வளைத்துக் கைக்குள் போட்டுக் கொண்டதே இந்தச் சங்கு" என்று சங்கின்மேல் ஒரே ஆங்காரம்.*

*ஏமாற்றி, தெருவில் விடப்பட்ட அநாதையாகத் தன்னை நினைக்கிறாள் பெண். போக்கிரித்தனத்தின் மொத்த உருவமாகத் தெரிகிறது சங்கு.*

*சங்கின் குரல்வளையை நெரித்து விடுவோமா என்றுகூடக் கோபம் வருகிறது பெண்ணுக்கு. "அப்பளத்தை நொறுக்குவது போல கசக்கி நொறுக்கி விடுவோமோ சங்கை" என்று கூட வந்து வந்து போகிறது நினைப்பு.*

*ஆனால் முடிகிற காரியமா இவை எல்லாம். ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு அதனிடம் பேச்சுக் கொடுத்து அதன் மனச்சாட்சியை தூண்டிவிடலாம் என்று முயற்சி செய்தாள் பெண். அதுவும் பிரயோசனப் படவில்லை.*

*சங்கின் ஏகபோகக் கொள்ளையைத் தொட்டுக் காட்டி அதைத் திக்குமுக்காடச் செய்து விடலாம் என்றும் பார்த்தாள். அசைந்து கொடுக்கவில்லை சங்கு.*

*நேருக்கு நேராக நின்று சங்கின் தோலை உரித்து அதன் கையில் கொடுத்து விடவேண்டும். அதாவது சங்கின் திருட்டுத்தனத்தை அப்படியே அதனிடம் வெட்ட வெளிச்சமாக எடுத்துக்காட்டிவிட வேண்டும். அப்பொழுது தான் அதற்குப் புத்திவரும் என்று துணிந்து விட்டாள் பெண்.*

*துணிச்சலில் வெட்டொன்று துண்டிரண்டு என்று வந்து விழுகின்றன வார்த்தைகள்.*

*சங்கே உனக்கு மட்டும் கண்ணன் சொந்தம் இல்லை. அவனுக்கு தேவிமார்களே ஆயிரக்கணக்கில் இருக்கிறார்கள். அத்தனை பேரையும் தந்திரமாக நீ ஒதுக்கி வைத்துவிட்டு, அவனை வசப்படுத்திக் கொண்டு, நீ மட்டும் அவனை அனுபவிக்கிறாய்.*

*அத்தனை பேருக்கும் பொதுவான அந்த ஆனந்தத் தேனை நீ மட்டும் அனுபவிக்கிறாய். கிடைத்த கள்ளை குடிகாரன் விடாமல் மண்டுவது போல மண்டித் தீர்க்கிறாய் நீ.*

*அத்தனை பேரும் சேர்ந்து உன்னைச் சின்னாபின்னம் ஆக்கினால் உன் கதி என்ன?*

*உன்னுடைய திமிர், மப்பு எல்லாம் தூள்தூள் ஆகிவிடும். சங்கே ஜாக்கிரதை!*

**பதினாறாம் ஆயிரவர்**
**தேவிமார் பார்த்திருப்ப,**
**மதுவாயில்க் கொண்டாற்போல்**
**மாதவன்தன் வாயமுதம்**
**பொதுவாக உண்பதனைப்**
**போக்கிநீ உண்டக்கால்,**
**சிதையாரோ உன்னைத்தான்**
**செல்வப்பெ ருஞ்சங்கே!**

*காதல் என்பது மேடை ஏறாது. பிரசங்கம் பண்ணாது. நாலு பேர் கைதட்ட வேண்டுமே என்று குரலை ஏற்றவும் ஏற்றாது. இறக்கவும் இறக்காது.*

*மனதின் உள்ளுக்குள்ளேயே சுழன்று சுழன்று வட்டம் போடும் காதல். உணர்ச்சியைப் பிசைந்து பிசைந்து உருக்கிவிடும் காதல்.*

*அன்புத் தீயில் உணர்ச்சியைப் போட்டுப் போட்டு சொக்கத் தங்கமாக ஜொலிக்க வைக்கும் காதல்.*

அப்பொழுது கோடி சூரியப் பிரகாசமாக ஜொலிக்கும் ஒவ்வொரு உணர்ச்சியும் - காதலால் உருக்கிக் கரைக்கப்பட்ட ஒவ்வொரு உணர்ச்சியும் அடக்கமாகவே இருக்கும். மௌனமாகவே இருக்கும்.

ஆனால் அதற்கு வெறிவந்து விட்டால், அந்த வெறி பேச ஆரம்பித்து விட்டால் - அதன் முழக்கம் விண்ணுக்கும் மண்ணுக்கும் எதிரொலிக்கும். எட்டுத் திசைகளையும் உலுக்கிக் குலுக்கும்.

ஒவ்வொருவர் மனக்கதவுகளையும் தடார், தடார் என்று அது தட்டும்.

நம் இதயக்கதவுகளை எப்படித் தட்டுகிறது காதல் என்பதை பாடல்களில் நாம் பார்க்கிறோம்.

# கூடலுக்குள்ளேயே ஓர் ஊடல்

ஆசை என்று ஒன்று இருக்கிறது. அது மனிதர்களை ஆட்டிப் படைக்கிறது. ஆணோ, பெண்ணோ ஒருவரையும் அதுவிட்டு வைப்பதில்லை. ஒவ்வொருவரையும் அது பம்பரமாக ஆட்டும்.

ஒரு பொருளின் மேல் ஆசை உண்டாகிறது. அது உடனே கிடைத்துவிட்டால் பிரச்சனை இல்லை.

பிரச்சனை இல்லாவிட்டால் உணர்ச்சியும் இல்லைதான். உயிரும் இல்லைதான். உப்போ உறைப்போ இல்லாமல் சப்பென்று போய்விடும் வாழ்க்கை.

'ஆசைப்பட்டது கிடைக்காது. நிச்சயமாகக் கிடைக்காது' என்றாலும் பிரச்சனை இல்லை. 'கிடைக்கும். ஆனால் கிடைக்க மாட்டேன் என்கிறது' என்று வரும்பொழுது பிரச்சனை. அப்பொழுதுதான் சந்தேகம் உண்டாகிறது.

முடிவு ஏற்படாமல் இப்படி ஒரு இழுபறி நிலை உண்டாகிறபொழுது ஆசைக்குத் தீவிரம் உண்டாகும். அது மோகமாக எழுந்து நிற்கும். வெறியாகவே ஆவேச மடைந்துவிடும்.

பயம் ஒரு பக்கம் வெறி ஒரு பக்கம் ஆக இரண்டு பக்கமும் பிசையப் பிசையக் குழப்பம் உண்டாகும். தைர்யம் எவ்வளவு இருந்தாலும் புத்தி தடுமாறிவிடும்.

ஆசை நிறைவேறுமா, நிறைவேறாதா என்கிற கலக்கத்தில் மனிதர்கள் சோதிடம் பார்பார்கள். ரேகை சாஸ்திரம் பார்ப்பவர்களைத் தேடி அலைவார்கள். யாராவது குறி சொல்கிறவர்கள் வரமாட்டார்களா என்று எதிர்பார்த்து நிற்பார்கள்.

சோதிடம், ரேகை பார்ப்பவர், குறிசொல்கிறவர் இவர்களை நம்புவதோடு நிற்க மாட்டார்கள். தங்களுக்குள்ளேயே ஒரு ஆரூடத்தை உண்டாக்கி அதை வைத்தும் பலனைக் கணித்துப் பார்ப்பார்கள்.

புத்தகத்தைப் பிரித்துப் பார்ப்பார்கள். பிரித்த பக்கத்தில் விஷயம் நன்றாக இருந்தால் காரியம் கைகூடும் என்று திருப்திப்படுவார்கள். பிரித்த பக்கத்தில் விஷயம் ஒரு மாதிரியாக இருந்தால் காரியம் கைகூடாதே என்று பதறுவார்கள்.

**ம**னசுக்கு உகந்த காரியத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும் பொழுதோ, நினைக்கும்பொழுதோ, மணி அடித்தால் போதும், காரியம் நிறைவேறியது போல மகிழ்ச்சி வரும். அந்தநேரம் விளக்கைப் பொருத்தினாலும் வெளிச்சம் வந்தாலும் ஒரே உற்சாகம் உண்டாகும். பேசிக் கொண்டிருக்கும்போது விளக்கு அணைந்துவிட்டால் போதும் ஒரே கலக்கந்தான்.

தும்மல் வந்தால் போதும், அந்தத் தும்மலில் ஒற்றையா இரட்டையா பார்ப்பார்கள். தும்மல் ஒற்றைப்படையில் நின்றால் நழுவிவிடுமே காரியம் என்று பயம். இரட்டையில் நின்றால் 'வெற்றி நமதே' என்று ஒரு மகிழ்ச்சி.

குறிப்பிட்ட காரியம் பற்றி நினைக்கிற பொழுதோ, மற்றவர்களிடம் சொல்கிற பொழுதோ, மனம் சும்மா இருக்காது. வழியில் போகிறவர்கள் வருகிறவர்கள் பேசுவதையும் மனம் கவனிக்கும். அவர்கள் பேச்சில் மங்களம் இருந்தால் திருப்தி. அமங்கலம் இருந்தால்

சஞ்சலம். இப்படியாகத் தடுமாறித் தடுமாறித் தத்தளிக்கும் மனம்.

காரியம் கைகூடுகிற வரைக்கும் மனம் அதை நோக்கியே ஓடும். மறப்பதற்கு எத்தனையோ தந்திரம் பண்ணிப் பார்க்கும் மனம். ஆனாலும் மறக்க முடியாது. அந்த நினைப்பே சுற்றிச் சுற்றி வரும்.

நினைப்பு வந்தால் சும்மா இருக்குமா? அது சம்பந்தமான பாரத்தை வார்த்தைகளாக இறக்கி வைக்கத் திணறும். மனதுக்கு உகந்தவர்களிடம் நினைப்பிலுள்ள காரியத்தைப் பற்றி மெள்ளப் பேச்சுக் கொடுக்கும். பேச்சானது நேரடியாக விஷயத்தைத் தொடாதபடி ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளும். சுற்றி வளைத்து, பட்டும் படாமலும் விஷயத்தைக் காட்டும். ஜாடைமாடை யாகவே காட்டும்.

இப்படியாக நினைப்பு வருகிறபொழுதும், பேச்சுக் கொடுக்கிற பொழுதும், பல்லியின் சத்தங் கேட்டால் போதும். கவுளி அடிக்கிறது. காரியம் வெற்றிதான் என்று நிம்மதி வரும். ஆந்தை சத்தம் போட்டது என்றால் பயம் வரும். அபசகுனம் என்று கலக்கம் அடைவார்கள்.

இவ்வளவும் ஆசை காரணமாக வருகிற உணர்ச்சிகள். சோர்வு, பயம், கலக்கம் எல்லாம் ஆசையிலிருந்தே பிறக்கின்றன. தைர்யம், மகிழ்ச்சி இவையும் ஆசையிலிருந்தே பிறக்கின்றன.

**சா**தாரண காரியங்களில் வைத்த ஆசையே மனிதர்களை இந்தப் பாடு படுத்துகிறது என்றால், காதல் வசப்பட்டவர்களின் நிலை எப்படி இருக்கும்? காதல் கைகூடும் வரை அவர்கள் அலைமோதித் தவிப்பார்கள். அப்படியும் இப்படியுமாய்த் தத்தளிப்பார்கள். ஒரு பெண்ணுக்கு ஒரு இளைஞன் மேல் மோகம் உண்டாகிவிட்டது. அவனோடு சேர்ந்து வாழ்வதுதான் அவளுக்குக் குறி.

நினைத்தபடி காரியம் முடியமாட்டேன் என்கிறது. நாளும் பொழுதும் போய்க்கொண்டே இருக்கிறது. ஒன்றும் ஓடவில்லை பெண்ணுக்கு. தவியாய்த் தவிக்கிறாள்.

குறிகேட்டுப் பார்க்கிறாள். ரேகை சாஸ்திரம் பார்க்கிறாள். சிறுபிள்ளைகளைக் கூப்பிட்டு பக்கத்தில் வைத்துக்கொண்டு பத்துக்குக் கீழே ஒரு எண் சொல்ல வேண்டுகிறாள். நான்கு, ஆறு, எட்டு, இரண்டு என்று இரட்டைப் படையில் சொன்னால் மகிழ்கிறாள். ஒன்று, மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது என்று ஒற்றைப்படையில் சொன்னால் பதறுகிறாள்.

மான், மயில், தென்றல், கிளி இவைகளிடம் எல்லாம் தன் கஷ்டத்தைச் சொல்லி, நீங்களாவது உதவக்கூடாதா என்று மயங்குகிறாள். உற்ற தோழியிடம் கூட மெள்ள மெள்ள விஷயத்தைச் சொல்லி விடுகிறாள். அவள்மூலம் உதவி கிடைத்தாலும் சரிதான் என்று நினைக்கிறாள்.

ஒருவரும் இல்லாமல் தனியே இருக்கும்பொழுது கண்ணை மூடிக்கொண்டு ஒரு கோட்டை இழுக்கிறாள். சுற்றி சுற்றிக்கொண்டு போகிறாள் கோட்டை. அது சரியாகச் சேர்ந்தால் தெளிகிறாள். கோணல் மாணலாய்ப் போய்விட்டால் குழம்புகிறாள்.

கொட்டிக் கிடக்கிறது மணல். அதை ஒரு குவியலாகச் சேர்த்து வைக்கிறாள். கண்ணை மூடிக்கொண்டு ஆள்காட்டி விரலால் ஒரு வட்டம் போடுகிறாள். விரலை எடுக்காமல் அப்படியே சுழிசுழியாக வட்டம் போட்டுக்கொண்டே போகிறாள். பிறகு கண்ணைத் திறந்து பார்க்கிறாள். முதலில் போட்ட வட்டத்தோடு கடைசியில் போட்ட வட்டம் வந்து ஒட்டிக் கொண்டால் காரியம் கைகூடிவிட்டது போல் ஒரு எக்களிப்பு. கூடாவிட்டாலோ இனம் தெரியாத ஒரு பயம். மணலில் வட்டம் போட்டுப் பார்ப்பதற்கு கூடலிழைத்தல் என்று பெயர்.

காரியத்தின் மேல் இருக்கும் ஆத்திரம் சகுனத்தின் மேல் வந்து உட்கார்ந்துவிடும். அதனால் குறிகேட்பது முதலிய செயல்களில் ஆர்வம் உண்டானாலும், அந்தச் சகுனம் பொருந்தாமல் வந்தால் என்ன செய்வது என்கிற பயமும் உண்டாகிவிடும்.

அதனால் குறி முதலியன கேட்க பயப்படுகிறவர்களும் உண்டு. துணிந்து கேட்பவர்களும் இடை இடையே தயங்குவார்கள். சிலர் பாதியோடு நிறுத்தி விடுவார்கள்.

ஆண்டாளுக்கு கண்ணபிரான் மேல் ஒரே மோகம். வெறியாகவே போய்விட்டது ஆசை. அவன்தான் நாயகன். அவன்தான் உயிர். அவன்தான் வாழ்க்கை. அவனில்லாமல் எதுவும் இல்லை. இப்படி ஆகிவிட்டாள் ஆண்டாள்.

கண்ணபிரான் பற்றிய வரலாறு அவ்வளவும் ஆண்டாளுக்கு நன்றாகத் தெரியும். அந்த வரலாற்றின் ஒவ்வொரு அம்சமும் ஆண்டாளை உருக்கிக் கொண்டே இருக்கின்றன.

கண்ணபிரானுடைய இருப்பிடம், அவன் நடமாடும் இடம், அவன் பழகும் இடம் எல்லாம் ஆண்டாளுக்கு அத்துபடி.

கண்ணனையே எண்ணி எண்ணி உருகும் ஆண்டாள், கூடல் இழைத்துப் பார்ப்போம் என்று மணலைச் சேர்த்துக் குவிக்கிறாள். கண்ணை மூடிக்கொண்டு ஆள்காட்டி விரலால் வட்டம் போடுகிறாள். ஒன்று, இரண்டு, மூன்று என்று வட்டம் போட்ட படியே விரலை இழுத்துக் கொண்டு போகிறாள்.

திடீரென்று நிறுத்துகிறாள். முதல் வட்டத்தோடு கடைசி வட்டம் சேராவிட்டால் கண்ணன் வரமாட்டானே என்று பயப்படுகிறாள். அதனால் அந்த வட்டத்திடமே - வட்டம் ஒன்று கூடும் கூடலிடமே கெஞ்சி வேண்டுகிறாள்.

எப்படி என்று பாடலில் பார்ப்போம்.

"திருவேங்கடம் என்னும் திருப்பதியிலும் திருக்கண்ணபுரத்திலும் கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கிறான் பெருமான். காடு, மலை, வயல் எங்கும் ஊடுருவி கோவில் அமைத்து கம்பீரமாக வீற்றிருக்கிறான், அந்தக் கண்ணனாகிய வாமனன். அவன் துள்ளிக்குதித்து என்னிடம் வரவேண்டும். என்னைத் தன்னுடன் அழைத்துப் போக வேண்டும்.

அதற்கு உதவிசெய்ய வேண்டும் கூடலே! வட்டங்கள் கூடிப்பரிமளிக்க உதவவேண்டும் கூடலே” என்று கெஞ்சுகிறாள்.

மூடிய கண்ணைத் திறக்காமல், வைத்த விரலை எடுக்காமலே அப்படி உருகி நைகிறாள் பெண்.

**காட்டில் வேங்கடம்**
**கண்ண புரநகர்,**
**வாட்டம் இன்றி**
**மகிழ்ந்துறை வாமனன்;**
**ஓட்ட ராவந்தென்**
**கைப்பற்றித் தன்னொடும்**
**கூட்டும் அகில்நீ**
**கூடிடு கூடலே!**

அடிக்கடி கோவிலுக்குப் போய் வந்திருக்கிறாள் பெண். பிரகாரம் சுற்றி வந்திருக்கிறாள். கர்ப்பக் கிரகமும் வந்திருக்கிறாள். இறைவனின் அபிஷேகங்களை அனுபவித்திருக்கிறாள். அலங்காரத்தில் லயித்திருக்கிறாள். ஆராதனையில் உருகி இருக்கிறாள்.

இந்த அலங்கார புருஷனே தன் நாயகன் என்று தன்னை அர்ப்பணித்து விட்டாள். குழந்தைப் பருவத்திலேயே அர்ப்பணிப்பு நடந்து விட்டது.

மனம் ஒப்பிச் செய்த காரியத்தை எப்படி மறைக்க முடியும்? திருவேங்கடம், திருக்கண்ணபுரம் ஒவ்வொன்றாக உருண்டோடி வருகின்றன நினைப்பில்.

காதலனாகிய கண்ணனை மிக்க பெருமிதத்தோடு பார்க்கிறாள் பெண். எப்படி? பேரண்டம் முழுவதும் அவனுடைய சொந்தச் சொத்து. ஆனாலும்

அதுவேண்டும், இது வேண்டும் என்று எதன்மேலும் அவன் ஆசைப்பட மாட்டான். எல்லாவற்றையும் ஒன்றாகப் பார்க்கும் கருணாகர மூர்த்தி அவன். பற்றற்ற பரம்பொருள் அவன்.

ஆனாலும் அவனை ஒருவராலும் ஏமாற்ற முடியாது. நடந்து போகும்போது சாய்ந்து மேல் விழுந்து கொன்றுவிட மருதமரத்தின் மூலம் திட்டம் தீட்டியிருந்தது. என்ன ஆனது திட்டம்?

மருதமரம் விழுந்து நொறுங்கியது. கண்ணனுக்கு ஒரு பழுதும் ஏற்படவில்லை. அப்படி ஒரு உல்லாச நடை நடந்து காட்டினான் கண்ணன்.

கம்சனுடைய வஞ்சனையும் திட்டங்களும் பொடிப் பொடியாய் உதிர்ந்து விட்டன.

வஞ்சனையோடு வஞ்சனையாய் ஒழிந்து தொலைந்தான் கம்சன்.

வடமதுரையில் அவதரித்து தருமத்துக்கு உயிர் கொடுத்தான் கண்ணன்.

அந்தப் புண்ணியமூர்த்தி என்னை நாடி வரவேண்டும். அதற்கு உதவ வேண்டும் நீ என்று கூடலை வேண்டுகிறாள் பெண்.

**அற்ற வன், மரு**
**தம்முறி ய நடை**
**கற்ற வன், கம்சன்**
**வஞ்சனை இற்றுக**
**செற்ற வன், திக**
**ழும்மது ரைப்பதி**
**கொற்ற வன்வரில்**
**கூடிடு கூடலே!**

மணலில் நின்ற இடத்திலேயே நிற்கிறது விரல். கண்ணும் திறக்கவில்லை. ஆனாலும் கண்ணனைப் பற்றிய நினைப்புகள் குறுக்கும் நெடுக்குமாய் ஓடிப்பாய்கின்றன.

அவனுடைய திருமேனி, புன்முறுவல், வீரம், கருணை, ஆர்வம் எல்லாம் பெண்ணின் மனக்கண்முன் நின்று தாண்டவம் ஆடுகின்றன. வட மதுரையிலிருந்து துவாரகை போய்ப் பார்க்கிறது பெண்ணின் மனம்.

உண்மையான ஆர்வமும் ஈடுபாடும் உள்ளவர்களிடந்தான் கண்ணன் உறவாடுவான். ராஜாதி ராஜன் தான். ஆனாலும் பசுவையும் கன்றையும் மேய்ப்பதிலும் அவைகளுடன் விளையாடுவதிலும் அவனுக்கு ஒரே கொண்டாட்டம்.

அந்தக் கண்ணன் வரவேண்டும். நீ மனது வைத்தால் போதும் கூடலே!

**ஆவல் அன்புடை**
**யார்தம் மனத்தன்றி**
**மேவலன்; விரை**
**சூழ்துவ ராபதிக்**
**காவலன்; கன்று**
**மேய்த்துவி ளையாடும்**
**கோவ லன்வரில்**
**கூடிடு கூடலே!**

அழகு என்றால் கண்ணனிடம் உள்ள அழகுதான் அழகு. கண்ணுக்கு விருந்து என்றால் அது கண்ணனுடைய அழகுதான். பார்த்துப் பார்த்துப் புளகாங்கிதம் அடையும் கண்கள். அது மட்டுமா?

அந்த அழகு வெள்ளம் பாய்வதுபோல் உள்ளத்துள் பாய்ந்து உணர்ச்சி முழுவதையும் உருக்கி

விடும். பொறாமை, கோபம், வஞ்சனை, பயம், கவலை முதலிய உணர்ச்சிகளைக்கூட உருக்கிக் கல்கண்டாய் இனிக்க வைத்துவிடும் அந்த அழகு.

ஆயர்பாடியில் கோபிகைமார் ஆயிரம் ஆயிரமாய் இருந்தார்கள். அத்தனை பேருடனும் சேர்ந்து விளையாடுவான் கண்ணன். அத்தனை பேருக்கும் அவன்தான் உயிர். அவனைப் பார்க்காவிட்டால் அவர்களுக்கு மூச்சே நின்றுவிடும்.

நீர் அருந்த தடாகத்துள் காலை எடுத்து வைத்தது யானை. கஜேந்திரன் என்கிற கொம்பன்தான் அந்த யானை. ஆனாலும் முதலையின் பிடியிலிருந்து மீள முடியவில்லை. பலம் கொண்ட மட்டும் முண்டிப் பார்த்தது. வேறு வழி இல்லை என்று ஆனவுடன் 'தெய்வமே' என்று கூப்பாடு போட்டது யானை.

அத்தனை நேரமும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவருக்கு 'அலறல்' சுருக்கென்று பட்டது. ஒரே தாவில் வந்தார். முதலை துண்டு துண்டாய் தடாகத்தில் மிதந்தது. யானையோ ஆனந்தத்தோடு கரையில் அடிமேல் அடி எடுத்து வைத்தது.

விளையாட்டும் கும்மாளியும் ஒரு பக்கம் இருந்தாலும், தஞ்சம் என்றவர்களைத் தாங்குவதில் கண்ணாயிருப்பான்.

பக்தர்களிடம் ஓடி வருவான். முதுகைத் தட்டிக் கொடுப்பான். இடுப்பில் கைபோட்டு அணைத்துக் கொள்வான். ஆனாலும் மனம் வாக்கு ஒன்றுக்கும் எட்டாத பரம்பொருள் அவன். வேதங்கள் சுட்டிக்காட்டும் மெய்ப் பொருள் அவன்.

*அந்தக் கண்ணன் என்னை வந்து கூட வேண்டும் கூடலே! நீதான் கண்பார்க்க வேண்டும்.*

**பழகு நான்மறை**
**யின்பொரு ளாய், மதம்**
**ஒழுகு(ம்) வாரணம்**
**உய்ய அளித்த எம்**
**அழக னார், அணி**
**ஆய்ச்சியர் சிந்தையுள்**
**குழக னார்வரில்**
**கூடிடு கூடலே!**

*ஆசையைத் தூண்டிவிட்ட ஒருபொருள் கிடைத்து விட்டால் அதோடு முடிந்தது காரியம். ஆனால் எளிதில் கிடைத்துவிடுவதில்லை. கைக்கு எட்டுவது போல் அது பக்கத்தில் வரும். கையை நீட்டினால் துள்ளி விலகும். போய்த் தொலைகிறது என்று இந்தப் பக்கம் திரும்பினால் எதிரேவந்து நிற்கும். அந்தப்பக்கம் திரும்பினாலும் எதிரில் வந்து நிற்கும்.*

*கண்ணை மூடிக்கொண்டு கையையும் கட்டிக் கொண்டு சும்மா இருந்தாலும் விட்டு வைக்காது. உடம்போடு உடம்பை வைத்து உரசிக் கொண்டு கைப்பிடி தூரத்தில் நின்று ஒரு சிமிட்டுச் சிமிட்டும்.*

*இப்படியாக உணர்ச்சியைக் கிளறிவிட்டு ஆவேசத்தை முறுக்கேற்றி விடுகிறது ஆசை.*

*காதல் வெறிக்கு ஆளான உள்ளங்கள் தவியாய்த் தவிக்கும். ஆண்களாவது கண்ட இடத்தில் கண்டபடி பேசி ஆத்திரத்தையும் வேகத்தையும் தணித்துக் கொள்ளலாம். ஆனால் பெண்கள் காரியம் அப்படி இல்லையே.*

ஆசையின் வசப்பட்டு அல்லல்படுகிற மனதின் அரிய பெரிய உண்மையைத் தமிழ் ஆர்வத்தோடு பார்க்கிறது. பார்த்துப் பார்த்து ஆனந்தத்தில் கரைகிறது.

அனுபவமும் ஆனந்தமும் துள்ளி எழுந்து கையையும் காலையும் வீசி அபிநயம் பிடிப்பதைப் பாடல்கள் காட்டுகின்றன. இசையிலும் தாளத்திலும் நின்று நடனம் ஆடிக் காட்டுகின்றன பாடல்கள்.

கூடலிழைத்தல் என்பதை ஒரு துறையாக வைத்து நெடுகிலும் அதை அனுபவித்து வந்திருக்கிறார்கள் தமிழ்க் கவிஞர்கள்.

முத்தொள்ளாயிரம் என்னும் மிகப் பழமையான நூலிலும் கூடலிழைத்தல் என்னும் துறை அருமையாய் வந்து பேசுகிறது.

எப்படி என்று பார்ப்போம்.

எதிர்பாராதவிதமாக பாண்டியனை ஒரு நாள் சந்தித்து விட்டாள் இளநங்கை. பாண்டியன் மேல் ஆசை உண்டாகிவிட்டது. பாண்டியனும் பெண்ணை ஆசையோடு பார்த்தான். பிறகு போய்விட்டான்.

பெண்ணின் ஆசை காதலாய் வளர்ந்தது. அடக்க முடியாத காதல் வெறியாகவே நிமிர்ந்து நின்றது.

அரசர்க்கு அரசனாகிய அவன் நமக்கு எப்படிக் கிடைப்பான் என்னும் எண்ணமும் வரத்தான் செய்யும். ஆனாலும் ஆசை அடங்கவில்லை.

தோழியையே தூதனுப்பும் அளவுக்கு வளர்ந்து விட்டது ஆசை. தூதுபோன தோழி பாண்டியனை அழைத்து வருவாளா? அவளால் அழைத்து வர முடியுமா அரசர் பெருமானை? என்றெல்லாம் கவலை வருகிறது பெண்ணுக்கு.

*மணலில் வட்டம் போட்டுப் பார்க்கிறாள் பெண். இரண்டு மூன்று வட்டங்கள்தான் போட்டிருப்பாள். அதற்கு மேல் விரலை நகர்த்த முடியவில்லை. ஏன்? வட்டம் ஒன்று சேராவிட்டால் அவன் வரமாட்டானே என்று பயம் வந்துவிடுகிறது.*

*இனிப்பாடலை முழு உருவில் பார்ப்போம்.*

**கூடல்ப் பெருமானைக்**
**கூடலார் கோமானைக்**
**கூடப் பெறுவேனேல்**
**கூடென்று – கூடல்**
**இழைப்பாள்போல் காட்டி,**
**இழையா(து) இருக்கும்;**
**பிழைப்பில் பிழைபாக்(கு)**
**அறிந்து!**

*முத்தொள்ளாயிரப் பாடலையும் ஆண்டாளின் பாடல்களையும் மாறி மாறிப் பார்க்க வேண்டும். பார்க்கப் பார்க்க ரசம் ஊறும். தமிழின் வல்லமை இன்னதென்று தெரியும்.*

# காதலில் கனியும் பக்தி

பாட்டு என்றால் அதில் ஏதாவது ஒரு விஷயம் இருக்கும். வார்த்தைகள் இருக்கும். ஓசையும் இருக்கும். தாளமும் இருக்கும். உணர்ச்சியும் இருக்கவே செய்யும்.

இவை இல்லை என்றால் பாட்டும் இல்லைதான்.

ஆனால் பாட்டை அனுபவிக்கிறோம் என்று சொல்கிறபொழுது விஷயம், வார்த்தை, தாளம், உணர்ச்சி எல்லாவற்றையும் கடந்து போய் கவிஞரின் கையைப் பிடிப்பதுதான்.

கவிஞரின் கையைப் பிடித்தபடியே அவருடைய முகத்தைப் பார்ப்பதுதான்.

பார்க்கப் பார்க்க கவிஞரின் அனுபவம் நம் கண்முன் வந்து நிற்கும்.

அனுபவத்தை வெளியிட அவர் உள்ளம் துடித்து ஆவேசப்படுவதும் அப்படியே கண்முன் வந்து நிற்கும்.

விஷயம், வார்த்தை, தாளம், உணர்ச்சி ஆகிய இவற்றைப் பார்க்க வேண்டாம் என்று தடுக்கவில்லை.

மேலே சொன்ன நான்கும் இல்லாமல் செய்யுளே இருக்க முடியாது.

அப்படியானால் இவற்றைப் பார்க்க வேண்டாம் என்று சொல்ல முடியுமா?

யாரும் அப்படிச் சொல்ல மாட்டார்கள்.

மேலே குறிப்பிட்ட அம்சங்களைப் பார்க்கிறோம். பார்த்துக் கொண்டு அங்கேயே நின்றுவிடக் கூடாது.

இந்த நான்குமே கவி என்று ஏமாந்துவிடக் கூடாது.

விஷயம், வார்த்தை, தாளம், உணர்ச்சி இந்த நான்குக்கும் பின்னால் ஒன்றிருக்கிறது. அதுதான் உண்மை.

அணுவிலிருந்து அண்டம், பேரண்டம் வரை பிரபஞ்சம் முழுவதும் உண்மை ஒன்றுதான் நிறைந்திருக்கிறது! அது அற்புதமாய் இருக்கிறது.

ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு விதத் தோற்றத்தில் நின்று அந்த உண்மை செயல்படுகிறது.

கவிஞரோ, பக்தரோ இந்த உண்மையை - (அற்புதத்தை) பார்க்கிறார்.

உண்மையை எதிலிருந்தும் பார்க்கலாம். புல்லின் மூலமும் பார்க்கலாம். மலையின் மூலமும் பார்க்கலாம். காதலிலும் பார்க்கலாம், வீரத்திலும் பார்க்கலாம்.

ஒரு லோபியினுடைய கொடுமை, வஞ்சகம், வறட்சி இவ்வளவிலும் பார்க்கலாம்.

உண்மையைப் பார்த்துவிட்டால் போதும். பிறகு அதையே மாறி மாறிப் பார்க்கத் தூண்டும்.

பார்க்கப் பார்க்க அதிசயமாக இருக்கும் உண்மை. ஆனந்தமாகவும் இருக்கும் அந்த உண்மை.

உண்மையைக் கண்டவர்கள், 'பார்த்து விட்டோம், கதை அவ்வளவுதான்' என்று ஓடிப்போய்விட முடியாது. ரயிலை விட்டு இறங்கி நகர்வதைப் போல உண்மையைவிட்டு அக்கம் பக்கம் நகர முடியாது.

பார்த்தவர்களை மேலும் மேலும் பார்க்க வைத்துக் கொண்டே இருக்கும் உண்மை. பார்த்தவர்களை உண்ணவும் விடாது, உறங்கவும் விடாது.

பார்த்துப் பார்த்து அதிசயிப்பதில் வெறியே உண்டாகும்.

மாறி மாறி உண்மையைப் பக்தர்கள் பார்க்கிறார்கள். கவிஞர்களும் பார்க்கிறார்கள். அப்படிப் பார்க்கிறவர்களின் உணர்ச்சியைப் பிடித்துப் பிசையும். பிசையப் பிசைய உணர்ச்சியானது கனிந்து கனிந்து உருகும்.

உண்மையானது தன்னைக் கண்டவர்களைப் பம்பரம் ஆட்டுவது போல ஆட்டும்.

குயவன் மண்ணை மிதிப்பான், குழைப்பான், பிசைவான், அடிப்பான், உருட்டுவான். அப்படி எல்லாம் செய்தால்தான் பாத்திரங்களாய் உருவெடுப்பதற்கு ஏற்ற பக்குவம் மண்ணுக்கு வரும்.

குயவன் செய்வது போலவே உண்மையும் பக்தர்களை - அவர்களுடைய உணர்ச்சிகளை பிசைந்து பிசைந்து இளக்கும்.

மேலும் மேலும் அந்த உண்மையைக் கண்டு தெளிய, அந்த உண்மையோடு ஒன்றுபட பக்தர்கள் தவிப்பார்கள்.

உடல், பொருள், ஆவி எல்லாவற்றையும், அறியாமை, ஆணவம், மயக்கம் முதலிய தங்கள் உடைமைகளை எல்லாம் அந்த உண்மைக்கு அர்ப்பணம் பண்ணி, அந்த உண்மையோடு உண்மையாய் மருவுவதற்குத் துடிப்பார்கள்.

அப்படியானால் கவிக்குப் பின்னால் - கவியில் உள்ள விஷயம், சொல், தாளம், உணர்ச்சி இவைகளுக்குப் பின்னால் - ஒன்றிருக்கிறது.

அதைப் பார்க்க வேண்டும். கவிஞரின் கையை இறுக்கிப் பிடித்துக் கொண்டே அவருடைய தவிப்பு, மயக்கம், எக்களிப்பு, உல்லாசம், சோர்வு, கலக்கம், தெளிவு, கம்பீரம் ஆகியவற்றைப் பார்க்க வேண்டும்.

இவைகளைப் பார்ப்பதுதான் லட்சியம்.

எல்லாப் பாடல்களிலும் மேலே சொன்ன தவிப்பு, ஏக்கம், உல்லாசம் முதலிய பண்புகள் இருக்கும் என்று சொல்ல முடியாது.

இவை இல்லாமலே ஒரு விஷயம் அதற்குரிய சொற்கள், தாளம், ஒரு உணர்ச்சி இவற்றை வைத்துக் கொண்டே யாப்பிலக்கணப்படி செய்யுள்கள் முளைத்து விடும்.

அப்படி முளைக்கும் பாடல்கள் காடாய் மண்டிக் கிடக்கும்.

உண்மை உணர்ச்சியோடு வருகிற கவிகள் அரிய ரத்தினம் போன்றவை.

அவை ஒன்று போதும். அதைப் பார்க்கப் பார்க்க பரவசம் உண்டாகும்.

இதயத்தின் அழுக்கெல்லாம் கரைந்து விடும். சீக்கிரம் குணமாகிவிடும். தேகத்தில் ரத்தம் ஊறுவது போல இதயத்தில் அன்பு, ஊறம், பக்தி முதலிய பண்புகள் ஊறிக் கொண்டே இருக்கும்.

மாணிக்க வாசகர் பாடலையோ, முத்தொள்ளா யிரப் பாடலையோ அனுபவிக்கிறோம்.

வார்த்தை, தாளம் இவற்றுக்குப் பின்னால் கிடக்கிற உண்மை உணர்ச்சியைப் பார்க்கிறோம்.

பார்த்துப் பரவசப்படுகிறோம் என்பதுதான் லட்சியமாக இருக்க வேண்டும்.

பின்னால் நிற்கும் உண்மை உணர்ச்சியைக் காட்ட வந்த கருவிகள் தாம் வார்த்தை, தாளம், விஷயம் எல்லாம். உண்மை உணர்ச்சி அதில் இல்லை என்றால், பாடல் வெறும் சக்கைதான்.

**சூ**டிக்கொடுத்த நாச்சியார் என்று போற்றப்படும் ஆண்டாள் உண்மையைக் கண்டவர், அதன் அற்புதத்தைப் பார்த்துப் பார்த்து உருகியவர். எல்லாம் இறைவ (கண்ண)னுடைய செயல் என்று தெளிந்த மாத்திரத்தில் அப்படியே தன்னைக் கண்ணனிடம் அர்ப்பணித்து

*விடுகிறார். நினைத்த மாத்திரத்தில் நினைத்தபடி நடக்கக் கூடிய காரியமா இது. அதற்கு அவகாசம் தேவைதான்.*

*ஆண்டாளால் அவகாசத்தைத் தாங்க முடியவில்லை. தவிக்கிறார், உருகுகிறார், மயங்குகிறார்.*

*ஆண்டாளின் தவிப்பையும், மயக்கத்தையும், உருக்கத்தையும் நாம் பார்க்க வேண்டும்.*

*"எவ்வளவு ஈடுபாடு கொண்டிருக்கிறேன் நான். அணுவளவுகூட என் விருப்பத்தை கண்டு கொள்ள மாட்டேன் என்கிறானே கண்ணன். இது நியாயமா?*

*மாவலியை (மூன்றடி மண் கேட்டு) ஏமாற்றின மாதிரி ஏமாற்றி விட்டானே?*

*அவன் கொலுவீற்றிருக்கும் திருவேங்கட மலைக்குத் தானே நீங்கள் போகிறீர்கள். அங்கு போய்த்தானே மழையைக் கொட்டப் போகிறீர்கள்.*

*மேகங்களே! நீங்கள் அங்கே எழுந்தருளி இருக்கும் நாயகனிடம் என் பரிதாபத்தைச் சொல்ல வேண்டும். சொல்ல மாட்டீர்களா நீங்கள்!" என்று கெஞ்சுகிறாள்.*

*ஆசை காரணமாக உடம்பே ஓய்ந்து விட்டதாம்.*

*ஒருவகைப் பூச்சியால் சத்து முழுவதையும் இழந்த விளாம்பழம் போல ஓய்ந்து போனாளாம்.*

**சலங்கொண்டு கிளர்ந்தெழுந்த**
**தண்முகில்காள்! மாவலியை**
**நிலங்கொண்டான் வேங்கடத்தே**
**நிரந்தேறிப் பொழிவீர்காள்!**
**உலங்குண்ட விளங்கனிபோல்**
**உள்மெலி யப்புகுந்தென்**
**நலங்கொண்ட நாரணற்கென்**
**நடலைநோய் செப்புமினோ!**

சும்மா இருந்த ஆண்டாளிடம் கண்ணனே வலிய வந்து வசம் பண்ணினானாம். மோகம் பற்றி வெறி உண்டாகும்படி பசப்பிவிட்டானாம். இவ்வளவும் செய்துவிட்டு பாராமுகமாக இருக்கிறானாம்.

அவன் ஞாபகம் ஒன்றே அரித்துத் தின்கிறது. அதனால் சாப்பிடவும் முடியவில்லை தூங்கவும் முடியவில்லை.

இப்படி மயங்குகிறாள். பாடலின் மூலம் அந்த மயக்கமும் ஏக்கமும் மிக்க பிரகாசமாய் ஜொலிக்கின்றன.

ஆண்டாளின் உணர்ச்சியே சொற்களாகவும், விஷயமாகவும், தாளமாகவும் உருவெடுத்து வருகின்றன. அதனால் சதாபாடிக் கொண்டே இருக்கும்படி செய்து விடும் பாட்டு.

ஒரு தடவை படித்துவிட்டோம் அல்லவா என்று நிறுத்திவிட முடியாது. வளைத்து வளைத்துப் பாட வைக்கும். பாடப்பாட நாவில் தேனூற வைக்கும்.

அப்படி ஒரு சக்தி இருக்கிறது ஆண்டாள் பாடலில்.

ஒரு பெண், பதினைந்து அல்லது பதினாறு வயதுதான் இருக்கும். ஒரு இளைஞனோடு பழக நேர்ந்தது. ஒருவர் மேல் ஒருவர் உயிரையே வைத்துவிட்டார்கள்.

இளைஞனுடைய ஞாபகந்தான் எப்பொழுதும் பெண்ணுக்கு. அவனை பார்க்காமல் இருக்க முடியாது. அவனுடன் உரையாடாமலும் இருக்க முடியாது.

இப்படியாக ஆசை வளர்ந்து வளர்ந்து, அவன் ஒருவன்தான், அவனைத் தவிர வேறு ஒன்றும் தேவை இல்லை என்னும் முடிவுக்கே வந்து விட்டாள் பெண்.

இப்படியாகத் தன்னை அவனிடம் ஒப்படைத்து ஏங்குகிறாள் பெண்.

ஆனாலும் காரியம் அப்படி எளிதில் நிறைவேறி விடவா செய்கிறது? இடையூறுகள் மலைமலையாய் வந்து தடுக்கின்றன.

அவ்வளவையும் சமாளித்து விடுகிறாள் பெண்.

பெற்றோர், தோழிமார், உற்றார், உறவினர், உடன் பிறப்புகள், நகை, பட்டு, வளர்த்த கிளி எல்லாவற்றையும் உதறி எறிந்துவிட்டு அவனுடன் வந்துவிடத் துடிக்கிறாள்.

பெண்ணின் ஆவலுக்கும் வேகத்துக்கும் இளைஞனுடைய காரியம் ஒத்து வரவில்லை.

"பார்ப்போம், செய்வோம், இருக்கட்டும்" என்று காலம் கடத்துகிறான்.

அப்படியானால் பெண்ணின் இதயம் இடியத் தானே செய்யும். இடிந்து அலறத்தானே செய்யும்.

அப்படி ஒரு ஆவேசத்தையும், ஊக்கத்தையும், வேகத்தையும், துணிச்சலையும் கொடுத்துவிடுகிறது காதல். குலுங்கிக் குலுங்கி அழுது புலம்பவும் வைத்து விடுகிறது காதல்.

"இதோ வந்துவிட்டேன். புறப்படுங்கள். எங்கு வேண்டுமானாலும் போவோம்" என்று துணிந்து நிற்கிறாள் பெண்.

இளைஞன்தான் கொஞ்சம் யோசிக்கிறான்.

அவனிடம் துணிச்சல் வரும்வரை இவளுக்குக் கலக்கந்தான், புலப்பந்தான்.

"காதலானது மனிதர்களை என்ன பாடுபடுத்துகிறது? அடடா, வீரம், சோகம், தெளிவு, மயக்கம் முதலிய உணர்ச்சிகளுக்கெல்லாம் தாயகமாக அல்லவா இருக்கிறது காதல்" என்று நம்மவர்கள் பார்த்து வியந்திருக்கிறார்கள்.

"நாம் வாழும் இந்தப் பூவுலகில் காதலைப் போல எதுவும் இல்லை. காதலைப் போல தெளிவும் உறுதியும் சோர்வும் கலக்கமும் உடையது ஒன்றும் இல்லை."

இப்படி ஒரு தீர்மானமே ஏற்பட்டு விட்டது. அதனால்தான் பக்தர்கள் எல்லோரும் தங்களுடைய அனுபவங்களை காதல் துறையில் வைத்தே சொல்கிறார்கள்.

அவர்கள் சொல்லுகிறார்களோ இல்லையோ, பக்தி முதலிய உணர்ச்சிகள் கனியக் கனிய அவை காதல் ஒலியோடுதான் பேசும்.

தன்னையே இறைவனிடம் அர்ப்பணிக்கும் பக்தருக்கு இறைவன் தானே நாயகன். இவர் அவனுக்குத்தான் ஆட்பட்டு விட்டாரே?

அந்த நிலையில், தன் உணர்ச்சியை எப்படிச் சொன்னாலும் அது காதல் மயமாகத்தான் இருக்கும்.

ஆண்டாள் பரம பக்தர், கண்ணனுக்காகவே உயிரை வைத்திருக்கிறார். உடலை வைத்திருக்கிறார். அவனுடன் கலந்து மருவிவிடத் துடிக்கிறார்.

கண்ணனைத் தவிர வேறு எதுவும் தேவை இல்லை ஆண்டாளுக்கு. இந்தத் துணிவையும் வேகத்தையும் எதை வைத்துக் காட்ட முடியும். காதல் ஒன்றில் வைத்தே காட்ட முடியும்.

ஆண்டாளும் தன் உறுதியை, ஆற்றாமையைக் காதலில் வைத்தே காட்டுகிறார்.

எப்படி என்று பார்ப்போம்.

**பா**ற்கடலைக் கடைந்து அமிர்தம் எடுத்தவன் திருமால். அவனைப் போல நீலநிறம் கொண்ட மேகங்களே! என்று அணைத்துக் கூப்பிடுகிறாள் ஆண்டாள்.

நீங்கள் திருவேங்கட மலைக்குத் தானே போகிறீர்கள். அப்படியானால் ஒரு காரியம்.

வேங்கடமலையில் அமர்ந்திருக்கும் பெரு மானிடம் சொல்லுங்கள். பெருமானின் காலைத் தொட்டு கண்ணில் வைத்து விண்ணப்பிக்கிறேன்.

மிச்சம் சொச்சம் இல்லாமல் நான் அவனுடன் கலந்துவிட வேண்டும். என்னை அவன் அங்கீகரித்து ஏற்றுக் கொண்டால்தான் எனக்கு வாழ்வு.

என்னுடைய நிலையை நீங்கள் அவனுக்கு எடுத்துச் சொல்லுங்கள்.

நீங்கள் சொன்னால் அவன் அதைத் தட்ட மாட்டான்.

**சங்கமா கடல்கடைந்தான்**
**தண்முகில்காள் வேங்கடத்துச்**
**செங்கண்மால் சேவடிக்கீழ்**
**அடிவீழ்ச்சி விண்ணப்பம்**
**கொங்கைமேல் குங்குமத்தின்**
**குழம்பழியப் புகுந்தொருநாள்**
**தங்குமேல் என்னாவி**
**தங்குமென் றுரையீரே !**

உண்ண உண்ணத் தெவிட்டாத அமிர்தமாய் இருக்கிறது பாட்டு. அப்படி இல்லாவிட்டால் அதை எப்படிக் கவி என்று சொல்வது? கலைகளுக்கெல்லாம் நாயகம் அல்லவா கவி.

இயற்கையில் எல்லாக் காரியங்களும் அதனதன் போக்கில் தானாக நடக்கின்றன. புல் முளைப்பதற்கு யாரும் உத்தரவு போடுவதில்லை. மழை பெய்ய வேண்டும் என்று ஒருவரும் கட்டளை இடுவதில்லை.

ஒவ்வொன்றும் கடமைகளை முறை தவறாமல் செய்து கொண்டிருக்கின்றன.

ஆனால் மனிதனைப் பொறுத்தவரை நிலைமை அப்படி இல்லை. எந்தக் காரியத்துக்கும் மனிதனுக்கு ஒரு துணை வேண்டி இருக்கிறது. காரியங்களை முடித்துக் கொடுப்பதற்கென்றே தரகர் என்றும் புரோக்கர் என்றும் ஒரு கூட்டம் நடமாடுகிறது.

நல்லதோ கெட்டதோ எதுவானாலும் அரசியல்வாதி சொன்னால்தான் அது என்னவென்று ஜனங்கள் கவனிக்கிறார்கள். அரசாங்கத்தின் தரகர்கள் தான் அரசியல்வாதிகள். தூதர்கள் என்று இவர்களை உயர்த்திச் சொல்வதும் உண்டு.

வக்கீல்கள் எடுத்துச் சொன்னால்தான் நீதிபதிக்கு வழக்கு புரியும். வழக்குக்கு உரியவர்கள் சொல்லுக்கு மரியாதை இல்லை.

கல்யாணத்தை எடுத்துக் கொள்வோம். பெண் வீடும் மாப்பிள்ளை வீடும் ஒட்டி இருந்தாலும் அதற்கும் தரகர் வேண்டி இருக்கிறது.

தன்னுடைய தவிப்பை பெருமானிடம் நேரில் சொல்ல முடியவில்லை ஆண்டாளால். மழை மேகந்தான் அவர் காதில் இவள் தவிப்பைக் கொட்ட வேண்டி இருக்கிறது.

*"மதயானைக் கூட்டம் போல கம்பீரமாக அணி வகுத்துச் செல்லும் மேகங்களே, நீங்கள் வேங்கடத்தைச் சேர்ந்தவர்கள்தானே!*

*பாற்கடலில் ஆதிசேஷ வட்டத்தின் நவரத்தின சகிதமான மெத்தையில் படுத்து யோத நித்திரை புரிந்தவன் திருமால்.*

*அவன் ஒரு ஆண் பிள்ளை தானே! கொடுத்த வாக்கை மீறலாமா? ஒரு பெண் பிள்ளையை ஆசை காட்டி மோசம் பண்ணலாமா?*

*என்னை அவன் கைவிட்டு விட்டால், எனக்கு வேறு நாதியே இல்லை. ஒரு பெண்ணை நிலை குலைய வைத்துச் சித்திரவதை செய்கிறானே கண்ணன்! அது கொடுமை இல்லையா?*

*வெளியில் இந்த விஷயம் தெரிந்தால் அவன் பேரும் புகழும் என்னாவது? பழிபாவத்துக்கு அஞ்சாத பொய்யன், திருடன் என்று எல்லோரும் அவனை வெறுப்பார்கள்.*

*நிலைமையை அவனுக்கு எடுத்துச் சொல்லுங்கள்" என்று மேகத்திடம் கெஞ்சுகிறாள் ஆண்டாள்.*

**மதயானை போலெழுந்த**
**மாமுகில்காள்! வேங்கடத்தைப்**
**பதியாக வாழ்வீர்காள்!**
**பாம்பணையா வார்த்தை என்னே!**
**கதி என்றும் தானாவான்**
**கருதாதோர் பெண்கொடியை**
**வதைசெய்தான் என்னும் சொல்**
**வையகத்தார் எஙரே!**

# ஆசையில் தொங்குகிறது உயிர்

அன்னிய நாட்டுக்குப் போனோம். கடைத் தெருவைச் சுற்றி வந்தோம். பொருள்களை விதவிதமாய் ஜோடித்து அடுக்கி வைத்திருந்தார்கள்.

மனதுக்கு ரம்மியமான நயமான சாமான்கள் சில வாங்கினோம்.

பொருள்களில் எல்லாம் அழகிய பொருள் மனிதன். அவன் அன்பு, பொறுமை, நட்பு, உபகாரம் இவைகளோடு சேர்த்து வைத்து மனிதனைப் பார்க்கும் பொழுது எவ்வளவு ஒய்யாரமாய் நிமிர்ந்து நிற்கிறான் மனிதன்.

இந்த கம்பீரத்துக்கும் நயத்துக்கும் ஈடாக உலகில் ஒன்றுமே இல்லை.

உயிருக்குயிராய் பழகிய நண்பன் ஒருவன். அவன் ஞாபகம் வந்துவிட்டது. அதிசயமான, விநோதமான அந்தச் சாமானை வாங்கிக் கொண்டோம்.

அவனுடைய இங்கிதம், பக்குவம், சொகுசு, நயம், மென்மை, பெருந்தன்மை எல்லாம் ஞாபகத்துக்கு வந்தன.

மனக்கண்ணாலேயே அவன் முகத்தையும், கண்ணையும், புன்முறுவலையும் பார்க்கிறோம். பார்க்க மனம் அப்படியே சொக்கி அவன் அரவணைப்பில் சிக்குகிறது.

அப்பொழுது மனதில் பொங்கும் ஆனந்தத்தை அளந்து சொல்ல முடியுமா?

பார்க்க வேண்டியவற்றை எல்லாம் பார்த்துவிட்டு ஊருக்கு வந்து விட்டோம். வந்ததிலிருந்து மனம் துடிதுடிக்கிறது.

ஆருயிர் நண்பனைப் பார்க்க வேண்டும். "அன்னிய நாட்டில் வாங்கிய அபூர்வப் பொருளை அவன் கையில் கொடுக்க வேண்டும். அப்படிச் செய்தால் இந்தப் பிரயாணத்துக்கே வெற்றி, இல்லை என்றால் திருப்தியும் இல்லைதான்" என்று தவிக்கிறான்.

நண்பனைத் தேடிப் போனான். அவனும் இவனை அன்புடன் வரவேற்று உபசரித்தான். உபசரிப்பில் எல்லாம் பெரிய உபசரிப்பு, இவன் கண்டுகளித்த இடங்களை எல்லாம் தொட்டுக்காட்டி 'பேஷ்! பேஷ்!' என்று பாராட்டியதுதான்.

உபசரிப்பு, பாராட்டு எல்லாம் அமர்க்களந்தான். ஆனால் பரிசுப் பொருளை நண்பன் ஏற்றுக்கொள்ள வில்லை.

"எனக்கு எதற்கு இந்த அதிசயப்பொருள். நான் எங்கே உபயோகிக்கப் போகிறேன். உன்னிடமே இது இருக்கட்டும்" என்று சொல்லிவிட்டான்.

எவ்வளவு வற்புறுத்தியும் நண்பனிடம் எடுபடவில்லை.

ஆசையோடு வாங்கி வந்த பொருளை அன்பர்கள் அங்கீகரித்து விட்டாலே போதும். மனம் துள்ளிக் குதிக்கும். அந்தப் பொருளின் சிறப்பை எடுத்துரைத்துப் பாராட்டி விட்டாலோ நிலைகொண்டு நிற்க மாட்டான். ஆனந்த வெள்ளத்தில் முங்கி முங்கி நீந்துவான்.

ஆனால் அந்தப் பொருளைப் பாராட்டவில்லை. ஏற்றுக்கொள்ளவில்லை. எவ்வளவு சொல்லியும் ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் இடி விழுந்தது போலத்தான் இருக்கும்.

மனம் அப்படியே திருகி, முறுகி, விறைப்பைத் தாங்க மாட்டாமல் சடக்கென்று முறியும்.

செய்யக் கூடாத காரியத்தைச் செய்து விட்டது போல மனம் கூசும். வெட்கப்படும். வருத்தப்படும். கொஞ்சம் கோபம்கூட உண்டாகும்.

ஆனால் மனிதன் கெட்டிக்காரன். கோபத்தையோ, வருத்தத்தையோ வெளியே காட்ட மாட்டான். ரகசியமாகவே வைத்திருப்பான். இவனும் அப்படியே வைத்துக் கொண்டான்.

இவனைத் தேடி உற்றார், உறவினர், நண்பர் என்று பலர் வந்து போவார்கள். ஆருயிர் நண்பனை மதித்ததைப் போல யாரையும் இவன் மதித்ததில்லை. ஆனால் தேடி வந்தவர்களை உபசரிப்பதிலும் மதிப்பதிலும் குறைவைக்க மாட்டான். தாராளமாகவே இருப்பான்.

வருகின்ற அன்பர்கள் இவன் வாங்கி வந்த அபூர்வப் பொருளை விரும்புகிறார்கள். உங்கள்

ஞாபகார்த்தமாக எனக்குக் கொடுக்கக் கூடாதா என்று கேட்கிறார்கள்.

எத்தனை உணர்ச்சிகளை அந்தப் பொருள் முடிச்சுப் போட்டு வைத்திருக்கிறது என்னும் உண்மை கேட்பவர்களுக்கு எப்படித் தெரியும்.

இவை எல்லாம் அவர்களுக்குத் தெரிய ஞாயம் இல்லை. அதனால்தான் அசட்டுத்தனமாகக் கேட்கிறார்கள் என்கிற பொறுமையும் இவனிடம் இல்லை.

ஆங்காரப்படுகிறான், சினத்தில் கொதிக்கிறான். முகத்தில் அடித்தது போல அவர்கள் வேண்டுகோளை நிராகரித்து விடுகிறான்.

அப்பொழுதும் கோபம் தணிவதாக இல்லை. ஆசையோடு வாங்கி வந்த பொருள் மேலேயே சீறிப் பாய்கிறது உள்ளம்.

அந்தப் பொருளைச் சுக்கல் சுக்கலாய் நொறுக்கி விட வேண்டும் என்று ஆவேசப்படுகிறான். மூர்க்கத்தனம் அப்படி உச்சிக்கு மேலே ஏறிவிட்டது. உடம்பு, உணர்ச்சி எல்லாவற்றையும் கசக்கி முறுக்குகிறது அந்த அபூர்வப் பொருள்.

சாதாரண காரியங்களிலேயே கசப்பும், வெறுப்பும் தலையை விரித்துப் போட்டு ஆடினால் பக்தி, காதல் போன்ற அம்சங்களில் இந்த மாற்றம் என்ன பாடுபடுத்தும்?

நிற்க முடியுமா, உட்கார முடியுமா? சிந்தனை அப்படியே திகைத்து நின்றுவிடும். கசப்பும் வெறுப்புமே மனசை விரட்டி விரட்டி அடிக்கும்.

**ஆ**ண்டாளுக்கு கண்ணன்தான் உயிர். அவள் லட்சியம், அவனைத் தவிர வேறு எதுவுமே இல்லை.

அவனுக்காகவே இருக்கிறாள். ஆசையோடு எதிர்பார்த்த வண்ணம் இருக்கிறாள்.

அவன் வருவான். நிச்சயம் வருவான். தன் கையைப் பிடித்துச் செல்லமாக அழைத்துக் கொண்டு போவான் என்று திடமாக இருக்கிறாள்.

அவன் வந்து அழைத்துப் போவதற்கு அறிகுறியையும் காணோம். அந்த நினைப்பு வந்தவுடன் பதற்றம் வருகிறது.

அதற்கும் மேலே இவளை மாப்பிள்ளை வீட்டார் பெண் கேட்டு வருகிறார்கள். ஒன்றிரண்டு வீட்டார் மேல் பெண்ணின் பெற்றோருக்கு விருப்பம் இருக்கிறது.

இவர்களில் ஒருவனுக்குக் கல்யாணம் பண்ணிக் கொடுத்துவிட வேண்டியதுதான் என்று தீர்மானித்து விடுகிறார்கள்.

இத்தனையும் பார்க்கப் பார்க்க என்ன பாடுபடும் மனம். இடிந்து நொறுங்குவது போலவே இருக்கிறது ஆண்டாளுக்கு.

ஆங்கார வெறியே உண்டாகி விடுகிறது. தன்னுடைய அலங்காரத் தோற்றத்தின் மேலும், அழகின் மேலும், வாட்ட சாட்டமான அங்க அமைப்புகளின் மேலுமே ஆங்காரம் வருகிறது.

யாகம் வளர்த்து தெய்வங்களை உபசரிக்க அவிப்பாகம் (மதுரமான நெய்யுணவு) தயாரிப்பார்கள்.

அதை ஒரு பாத்திரத்தில் வைத்து மூடி இருக்கிறார்கள். புனிதமான பொருள் அது. ஒருவரையும் அதன் பக்கம் நெருங்கவிட மாட்டார்கள். தொடவிட

மாட்டார்கள். கண்ணால் பார்க்கக்கூட அநுமதிக்க மாட்டார்கள்.

அப்பேர்பட்ட அவிப்பாகம் இருக்கும் பானையை ஒரு நரி குப்புறக் கவிழ்க்கிறது. நிமிர்க்கிறது. உருட்டுகிறது. புரட்டுகிறது. மூடி கவிழவில்லை. மல்லுக்கட்டிப் பார்க்கிறது நரி. பிரயோசனம் இல்லை.

திருமாலுக்கென்றே பிறந்து வளர்ந்த என்னை மற்றவர்கள் கையில் பிடித்துக் கொடுக்க நினைக்கிறார்களே, இது என்ன பேதமை. நானும் என் உடம்புந்தானே இவர்கள் கண்ணை உறுத்துகின்றன.

"சரி, சரி, அவர்கள் எண்ணம் எப்படி நிறைவேறும் என்று பார்க்கிறேன்" இப்படி ஒரு முடிவுக்கு வருகிறாள் ஆண்டாள்.

திருமாலிடம் ஆண்டாளுக்குள்ள பக்தியின் வல்லமை அப்படி ஒரு காதல் ஜோடனையோடு மேடை ஏறி அபிநயம் பிடித்துக் காட்டுகிறது.

தன் நிலையைக் காதல் தெய்வமாகிய மன்மதனிடமே துணிச்சலோடு சொல்கிறாள்.

அவ்வளவும் உண்மை உணர்ச்சி தமிழோடு சேர்ந்து எடுக்கிற அவதாரந்தான். அப்படி எடுத்தால்தானே கவி.

இதோ வருகிறது பாடல்.

**வானிடை வாழும் அவ்**
**வானவர்க்கு**
**மறையவர் வேள்வியில்**
**வகுத்தஅவி**
**கானிடைத் திரிவதோர்**
**நரிபுகுந்து**

கவிழ்ப்பதும் மோப்பதும்
செய்வதொப்ப,
ஊனுடை ஆழிசங்கு
உத்தமர்க்கென்று
உன்னித்து எழுந்தஎன்
தடமுலைகள்
மானுடர்க்கு என்று
பேச்சுப்படில்
வாழகில் லேன்கண்டாய்
மன்மதனே !

# மணமும் ருசியும்

உடம்போடு எப்படி உயிர் ஒட்டிக் கிடக்கிறதோ, அப்படியே வார்த்தையோடு ஒட்டிக் கிடக்கிறது பொருள். ஆனால் வார்த்தைக்குள் ஒட்டி கிடப்பது உண்மையான பொருள் இல்லை.

வார்த்தைக்கு வெளியில் இருக்கிறது உண்மையான பொருள். யானை என்னும் பிரமாண்டமான பிராணி வார்த்தைக்கு வெளியில்தான் இருக்கிறது. எறும்பு என்னும் சின்னஞ்சிறிய பிராணியும் அப்படித்தான்.

ஒவ்வொரு வார்த்தையும் ஒவ்வொரு பொருளின் அடையாளம். பொருளை அனுபவித்த நம் அனுபவத்தின் அவதாரந்தான் வார்த்தை.

நம் அனுபவத்தின் மணமும் ருசியும் சேர்ந்து பரிமளிக்கும் வார்த்தையில்.

ஆனாலும் எத்தனையோ வார்த்தைகளில் மணமும் ருசியும் தேய்ந்து தேய்ந்து ஓய்ந்து போய்விட்டன. ஏதோ பெயரளவுக்கு அடையாளம் காட்டுகின்றன பொருளை. மற்றபடி நயமோ வேகமோ முன்போல அவற்றிடம் இல்லை.

சில சொற்கள் சமாளித்துக் கொண்டு இன்றளவும் நிற்கின்றன. கால வெள்ளத்தால் அந்தச் சொற்களின் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. உறுதியைக் குலைக்க முடியவில்லை.

உதாரணத்துக்கு ஒன்றிரண்டு வார்த்தைகளைப் பார்ப்போம்.

சிறு குழந்தைகளுக்கு அடிக்கடி உடம்பு குணக்கும். மனமும் சில சமயம் கோளாறாகும். அப்படி ஒரு தீங்கு குழந்தைகளை வந்து தாக்காதபடி தடுக்க முனைவார்கள் பெரியவர்கள். அதற்காக குழந்தையின் முன்கையில் கயிறு ஒன்றை - மந்திரித்த கயிறு ஒன்றைக் கட்டுவார்கள். செம்பு, வெள்ளி, தங்கம் இவற்றாலாகிய வளையங்களையும் மந்திரித்து குழந்தையின் முன் கையில் போடுவது உண்டு.

அப்படிக் கட்டுகிற கயிறுக்கும் போடுகிற வளையத்துக்கும் 'காப்பு' என்று பெயர்.

காப்பு என்னும் சொல்லை உரச, உரச, நம் அனுபவத்தின் மணம் மூக்கைத் துளைக்கும். ருசியோ நாக்கைச் சுழட்டும்.

ஆபத்திலிருந்து பாதுகாக்க உபயோகப்படும் பொருளை 'காப்பு' என்று அழகாய்ச் சொல்லி இருக்கிறது.

காப்பு என்றால் காத்தல் என்று பொருள். அது 'கா' என்னும் தனி எழுத்துச் சொல்லில் இருந்து பிறந்து வளர்ந்தது.

ஆபத்தில் சிக்கியவர்கள் பக்கத்தில் உள்ளவர்களின் உதவியை நாடி "கா, கா" என்று தானே கத்த முடியும்.

'கா' என்னும் ஓசை பாதுகாப்பை வேண்டி உண்டானது. காவல், காவலன் என்னும் சொற்கள் எல்லாம் 'கா' என்னும் மூலத்திலிருந்து உண்டானவைதாம். காப்பு உண்டானது போல் உண்டானவைதாம்.

இனி, குழந்தைகளுக்கு கையில் வளையம் போடுவது போல் காலிலும் உலோகத்தால் ஆகிய வளையம் போடுவார்கள். அதற்கு 'தட்டை' என்று பெயர்.

நோய்களையும் ஆபத்துகளையும் தடுத்து நிறுத்துவதற்காக காலில் போடப்பட்டதால் 'தடை' என்று முதலில் உதித்து வந்தது. பிறகு அதுவே நாவில் புரண்டு புரண்டு தட்டை என்று நிமிர்ந்து நின்றது.

நாளாக நாளாக நிமிர்ந்து நின்ற 'தட்டை' என்னும் சொல் 'தண்டை' என்று குழைந்து நெளிந்தது.

காலில் அணிந்த உலோக வளையத்தில் பொடிப் பொடி (உலோக) உருண்டைகளையும் சேர்த்துக் கட்டினார்கள். குழந்தைகள் நடக்கும் பொழுது அந்த உருண்டைகள் 'சல், சல்' என்று குளிர்ந்த ஒலியை எழுப்பின. அந்தக் குளிர்ச்சியில் தட்டை என்னும் சொல்லில் உள்ள வல்லோசை கரைந்து விட்டது. தண்டை என்று மெல்லோசை பூத்துவிட்டது.

சொற்களுக்குள் இப்படி எத்தனை எத்தனையோ அனுபவங்கள், அவை ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு வரலாறும் சேர்ந்தே கிடக்கின்றன.

வார்த்தைகளின் விளையாட்டையும் கும்மாளியையும் அனுபவிக்க, அனுபவிக்க உற்சாகம் உண்டாகும். ஆனால் நம்மவர்களுக்கோ உல்லாசம் பிடிக்காது. உண்மையைக் கண்டு துள்ளி எழும் மகிழ்ச்சியும் பிடிக்காது.

பாறையில் முட்டுவதைப் போல வார்த்தைகளில் போய் முட்டுவார்கள். உரலில் போட்டு இடிப்பதைப் போல வார்த்தைகளைத் தட்டி நொறுக்குவார்கள். சின்னாபின்னப்படுத்தி ரத்தக் கோரை காணாமல் விடமாட்டார்கள் வார்த்தைகளை.

கொஞ்சிக் குலாவி மகிழ்வதற்குப் பதிலாக வார்த்தைகளுடன் மல்லுக்கட்டுவதில் நம்மில் பலருக்கு ஒரு வெறி.

அந்த வெறி மேலே ஏறஏற எப்படிப் பரக்கப் பரக்க விழிக்கிறது, தலையைப் பிய்த்துக் கொள்கிறது என்று பாருங்கள்.

தமிழர்களுக்குத் தமிழ்தான் துணை. தாயும் அதுதான். தந்தையும் அதுதான். குருவும் தெய்வமும்

அதுதான். ஆனாலும் ஆராய்ச்சி என்ற பெயரால் நம்மவர் சிலர் தமிழை என்ன பாடு படுத்துகிறார்கள்?

அமிழ்து என்பதுதான் தமிழ் என்று மருவியது என்கிறார் ஒருவர். திராவிடம் என்பது தமிழ் என்று திரிந்து விட்டது என்கிறார் இன்னொருவர். 'பரல்' என்பது முத்து. அது பரள், திரள், தரள் என்று ஆகி கடைசியில் தமிழ் என்றே ஆகிவிட்டது என்று முழங்குகிறார் மற்றொருவர்.

இவ்வளவையும் தாங்கிக் கொள்கிறாள் அன்னை தமிழ்மகள். இனி, 'பாவை' என்று ஒரு சொல். அற்புதமான சொல். அது என்ன பாடுபடுகிறது என்று பாருங்கள்.

திருவெம்பாவை, திருப்பாவை என்று அற்புதமான பாடல்கள் தமிழில் இருக்கின்றன.

பாவை என்று பெயர் பெற்ற பாவத்துக்காக அவை படாதபாடு படுகின்றன.

பெண்கள் பாவம் நீங்க நோன்பிருப்பது பற்றிப் பாடப்படுவதால் பாவை எனப் பெயர் பெற்றது என்கிறார் ஒருவர். மணலை பாவைபோல குவித்து அதற்கு வழிபாடு நடத்துவதால் பாவை எனப் பெயர் பெற்றது என்கிறார் மற்றொருவர். பாவை, பாவை என பாடல் முடிவதால் பாவை என்று பெயர் பெற்று விட்டது என்கிறார் இன்னொருவர்.

பாவை நோன்பு மார்கழி மாதத்துக்கே உரியது என்கிறார் ஒருவர். இல்லை, தை மாதத்துக்கு உரியதுதான் பாவை நோன்பு. அது மெல்ல மெல்ல மார்கழி மாதத்துக்கு இறங்கி வந்துவிட்டது என்கிறார் மற்றொருவர். என்ன பாவம் செய்தார்களோ பாவையர். அவர்கள் பெயரைத் தாங்கிய பாவைப் பாடல்களும் பாவம் பல செய்துள்ளன. இல்லாவிட்டால் ஆராய்ச்சியாளர் இப்படித் தொம்சம் செய்வார்களா?

பெண்கள் பூப்போல இருக்கிறார்கள். அதனால் அவர்களைப் பூவையர் என்று சொல்கிறோம். நாணத்தால் மடங்கி மடங்கிப் பெண்கள் பேசுவது போல ஒரு பறவை பேசும். அதற்கு நாகணவாய்ப்புள் என்று பெயர். பேச்சும் சாயலும் பெண்டுகளை ஒத்திருந்ததால் பெண்கள்

அவற்றைத் தங்களோடு வைத்து உறவாடினார்கள். அதனால் நாகணவாய்ப்புள்ளுக்கும் பூவை என்று பெயர் வந்து விட்டது.

பூவைப் போன்றவர்களைப் பூவையர் என்றது போல 'பா'வை (பண்ணை)ப் போன்றவர்களை பாவையர் என்று சொன்னார்கள்.

வெண்பா, விருத்தம், கட்டளைக் கலித்துறை, தாழிசை முதலிய பாடல்களில் வருகிற பண் - பழுத்துக் கனிந்து தேன் சொட்டும் பண் நம் உணர்ச்சிகள் ஒவ்வொன்றையும் தட்டி எழுப்பி நம் கண் எதிரே நிற்க வைக்கும். பெண்களும் அப்படித்தான். பண்ணிற்கு 'பா' என்று பெயர். 'பா'வை ஒத்தவர்களுக்கு பாவையர் என்று பெயர்.

ஓவியக்கலையும் நம் உணர்ச்சிகளை தட்டி எழுப்புகின்றது. கையால் தொட்டுப் பார்க்கும் அளவுக்கு உணர்ச்சிகளைக் கண்முன் கொண்டு வந்து நிறுத்துகின்றது. அது காரணமாகவே ஓவிய உருவத்தை பாவை என்றார்கள்.

கண்ணின் கருவிழியும் பார்ப்பவர்களை அப்படியே நிறுத்தி நிற்க வைக்கிறது. அதற்கும் பாவை என்று பெயர் வைத்தார்கள்.

பாட்டு நம் கையில் இருக்கிறது. பாவையர் நம் எதிரில் நிற்கிறார்கள். ஆனாலும் ஆராய்ச்சி எங்கெங்கோ சுற்றி அலைகிறது.

நாம் பெண்களையும் பண் (பாடல்) களையும் வைத்தே நாச்சியாரின் பாவைப் பாடல்களைப் பார்ப்போம்.

பெண்கள் குழந்தைகளாக இருக்கும்பொழுது விளையாட்டுத்தான் அவர்களுக்கு உயிர். வயது ஏற ஏற, அவர்களுக்குப் பருவம் வந்த உடன் கல்யாண விஷயம் மனசைப் பிடித்துக் கொள்ளும். படலம் படலமாக மனசில் கனவுகள் எழும். ஆனால் அந்த ஆசையை வெளிப்படையாகக் காட்ட மாட்டார்கள். வேலையிலும் விளையாட்டிலும் உல்லாசத்தைக் கொட்டி அந்த நினைப்பை மூடி மறைப்பார்கள்.

இந்த அற்புதத்தைப் பார்த்துப் பார்த்து பரவசப்படுகிறார் ஆண்டாள். அவர் சொல்கிறார்:

மார்கழி மாதம். முன் பனிக்காலம். அதிகாலையில் கோழி கூப்பிடும் நேரத்தில் எழுந்து விடுகிறார்கள் பெண்கள். பூரண நிலா. வானமும் வையமும் பாற்கடலில் மிதப்பது போல் இருக்கிறது. பெண்கள் நான்கு ஐந்து பேர் சேர்ந்தார்கள். சேக்காளிகளில் இன்னும் சிலர் பாக்கி. அவர்களின் வீடுகளுக்குப் போய் அவர்களையும் சேர்த்துக் கொள்கிறார்கள்.

பட்டுப்போல நிலா எரிக்க, நந்தவனங்களும் தோப்புகளும் சூழ்ந்த தடாகத்தில் இறங்குகிறார்கள். மூழ்கியும், எழுந்தும், துள்ளியும், குதித்தும் ஆடுகிறார்கள். ஆட ஆட ஆனந்தமாய் இருக்கிறது பெண்களுக்கு.

ஆனந்தம் பாடலாய் உருவெடுக்கிறதை இனிப் பார்ப்போம்.

“குளிக்க வருகிறவர்கள் எல்லோரும் இப்பொழுது வந்து விடுங்கள்'' என்று சத்தம் கொடுக்கிறார்கள் பெண்கள்.

“நந்தகோபாலன், யசோதை ஆகிய இவர்களின் செல்லப்பிள்ளை இருக்கிறானே, புண்ணியவான்! மழைபோலக் குளிர்ந்த திருமேனி, செந்தாமரை மலர் போன்ற கண்கள், வெண்மதி போலப் பளபளக்கும் திருமுகம் இவ்வளவும் பொருந்திய நாராயணன்.

“அந்த நாராயணன் தான் நாம் விரும்பியபடி நமக்கு அருள் புரிவான். நமக்குத் திருமணம் செய்து வைப்பான். அவனே நமக்கு வரன் (பறை) ஆக வந்து அருள்பாலித்து விடுவான்.

வாருங்கள் நீராட. பாய்ந்து பாய்ந்து நீரில் விளையாடுவோம்” என்று முழங்குகிறார்கள் பெண்கள். முழங்கிக்கொண்டே நீரில் மூழ்கி மூழ்கி எழுகிறார்கள்.

*இனிப்பாடல் :*

மார்கழித் திங்கள்
மதிநிறைந்த நன்னாளால்,
நீராடப் போதுவீர்
போதுமினோ நேரிழையீர் !
சீர்மல்கும் ஆய்பாடிச்
செல்வச் சிறுமீர்காள் !
கூர்வேல் கொடுந்தொழிலன்
நந்தகோ பன்குமரன்
ஏரார்ந்த கண்ணி
யசோதை இளம்சிங்கம்
கார்மேனிச் செங்கண்
கதிர்மதியம்போல் முகத்தான்
நாராயணனே
நமக்கே பறைதருவான்
பாரோர் புகழப்
படிந்தேலோர் எம்பாவாய் !

---

*மதிநிறைந்த நன்னாள் - பௌர்ணமி. நீராடப்போதுவீர் - குளிக்கவருகிறவர்கள். போதுமின் - வாருங்கள். சிறுமீர்காள் - இளநங்கையரே. ஏர்ஆர்ந்தகண்ணி - அழகிய கண்களைஉடைய யசோதை. இளம்சிங்கம் - சிங்கக்குட்டி போன்ற கண்ணன்*

# ஆரோக்கியமும் அழகும்

பெண்களுக்கு நிறைந்த மனசு, குறைவே இல்லாதது அவர்கள் மனசு.

எதையும் வளமாக வைத்துக் கொள்வார்கள். ஆரோக்யமாகவும் அழகாகவும் இருக்க வேண்டும் ஒவ்வொன்றும், என்று அவர்கள் நினைப்பார்கள்.

மற்றவர்களின் சந்தோஷந்தான் அவர்கள் சந்தோஷம். அதுதான் அவர்களுக்கு உல்லாசம்.

வீடு, வாசல், மாடு, கன்று, தட்டுமுட்டுச் சாமான்கள், கணவன், குழந்தை, சமையல், விருந்து, உற்றார் உறவினர், ஊர், உலகம், பழக்க வழக்கம், பண்பாடு ஆகிய அவ்வளவையும் பார்த்து அனுபவிக்க வேண்டும் என்பது தான் பெண்களின் ஆசை. அவ்வளவிலும் மங்களம் பொங்க வேண்டும். அவ்வளவும் புனிதப்பட வேண்டும். இதுதான் அவர்கள் ஆசை.

இந்த ஆசைதான் கல்யாணம் பண்ண வேண்டும் என்று பெண்களைத் தூண்டுகிறது.

பெண்களின் இந்த அடிப்படையான உணர்ச்சியே அவர்களின் காதலுக்கு லட்சியமாக இருக்கிறது.

ஆண்கள் அப்படி இல்லையா என்று கேட்கத் தோன்றும். அதற்கு விடை இதுதான்.

ஆண்களின் குணம் அப்படியும் இருக்கும். இப்படியும் இருக்கும். ஆனந்த உணர்ச்சியை ஒதுக்கி வைத்து விட்டு தன்னல உணர்ச்சியே ஆடவர்களிடம் மேலோங்கி நிற்கும்.

தன்னுடைய வீடு, வாசல், குழந்தை முதலியவற்றைப் பார்த்துக்கொள்ள ஒரு கருவி என்றுகூட பெண்ணை நினைத்துவிடுவான் ஆண்.

ஆனால் பெண்ணுக்கு அப்படி ஒரு நினைப்பு வரவே வராது. அவள் வாழ்வதே மற்றவர்களுக்காகத்தான். அவள் சந்தோஷமாக இருப்பதே மற்றவர்கள் சந்தோஷமாக இருப்பதற்காகத்தான். பெண்களின் இந்த அற்புதப் பண்பைத் தெரிந்தால் அவர்கள் காட்டுகிற பொறுமைக்கு விளக்கம் கிடைக்கும். தியாகம் சுடர்விட்டுப் பிரகாசிப்பது தெரியும்.

திருத்தமாகவும் அழுத்தமாகவும் பக்தியினிடத்தும் பண்பாட்டினிடத்தும் பெண்கள் வைத்திருக்கிற வைராக்கியம் எப்படி என்று தெரியும்.

அந்த வைராக்கியத்திலிருந்து வந்ததுதான் அவர்களிடம் உள்ள பெருந்தன்மை, மரியாதை.

அதுமட்டுமா? உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு, கஷ்ட நஷ்டங்களை எல்லாம் தாங்கி, குடும்பம் சிதறி விடாதபடி கட்டிக் காப்பதற்கு தங்களையே அர்ப்பணித்து சமாளிக்கிறார்களே, அந்த உறுதிப்பாட்டுக்கு மூலமும் அவர்களுடைய பக்தி வைராக்கியந்தான்.

இவ்வளவும் எப்படிப் பெண்களிடம் அமைந்தன என்று கேட்கலாம். காரணம் இதுதான்.

உண்மையானவர்கள் பெண்கள். அன்பு மயமானவர்கள் பெண்கள். அன்பைத்தவிர அவர்களிடம் வேறு ஒன்றுமே இல்லை.

எல்லாம் இறைவனுடைய செயல்தான். நம்முடைய காரியம் இங்கு ஒன்றும் இல்லை.

நாம் என்பதே இல்லை. அப்படி இருக்க நமக்கு ஏது காரியம். இப்படியாக உண்மையைக் கண்டு சதா அதில் திளைக்கிறவர் ஆண்டாள். அவர் பரம பக்தர். மாசற்ற ஞான ஒளி அவர்.

இறைவனுடைய கல்யாண குணங்களை உணர்ந்து சதா அதில் ஈடுபட்டுத் திளைக்கும் ஆண்டாள் பெண்களைப் பார்க்கிறார். அவர்களுடைய உணர்ச்சிகளைப் பார்க்கிறார். அந்த உணர்ச்சிகளில் உள்ள நயத்தையும் வன்மையையும் பார்த்துப் பார்த்துப் பரவசப்படுகிறார் ஆண்டாள்.

மலரினும் மெல்லிய பெண்களின் உணர்ச்சிக்குள் அல்லவா பேரண்டம் முழுவதையும் அணைத்து ஆதரவு கொடுக்கும் ஆனந்தம் முட்டித் ததும்புகின்றது என்று புளகாங்கிதம் அடைகிறார்.

ஆண்டாளின் பரவசமும் புளகாங்கிதமும் எப்படிப் பாடலாய் எழுந்து வருகிறது என்று பாருங்கள்.

**மா**ர்கழி மாதத்தில் அதிகாலையில் எழுந்து நீராடி விட்டு இறைவனை வழிபடும் பெண்கள் - கல்யாணத்துக்கு உரிய வயது வந்த பருவப் பெண்கள், இந்த உலகம் முழுவதும் செழித்துப் பொழிய வேண்டும் என்று வாழ்த்துகிறார்கள்.

எங்கும் மங்களம் பொங்க தப்பாது மழை பொழிய வேண்டும். பாலும் தேனும் பெருக்கெடுத்து ஓடவேண்டும். அதற்கு நீதி நெறி வழுவாத இல்லறம் பெருக வேண்டும். அந்த இல்லற நெறியில் பெருமான் நமக்கு இடம் பண்ணிக் கொடுப்பானாக என்பது பெண்களின் வேண்டுகோள்.

இனி பாடல்,

**ஓங்கி உலகளந்த**
**உத்தமன் பேர்பாடி**
**நாங்கள்நம் பாவைக்குச்**
**சாற்றிநீ ராடினால்**
**தீங்கின்றி நாடெல்லாம்**
**திங்கள்மும் மாரிபெய்து**

ஓங்கு பெருஞ்செந்நெல்
ஊடு கயலுகள
பூங்குவளைப் போதில்
பொறிவண்டு கண்படுப்ப
தேங்காதே புக்கிருந்து
சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடம்நிறைக்கும்
வள்ளல் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம்
நிறைந்தேலோர் எம்பாவாய் !

உயிர்வர்க்கம் முழுவதற்கும், மனித வாழ்க்கைக்கும் ஆதாரம் மழைதான். ஒவ்வொரு வஸ்துவையும் அமுதூட்டிப் பாதுகாக்கிறது. எல்லா வற்றுக்கும் தாயாய் இருக்கிற மழையைப் பற்றிய யோசனை வந்துவிட்டால் கை எடுத்துக் கும்பிடத் தோன்றும்.

கருகருவென்று மேகம் திரண்டு கூடுகிறது. நீலமேக சாமள வண்ணனாகிய திருமாலே எதிரில் வந்து நிற்கிறது மாதிரி இருக்கும். மின்னலும் இடி முழக்கமும் அவனுடைய சக்கரமும் சங்கும், ஆகத் தெரியும். கொட்டும் மழையோ அவன் கோதண்டம் பொழியும் அம்புகளாக ஒளிரும்.

சூரியனோடு ஒத்துப்பேசி அவன் கிரணங்களைக் கொண்டு நீரை ஆவியாக்கி மேலே மேலே மழையானது கொண்டு போவது போல இருக்கும்.

பெண்களுக்கும் அப்படியே இருக்கிறது. சூரியனோடு சேர்ந்து எங்களை வாழ வைக்கும் தெய்வமே என்று மழையை நோக்கிச் சொல்கிறார்கள் (ஆழி மழைக்கண்ணா) பெண்கள்.

ஆழிம ழைக்கண்ணா
ஒன்றுநீ கைகரவேல்;
ஆழியுள் புக்கு
முகந்துகொ டார்த்தேறி,

தேங்காதே புக்கிருந்து - பயமில்லாமல்

**ஊழி முதல்வன்**
**உருவம்போல் மெய்கறுத்து,**
**பாழியந் தோளுடைப்**
**பத்பநா பன்கையில்**
**ஆழிபோல் மின்னி**
**வலம்புரிபோல் நின்றதிர்ந்து**
**தாழாதே சார்ங்கம்**
**உதைத்த சரமழைபோல்**
**வாழ உலகினில்**
**பெய்திடாய்! நாங்களும்**
**மார்கழிநீ ராட**
**மகிழ்ந்தேலோர் எம்பாவாய்!**

*மழை பொழிந்து வெள்ளமாய்த் திரள்கிறது. ஆறுகளாய் ஓடுகிறது. வயல்கள் எங்கே இருக்கிறது என்று தேடிப் போய் நெல், கரும்பு, வாழை எல்லாவற்றையும் ஊட்டி வளர்க்கிறது.*

*யமுனை நதியும் அப்படித்தான். அந்த நதியில் எத்தனையோ படித்துறைகள். அத்தனை துறைகளிலும் ஆடி மகிழ்ந்தவன் கண்ணன்.*

*யமுனையின் கரையில் இருக்கிற (வட) மதுரையும், பிருந்தாவனமும் அவனுடைய ஆடல் அரங்குகள்.*

*ஆயர் குலத்துக்கு ஒளி கொடுத்தவன் கண்ணன். ஒரு பெண்ணின் (யசோதையின்) வயிற்றில் குடி இருந்து பிறந்ததால், தாய்த்தத்துவத்தையே தெய்வ சந்நிதானமாக்கி விட்டான்.*

*அவனை வாழ்த்த வாழ்த்த, நினைக்க நினைக்க சோர்வு கலையும். சுறுசுறுப்பு ஓங்கும். இருள் விலகும். ஒளி முளைக்கும். பூர்வமான தடித்தனங்களும் திமிரும் நம்மைவிட்டு ஓடிவிடும். கைவசம் இருக்கிற அகம்பாவமும் நெருப்பில் விழுந்த பஞ்சாய்ப் பொசுங்கிப் போகும்.*

*வாருங்கள் எல்லோரும் சேர்ந்து அவனை வாழ்த்துவோம் என்று எழுகிறார்கள் பெண்கள்.*

*இனி பாடல்:*

**மாயனை மன்னும்**
**வடமதுரை மைந்தனை**
**தூய பெருநீர்**
**யமுனைத் துறைவனை**
**ஆயர் குலத்தினில்**
**தோன்றும் அணிவிளைக்கைத்**
**தாயைக்குடல் விளக்கம்**
**செய்ததா மோதரனை**
**தூயோமாய் வந்துநாம்**
**தூமலர்தூ வித்தொழுது**
**வாயினால்ப் பாடி**
**மனத்தினால்ச் சிந்திக்க**
**போய பிழையும்**
**புகுதருவான்; நின்றனவும்**
**தீயினில் தூசாகும்**
**செப்பேலோர் எம்பாவாய்!**

*தூய - பளிங்குபோல் தெளிந்து சுத்தமான. ஆயர் - விளக்கை - இடையர் குடியில் பிறந்து அக்குலத்துக்கு விளக்கம் கொடுத்தவன். தாயை --- தாமோதரன் - பெண் குலத்தையே பெருமைப்படச் செய்தவன் புகுதருவான் நின்றனவும் தூசு ஆகும் - இனிவரக்கூடிய தொல்லைகளும் வெந்து சாம்பலாகிவிடும்.*

# உண்மை உணர்ச்சி

நாடு சேமமாக இருக்க வேண்டும். உலகம் முழுவதுமே சேமமாக இருக்க வேண்டும்.

உலகம் என்றால் மக்கள்தாம். மக்கள் என்று சொல்லும்பொழுது அதில் நாமும் நம்மைச் சேர்ந்தவர்களும் அடக்கம்.

நாடும் உலகமும் சேமமாக இருக்க நாம் தியாகம் செய்யலாம். போராடலாம். உடல், பொருள், ஆவி எதை வேண்டுமானாலும் அர்ப்பணிக்கலாம்.

நெறிமுறை பிறழாத கட்டுப்பாடு இருந்தால் போதும். உலகம் முழுவதும் சேமம் பூத்துக் குலுங்கும். அதற்கு அன்பு வேண்டும். நாம் வேறு, மற்றவை வேறு என்பது பொய். எல்லாம் ஒன்றுதான் என்னும் உணர்ச்சி வேண்டும்.

இந்த உணர்ச்சிக்குத்தான் உண்மை என்று பெயர். இதை மதிப்பது தான் பக்தி. இதைச் செயல்படுத்துவது தான் வழிபாடு.

வாழ்க்கை என்பது மாபெரும் வேள்வி. சேமமாக வாழ்வதுதான் தவம். யோகம் என்பதும் அதுதான்.

செழிப்பில்லாமல், ஆரோக்கியம் இல்லாமல் தரித்திரத்தில் உழல வேண்டும். எல்லோரும் தெருவில் நின்று திண்டாட வேண்டும். அப்படிக் கஷ்டப்படுவதுதான் பக்தி என்று ஏமாந்துவிடக் கூடாது.

பக்தி என்றால் உத்சாகம் பொங்கும். எப்பொழுதும் உணர்ச்சி முனைப்பாக இருக்கும். அதனால் அச்சம் இல்லாமல் அமைதியாய் இருக்கும்.

பெண்களிடம் இந்த உண்மை உணர்ச்சி உல்லாசமாய் விளாயாட்டாய்ப் பரிமளிக்கிறது. அது பாடலாய் எழுந்து வருகிறது.

எப்படி என்று பார்ப்போம்.

நிலம் கீறிப் பொழுது புலர்வதற்கு முன்பே உறக்கம் கலைந்து உத்சாகத்தில் துள்ளுகிறது உலகம். ஆன்றோர்கள் சான்றோர்கள் எல்லாம் அவன் செயலே என்று உணர்ந்து இறைவனை நினைக்கிறார்கள். அவனைப் பெயரிட்டே அழைக்கிறார்கள். அந்த மந்திர ஒலியில் மனம் முழுவதும் கற்கண்டாய் கரைகிறது. கருடாள்வார் கோயில் உள்ளிட்ட சந்நிதானங்கள் அவ்வளவிலும் மெழுகி, கோலம் இட்டு, மலர் சார்த்தி வழிபடுகிறார்கள். சங்குகளின் முழக்கம் மண்ணையும் விண்ணையும் சேர்த்து அணைக்கிறது. பறவைகள் பாடிக்கொண்டே நாலா திசைகளிலும் ஓடிப்பறக்கின்றன.

நஞ்சு தடவிய பேயின் மார்பை கண்டதுண்டமாகக் கடித்துத் துப்பினான் கண்ணன். மாயச்சகடம் சுக்கல் சுக்கலாய் நொறுங்க அதை ஒரு எற்று எற்றினான். பாற்கடலில் பாம்பணையில் தலை வைத்துக் கால் நீட்டிச் சயனிப்பது போல படுத்துக்கொண்டே பேரண்டம் முழுவதையும் பாதுகாக்கிறான். பாதுகாக்க யோசிக்கிறான்.

அந்த மகாபுருஷனை மறந்து உறங்கலாமா பெண்ணே! என்று தோழிமார் வந்து துயில் எழுப்புகிறார்கள்.

*இனி பாடல் :*

புள்ளும் சிலம்பினகாண்;
 புள்ளரையன் கோயில்
வெள்ளை விளிசங்கின்
 பேரரவம் கேட்டிலையோ !
பிள்ளாய் எழுந்திராய் !
 பேய்முலை நஞ்சுண்டு
கள்ளச் சகடம்
 கலக்கழியக் காலோச்சி,
வெள்ளத் தரவில்
 துயிலமர்ந்த வித்தினை
உள்ளத்துக் கொண்டு
 முனிவர்களும் யோகிகளும்
மெள்ள எழுந்து
 அரியென்ற பேரரவம்
உள்ளம் புகுந்து
 குளிர்ந்தேலோர் எம்பாவாய் !

*தன்னை மறந்து ஆனந்தமாய்த் தூங்குகிறவர்கள் - மனம் ஒடுங்கிக் குறட்டைவிட்டு உறங்குகிறவர்கள் ஒரு ஊசி விழுகிற சத்தத்தில் விழித்து விடுவார்கள். விழித்து எழுந்து விடுவார்கள்.*

*ஆனால் சோம்பலாய் கள்ள உறக்கம் போடுகிறவர்கள் சுற்றிலும் இடி விழுந்தாலும் தெரியாமல் படுத்தே கிடப்பார்கள்.*

*ஒரு பெண் தூங்காமல் படுக்கையில் படுத்துக் கிடக்கிறாள். சோம்பல் முறியவில்லை. அதனால் அவள் மனம் எதன் எதன் பின்னோ ஓடிக் கொண்டிருக்கிறது. திக்குத்திசை தெரியாமல் ஓடிக்கொண்டே இருக்கிறது.*

*இவள் நீராட வருவாள் என்று எதிர்பார்த்துக் காத்து நின்ற பெண்ணுக்கு ஏமாற்றமாய்ப் போய்விட்டது. அந்த ஆத்திரத்தில் இவள் வீட்டுக்கே அவள் வந்துவிட்டாள். கட்டிலில் படுத்துக் கிடக்கும் பெண்ணைப்*

*பார்த்து, "நல்ல பெண்ணடியம்மா நீ! பறவைகளின் சத்தம் தான் உன் காதில் விழவில்லை. உன் வீட்டில் தயிர் கடைகிற சத்தமுமா உன் காதுக்கு எட்டவில்லை.*

*பொழுது விடிந்த பிறகும் அறைக் கதவை மூடிக் கொண்டு இப்படியா உறங்குவது! எழுந்து உட்கார். பக்த கோடிகள் எம்பெருமானைப் பற்றிப் பாடுகிற பாடல்கள் உன் செவியில் விழட்டும். அது உன் மனசில் தைக்கட்டும்!"*

*இப்படிச் சொல்கிறாள் சிநேகிதி.*

**கீசுகீ சென்றெங்கும்**
**ஆனைச்சாத் தன்கலந்து**
**பேசின பேச்சரவம்**
**கேட்டிலையோ பேய்ப்பெண்ணே!**
**காசும் பிறவும்**
**கலகலப்பக் கைபேர்த்து**
**வாச நறுங்குழல்**
**ஆய்ச்சியர் மத்தினால்**
**ஓசை படுத்த**
**தயிரரவம் கேட்டிலையோ!**
**நாயகப் பெண்பிள்ளாய்**
**நாராயணன் மூர்த்தி**
**கேசவனைப் பாடவும்நீ**
**கேட்டே கிடத்தியோ!**
**தேசம் உடையாய்**
**திறவேலோர் எம்பாவாய்!**

*காத்திருந்து ஏமாந்தவர்களுக்கு எரிச்சல் வரத்தான் செய்யும். எரிச்சலில் வார்த்தைகள் அப்படியும் இப்படியும் சிதறத்தான் செய்யும்.*

*இத்தனை விளக்கு வெளிச்சத்தில் தூங்குகிறாளே! இவளல்லவா பெண்! அது மட்டுமா? சுற்றிலும் எத்தனை எத்தனை ஆரவாரங்கள். ஒன்றுகூட இவள் காதில் விழவில்லையே!*

*"இந்த அசடுதான் இப்படி உறங்குகிறது என்றால், அவளை எழுப்ப வேண்டும் என்னும் உணர்வு உங்களுக்கு இல்லையே!" பேஷ், பேஷ் அழகாய் இருக்கிறது உங்கள் காரியம்" என்று எல்லோரையுமே ஒரு போடு போட்டு விடுகிறாள் பெண்.*

**தூமணி மாடத்துச்**
**சுற்றும் விளக்கெரிய**
**தூபம் கமழத்**
**துயில்அணைமேல் கண்வளரும்**
**மாமன் மகளே !**
**மணிக்கதவம் தாள்திறவாய்**
**மாமீர் ! அவளை**
**எழுப்பீரோ ? உம்மகள்தான்**
**ஊமையோ அன்றிச்**
**செவிடோ, அனந்தலோ,**
**ஏமப் பெருந்துயில்**
**மந்திரப் பட்டாளோ !**
**மாமாயன் மாதவன்**
**வைகுந்தன் என்றென்று**
**நாமம் பலவும்**
**நவின்றேலோர் எம்பாவாய் !**

---

*துயில்அணை - மெத்தை. மாமீர் - மாமிமாரே. ஏமப்பெருந்துயல் - சுகமான உறக்கம். நவின்று - சொல்லி.*

# கோபம் உள்ள இடத்தில் குணம்

தேக தத்துவம், உயிர்த் தத்துவம், உணர்ச்சி தத்துவம் மூன்றும் சேர்ந்து பரிமளிக்கிற ஒரு அபூர்வப் பொருள் மனிதன்.

தேக தத்துவம் கண்ணுக்கு நன்றாகத் தெரிகிறது. உடம்பை அளந்தும் பார்க்கலாம். நிறுத்தும் பார்க்கலாம். உணர்ச்சியை அப்படி எளிதில் கண்டுவிட முடியாது.

செயல்கள், அனுபவங்கள் இழைகளை ஊடுருவிக் கொண்டு, ஜொலிக்கும் உணர்ச்சி, புதுப்புது வண்ணங்களில் தீப்பொறியாய்ச் சிதறுகிற உணர்ச்சியை நேருக்கு நேராய் எப்படிப் பார்க்க முடியும்?

உயிரின் காரியமோ தனி.

வேகம், ஆத்திரம், பொறுமை, சோம்பல், பசி, தாகம், காதல் இப்படி ஒன்றுக்கொன்று முரணான பல அம்சங்களின் கலவையாய் இருக்கிறது உயிர். அதனால் உயிரைத் தனித்த நிலையில் காண முடிகிறதில்லை.

காரியம் என்று வரும்பொழுது ஆத்திரம் பொத்துக் கொண்டு வரும். அமைதியே இருக்காது. படபட என்று துடிக்கும்.

காரியம் துளிக்கூடப் பிசகக் கூடாது. அணுவளவு பிசகினாலும் எரிச்சல்தான். ஆங்காரந்தான்.

உல்லாசப் பயணம் செய்ய நான்கு பேர் திட்டம் போட்டார்கள். குறித்த நேரத்தில் குறித்த இடத்துக்கு நான்கு பேரும் வந்துசேர வேண்டும் என்று ஏற்பாடு, அங்கிருந்து புறப்பட முடிவு பண்ணி இருந்தனர்.

மூன்று பேர் அப்படியே வந்து சேர்ந்தார்கள். ஒருவர் வரவில்லை. நேரம் நெருங்க நெருங்க பரபரப்பு உண்டாகிறது. ஆத்திரம் வருகிறது. எரிச்சல் வருகிறது. கேவலப்படுத்தி விட்டானே நண்பன் என்று வெறுப்பே உண்டாகிறது.

அவமானத்திலிருந்து நண்பன் மேல் கோபமே உண்டாகிவிடுகிறது. அவனோடு சண்டை போடுகிற அளவுக்கு வந்துவிடுகிறது கோபம்.

இப்படி எல்லாம் மனிதப் பிராணியைத் தத்தளிக்க வைக்கிறது உணர்ச்சி. பார்வை, சொல், கை, கால், எல்லாமே உணர்ச்சிக்கு ஏற்றபடி ஆட்டம் போடும்.

**மா**ர்கழி மாதத்தில் நோன்பு இருந்து இறைவழிபாடு நடத்தும் பெண்டுகள், பொழுது புலர்வதற்கு முன் வைகறைப் பொழுதிலேயே எழுந்து தயாராக இருப்பார்கள். எல்லோரும் சேர்ந்து பொய்கைக்கு வருவார்கள், பிறகு நீராடுவார்கள். ஈரச்சேலையோடேயே அந்த நடுங்கும் குளிரில் இறைவனுடைய திருநாமங்களைப் பாடிப் பரவசப்படுவார்கள்.

அந்த மாதம் முழுவதும் இது ஒழுங்காக நடந்து வருகிற காரியம்.

ஒருநாள் ஒரு பெண் மட்டும் துயில் எழவில்லை. சேக்காளிகள் எல்லாம் அவள் வீட்டு முற்றத்தில் கூடி விட்டார்கள். வைகறை கலைந்து பொல பொல என்று புலர்கிற நேரம். அப்பொழுதும் எழுந்திருக்கவில்லை பெண்.

சத்தம் போட்டுக் கூப்பிடுகிறார்கள். "என்னடி தூக்கம்! மடத்தூக்கம்! சீ, நீ ஒரு பெண் பிள்ளைதானா!" என்றெல்லாம் வாய்க்கு வந்தபடி பேசுகிறார்கள். சாளர

*வாசல் வழியே முகம் வைத்து அவள் காதில் விழும்படி சூடாகவே பேசுகிறார்கள்.*

*ஆனாலும் அவள் உறக்கம் கலையவில்லை.*

*கதவைத் தட்டுகிறார்கள். திம்திம் என்று பேரொலி எழும்படியாகவே தட்டிப் பார்க்கிறார்கள். புரண்டு படுக்கிறாளே தவிர எழுந்திருக்க வில்லை பெண்.*

*சேக்காளிகளுக்கு கோபம் வருவது இயற்கைதானே.*

*வசவிலேயே இறங்கிவிட்டார்கள் முற்றத்தில் நிற்கும் பென்கள். எப்படி என்று பார்ப்போம்.*

*"இரத்த வெறிப்பிடித்த எமனுடைய வாய்க்குள் மலைபோன்ற மாமிச பிண்டமாகிய கும்பகர்ணனைக் கொண்டுபோய் தள்ளியது இராமபாணம். அந்தப் பாணத்துக்குரியவன் நமக்கு அருள்புரியும் நாயகன்தான்.*

*குன்று சாய்வது போல எமனுடைய வாய்க்குள் குப்புற வீழ்ந்த கும்பகர்ணன், தன்னுடைய தூக்கத்தை எல்லாம் உன்னிடம் கொடுத்துவிட்டுப் போனானா?*

*மானங்கெட்ட தூக்கம் அப்படியா வருகிறது! சரி, சரி, கதவைத்திற" என்று பொரிந்து தள்ளுகிறார்கள் பெண்கள்.*

*இனிப்பாடல்:*

**நோற்றுச் சுவர்க்கம்**
**புகுகின்ற அம்மானாய்!**
**மாற்றமும் தாராரோ**
**வாசல் திறவாதார்**
**நாற்றத் துழாய்முடி**
**நாரா யணன்நம்மால்**
**போற்றப் பறைதரும்**
**புண்ணியனால், பண்டொருநாள்**
**கூற்றத்தின் வாய்வீழ்ந்த**
**கும்ப கருணனும்**

தோற்றங் குனக்கே
பெருந்துயில்தான் தந்தானோ !
ஆற்ற அனந்தல்
உடையாய் அருங்கலமே !
தேற்ற மாய்வந்து
திறவேலோர் எம்பாவாய் !

*நீங்கள் வரும்முன் எழுந்திருந்து காத்திருப்பேன் என்று முதல் நாள் சொன்ன பெண் இப்படிக் கவலை இல்லாமல் தூங்குகிறாள். தட்டிச் சத்தம் போட்டாலும் எழுந்திருக்கமாட்டேன் என்கிறாள். முற்றத்தில் கூடி நிற்பவர்களுக்குப் பொறுமை போய்விட்டது. கொஞ்சம் கடுமையாகவே பேசிவிட்டார்கள்.*

*பேசிமுடித்த பிறகு பரிவு உண்டாகிறது. கனிவே உண்டாகி விடுகிறது.*

*குழந்தை தொந்தரவு செய்கிறபொழுது கோபம் வரும். கடுமையாக ஏதாவது சொல்ல நேரும். எரிச்சலில் ஒரு அடிகூடக் கொடுத்து விடுவது உண்டு.*

*பிறகு மனசு மாறிவிடும். இளகியே விடும் மனம்.*

*அடித்த தகப்பனே அடிபட்ட குழந்தையின் கையைப் பிடிப்பான். காலைப் பிடிப்பான். முகத்தைப் பார்ப்பான், முதுகைத் தடவிக் கொடுப்பான். கடைத் தெருவுக்குக் குழந்தையைக் கூட்டிப்போய் அது கேட்கும் பண்டங்களை வாங்கிக் கொடுப்பான்.*

*எரிச்சலை எது உண்டாக்கியதோ அதுவே மனதை உருக்கியும் விடுகிறது.*

*கூட்டாளிப் பெண்களுக்கும் அப்படி இளகிவிட்டது மனம். தூங்கிக் கொண்டிருப்பவளை கண்ணே, பொன்னே என்று அழைக்கிறார்கள். புனமயிலே என்று கனிவோடு கூப்பிடுகிறார்கள். எதிரிகளை விரட்டி அடிக்கும் வீரமும், குற்றம் குறையில்லாத நேர்மையும் நிறைந்த ஆயர்குலத்தில் அவதரித்த அருங்கலமே என்று பாராட்டி அழைக்கிறார்கள். நாங்கள் எல்லோரும்*

*வந்துவிட்டோம். நீ உடனே எழுந்துவா என்று கெஞ்சியும் கொஞ்சியும் கூப்பிடுகிறார்கள்.*

*கன்றுகளும் தாய்களும் (கற்றுக் கறவை) நிறைந்த கறவைப் பசுக்களை மந்தை மந்தையாக உடைய சீமாட்டிப் பெண்ணே! என்கிறார்கள்.*

*இனிப்பாடல்:*

**கற்றுக் கறவைக்**
**கணங்கள் பலகறந்து,**
**செற்றார் திறலழியச்**
**சென்று செருச்செய்யும்**
**குற்றம்ஒன் றில்லாத**
**கோவலர்தம் பொற்கொடியே!**
**புற்றர வல்குல்**
**புனமயிலே! போதராய்!**
**சுற்றத்துத் தோழிமார்**
**எல்லாரும் வந்துநின்**
**முற்றம் புகுந்து**
**முகில்வண்ணன் பேர்பாட**
**சிற்றாதே பேசாதே**
**செல்வப்பெண் டாட்டிநீ**
**எற்றுக் குறங்கும்**
**பொருளேலோர் எம்பாவாய்!**

*சேக்காளிப் பெண்களுக்கு கோபம் வந்தது. அதை ஒட்டிக் குணமும் வந்தது. இன்னும் விடியவில்லை. இளம் இருள் கலையும் நேரம். ஒரு பெண் சாளரத்தின் வழியே பள்ளியறையை எட்டிப் பார்த்தாள். திடுக்கிட்டு விட்டாள்.*

*பள்ளியறையில் சப்பரமஞ்சக் கட்டில். அதன்மேல் கனத்த மெத்தை. அதற்கும் மேலே பூங்கொடி ஒன்று படுத்திருப்பது போலப் படுத்துக் கிடக்கிறாள் பெண்.*

*கட்டிலின் பக்கத்தில் உயரமான குத்துவிளக்கு. நெய் நிறைய ஊற்றிப் பொருத்தி வைத்ததால் விடிவிளக்காய் அது சுடர்விட்டு எரிகிறது.*

*சப்பரமஞ்சத்தில் படுத்த பெண்ணுக்கு இரவு நெடுநேரம் வரை உறக்கம் வரவில்லை. பக்கத்திலிருந்த கிருஷ்ண விக்ரகத்தை எடுத்தாள். அதன் அழகைப் பார்த்து மகிழ்ந்தாள். அதனிடம் மனம்விட்டு என்னென்னவோ பேசினாள். விக்ரகத்தை மார்பின்மேல் வைத்துப் பார்த்து அனுபவித்தபடியே உறங்கிவிட்டாள் பெண்.*

*இதைப்பார்த்த பெண் திடுக்கிடுவது இயல்புதானே. 'இந்தக் கிருஷ்ணன் பொல்லாத போக்கிரியாக அல்லவா இருக்கிறான்? அவளை அனுபவிக்கிற மயக்கத்தில் அவனுக்கும் அல்லவா காது செவிடாய்ப் போய்விட்டது' என்று பதறுகிறாள் பெண். அப்படியே தலையைக் கவிழ்த்துக் கொண்டு "நல்ல ஆம்பளை ஐயா நீ! கதவைத் திற முதலில்" என்றே கத்தி விடுகிறாள். அப்பொழுதும் கதவு திறக்கவில்லை. "சேச்சே! கிருஷ்ணனாவது கட்டிலின் மேல் ஏறி அவளைக் கட்டிப் பிடிக்கிறதாவது?" என்று ஒரு தெளிவு பிறக்கிறது, சாளரத்தின் வழியே பார்த்த பெண்ணுக்கு. வெட்கமும் நாணமும் வந்து தழுவிக் கொள்கிறது. உடனே இந்த அசடுதான் அந்தக் கிருஷ்ணனை இரவெல்லாம் தொந்தரவு படுத்தி இருக்கிறது என்று ஆத்திரப்படுகிறாள்.*

*"உன்னுடைய ஆசை மணாளனை கொஞ்சநேரம் கூட தனியே விடமாட்டாயா?"*

*"ஆசை எவ்வளவுதான் இருந்தாலும் பொம்பளைக்கு கொஞ்சம் அடக்கம் ஒடுக்கம் வேண்டாமா?"*

*"உன்னுடைய காரியம் உனக்கே ஒழுங்காய் இருக்கிறதா? கொஞ்சம் கூட நாகரிகம் (தத்துவம்) இல்லையே?"*

*இப்படிப் பொரிந்து தள்ளுகிறாள் பெண்.*

*இனிப்பாடல்:*

**குத்துவி ளக்கெரியக்**
**கோட்டுக்கால் கட்டில்மேல்**
**மெத்தென்ற பஞ்ச**
**சயனத்தின் மேலேறிக்**
**கொத்தலர் பூங்குழல்**
**நப்பின்னை கொங்கைமேல்**
**வைத்துக்கி டந்த**
**மலர்மார்பா வாய்திறவாய் !**
**மைத்தடம் கண்ணினாய்**
**நீஉன் மணாளனை**
**எத்தனை போதும்**
**துயிலெழ ஒட்டாய்காண் !**
**எத்தனை யேலும்**
**பிரிவாற்ற கில்லாயால் !**
**தத்துவம் அன்று**
**தகவேலோர் எம்பாவாய் !"**

*கலை என்றால் பண்பாடு என்றால் அது விளைவதற்கு ஏற்ற நிலம் வீடுதான். அதாவது குடும்பந்தான். வாழ்க்கைதான்.*

*வாழ்க்கையில் செழித்து ஓங்கும் கலையையும், பண்பாட்டையும் பள்ளிக் கூடங்களிலும், பாடத் திட்டங்களிலும் தேடிப் பார்த்தால் கிடைக்கவா செய்யும்?*

*இந்த அரிய உண்மை ஆண்டாளின் பாடல்களில் சுடர்விட்டுப் பிரகாசிக்கிறது.*

# பேச்சுத்துணை - 1

வாழ்க்கையில் காரியங்கள் நடந்தவண்ணமாக இருக்கின்றன. சில காரியங்கள் திட்டம் போட்டு எதிர்பார்த்தபடி நடக்கும். சில காரியங்கள் ஏறுக்குமாறாகவே நடக்கும்.

இப்படி நடப்பவற்றில் லாபம் கிடைக்கிறதும் உண்டு. நஷ்டம் ஏற்படுகிறதும் உண்டு.

நஷ்டம் வந்தால் மனம் துன்பப்படுகிறது. நோயானது உடம்பைப் பிடுங்கித் தின்பது போல உணர்ச்சியைப் பிடுங்கித் தின்கிறது அவமானம். அதனால் எரிச்சல் வருகிறது. மற்றவர்கள் மேல் வெறுப்பு உண்டாகிறது. அவர்கள் காரியங்களினிடத்து பகையே உண்டாகிறது.

துன்பத்தில் தத்தளிப்பவர்களால் மற்றவர்களுடன் சேர்ந்து உறவாட முடியவில்லை. மற்றவர்களுடன் கலகலப்போடு பழக முடியவில்லை. அதனால் வேண்டியவர்களையும் வேண்டாதவர்களைப் போல் பார்க்கிறார்கள். பயப்படுகிறார்கள். ஒதுங்கி விலகி நிற்கிறார்கள்.

நம்முடைய துயரத்தில் ஒருவரும் பங்கு கொள்ள மாட்டேன் என்கிறார்களே என்று கலங்குகிறார்கள். அநாதையாகி விட்டோமே என்று மயங்குகிறார்கள்.

யாராவது விசாரித்து ஆறுதல் சொல்ல வந்தால் அஞ்சிப் பின் வாங்குகிறார்கள்.

நஷ்டத்தை எடுத்துச் சொல்லி ஆறுதல் பெற தைரியம் இல்லை. அப்படி ஒரு கோழையாய் இருக்கிறது மனுச காரியம்.

சாதாரண விஷயங்களிலேயே இப்படி நொந்து துவள்கிற மனுசஜென்மம் காதலில் சிக்கிக் கொண்டால் என்ன பாடுபடும்.

துயரம் வந்தால் மனம் அனலில்பட்ட புழுவாய்த் துடிக்கும். பசி இருக்காது. தூக்கம் வராது. முகத்தில் இருந்த களை போய்விடும். மேல் எல்லாம் தேமல் விழுந்துவிடும்.

உடம்பு மெலியும். ஞாபகம் தேயும். சட்டை தொழ தொழ என்று ஆகிவிடும். கட்டிவிடக் கட்டிவிட உடையானது நெகிழ்ந்து அவிழும். பற்றி எடுக்கிற பொருள் நழுவும். பெண்ணுக்கோ சொல்ல வேண்டியது இல்லை. இறுக்கமாய்க் கையில் போட்ட வளையல்களே ஒவ்வொன்றாய் கழன்று ஓடும். கண்ணுக்குத் தெரிந்தாலும் மனதுக்கு ஒன்றுமே தெரியாது.

அவஸ்தைக்கு உள்ளாகிறபொழுது மனிதர்கள் தனிமைப்பட்டு விடுகிறார்கள். துணை இல்லாமலே போய் விடுகிறது. தங்கள் வேதனைகளைத் தங்களுக்குத் தாங்களே சொல்லிக் கொள்வார்கள். அப்படிச் சொல்வதற்குப் புலப்பம் என்று பெயர்.

சில சமயம் வேறு யாரிடமாவது நிலைமையை எடுத்துச் சொல்ல தவிப்பு உண்டாகும். உதவி வேண்டி முறையிடவும் மனம் துடிக்கும்.

மனிதர்களிடம் முறையிட்டு உதவி வேண்டக்கூடிய காரியம் இல்லையே காதல். அதனால் மயில், குயில், கிளி, மான் முதலிய உறவாடும் பிராணிகளிடம் சொல்லி ஆறுதல் பெறும் இதயம்.

கடவுள்த் தத்துவத்தில் ஆண்டாளுக்கு ஒரே ஈடுபாடு. காதல் வெறியாய்ப் போய்விட்டது பக்தி. பக்தியானது நன்றாகப் பழுத்துக் கனியக் கனிய அது காதல் வெறி என்னும் தேனாக ஊறும்.

கண்ணனையே நினைந்து நினைந்து தேகம் இளைத்துப் போய்விட்டது. வளையல் கழன்று ஓடுகின்றன. நெடுநேரம் தனியாக உட்கார்ந்திருந்தாள். பிறகு முற்றத்துக்கு வந்தாள். அப்புறம் கொல்லைப்பக்கம் போனாள்.

ஒரு மாமரத்தின் கிளையில் உட்கார்ந்து தளிரைக் கொத்திக் கிழிக்கிறது குயில். மாமரத்தை ஒட்டி புன்னைமரம், குருக்கத்திச் செடி, குங்குமம், சுரபுன்னை எல்லாம் சேர்ந்து புதராய் மண்டிக் கிடக்கின்றன.

குயிலினிடம் சொல்கிறாள் பெண். "நீலமணி போன்ற அழகிய கண்ணனை மனதார விரும்பியது குற்றமா? அதற்காக நான் இந்தக்கதி அடைய வேண்டுமா? என் வளையலுக்குமா இக்கதி ஏற்பட வேண்டும். குயிலே! நீயாவது அவனிடம் என் நிலைமையைச் சொல்லி அவனை வரும்படி கூவக்கூடாதா?"

இப்படி இடிந்து கரைகிறாள் பெண்.

இனிப்பாடல்:

**மன்னுபெ ரும்புகழ்**
**மாதவன் மாமணி**
**வண்ணன், மணிமுடி**
**மைந் தன்**
**தன்னை உகந்தது**
**காரண மாகஎன்**
**சங்கிழக் கும்வழக்(கு)**
**உண் டோ!**

**புன்னை குருக்கத்தி**
**ஞாழல் செருந்திப்**
**பொதும்பினில் வாழும்**
**குயி லே !**
**பன்னிளப் போதும்**
**இருந்து விரைந்தென்**
**பவளமா யன்வரக்**
**கூ வாய் !**

*மேலும் குயிலிடம் வேண்டுகிறாள்.*

*"செண்பக மலர்களை மூக்கால் கோதி அந்த மணத்தில் கிறுகிறுத்து எக்காளம் பாடும் குயிலே" என்று பொடி வைத்து அழைக்கிறாள் குயிலை. அழைத்து,*

*"என் மனசை மயக்கி என் உணர்ச்சி முழுவதும் நிறைந்து விட்டான் அந்தக் கண்ணன். அவன் ஞாபகந்தான் எனக்கு. ஆனாலும் எதிரில் வரமாட்டேன் என்கிறான். இப்படியாக என் எண்ணத்தைச் சிதறடித்து என் உயிரை அணு அணுவாய்க் கொல்கிறான் (உயிர்பெய்து - உயிரை விரட்டி) இது ஞாயமா? குயிலே! நீ சத்தம் போட்டுப் பாடினால் எனக்குத் தொந்தரவாக இருக்கிறது. பாடாமல் நீ சும்மா இருந்தாலும் எனக்குப் பயமாக இருக்கிறது. அதனால் அமர்ந்த சுருதியில் அவன் பெயரை பாடு. உன்னுடைய கனிந்த குரல்தான் அவனை அழைத்து வரவேண்டும்."*

*இனிப்பாடல்:*

**வெள்ளை விளிசங்கு**
**இடம்கையில் கொண்ட**
**விமலன் எனக்குருக்**
**காட் டான் !**
**உள்ளம் புகுந்தென்னை**
**நைவித்து . நாளும்**
**உயிர்பெய்து கூத்தாட்டுக்**
**கா ணும் ?**

கள்ளவிழ் செண்பகப்
பூமலர் கோதிக்
களித்திசை பாடும்
குயி லே !
மெள்ள இருந்து
மிழற்றி மிழற்றாதென்
வேங்கட வன்வரக்
கூ வாய் !

வெள்ளை விளிசங்கு - வெண்ணிறமும் 'பூம் பூம்' என்று கூப்பிடு (விளிக்கு)ம் நாதமும் சங்கை உடையவன். கண்ணன் எனக்கு உருகாட்டான் - என் எதிரில் வரமாட்டேன் என்கிறான். உயிர்பெய்து - என் உயிரை அணுஅணுவாய்ச் சிதைத்து, அதாவது ஆசையைப் பெருக்கி அலைக்கழிக்கிறான். கள்அவிழ் - தேன்சொட்டும். மிழற்றி மிழற்றாது - சத்தம் இல்லாமல் மெள்ளப்பாடி.

# பேச்சுத்துணை - 2

குயிலிடம் தன்னுடைய துயரத்தை எடுத்துச் சொன்னாள் பெண். உதவி செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டாள். அப்படியே வீட்டுக்குள் வந்தாள். இரண்டாம் கட்டுக்கே வந்துவிட்டாள். அங்கே கிளிக்கூண்டு ஆடிக் கொண்டிருக்கிறது. கூண்டுக்குள் இருக்கிற கிளியும் சோர்ந்து போய் ஆடிக் கொண்டிருக்கிறது.

வேளா வேளைக்கு மறக்காமல் வெள்ளித்தட்டில் பால்ச் சோறும் நெய்ச்சோறும் கொண்டு வந்து கொடுப்பாள் பெண். பழங்களையும் அடிக்கடி கொண்டு வந்து கொடுப்பாள். ஆனால் இரண்டு மூன்று நாட்களாக கிளியைக் கவனிக்கவில்லை பெண்.

இது நினைவுக்கு வந்ததும் பெண் துடித்து விட்டாள். அப்படியே ஓடிவந்து கூண்டைப் பிடித்துக் கொண்டாள். உள்ளே இருக்கும் கிளியைப் பார்த்துச் சொல்கிறாள்:

“என் தங்கக்கிளியே! இதோ கொண்டு வருகிறேன், உனக்குப் பாலும் பழமும். நீ எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும். வில்லிபுத்தூரில் அமர்ந்த பெருமான்மேல்

*ஆசைவைத்து ஏமாந்துவிட்டேன். அவன் ஞாபகத்தை மறக்க முடியவில்லை. அதனால் தூங்கவும் முடியவில்லை.*

*உலகளந்த உத்தமனாகிய பெருமான் நீ கூப்பிட்டால் வந்துவிடுவான். அவன் வந்து விட்டால் போதும். உன்னோடு அவனை உறவாட வைக்கிறேன்."*

*இப்படிச் சொல்கிறாள் பெண்.*

*இனிப்பாடல்:*

**மென்நடை அன்னம்**
**பரந்து விளையாடும்**
**வில்லிபுத் தூர்உறை**
**வான் தன்**
**பொன்னடி காண்பதோர்**
**ஆசையி னால்என்**
**பொருகயல் கண்இணை**
**துஞ் சா,**
**இன்அடி சி(ல்)லொடு**
**பால்அமு தூட்டி**
**எடுத்தஎன் கோலக்**
**கிளி யே !**
**உன்னொடு தோழமை**
**கொளச்செய் வேன்நான்**
**உலகளந் தான்வரக்**
**கூ வாய் !**

**சா**ப்பாடு *கொண்டு வந்தாள் பெண். பிசைந்து பிசைந்து உணவை உருட்டினாள். திரளை திரளையாக எடுத்து கிளிக்கு ஊட்டினாள். நன்றாகச் சாப்பிட்டது. பசியோடு இருந்து சாப்பிட்டதால் வயிறு நிறைந்தவுடன் கிளிக்கு கிறக்கம் வந்து விட்டது. அப்படியே தூங்கிவிட்டது கிளி.*

*கொல்லைப்புறத்து மரத்திலிருந்து குயில் கூ, கூ என்று கூவிக் கொண்டிருக்கிறது. பெண்ணின் காதில் அந்தச் சத்தம் விழுந்தது. வீட்டின் பின்புறத்துக்கு வேகமாக வருகிறாள் பெண். வரும்பொழுதே "வண்டுமுரலும் தோட்டத்திலிருந்து கூவும் குயிலே, எம்பெருமானைச் சத்தம் போட்டுக் கூப்பிடு. கிளிபோன்ற பசுமையும், மலை போன்ற கருமையும் கூடிக்கலந்த நீலமேக சாமள வண்ணன் வலையில் விழுந்து விட்டேன் நான்.*

*அவன் இப்பொழுதே இங்கு வரவேண்டும். வராவிட்டால் என் கையிலிருந்து காணாமல் போன வளையலாவது எனக்குக் கிடைக்க வேண்டும்.*

*இரண்டில் ஒன்று நடக்க வேண்டும். அப்படியானால் தான் இங்கு வசிக்க உனக்கு உரிமை உண்டு."*

*இப்படி வெட்டொன்று துண்டிரண்டு என்று போட்டுவிட்டாள் பெண்.*

*இதோ வருகிறது பாடல்.*

**பைங்கிளி வண்ணன்**
**கிரீதரன் என்பதோர்**
**பாசத்(து) அகப்பட்(டு)**
**இருந் தேன்,**
**பொங்கொளி வண்டிரைக்**
**கும்பொழில் வாழ்குயி**
**லே! குறிக் கொண்டிது**
**நீ கேள்,**

**சங்கொடு சக்கரத்**
**தான்வரக் கூவுதல்**
**பொன்வளை கொண்டு**
**தரு தல்,**

இங்குள காவினில்
வாழக் கருதில்
இரண்டத்(து)ஒன் றேல்திண்ணம்
வேண் டும்!

கோலப்பொடி அல்லது மாவுக்குழம்பு இவற்றைக் கொண்டு விதவிதமான கோலங்கள் போடுவார்கள் பெண்கள். கண்ணுக்கும் மனதுக்கும் விருந்தாக இருக்கும் கோலம்.

முதலில் பொடியையோ, மாவையோ பொட்டுப் பொட்டாக வைப்பார்கள். பொட்டுகளுக்குப் புள்ளி என்று பெயர். ஒரு புள்ளியிலிருந்து இன்னொரு புள்ளிக்கு கோடு இழுப்பார்கள். கோடுகள் வளைந்தும் நெளிந்தும் பின்னிக் கொண்டு ஓடும். அந்தப் பின்னலிலிருந்து மனசில் உள்ள காட்சிகள் ஒவ்வொன்றாய் எழுந்து வரும். தெள்ளத் தெளிய எழுந்து வரும்.

கோடுகள் அவ்வளவும் புள்ளிமயந்தான். கணித நூல் வல்லாரிடம் கேட்டால், 'புள்ளிதான் மூலம். கோடுகள் எல்லாம் புள்ளிகள்தாம். வட்டம், சதுரம், முக்கோணம் அவ்வளவும் புள்ளிதான்' என்பார்கள்.

அணுவின் அடையாளம் புள்ளி. அண்டத்தின் அடையாளம் கோடு என்பார்கள். பேரண்டம் முழுவதுக்கும் கண்ணுக்குத் தெரியாத புள்ளியே மூலசூத்திரம் என்று முடித்து விடுவார்கள்.

பால், மோர் விற்கிற பெண் ஒவ்வொரு நாளும் சுவரில் பொட்டு வைப்பாள். அவ்வளவையும் கூட்டி பிறகு ரூபாய் அணா, பைசாவாக வாங்கிக்கொண்டு போவாள்.

சுவரில் போட்ட ஒவ்வொரு புள்ளியிலும் பாலையும் மோரையும் அப்படி அளந்து வைத்திருக்கிறது. வகுத்தல், கழித்தல், கூட்டல், பெருக்கல் என்று பள்ளிக் கூடத்தில் கணக்குப் படிக்கிற பையனுக்கு இந்தப்புள்ளி விளங்காது. அது காரணமாகவே "பள்ளிக்கணக்கு புள்ளிக்கு உதவாது" என்றார்கள். கணிதத்தையே கையில் வைத்திருக்கும் இந்தப் புள்ளி என்னும் சொல் மனிதர்கள்

– அதுவும் ஒரு விதப் போக்குள்ள மனிதர்களை உணர்த்துவதற்கு வரும்.

விபரம் தெரியாத ஒரு குறிப்பிட்ட ஆளை விசாரிக்கிற பொழுது புள்ளி எப்படி, புள்ளிக்காரன் எப்படி, புள்ளியை நம்பலாமா என்று கேட்பார்கள்.

குறிப்பிட்ட நபரின் பெருமையைச் சொல்லும் பொழுது, பெரிய புள்ளி, பெரும்புள்ளி என்பார்கள்.

ஒப்பந்தம் என்னும் காண்ட்ராக்ட்டை இப்பொழுது ஒப்பந்தப்புள்ளி என்று சொல்கிறார்கள்.

மர்மமான போக்குகளை விசாரணை செய்ய இந்தப் புள்ளி என்னும் சொல் வருகிறது.

குயிலிடம் முறையிடும் பெண் என்ன சொல்கிறாள்? "எனக்கும் அவனுக்கும் உள்ள சங்காத்தம் (ரகஸ்ய ஒப்பந்தம்) உனக்குத் தெரியாது. எங்களுக்குத் தெரியும். குயிலே நீ வேறு ஒன்றும் செய்ய வேண்டாம். அவனை என்முன் கொண்டு வந்துவிட்டால் போதும். பிறகு, நான் பார்த்துக் கொள்கிறேன் அவனை!

கோதண்டத்தை வளைத்து சரங்களைக் கொட்டும் வித்தகன், உணர்வோடு ஒட்டியவன் என்னோடு ஒட்டி உறவாடி இருக்கிறான்."

"புள்ளிக்காரன் அக்கம் பக்கம் விலக முடியாது."

இப்படிச் சொல்கிறார்.

இதோ வருகிறது பாடல்:

**சார்ங்கம் வளைய**
**வலிக்கும் தடக்கைச்**
**சதுரன், பொருத்தம்**
**உடை யன்,**
**நாங்கள்எம் இல்இருந்(து)**
**ஒட்டிய கச்சங்கம்**
**நானும் அவனும்**
**அறி தும்,**

தேங்கனி மாம்பொழில்
செந்தளிர் கோதும்
சிறுகுயி லே ! திரு
மா லை
ஆங்கு விரைந்தொல்லை
கூகிற்றி யாகில்
அவனைநான் செய்வன
கா ணே !

---

*சார்ங்கம் - வில். கச்சங்கம் - அந்தரங்கம். விரைந்து ஒல்லை - வேகமாகவும் நினைத்த மாத்திரத்திலும். கூகிற்றிஆகில் - அழைத்து வரவழைக்க முடியும் என்றால். அவனைநான் செய்வனகாண் - நான் அவனை என்ன செய்வேன் தெரியுமா?*

# கவிக்கு உணர்ச்சிதான் விஷயம்

படம் (சித்திரம்) நன்றாக இருந்தால் போதும். அதைப் பார்ப்பதில் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை எல்லோரும் போட்டி போடுவார்கள். ஆண்களுக்கும் அதைப்பார்க்க ஆசை உண்டாகும். பெண்களுக்கும் ஆசை உண்டாகும். ஏழை, பணக்காரன், விஞ்ஞானி, மெய்ஞ்ஞானி, கருப்பன், வெள்ளையன் எனும் வேற்றுமை படம் பார்ப்பதில் இல்லை.

ஓவியத்தில் உள்ள உயிரும் ஒளியும் எல்லோருக்கும் வெறியை உண்டாக்கி விடுகிறது.

தேவர்களை ஓவியமாக வரைந்திருக்கலாம் படத்தில். மனிதர்களையும் வரைந்திருக்கலாம். பசுவையும் கன்றையும் சேர்த்து வரைந்திருக்கலாம். ஏன், நாய், பூனை, கழுதை, குரங்கைக்கூடத் தீட்டி இருக்கலாம்.

காதல் ஜோடியும் படத்தில் வரும். அடியார் கூட்டமும் படத்தில் வரும். கத்தரிக்காயும் ஒன்றுதான். பூசணிக்காயும் ஒன்றுதான்.

சூரியோதயம், சந்திரோதயம், கடல், மலை, புஷ்பம், யானை, கட்டெறும்பு எல்லாம் ஓவியம் ஆகும்.

ஓவியம் களைகட்டி இருந்தால் போதும். பார்ப்பவர்களைப் பரவசப்படுத்திவிடும். காய்ந்த சருகா அன்றலர்ந்த தாமரைப் பூவா என்பது பிரச்சினை இல்லை. ஓவியத்தில் உயிர் இருக்கிறதா இல்லையா என்பதுதான் பிரச்சினை.

வஸ்துக்களோ, சம்பவங்களோ கலைக்கு உரிய விஷயம் அல்ல. கலையாக உருவாவதற்கு உணர்ச்சிதான் விஷயம். வஸ்துக்கள், சம்பவங்கள் பற்றிய (கலைஞனுடைய) அனுபவங்களும், ஆனந்தமுமே கலைக்கு உரிய விஷ்யம்.

கலைஞனுடைய மெய்யுணர்ச்சி வெளிப்படுவதற்கு வஸ்துக்களும், சம்பவங்களும் கருவியாக இருக்கின்றன. கோடு, புள்ளி, வர்ணம், வார்த்தை, தாளம் எல்லாமே உணர்ச்சியின் வெளியீடுகள். இவையே கலைஞனின் உணர்ச்சியை அபிநயம் பிடித்துக் காட்டுகின்றன.

சித்திரத்தில் கத்தரிக்காயைப் பார்க்கிறோம் என்றால், கத்தரிக்காயின் வழியாக சைத்திரிகனுடைய அனுபவத்தையும் ஆனந்தத்தையும் பார்க்கிறோம். அப்படிப் பார்ப்பதற்கு கத்தரிக்காய் இடம் கொடுக்கிறது.

அதனால்தான் சாப்பிட உதவும் கத்தரிக்காயை கிலோ ஆறு ரூபாய் என்று கடைக்காரன் சொன்னால் முகத்தைச் சுழிக்கிறோம். கத்தரிக்காய்க்கா இந்த விலை என்று பெருமூச்சு விடுகிறோம். ஆனால் கறிக்கு உதவாத கத்தரிக்காய் போட்ட படம் ஒன்றை ரூபாய் முப்பது நாற்பது என்று சொன்னாலும் ஆவலோடு வாங்குகிறோம்.

சித்திரம் எப்படியோ அப்படித்தான் கவியும். கலையானது எந்த உருவத்தில் இருந்தாலும் அதன் ஜாதகம் அப்படித்தான்.

கவியானது காதலைப் பற்றியதாகவும், பக்தி சம்பந்தமாகவும் இருக்கலாம். கொடுமையையும் சித்தரிக்கலாம். நன்மையையும் சித்தரிக்கலாம். மேளதாள முழக்கத்தோடு கூடிய கல்யாணக் காட்சியையும் வருணிக்கலாம். யுத்த முனையில் கையையும் இழந்து காலையும் இழந்து முண்டமாக, தண்ணீர், தண்ணீர் என்று

கதறி உருளும் வீரனுடைய கோரக் காட்சியையும் வருணிக்கலாம்.

காட்சியும் சம்பவமும் முக்கியம் அல்ல. அவை வெறும் கருவிதான். கலைக்கு உயிர் உணர்ச்சிதான்.

கடவுள் தத்துவத்தோடு ஒன்றித் திளைக்கிறவர் ஆண்டாள். எல்லாம் இறைவன் மயம். நாம் என்பதாக ஒன்றும் இல்லை என்னும் உண்மையில் உணர்ச்சி மயமாய் கரைந்து மருவுகிறவர் ஆண்டாள்.

ஆண்டாளின் அனுபவமும் பரவசமும் கவியாய் உருவெடுத்து வருகிறது. குறும்புத்தனமான காதல் அம்சத்தை வைத்து ஜோடனை செய்து வருகிறது ஆனந்த பரவசம்.

கண்ணன் மேல் மனம் வைத்த இளம் நங்கை சிநேகிதியுடன் ஆற்றுக்கு நீராடப் போனாள். பொழுது புலர்வதற்கு முன் இளம் இருட்டிலேயே அவர்கள் போனார்கள்.

ஆற்றில் இறங்கி அவர்கள் நீராடும்பொழுது அவர்கள் களைந்து கரையில் வைத்திருந்த ஆடைகளை எடுத்துக் கொண்டு மாயமாய் மறைந்து கொண்டான் கண்ணன்.

வெட்கமும் பயமும் வந்துவிட்டன பெண்களுக்கு. தண்ணீருக்குள் இருந்துகொண்டே ஆடைகளைக் கெஞ்சிக் கேட்கிறார்கள்.

உன் காலைத் தொட்டுக் கும்பிடுகிறோம். எங்கள் உடைகளை வீசி எறி என்று கதறி மருகுகிறார்கள்.

**கோழி அழைப்பதன் முன்னம்**
**குடைந்துநீ ராடுவான் போந்தோம்!**
**ஆழியம் செல்வன் எழுந்தான்**
**அரவணை மேல்பள்ளி கொண்டாய்!**
**ஏழைமை ஆற்றவும் பட்டோம்,**
**இனியென்றும் பொய்கைக்கு வாரோம்!**
**தோழியும் நானும்தொழு தோம்**
**துகிலைப் பணித்தரு ளாயே!**

குளிக்கும் பெண்களின் உடைகளை ஒருவன் எடுத்துக் கொண்டு போவது அடாத காரியம். எல்லாரும் அவனை வெறுப்பார்கள். பெண்கள் வாய்க்கு வந்தபடி எல்லாம் திட்டுவார்கள். ஊரில் உள்ளவர்கள் அவனை விரட்டி விரட்டி அடிப்பார்கள்.

அப்படி ஒரு போக்கிரித்தனமான காரியந்தான்.

ஆனால் இந்தப் போக்கிரித்தனத்தை காதல் உணர்ச்சியில் வைத்து பக்திப் பரவசத்தோடு அனுபவிக்க வைக்கிற கவி என்ன செய்கிறது. பெண்களின் அச்சம், நாணம், கதறல் எல்லாவற்றையும் அப்படி அப்படியே சாகாவரம் பெற்று நிற்க வைக்கிறது. கண்ணனுடைய சேட்டையையும் அப்படியே நிற்க வைக்கிறது.

நிற்க வைத்து கல்க்கண்டாய் இனிக்க வைக்கிறது. யோகம், தவம் இவைகளால் ஊடுருவிச் செல்ல முடியாத பேரானந்த நிலைக்கே நம்மைக் கொண்டு போய் விடுகிறது.

கவி செய்கிற காரியம் அது.

ஒவ்வொரு குழந்தையும் குழந்தையாக இருப்பதோடு இன்னொரு குழந்தையையும் மனசில் வைத்து உறவாடுகின்றன. இன்னொரு குழந்தையோடு சேர்த்து சதா உறவாடுவதின் காரணமாக எப்பொழுதும் உற்சாகமாக இருக்கும் குழந்தை. சதா பாவனா உலகத்திலேயே சஞ்சரித்துக் கொண்டு இருக்கும் குழந்தை.

பசி, தாகம், உறக்கம் இம்மூன்றுகாகவே தாய் தந்தையரைத் தேடும் குழந்தை. மற்றப்படி பழக்கம், உறவு, காரியம் எல்லாம் பாவனா உலகத்தோடுதான். மனசில் உள்ள குழந்தை உணர்வோடுதான்.

குழந்தையை மனசில் வைத்து உறவாடுவதினால் தான், பொம்மையைத் தூக்கி மடியில் வைத்துக் கொண்டு குழந்தையைக் கொஞ்சுவது போலக் கொஞ்சுகிறது குழந்தை.

பொம்மை கீழே விழுந்து விட்டால் குழந்தை பதறிவிடும். "அடிபட்டு விட்டதா கண்ணா" என்று

மயங்கும். பொம்மையின் கையைப் பிடிக்கும். காலைப் பிடிக்கும்.

டாக்டரைக் கூப்பிடட்டுமா? மருந்து சாப்பிடுகிறாயா? என்றெல்லாம் பொம்மையிடம் கெஞ்சிக் கொஞ்சும் குழந்தை.

மனசில் குழந்தையை வைத்திருப்பதால்தான் இப்படி எல்லாம் பாவனா உலகில் நடமாட முடிகிறது குழந்தைகளால்.

வாசல் தெளிப்பது, கோலம் போடுவது, மணல் வீடு கட்டுவது, கல், ஓடு இவைகளைக் கொண்டு வாழ்க்கை நடத்துவது எல்லாவற்றிலும் குழந்தைகள் பாவனா உலகம் மிளிரும்.

குறும்புக்காரப் பொடியன் ஒருவன் இவைகளை எட்டி உதைக்கிறான் என்றால் குழந்தைகளால் தாங்க முடியுமா?

மாயமாய் எப்படியோ வந்து இளம் பெண்கள் வைத்து அனுபவிக்கிற மணல் வீடுகளையும் பொம்மைகளையும் தட்டி எறிந்துவிட்டு ஓடி விடுகிறான் கண்ணன். அத்தனையும் காதல் குறும்புதான்.

அதனால் எரிச்சல் ஒரு பக்கம். பிரியம் ஒரு பக்கம். இப்படியாக தவிப்புக்கு உள்ளாகித் தத்தளிக்கின்றன குழந்தைகள்.

மெய்ஞ்ஞானச் சுடராகிய ஆண்டாளை இந்தக் காட்சி பரவசப்படுத்தி இருக்கிறது.

விண்ணையும் மண்ணையும் சேர்த்து அளந்த எம்பெருமானுடைய லீலா விநோதங்களை இந்தக் காட்சியில் வைத்து அனுபவிக்கிறார் ஆண்டாள்.

அனுபவம் எப்படி ஆனந்த முழக்கத்தோடு கவியாய் எழுந்து வருகிறதென்று பாருங்கள்.

முற்றத் தூடுபு
குந்து நின்முகம்
காட்டிப் புன்முறு
வல் செய்து,
சிற்றி லோடெங்கள்
சிந்தை யும்சிதைக்
கக்கட வையோ
கோவிந் தா!
முற்ற மண்ணிடம்
தாவி விண்ணுற
நீண்டளந்து கொண்
டாய்எம் மைப்
பற்றி மெய்ப்பிணக்
கிட்டக்கால் இந்தப்
பக்கம் நின்றவர்
என்சொல் லார்!

*கோபத்தை விடப் பிரியம் கூடுகிறது. அதனால் வெட்கப் படுகிறது குழந்தை. இப்படி நீ வம்பு (மெய்ப்பிணக்கு) பண்ணினால், பார்ப்பவர்கள் என்ன நினைப்பார்கள் என்று மருகுகிறது குழந்தை.*

# தை பிறந்தால் வழி பிறக்கும்

ஒரு வருடத்தைப் பன்னிரண்டு மாதங்களாகப் பகுத்து வைத்திருக்கிறோம். கார்த்திகை, மார்கழி, தை என்று அந்த மாதங்களுக்குப் பெயர் சூட்டியும் இருக்கிறோம்.

தை மாதமும் பன்னிரண்டு மாதங்களில் ஒரு மாதந்தான். ஆனாலும் தை மாதம் ஒன்றைத்தான் மாதப் பிறப்பு என்று சொல்கிறோம். தை மாதம் பிறக்கிற நாளை பொங்கல் நாள் என்கிறோம். அந்த நாளில் அன்பர்களுக்கு வழங்கும் பரிசை பொங்கல் பரிசு என்கிறோம்.

தை மாதப்பிறப்பை புனிதமான மங்கல நாளாக மதிக்கிறோம். தெய்வத் திருநாளாகவே போற்றுகிறோம்.

மாதப் பிறப்பு வருகிறதென்றாலே அதற்கு இரண்டு வாரம், மூன்று வாரங்களுக்கு முன்பே எல்லோரிடமும் ஒரு பரபரப்பு உண்டாகிறது. உல்லாசமே உண்டாகிவிடுகிறது.

வீட்டைத் துப்புரவு செய்கிறோம். வெள்ளை அடிக்கிறோம். சட்டி, பானை, பெட்டி, படுக்கை, துணிமணி எல்லாவற்றிலும் ஒட்டடை உடைசல்களை எல்லாம் அப்புறப்படுத்துகிறோம். பழையன கழிகின்றன. புதியன வருகின்றன.

பொங்கல் திருநாளன்று விடிவதற்கு நெடு நேரத்திற்கு முன்பே பெண்டுகள் எழுந்து முற்றத்தைப் பெருக்குகிறார்கள். சாண நீரால் தெளிக்கிறார்கள். கோலம் போடுகிறார்கள்.

நாமும் குழந்தைகளும் பெண்டுகளும் குளித்து விட்டுப் புத்தாடை புனைகிறோம்.

பெண்டுகள் குத்துவிளக்கை ஏற்றுகிறார்கள். பொங்கல் கட்டிகள் என்னும் அடுப்பை அடுக்கி வைக்கிறார்கள். பொங்கல் பானைகளிலிருந்து பால் பொங்குகிறது. சர்க்கரைப் பொங்கல், வெண்பொங்கல் எல்லாம் கமகம என்று மணக்கின்றன.

இந்த அற்புதக் காட்சியைப் பார்த்து அனுபவிக்க சூரிய பகவானே ஆவலோடு புறப்பட்டு வருகிறான்.

முற்றத்தில் உள்ள தாம்பாளம், வெற்றிலை பாக்கு, தேங்காய், பழம், புஷ்பம், விபூதிச் சம்புடம், மஞ்சள் குலை, வாழை இலை, கரும்பு, குத்து விளக்கு, பொங்கல் பானை, பெண்டுகள், குழந்தைகள், நாம், புத்தாடைகள், புன்முறுவல்கள் அவ்வளவையும் சூரியனுடைய பொன்னொளி வந்து ஆலிங்கனம் செய்கிறது.

அவ்வளவும் தங்கமயமாய் தகதக என்று ஜொலிக்கிறது. தமிழ் மக்கள் எல்லோரும் பொங்கல் திருநாளை - தை மாதப் பிறப்பை பக்திப் பரவசத்தோடு கொண்டாடுகிறார்கள். வட இந்தியர்களும் மகர சங்கராந்தி என்று இந்நாளை மதித்து வழிபடுகிறார்கள்.

தை மாதத்துக்கு மட்டும் ஏன் இவ்வளவுச் சிறப்பு? இந்தக் கேள்விக்கு உரிய விடை ரசமாக இருக்கும்.

பூமியானது சூரியனைச் சுற்றி வருகிறது. ஒரு சுற்றுச் சுற்ற ஆகும் நேரந்தான் ஒரு வருடம். சுற்றி வரும்பொழுது சூரியனின் வடபாரிசத்தில் ஆறு மாதமும்

தென் பாரிசத்தில் ஆறு மாதமும் பூமி சுற்றும். தென் பகுதியில் சுற்றுகிற காலம் உத்திராயணம். வட பகுதியில் சுற்றுகிற காலம் தட்சிணாயனம்.

சூரியனின் தென்பாரிசத்திலிருந்து வடபாரிசத்துக்கு பூமியானது அடி எடுத்து வைக்கும் நாள் தை மாதம் முதல் தேதி.

அப்பொழுது பூமியின் வடபகுதியில் சூரியனின் கிரணங்கள் அழுத்தமாக விழும். அங்குள்ள காற்று வலுவிழந்து ஒதுங்கும். அந்த வெற்றிடத்தை நிரப்ப பூமியின் தென் பகுதியிலிருந்து காற்றானது சீறி எழுந்து பாயும். அப்படிப் பாயும்பொழுது இந்து மகா சமுத்திரத்தில் உள்ள நீரை எல்லாம் அள்ளிக் கொண்டு ஓடும்.

மேற்குத் தொடர்ச்சி மலைச் சிகரங்கள் நீருண்ட மேகங்களைத் தடுக்கும். அதனால் தென் மேற்குப் பருவமழையாக கன்யாகுமரியிலிருந்து பம்பாய் முடிய மழை கொட்டு கொட்டென்று கொட்டும்.

மீதமுள்ள மேகங்கள் இமய மலையில் முட்டி மழை பொழியும்.

ஆறுகளில் வெள்ளம் பெருகி ஓடி வரும். நெல்லும் கரும்பும் வாழையும் காயும் கனியுமாக நிலமகள் பூத்துக் குலுங்குவாள்.

கார்நெல் அறுத்து வீட்டுக்குக் கொண்டு போன தமிழர்கள், பிசான நெல் அறுவடைக்கும் உரியவர்கள் ஆகிறார்கள்.

இப்படியாக புதிய வாழ்வுக்கு கைகொடுக்கிறது தைமாதம். அதனால் அதை வழிபட்டு வணங்குகிறார்கள்.

இப்பொழுது உத்திராயணம் தொடங்கும் நாள் டிசம்பர் இருபத்து ஏழு. அதாவது மார்கழி மாதம்

இரண்டாவது வாரம். ஆதி காலத்தில் இது தை மாதம் முதல் தேதியாக இருந்தது.

பூமியின் சுழற்சியிலும் வேகத்திலும் ஏற்பட்ட சின்னஞ்சிறிய வேறுபாடு காரணமாக - பல ஆயிரம் வருடங்களில் உத்திராயணம் தை மாதம் முதல் தேதியிலிருந்து மார்கழி மாதம் இரண்டாம் வாரத்துக்கு (முன்னேறி) வந்துவிட்டது. இந்த மாற்றம் வேத கால ஆரம்பத்திலேயே வந்து விட்டது. அதனால்தான் "மாதங்களில் நான் மார்கழியாக இருக்கிறேன்" என்று கண்ணன் சொல்வதாக வியாச முனிவர் பகவத்கீதையில் சொல்கிறார். வேதகாலத்துக்கு பல ஆயிரம் வருடங்களுக்கு முற்பட்டது தமிழர் திருநாள்.

இந்தத் தை மாதப் பிறப்பிலிருந்து ஒரு மாதத்துக்கு ஆதி காலத்தில் மகளிர் பாவை நோன்பு இருந்தனர். அதுவும் பின்னால் மார்கழி மாதத்துக்கு வந்து விட்டது. ஆனாலும் அந்தப் பூர்வமான பழக்கத்தை நினைந்து அதில் ஈடுபடுகிறாள் ஆண்டாள்.

காதலுக்கு அதிதேவதையாகிய மன்மதனை நோக்கியே சொல்வதாகப் பாடல்.

"மன்மதனே! உன்னையும் உன் தம்பியுமாகிய பிரம்மனையும் வேண்டிக் கொண்டு நான் விரதம் இருக்கிறேன். என் மனதுக்கு உகந்த கண்ணனை எனக்கு மணாளனாக அனுக்கிரகம் பண்ண வேண்டும்.

மாசி மாதம் வரும்வரை தை மாதம் முழுவதும் நான் நோன்பிருக்கிறேன். வீடு முழுவதையும் பெருக்கி சுத்தம் செய்து கோலம் போட்டு நோன்பிருக்கிறேன். பூமணம் பரப்பி பொன்விளக்கேற்றித் தவம் இருக்கிறேன். என் மனதையும் சுத்தம் செய்து ஒருமுனைப் படுத்தித் தவம் இருக்கிறேன். அருள் பாலிப்பாயாக" என்று பிரார்த்திப்பதாக விஷயம்.

தையொரு திங்களும்
தரைவிளக் கித்
தண்மண் டலம்இட்டு
மாசிமுன் னாள்
ஐயநுண் மணல்கொண்டு
தெருஅணிந் து
அழகினுக்(கு) அலங்கரித்(து)
அனங்கதே வா,
உய்யவும் ஆங்கொலோ
என்று சொல்லி
உன்னையும் உம்பியை
யும்தொழு தேன்,
வெய்யதோர் தழல்உமிழ்
சக்கரக் கை
வேங்கட வற்கென்னை
விதிக்கிற்றி யே !

*அற்புதமான பாடல். பாடப்பாட கவி நம்மைக் கரைத்துவிடும். கரைந்து கரைந்து நம்மை நாம் இழந்து விடுவோம். புதிய பிறவியே நமக்குக் கிடைத்துவிடும்.*

*அப்படிக் கிடைக்க வைப்பது தானே கவி.*

# அழஅழ வைக்கிறது அழகு

கவிஞர்கள் - புதுக் கவிஞர்கள் பட்டாளம் பட்டாளமாய்க் கிளம்பி விட்டார்கள். புற்றீசல் போலக் கிளம்பி விட்டார்கள். நாடு, நகரம், பட்டி, தொட்டி எங்கு பார்த்தாலும் இந்தப் புதுக் கவிஞர்கள் கூட்டந்தான்.

கலைத்தெய்வத்தையே "இரு, இரு. உன்னை ஒரு கை பார்க்காமல் விடப்போவதில்லை" என்று ஆவேசமாகவே இந்தப் புதுக்கவிஞர் கூட்டம் எழுந்து வந்து விட்டது.

எதைப்பற்றி வேண்டுமானாலும் இந்தக் கவிஞர் கூட்டம் நினைக்கும். நினைத்ததெல்லாம் கவியாகிவிடாது. தெரிந்ததெல்லாம் கவியாகி விடாது என்று எவ்வளவு தான் எடுத்துச் சொன்னாலும் இந்தக் கூட்டம் கேட்காது.

"யோசிக்க வேண்டும். அழுத்தமாகவே யோசிக்க வேண்டும். யோசனையானது உணர்ச்சியைத் தாக்க வேண்டும். அனுபவமாக விளைய வேண்டும். ஆனந்தமாக விம்ம வேண்டும். அப்புறந்தான் கவி உதித்து வரும்" என்று சொன்னால் உங்களுக்குப் புதுக் கவிதையைப் பற்றி என்ன தெரியும் என்று விளாசுவார்கள்.

*"புதுக்கவிதையின் மகத்துவம் தெரிய வேண்டுமானால் ஜப்பான் நாட்டுக் கவிதையை நீங்கள் படிக்க வேண்டும்" என்று ஒரே போடாய்ப் போட்டு விடுவார்கள்.*

*"கழுதைக்குத் தெரியுமா கரும்பு ருசி" என்பது நம்மைப் பற்றிய இவர்களுடைய கணிப்பு.*

**"கட்டிடத்தே ஜன்னல் - அதன்**
**கதவருகே மின்னல்**
**மின்னலிலோர் பின்னல்.**
**கதவருகே மின்னுகின்ற மின்னலிலோர் பின்னல்**
**அதைக்கண்டவர்கள் பேச்செல்லாம் கொன்னல்!"**

*இப்படிப் பாடுவார்கள். ஒவ்வொரு வரியையும் இரண்டு தரம் மூன்று தரம் மடக்கி மடக்கிச் சொல்வார்கள். தனித்தனி ஏற்ற இறக்கத்தோடு அவர்கள் சொல்லச் சொல்ல அரங்கத்தில் கூடி இருக்கும் அன்பர்களுக்கு வெறி ஏறும். ஒரே ஆரவாரந்தான். கைதட்டல்தான்.*

*உடனே இன்னொரு புதுக்கவிஞர் வருவார்.*

**"சூரியனிடம் இருந்த வெப்பத்தை வாங்கிக்**
**கொண்டான் அக்கினி**
**சந்திரனாக மாறிவிட்டான் சூரியன்.**
**சந்திரனோ அவள் முகம் ஆனான்.**
**நானோ, எங்கே சூரியன் வெப்பம் என்றேன்.**
**அவள் பார்வையில் சேர்ந்துவிட்டேன் என்றான் அக்கினி!"**

*இப்படி ஒரு பாடலை எடுத்துவிடுகிறார்.*

*கவிஞர் பாடி முடிப்பதற்குள் கொட்டகையே அதிர்ந்துவிடும். மேசை, நாற்காலி எல்லாம் தூள் தூளாய் பறக்கும்.*

**வெ***றும் அரிசி சோறாகிவிடாது. அதற்கு நெருப்பு வேண்டும். தண்ணீரும் வேண்டும். நெருப்பானது அரிசியை நேரடியாக ஒன்றும் செய்யக்கூடாது. தண்ணீரைக் கொதிக்க வைக்க வேண்டும். கொதிநீர்*

அரிசியைச் சாதமாகக் குழைக்கும். அப்படி யானால் தான் சோறு. இல்லாவிட்டால் அரிசி கருகி ஒன்றுக்கும் உதவாது.

இந்த உலகத்தில் நல்லதும் இருக்கிறது, கெட்டதும் இருக்கிறது. நாமும் இருக்கிறோம். கெட்டதை மட்டும் பார்க்கக் கூடாது. பார்த்தால் வெறுப்புத்தான் வரும். விரக்தியே உண்டாகிவிடும்.

விரக்தியும் வெறுப்பும் வார்த்தைகளாய் வரும்போது அது புதுக்கவிதைதான்.

கெட்டதைப் பார்ப்பதைப் போலவே நல்லதையும் பார்க்க வேண்டும். கெட்டவை நல்லவற்றைச் சூடுபடுத்த வேண்டும். அந்தச் சூட்டில் நம் உணர்ச்சி பழுக்க வேண்டும். கனிய வேண்டும். அப்படியானால் தான் கவி பிறக்கும்.

இந்த உண்மை புதுக்கவிஞர்களுக்கு விளங்கவே விளங்காது. நமக்கு அவர்களுடைய பாடல் விளங்க மாட்டேன் என்கிறது. அதுபோலவே உண்மையான கவிதைகள் அவர்களுக்கு விளங்காது. எளிமைக்கும் எளிமையாய், இனிமைக்கும் இனிமையாய், கல்கண்டாய், தேனாய் இருந்தாலும் உண்மையான கவி அவர்களுக்கு விளங்காது.

ஒரு பெண். அழகான பெண். பருவ மங்கை. பருவமும் அழகும் சேர்ந்து தங்கவிக்ரகம் போல தளதள என்று இருக்கிறாள்.

அவளைப் பார்க்கிறவர்கள் எல்லோரும் இந்த அழகு பிரம்மதேவன் சிருஷ்டித்து உண்டான அழகு இல்லை. தானே உண்டான அழகு என்று சொல்வார்கள். அழகுத் தத்துவமே தவம் செய்து எடுத்த அவதாரம் இந்தப் பெண் என்றும் சொல்வார்கள்.

அவளைப் பார்த்த கண்கள் புண்ணியம் செய்த கண்கள்தாம். பார்க்கப் பார்க்க கண்களுக்குப் பசி ஆறும். மனசும் பசி ஆறும்.

அவளே அடிக்கடி கண்ணாடி முன் நின்று தன்னைப் பார்ப்பாள். பார்க்கப் பார்க்க அவளையே மயக்கிவிடும் அவள் அழகு.

அழகான அந்தப் பெண்ணுக்கு ஒருவன் மேல் ஆசை உண்டாகி விட்டது. இவளுக்கு மோகவெறி ஊட்டிய ஆசாமி திருவரங்கத்தில் எழுந்தருளி இருக்கும் பெருமான். இந்த அழகுத் தெய்வத்தையே அவனுடைய அழகு உருக்கிவிட்டது.

ஆசை ஊற ஊற அவன் உறவு கிடைக்காமையால் சோர்ந்து விட்டாள். மெலிந்தே போய் விட்டாள். கையில் அணிந்த கலகலப்பான வளையல்கள் ஒவ்வொன்றாய் கழன்று உருள ஆரம்பித்து விட்டன. குழந்தைகள் உருட்டி விளையாடும் வட்டுப் போல - வளையம் போல ஓட ஆரம்பித்து விட்டன வளையல்கள்.

செவிலித் தாயிடம் பரிதாபமான தன் நிலையை சொல்வதாகப் பாடல்.

**எழில்உடைய அம்மனைமீர் !**
**என் அரங்கத்(து) இன் அமுதர்**
**குழல்அழகர் வாய்அழகர்**
**கண் அழகர், கொப்பூழில்**
**எழுகமலப் பூவழகர்**
**எம்மானார் என்னுடைய**
**கழல்வளையைத் தாமும்ஓர்**
**கழல்வளையே ஆக்கினரே !**

அற்புதமான பாட்டு, கலைமகள் கடாட்சம் அப்படியே இருக்கிறது பாட்டில். பாடப்பாட நாவில் தேனூறும். ஆனாலும் புதுக்கவிஞர்களுக்கு விளங்காது.

---

*கழல்வளையை - கலகலக்கும் வளையலை, கழல்வளையே - விளையாட்டு வளையம்.*

# உணர்வு இல்லை என்றால் வாழ்வும் இல்லைதான்

சி.இ.எம்.ஜோடு (C.E.M. Jwod) என்பவர் உயர்ந்த சிந்தனையாளர். இலக்கியம், கலை, தத்துவம் முதலிய பல துறைகளில் நிபுணர். இங்கிலாந்தைச் சேர்ந்தவர். அறுபது வருஷங்களுக்கு முன் அவர் சொன்னார், "வருங்காலத்தில் கவி, கலை இவைகளுக்குச் செல்வாக்கே இருக்காது. அவற்றின் மணமும் ருசியும் மக்களுக்குப் பிடிக்காது. அவற்றின் நடமாட்டம் ஜனங்களின் தேட்டத்திலிருந்து விலகி அருங்காட்சி அகத்துக்கு ஒதுங்கிவிடும்" என்று.

பெர்னாட்ஷாவோ, "கலையாவது மண்ணாங் கட்டியாவது! உங்களுக்குப் பெண் குழந்தை இருந்தால் யாராவது ஷேர் புரோக்கரைப் பிடித்துக் கல்யாணம் பண்ணி வையுங்கள். இங்கிலாந்தில் யோசிக்கிறவனே கிடையாது. உணர்வுள்ளவன் யாரென்று தேடி அலையாதீர்கள். அப்படி ஒருவனும் இனி அகப்பட மாட்டான்" என்று ஒரே போடாய்ப் போட்டுவிட்டார்.

பெர்னாட்ஷா சொல்லியும் நாற்பது ஐம்பது வருடங்கள் ஆகின்றன.

இலக்கியம், கவி இவைகளுக்கு ஓரளவு மவுசிருந்த காலத்திலேயே இவர்கள் அப்படிச் சொல்லிவிட்டார்கள். நிகழ்காலத்தின் போக்கை வைத்து எதிர்காலத்தை அப்படி எடை கட்டி விட்டார்கள் அந்த வித்தகர்கள்.

இப்படி எல்லாம் தீர்ப்பு வழங்க அவர்களால் எப்படி முடிந்தது? நமக்குத் தெரிய இரண்டு காரணங்கள் தாம் உண்டு. ஒன்று மக்களிடம் விஞ்ஞான ஆர்வம் இல்லை. இது ஒரு காரணம். இன்னொன்று கல்வி என்பது பிழைப்புக்காகத்தான், வேறு எதற்காகவும் இல்லை என்னும் தடித்தனம் வளர்ந்துவிட்டது.

நஞ்சு நாலுபடியா வேண்டும், இரண்டு துளி போதாதா? சமுதாயம் நாசமாய்ப் போக ஆயிரம் கொடுமைகளா வேண்டும்! மேலே சொல்லிய இரண்டும் போதும் தானே!

நம்மைச்சுற்றி அதிசயங்கள் நடந்தவண்ணமாக இருக்கின்றன. நமக்கு உள்ளேயே எத்தனையோ அதிசயங்கள் உள்ளன. நாமும் நம்மைச்சுற்றி உள்ளவைகளும் நம்பமுடியாத அதிசயங்கள்தாம். ஆனால் ஒன்றையாவது ஆவலோடு பார்க்க மனம் துள்ளுகிறதா? பார்த்து அனுபவிக்க ஆவேசம் உண்டாகிறதா? ஆனந்தமயமாய்க் கரைய உள்ளம் உருகுவதும் இல்லை. இளகுவதும் இல்லை.

கம்ப்யூட்டர் என்ன, விமானம் என்ன, தொலைபேசி என்ன, டெலிவிஷன் என்ன எத்தனை எத்தனை அதிசயங்கள்.

டார்ச்லைட்டும், கிராமபோனும், கடியாரமும் எல்லாமே அதிசயங்கள்தாம். பென்சிலின் மருந்தும் அதிசயந்தான். பெட்ரோலும் அதிசயந்தான்.

ஆனால் ஒவ்வொன்றையும் நாம் மதிப்பது இல்லை. மதித்தால் போதும். அதைப்பற்றிய அடிப்படை உண்மை நம் மனதில் பதியும். உணர்ச்சியை உருக்கும். அதைப் பார்த்துக் கரைவோம். கரையக் கரைய பக்தி ஊறிவிடும்.

பல ஆயிரம் வருஷங்களுக்கு முன் நம்மவர்கள் கொழுவையும், கலப்பையையும் கண்டுபிடித்தார்கள். தங்களுக்கு உணவும் உடையும் கொடுத்து அவை காப்பாற்றுகிற அற்புதத்தை ஆசையோடு பார்த்தார்கள். கொழுவையும் கலப்பையையும் தெய்வமாகவே மதித்தார்கள். ஏர்கட்டி உழுவதற்கு முன் கலப்பையைத் தொட்டு கைகூப்பி வணங்கினான். இன்றளவும் அப்படியே செய்கிறான் மனிதன். அந்தப் பழக்கந்தான் தராசைத் தொட்டு தினந்தோறும் வியாபாரியைக் கும்பிட வைக்கிறது. வாகனங்களை ஓட்டுகிறவர்கள் ஸ்டியரிங்கைத் தொட்டு வணங்க வைக்கிறது. விவசாயி, தொழிலாளி எல்லோருடைய உள்ளத்திலும் உண்மையானது அப்படி ஏறி அழுத்தமாய்ச் சப்பணம் போட்டு உட்கார்ந்து கொள்கிறது.

உண்மை வந்து ஒட்டக்கூடாது என்றால் பள்ளிக்கூடம் போக வேண்டும். பரீட்சை எழுத வேண்டும். உத்யோகம் பார்க்க வேண்டும். பக்தியும் வராது, பரவசமும் வராது.

தீயின் உபயோகத்தை அனுபவிக்க அனுபவிக்க அதன்மேல் பக்தி உண்டாகிவிட்டது. சமையலிலிருந்து இரும்பை உருக்கிப் பெரிய பெரிய கருவிகள் செய்வதுவரை அவ்வளவுக்கும் துணையாய் நிற்பது வெப்பந்தான். எல்லாம் நெருப்பு.

இந்த உண்மை மனசில் நின்றுவிட்டால் அக்னியைப் பகவான் என்று காலில் விழுந்து கும்பிட வேண்டியதுதானே!

மாட்டுவண்டி, குதிரைவண்டி இவற்றைப் பார்க்கிறோம். இவை நகர்வதற்கு உபயோகப்படும் கால்கள் சக்கரம்தான். இந்த வட்ட வடிவமான சக்கரந்தான் சைக்கிள், மோட்டார், ரயில், விமானம் எல்லாவற்றையும் நடக்க வைக்கும் கால்கள். சின்னஞ்சிறிய கடிகாரத்திலிருந்து பெரிய பெரிய எந்திரங்கள் முடிய எல்லாவற்றிலும் உள்ள உறுப்புகள் வட்ட வடிவமான சக்கரங்கள்தான். நீர் இறைப்பதற்குப் பயன்படுவதும் வட்டமான சக்கரந்தான். அடுப்பூத உபயோகப்படும் குழலும் வட்டந்தான். கண்,

மூக்கு, காது, மண்டை, விரல், எலும்பு, நரம்பு எல்லாம் உருளைதான். சதுரம் இல்லை.

அண்டபிண்ட சாராசரம் எல்லாம் வட்டந்தான். உறுதி வட்டத்துக்குத்தான் உண்டு. சதுரத்துக்கு அவ்வளவு இல்லை.

சக்கரத்தை அனுபவித்த முன்னோர்கள் அதை மகாவிஷ்ணுவின் கையில் உலகைக் காப்பதற்காக எதிரிகளை அழிக்கும் கருவியாகக் கொடுத்து விட்டார்கள்.

மயில் ஒரு பறவைதான். ஆனால் எந்தப் பறவைக்கும் இல்லாத இறகு - அதாவது தோகை மயிலிடந்தான் இருக்கிறது. தோகையின் பளபளப்பும், மிருதுவும், கண்ணைப் பறிக்கும் வண்ணமும் பார்க்கப் பார்க்கப் பரவசப்படுத்தியது. மயில் ஒரு அற்புதமான பிராணிதான்.

கல்லாலும் கம்பாலும் சண்டை போட்டவர்கள், எப்படியோ இரும்பை உருக்கி இலைவடிவமான கூரிய தகடு அடித்து வேலை உண்டாக்கி விட்டார்கள். அதைக் கையிலேந்தி எதிரிகளை 'வெல் வெல்' என்று முழக்கமிட்டு விரட்டு அடித்தார்கள். வெற்றி வெற்றி என்னும் பொருளில் 'வேல் வேல்' என்று குதித்து அடிக்கிறார்கள்.

போர்க்கலையில் இது ஒரு அற்புதந்தான்.

அற்புதமான மயிலையும் வேலையும் முருகப் பிரானிடமே கொடுத்துப் பத்திரப்படுத்தி இன்றளவும் வழிபட்டு வருகிறார்கள்.

விஞ்ஞான உணர்வென்றால் ஏட்டுக்குள் திணித்து மூட்டைகட்டி வைத்துவிடுவதில்லை. மக்களின் நாவிலும், கண்ணிலும், செவியிலும், மனத்திலும் சதா நடமாடிக் கொண்டிருக்க வேண்டும். மக்களின் வாழ்க்கையில் ஊடுருவி நிறைந்து பரிமளிக்க வேண்டும் விஞ்ஞானம்.

விஞ்ஞானம் எவ்வளவோ வளர்ந்திருக்கிறது இந்தக் காலத்தில். ஆனாலும் அது மக்களின் மனசை உருக்கவில்லை. உருக்கி இருந்தால் சிற்பம், சித்திரம், கவி, நடனம், கோவில், குளம், தேர், திருவிழா எல்லாவற்றிலும் அது பூத்துக் குலுங்கும். அப்படியாரும் மதிக்கவில்லை

விஞ்ஞானத்தை. ஏதோ வேலைக்காரனிடம் வேலை வாங்குவதைப் போல உபயோகப்படுத்திக் கொள்கிறோம். மற்றப்படி அதன் அற்புதத்தைப் பார்த்து அதிசயிக்கிற பண்பாடு வரவில்லை.

உண்மையைப் பார்த்து உருகுவதும் பரவசப் படுவதுந்தான் பக்தி. அப்படி ஒரு பக்தி உண்டாகாதபடி பார்த்துக் கொள்கிறது மதம். மதத்துக்குக் கொழுப்பு உண்டாகி வெறி ஏற ஏற பக்தி பதறிவிடுகிறது. நழுவி ஒதுங்கியே விடுகிறது. பக்தியை முற்றும் ஒழித்துக்கட்ட முடியாதபடி மதவெறி திணறுவது உண்டு. அப்படித் திறணுகிற போது அதிசயங்களை ஒதுக்கிவிட்டு வெறும் விபரங்களை மனனம் பண்ணுவது, ஒப்புவிக்கிறது என்னும் மூடப்படிப்பு இருக்கிறதே அது கைகொடுக்கிறது. இப்படியாக மெய்யுணர்வை, ஆனந்த பரவசத்தை, மரியாதையை, காதலை, பக்தியை தீர்த்துக் கட்டி விடுகின்றன மதமும், பாடத்திட்டமும்.

மதவெறியும் மூடக்கல்வியும் இந்த இரண்டும் அரசியலுக்குக் கையும் காலுமாய் இருக்கின்றன.

அரசியலே தஞ்சம் என்று அதனிடம் முழுக்க முழுக்க அடிமையாகிவிட்ட சமுதாயத்திடம் கலை உணர்வு எப்படி இருக்கும்? பக்தி எப்படி இருக்கும்? அனுபவமும் ஆனந்தமும் எப்படி இருக்கும்?

உலகம் போகிற போக்கைப் பார்த்துத்தான் அப்படி ஆற்றாமைப் படுகிறார்கள் ஜோடு முதலியவர்கள்.

ஆண்டாள் என்னும் நாச்சியார் ஒரு மெய்ஞ்ஞான விளக்கு. வெறும் புள்ளி விவரங்களைக் கட்டி அழுகிற பள்ளிக் கூடத்தில் போய் மாட்டிக் கொள்ளவில்லை அவர்.

ஒவ்வொன்றையும் அவர் உற்று நோக்கினார். வீடு, வாசல், மாடு, கன்று, தட்டுமுட்டுச் சாமான்கள், தாய், தந்தை, நண்பர், எல்லாம் அவருக்குப் பார்க்கப் பார்க்க இனிப்பாய் இருந்தன.

அன்பைப் பார்த்தார், பொறுமையைப் பார்த்தார், கோபத்தைப் பார்த்தார், ஆசையைப் பார்த்தார்,

சோர்வைப் பார்த்தார், மயக்கத்தைப் பார்த்தார். தெளிவையும் பார்த்தார்.

அன்பு என்பது காதலாய்ப் பரிணமித்து அது படுத்துகிற பாட்டைப் பார்த்தார். அதற்காக உடல், பொருள், ஆவி எல்லாவற்றையும் தத்தம் பண்ண வைக்கிற வேகத்தைப் பார்த்தார். அது பக்தியாய்ப் பூத்து மணக்கிற அற்புதத்தையும் பார்த்தார்.

"அன்பு இல்லாமல் எப்படி வாழமுடியும்? எங்கேயும் யாராலும் வாழ முடியாது" என்னும் உண்மை ஜொலிக்கிறதையும் பார்த்தார்.

அப்படிப் பார்த்தால் தானே கவி வரும்.

கண்ணன்மேல் வைத்த ஆசையானது வெறியாய் நிமிர்ந்து விட்டது. அவன் நினைப்புத்தான் எப்பொழுதும். அடிக்கடி 'கோவிந்தா, கோவிந்தா' என்று உளறிவிடுகிறாள்.

அவள் ஒரு கிளி வளர்த்தாள். இவளைப் பார்த்து அதுவும் மெலிந்துவிட்டது. இவளைப் போலவே அதுவும் கூப்பாடு போட ஆரம்பித்துவிட்டது. வெட்கப்பட்டு, செறுமி இவள் அதட்டினால் "உலகளந்தான்" என்று கத்தவே செய்கிறது கிளி.

மேலும் மேலும் அவன் காலம் தாழ்த்தினால் கிளி ஏங்கி உயிர் விட்டுவிடுமே என்று மயங்குகிறாள் பெண்.

"எப்படியாவது என்னைக் கண்ணனிடம் (துவாரகைப்பதிக்கே) கொண்டு போய்ச் சேருங்கள்" என்று தோழிகளிடம் கெஞ்சுகிறாள்.

**கூட்டில் இருந்து**
**கிளிஎப்போ தும்**
**'கோவிந்தா ! கோவிந்தா !'**
**என்றழைக் கும்;**
**ஊட்டக் கொடாது**
**செறுப்பனா கில்**
**'உலகளந் தான்' என்று**
**உயரக்கூ வும்;**

**நாட்டில் தலைப்பழி**
**எய்திஉங் கள்**
**நன்மை இழந்தத**
**னால்உயிர் போம்;**
**சூட்டுயர் மாடங்கள்**
**சூழ்ந்துதோன் றும்**
**துவரா பதிக்கென்னை**
**உய்த்திடு மின் !**

*கிளியை வெறும் பறவை என்றா பார்க்கிறாள் பெண். உயிருக்கு உயிராகப் பார்க்கிறாள்! ஒரு பெண் வலியப் போனாள் என்னும் அவச்சொல் ஏற்பட்டு, மானம் மரியாதை எல்லாம் போய் வாழ்க்கையே (உயிர்) நாசமானாலும் பரவாயில்லை.*

*இந்தக் கிளியைக் காப்பாற்ற வேண்டும். அதற்காக என்னை அவனிடம் கொண்டு போங்கள் என்கிறாள்.*

*உண்மை உணர்ச்சி அப்படிப் படலம் படலமாய் விரிகிறது செய்யுளில்.*

*அற்புதமான பாடல். பாடப்பாட நாவில் தேனூறும்.*

# மரத்துப் போய்விட்டது மனம் - 1

பேரண்டத்திலேயே நாம் வாழும் மண்ணுலகம் ஒன்றுதான் அற்புதப் பொக்கிஷம். அழகுக் களஞ்சியம். ஆனந்த ஊற்று. ஆனாலும் இந்த உலகம் ஒரு நாள்கூட அமைதியாக இருந்ததில்லை. எப்பொழுது பார்த்தாலும் யுத்தம் தான். எங்காவது ஒரு இடத்தில் சண்டை நடந்து கொண்டே இருக்கும்.

நமது பாரதகண்டத்தையே எடுத்துக் கொள்வோம். காஷ்மீர், பஞ்சாப், அசாம், உத்திரப் பிரதேசம், ஆந்திரா இப்படி எங்கெங்கும் வேட்டுச்சத்தம் கேட்டுக் கொண்டே இருக்கும். கைபர் கணவாயிலிருந்து திரிகோணமலை முடிய அக்கினி அபிஷேகந்தான்.

இந்தியாவைச் சுற்றி நாலா திசையிலும் பெரிய பெரிய போர்கள். பிர்மாண்டமான குருஷேத்திரங்கள்தான்.

ஒரு நாட்டைச் சுற்றி வளைத்து இருபது முப்பது நாடுகள் குண்டு மழையாய்க் கொட்டுகின்றன. எங்கு பார்த்தாலும் அலறல், கூக்குரல், இரைச்சல். ஒரே இடிபாடுகளும் பிணக்குவியல்களுமாய்ப் போய்க் கொண்டிருக்கிறது.

ஆனாலும் நாம் எல்லோரும் இடித்து வைத்த புளியாய் இருக்கிறோம். நம் காதில் ஒரு சத்தமும் விழமாட்டேன் என்கிறது.

நமது குழந்தை ஒன்று சைக்கிளில் அடிபட்டுவிட்டால், எப்படித் துடியாய்த் துடிக்கிறோம். எப்படிப் பதறுகிறோம். எப்படி எல்லாம் அலறுகிறோம்.

ஆயிரக்கணக்கில் செத்து மடிகிறார்களே மக்கள். ஏதாவது நம்மைத் தைக்கிறதா. அப்படி மரத்துப் போய்விட்டது நம்முடைய புத்தி.

பண்டித ஜவாகர்லால் நேரு இருந்தால் பதறுவார், நடுங்குவார், புழுவாய்த் துடிப்பார். யுத்தத்தை நிறுத்துங்கள் என்று கூப்பாடு போடுவார். யுத்தத்தால் ஒரு பிரச்சினையும் தீராது என்று எடுத்துச் சொல்வார். "ஏன் பார்த்துக் கொண்டு சும்மா இருக்கிறீர்கள். யுத்தத்தை நிறுத்த ஓடி வாருங்கள். கைகோர்த்துக் கொண்டு அவர்களுக்கு மத்தியில் நாம் குதிப்போம்" என்று முழங்குவார், செயல்படுவார்.

அவருடைய பதற்றமும் நடுக்கமும் நம் எல்லோருக்கும் வரும். உலகம் முழுவதுக்குமே வரும்.

ஆனால் பண்டித நேரு இல்லை. மகாத்மா காந்தி இல்லை. விண்ணுக்கும் மண்ணுக்குமாய்க் கொழுந்து விட்டு எரிகிறது மரணத்தீ.

மனச்சாட்சி உள்ளவர்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாய் இருக்கலாம். ஆனால் இவர்களுக்கு ஆதரவாக ஒருவரும் இல்லையே! இவர்கள் யாரிடம் போய் முறையிட முடியும்? "தெய்வங்களே, எங்களுக்கு நல்புத்தி கொடுங்கள்" என்று கதற வேண்டியதுதான். "வானமே, கடலே, வனவனாந்திரங்களே, மலையே, மானே, மயிலே நீங்களாவது எங்களைக் காப்பாற்றுங்கள்" என்று புலம்ப வேண்டியது தான்.

மனிதர்களுக்குப் புத்தி இல்லை. நாம் எல்லோரும் ஒன்றுதான் என்ற உண்மை உணர்ச்சி இல்லை. இருந்திருந்தால் இரண்டு கட்சியாகப் பிரிந்து, "இவனை அவன் அடிக்கிற அடியைப் பார். அவனுக்கு இவன்

கொடுக்கிற உதையைப்பார்" என்று ஆரவாரம் பண்ணி படுகொலைகளை அனுபவிப்பார்களா?

நமக்கு ஒரு கஷ்டம் வந்தால் மற்றவர்கள் நமக்கு ஆதரவாக இருக்க வேண்டும் என்று நினைக்கிறோம். ஆதரவு கிடைக்காவிட்டால் எல்லோருமே ஒத்துப்பேசி நம்மைச் சங்கடப்படுத்துவதாக மயங்குகிறோம். சங்கடம் ஏற ஏற தோட்டம், புஷ்பம், மயில், கடல் இவைகளின்மேல் கூடச் சந்தேகம் உண்டாகிறது.

அவைகள் மனிதர்களைவிட நம்பகமான பொருள்கள். அதனால் அவைகளிடம் மனம்விட்டு வாதாடலாம்.

அப்படி ஒரு பெண் கடலோடும், முல்லை மலரோடும் வாதாடுகிறாள்.

சூர்ப்பனகை ஒரு பொல்லாத அரக்கி. பழிபாவத்துக்கு அஞ்சாத ரௌடி. காரியம் என்றால் கொலைகூடக் (கொல்லை அரக்கி) செய்வாள். அவளுடைய மூக்கைச் சீவி அவள் கையில் கொடுத்துவிட்டான் லட்சுமணன். ராமனுக்காகத்தான் அப்படிச் செய்தான் லட்சுமணன். அப்படியானால் கதாநாயகன் ராமன் தானே! அதனால் மூக்கைச் சீவிய குமரன் என்றே ராமனைக் குறிப்பிடுகிறாள் பெண்.

"ராமாவதாரம் எடுத்த கண்ணன், என்னைக் கைவிட மாட்டேன் என்று சொல்லி இருக்கிறான். நான் ஒரு பெண் என்பது எப்படி உண்மையோ, அப்படியே அவன் சொல்லும் உண்மைதான்.

முல்லைமலரே! உன்னுடைய ஏளனப் புன்முறுவல் எல்லாம் என்னிடம் செல்லாது. வீணாக என்னிடம் விளையாடாதே!

ஓ, என்று கத்தும் கடலே! நீயுமா என்னைத் தொந்தரவு செய்ய வேண்டும்? எனக்கு நீ தாய் (அடைக்கலம்) அல்லவா?",

பிரிவில் வாடும் பெண் அப்படிப் புலம்புகிறாள். விவகாரம் பண்ணியே புலம்புகிறாள்.

முல்லைப் பிராட்டி !
நீஉன் முறுவல்கள்
கொண்டுஎம் மை
அல்லல் விளைவியேல்;
ஆழிநங் காய்உன்
அடைக்கலம் யாம்;
கொல்லை அரக்கியை
மூக்கரிந் திட்ட
குமரனார் தம்
சொல்லும்பொய் யானால்
நானும் பிறந்தமை
பொய்மைஅன் றோ !

*முல்லைப்பிராட்டி - முல்லை மலராகிய தாயே! அல்லல்விளைவியேல் - தொந்தரவு பண்ணாதே. ஆழிநங்காய் - கடலாகிய அன்னையே! சொல்லும்பொய் --- பொய்அன்றோ - நான் ஒரு பெண் என்பது நூற்றுக்கு நூறு உண்மை. அப்படியே அவன் என்மேல் வைத்திருக்கிற ஆசையும் உண்மை. அப்படி இருக்க நீங்கள் ஏன் தொந்தரவு பண்ணுகிறீர்கள்?*

## மரத்துப் போய்விட்டது மனம் - 2

கொல்லைப்புறத்துத் தோப்பிலிருந்து குயில் கூவுகிறது. சுதி சுத்தத்தோடு ஏற்றியும் இறக்கியும் பாடுவது போல இருக்கிறது குயிலின் சத்தம்.

யாரையோ நினைந்து ஏங்குவது போலவும், அந்த ஆசாமியை வா, வா, என்று ஆவலோடு கூப்பிடுவது போலவும் இருக்கிறது குயிலோசை.

காதல்வெற்றிக்கு உள்ளாகித் தத்தளிக்கிறாள் பெண். அவளுடைய காதில் குயிலின் இசை - கமக நயத்தோடு ஒலிக்கும் கம்பீரமான குரல் விழுகிறது. விழுந்த அந்தக் குரல் அக்கினித் திராவகத்தைக் காதில் விட்டதைப் போல இருக்கிறது.

"என்ன பாட்டு, மானங்கெட்ட பாட்டு" என்று சீறுகிறாள் பெண். கருடனைக் கொடியில் எழுதிப் பறக்கவிடும் பெருமான், வேங்கடநாதன் ஏமாற்றிவிட்டுப் போய் விட்டான். அதில் கிடந்து தவிக்கிறேன். நீங்களோ கும்மி அடித்துக் கொக்கரிக்கிறீர்கள்.

அவன் வருவதாக இருந்தால்தான் எனக்கு வாழ்வு. அப்பொழுது பாட வேண்டும் நீங்கள். நானும் அவனும் ஜோடியாக இருந்தே கேட்டு ரசிக்கிறோம் உங்கள்

பாட்டை. குயில்களே! அப்பொழுது பாடுங்கள் நீங்கள் நன்றாக."

இப்படிச் சொல்கிறாள்.

**பாடும் குயில்காள் !**
**ஈதென்ன பாடல், நல்**
**வேங்கடத் தின்**
**நாடர் நமக்கொரு**
**வாழ்வுதந் தால்வந்து**
**பாடுமி னோ !**
**ஆடும் கருளக்**
**கொடிஉடை யார்அருள்**
**செய்துள மைக்**
**கூடுவ ராயிடில்**
**கூவிநும் பாட்டுகள்**
**கேட்டுது மே !**

குயில் சத்தத்துக்குப் பதறுகிறாள் பெண். மல்லிகைப் பூ மலர்ந்தாலும் பயப்படுகிறாள். கடலின் சத்தத்துக்கும் கலங்குகிறாள். மழை பெய்தால் இவளுக்கு என்ன? அது 'சோ' என்று கொட்டும் போதும் நடுங்குகிறாள். கருகரு என்று மேகம் திரளும் போதும் பேதலிக்கிறாள்.

திருவேங்கட மலையில் எங்கு பார்த்தாலும் நீரூற்றுகளும், சுனைகளுமாக இருக்கின்றன. மெழுகிலிருந்து நீர் கசிவது போல பாறையை மூடி இருக்கும் மண் கண்டத்திலிருந்து நீர் ஒழுகிக் கொண்டே இருக்கிறது.

எப்பொழுதும் சாரலும் தூறலுமாய் இருக்கிறது மலை. "மலையில் எழுந்தருளியிருக்கும் அழகர், என்னைக் கட்டிப் பிடித்துத் தழுவ வேண்டும். அப்பொழுதல்லவா கொட்டி எங்களை நனைக்க வேண்டும் மழையே" என்று துவள்கிறாள் பெண்.

**மழையே ! மழையே !**
**மண்புறம் பூசிஉள்**
**ளாய்நின் று,**

**மெழுகூற்றி னால்போல்**
**ஊற்றும்நல் வேங்கடத்**
**துள்நின் ற**
**அழகப் பிரானார்**
**தம்மைஎன் நெஞ்சத்(து)**
**அகப்படுத் தித்**
**தழுவிநின் றென்னைத்**
**ததைத்துக்கொண் டூற்றவும்**
**வல்லை யோ !**

*இனி கத்துகிற கடலைப் பார்த்துப் புலம்புகிறாள் பெண்.*

*"கடலே! மந்தர மலையைப் போட்டு உன்னைக் கலக்குகிறான். உன் மடியிலேயே தலைவைத்துப் படுத்திருக்கிறான். உன்னைக் கட்டித் தழுவி உன் தவிப்பைத் தணிக்கிறான்.*

*என் ஊனிலும் உயிரிலும் ஊடுருவி என்னைத் தவிக்க வைக்கும் அப்பெருமானிடம் போய் — பாம்பணையில் படுத்திருக்கும் பள்ளியறைக்கே நீ போய், 'ஒரு பெண்ணை இப்படி எல்லாம் கொடுமைப் படுத்துவது நியாயமா' என்று கேள்."*

**கடலே ! கடலே !**
**உன்னைக் கடைந்து**
**கலக்குறுத் து,**
**உடலுள் புகுந்துநின்(று)**
**ஊறல் அறுத்தவற்கு;**
**என்னை யும்**
**உடலுள் புகுந்துநின்று**
**ஊறல் உறுக்கின்ற**
**மாயற்((கு), என்**
**நடலைகள் எல்லாம்**
**நாகணைக் கேசென்(று)**
**உரைத்தி யே !**

*நடலை - துன்பம்.*

# நீறுபூத்த நெருப்பு - 1

ஒரு சிறு கூட்டம். பாரதியார் பற்றி பேராசிரியர் பேசிக் கொண்டிருக்கிறார். "பலே பாண்டியா! பேஷ், நீ ஒரு கவிஞன் தான்" என்று பாரதியாருக்கு சான்றிதழ் வழங்கும் தோரணையில் பாடல்களுக்கு விளக்கம் தருகிறார் பண்டிதர்.

பாரதியாரின் முதுகைத் தட்டிக் கொடுத்து, "பரவாயில்லை. நீயும் என்னைப் போல, அது இது என்று தெரிந்துதான் இருக்கிறாய். நல்ல புத்திசாலி தான்" என்னும் செருக்குக்குள் இருந்து வருகிறது பேச்சு. பண்டிதரின் பிரசங்கம்.

கூட்டத்தில் ஒரு சிலர் பக்கத்தில் உள்ளவர்களிடம் சொந்த விவகாரங்கள் குறித்துப் பேச ஆரம்பித்து விட்டார்கள்.

புலவருக்குக் கோபம் பொத்துக் கொண்டு வருகிறது. "கவனிக்க முடியாதவர்கள் வெளியில் போய்ப் பேசலாம். இங்கே இருந்து பேசினால் என் உணர்ச்சியும் வேகமும் நிலைகுலைந்து விடும்" என்று பொருமுகிறார்.

உணர்ச்சி இருந்தால் அது எப்படி நிலைகுலையும்? பாரதியாரையும் அவருடைய

பாடல்களையும் அனுபவித்துக் கரைகிறவர் மற்றவர்களை எப்படிப் பார்க்க முடியும்?

புலவர் பாரதியாரைப் பார்க்கவில்லை. தன் படிப்பையே பார்க்கிறார். அதனால் நிலைகொண்டு நிற்க முடியவில்லை. தல்ளாடி விடுகிறார்.

இனி ஒரு நடன அரங்கு. அறுநூறு எழுநூறு பேர் கூடி இருக்கிறார்கள். இளம் வயது நங்கை ஒருத்தி நடனம் ஆடுகிறாள். நட்டுவனார் பாடப் பாட அப்படியே பாட்டில் கரைந்து விடுகிறாள் பெண். உணர்ச்சிகளும் பாவங்களும் அப்படியே அவள் முன் தாண்டவம் ஆடுகின்றன. அவற்றைப் பார்த்துப் பார்த்துப் பரவசப்படுகிறாள் பெண். அவளுடைய பரவசத்தை அவளுடைய நடையும், பார்வையும், கையும், இதழும் அப்படி அப்படியே அபிநயம் பிடித்துக் காட்டுகின்றன.

கூட்டத்தில் சிலர் ஏதேதோ பேசுகிறார்கள். புண்ணாக்கு விலை என்னாச்சு? கருப்பட்டி விலை என்னாச்சு? என்று கூடப் பேசித் தீர்க்கிறார்கள். ஆனால் அக்கம் பக்கம் திரும்பவில்லை பெண். எதுவுமே அவள் காதில் விழவில்லை. பாடலோடும் பாடலின் பாவ உணர்ச்சிகளோடும் ஒன்றிவிட்டாள் பெண்.

படிப்பும் அகம்பாவமும் பெண்ணிடம் இல்லை. உணர்ச்சி ஒன்றே இருக்கிறது.

இனி, பெரிய நகரம் ஒன்றை எடுத்துக் கொண்டால் அலுவலகங்கள் நூற்றுக்கணக்கில் இருக்கின்றன. அவற்றில் ஆயிரக்கணக்கானவர்கள் வேலை செய்கிறார்கள். இளைஞர்களும் யுவதிகளும் பட்டாளம் பட்டாளமாக காரியாலயத்துக்குப் போகிறார்கள். வேலை முடிந்தபின் மாலையில் அப்படியே வீடு திரும்புகிறார்கள்.

அப்படித் திரும்புகிறவர்களில் எத்தனையோ யுவதிகள் எத்தனையோ இளைஞர்கள் அங்கங்கே காத்திருந்து சந்திக்கிறார்கள். பிளாட்பாரம், பாலம், சந்து, பொந்து, சினிமாக் கொட்டகை, காபி ஓட்டல், இங்கெல்லாம் மணிக்கணக்கில் இருந்து பேசுகிறார்கள்.

இவர்களை ஒட்டியும் உரசியும், கவனித்தும், கண்ணடித்தும் போகிறவர்களும் வருகிறவர்களும் ஏராளம். எத்தனைபேர் எத்தனை விதத்தில் தங்களைப் பார்த்தாலும் இந்தக் காதலர்கள் பேச்சுத் தடைப்படுகிறதா? உணர்ச்சி தடைப்படுகிறதா?

யாரைப்பற்றியும் இவர்கள் கவலைப்படுவதில்லை. ஒருவரும் இவர்கள் கண்ணில் படுவதே இல்லை.

உண்மை உணர்ச்சி இருந்தால் போதும். வேறு எதுவும் அதைப் பாதிக்காது.

சில்லறைக் காரியங்கள் அவ்வளவையும் உணர்ச்சியானது சுட்டுப் பொசுக்கி விடும். உள்ளத்தை உருக்கிவிடும் உணர்ச்சி. உருக உருக ஒன்றாய்க் கரைத்துவிடும் உணர்ச்சி.

உணர்ச்சிமயமானவர் ஆண்டாள். பக்தி உணர்ச்சியின் உச்சத்தில் நிற்பவர் ஆண்டாள். அதனால் அவர் எப்பொழுதும் கண்ணனையே பார்த்துக் கொண்டிருக்கிறார். ஆண்டாள் முன்தான் கண்ணனும் குடி இருக்கிறான்.

சில சமயங்களில் - பல மாதங்களில் ஒரு தடவை, அதுவும் பத்து நிமிஷம், பதினைந்து நிமிஷ அளவுக்கு மனம் வேறு எங்கோ போய்விடும். அப்படிப் போனது தெரிந்தவுடன் பதறிவிடுவார் ஆண்டாள்.

'என்னை ஏமாற்றிவிட்டுப் போய்விட்டானே பெருமான். அவனுடைய பித்தலாட்டத்தை (சுழலையை) நான் எப்படித் தாங்குவேன்?' என்று தவிப்பார்.

அப்படித் தவித்து உருகுவது, கண்ணனை நேருக்கு நேராகப் பார்த்து உருகுவதைவிட உயர்வுதான்.

அழகர்மலை என்னும் திருமாலிஞ் சோலையில் தம்பலப் பூச்சிகள் கூட்டம் கூட்டமாய்ப் பறக்கின்றன. வானவெளி முழுவதும் செந்தூரப் பொடியைத் தூவி விட்டது போல் இருக்கிறது அது.

*மகாமேரு மலையைப் போட்டு பாற்கடலைக் கலக்கி அமிர்தம் எடுத்த நாயகன் - அழகே உருவான கண்ணன் எழுந்தருளிய இடம் அப்படி இருக்கிறது.*

*இனிப்பாடல்:*

**சிந்துரச் செம்பொடி**
**போல்திரு மாலிரும்**
**சோலைஎங் கும்,**
**இந்திர கோபங்க**
**ளேஎழுந் தும்பரந்**
**திட்டன வால்,**
**மந்தரம் நாட்டி, அன்**
**றுமது ரக்கொழும்**
**சாறுகொண் ட**
**சுந்தரத் தோளுடை**
**யான்சுழ லையில்நின்(று)**
**உய்தும்கொ லோ !**

*கண்ணன் என்னை ஏமாற்றி விட்டான். இனி என் கதி அதோ கதிதான் என்று மயங்குகிறாள் பெண். அப்படி மயங்குவதுதான் உண்மை. உணர்ச்சிமயமாகப் பொங்கும் உண்மை அதுதான்.*

*ஐரோப்பிய நாடக ஆசிரியர்களில் தலை சிறந்தவர் 'மேட்டர்லிங்க்.' அவர் எழுதிய புளூகோட் (நீல அங்கி) என்னும் கதை ருசி நிறைந்தது.*

*ஒரு பெண். அவள்மேல் ஆசை கொண்டு ஆடவன் ஒருவன் அடிக்கடி அவள் பக்கம் வருகிறான். அவளுக்கு அவன்மேல் பிரியம் ஏற்படவில்லை.*

*ஒருநாள் ஒரு விருந்துக் கூட்டத்தில் அவனைப் பார்க்கிறாள். அன்று அவன் நேர்த்தியான நீலநிற மேலங்கி அணிந்திருக்கிறான். அது மிக்க அழகானது. பளபளப் பானது. விலைமதிக்க முடியாத கம்பீரம் நிறைந்தது.*

அந்த மேலங்கியோடு ஒய்யாரமாக இருந்த ஆடவன்மேல் பெண்ணுக்கு ஆசை உண்டாகிவிட்டது. வசியம் ஆகிவிட்டாள் பெண்.

அந்த நீலநிற அங்கியை அவளால் மறக்க முடியவில்லை. அந்த அங்கியே ஏறிட்டுப் பார்த்தது. சிரித்தது. கண்ணடித்தது. ஆலிங்கனம் செய்து வருடிக் கொடுத்தது. அதைப் பார்த்துப் பார்த்துச் சொக்கிப் போய்விட்டாள் பெண்.

காதலர்கள் ஒருவரிடம் ஒருவர் சிக்குவதற்கு எத்தனையோ அம்சங்கள் இருக்கும். அவற்றில் ஒரு அம்சம் மற்றவற்றை ஒதுக்கிவிட்டு தலைநிமிர்ந்து செயல்படும்.

பார்வை, புன்முறுவல், சிமிட்டு, இடக்கு, இங்கிதமான பேச்சு, அலங்காரம், ஒய்யாரம், மிடுக்கு, திறமை, இரக்கம், ஊக்கம் இப்படிப் பல அம்சங்கள் இருக்கலாம்.

அசட்டுத்தனம்கூட காதலுக்குக் காரணம் ஆகலாம். கமகம என்று மணம் கொடுக்கும் பூமாலையும் ஒரு அம்சந்தான்.

கண்ணனுடைய மார்பில் அப்படியும் இப்படியும் ஆனந்தமாய்ப் புரள்கிற துளப மாலையில் மனத்தைப் பறிகொடுத்து விட்டாள் பெண். அந்த மாலையின் கண்ணடிப்பில் நிலைகுலைந்த பெண் அவனில்லாமல் தவிக்கிறாள்.

மதயானைகள் முட்டிமோதும் திருமாலிருஞ் சோலையின் அதிபதியாகிய பெருமானை அன்று பார்த்ததோடு சரி. பிறகு அவன் தட்டுப்படவில்லை. அவனுடைய நீண்ட பெரிய துளப மாலை சதா எதிரில் நின்று ஆடுகிறது. சிரிக்கிறது. கிச்சம் காட்டுகிறது.

புழுவாய்த் துடிக்கிறாள் பெண். இவளுடைய ஏமாற்றத்தைக் கண்டு முல்லை அரும்புகள் ஏளனமாய்ச் சிரிக்கின்றன. மழைக் காலத்தில் மலரும் படா என்னும் மலரும் நையாண்டி பண்ணிச் சிரிக்கின்றன.

*'இந்தக் கொடுமையை நான் யாரிடம் சொல்லி முறையிடுவேன், சகியே!' என்று தோழியின் தோளைப் பிடித்துக் கலங்குகிறாள் பெண்.*

*ஆவலின் ஆவேசத்தைப் பார்த்துப் பரவசப்படுகிறார் ஆண்டாள். பாடலாய் உருவெடுத்து வருகிறது பரவசம்.*

*எப்படி என்று பாருங்கள்.*

**போர்க்களி றுபொரும்**
**மாலிரும் சோலைஅம்**
**பூம்புற வில்,**
**தார்க்கொடி முல்லைக**
**ளும், தவ ளநகை**
**காட்டுகின் ற,**
**கார்க்கொள் படாக்கள்நின்**
**று, கழ றிச்சிரிக்**
**கத்தரி யேன்**
**ஆர்க்கிடு கோதோ**
**ழீ! அவன் தார்செய்த**
**பூசலை யே!**

*அற்புதமான பாட்டு. மடக்கியும், திருக்கியும் வார்த்தைகளை தாளத்தில் வைத்து தாண்டவம் ஆடுகிறது இசை. உணர்ச்சிமயான இசை. அப்படி ஆட ஆட பெண்ணின் சோகமும் கலக்கமும் கைகோர்த்து எழுந்து வருகின்றன.*

# நீறுபூத்த நெருப்பு - 2

கோபாலகிருஷ்ண பாரதியார் அழகிய இசைப் பாடல்கள் பலபல பாடி இருக்கிறார். அவர் பாடிய நந்தனார் சரித்திரக் கீர்த்தனைகள் உயர்ந்த இசைப் பாடல்கள்.

**சபாபதிக்கு வேறு தெய்வம்**
**சமானம் ஆகுமா — தில்லை**

என்று, நந்தனார் கீர்த்தனையில் ஒரு பாட்டு.

"(கனக)சபாபதி" என்னும் பல்லவியை வசனத்தை வாசிப்பது போல் வாசித்தால் அதில் ஒன்றுமே இல்லை. சபாபதி, தெய்வம், என்னும் சொற்களில்தான் என்ன இருக்கிறது. இந்தச் சொற்கள் வெறும் சொற்களாக இருக்கும் வரை அவற்றிடம் ஒன்றுமே இல்லை.

காலஞ்சென்ற வீணை தனம்மாளின் புதல்வியும், இசைப்பேர் அரசியாகவும் விளங்கிய திருமதி ஜெயம்மாள் பாடினால்,

**சபாபதிக்கு வேறு தெய்வம்**
**சமானம் ஆகுமா — தில்லை**

என்பதை வளைத்து வளைத்துப் பாடினால் கேட்பவர்கள் எல்லோரும் உருகிவிடுவார்கள். பொன்னம்பலமும் நடராஜ

மூர்த்தியும் ஆனந்தத் தாண்டவமும் அப்படியே நம் உள்ளத்தைப் பிசையும்.

ஜெயம்மாள் பாட, அவருடைய அருமை மகள் பால சரஸ்வதி அபிநயம் பிடித்து இதற்கு ஆட ஆரம்பித்துவிட்டால் பிறகு நாமே பொன்னம்பலம் ஆகிவிடுவோம். நடராஜ மூர்த்தி ஆகிவிடுவோம். ஆனந்தத் தாண்டவமாகவே ஆகி விடுவோம்.

இப்படி எல்லாம் நம்மை வசப்படுத்திப் பரவசப்பட வைப்பது எது? தெய்வம், சபாபதி ... என்னும் வார்த்தைகள் அல்ல. அந்த வார்த்தைகளுக்குப் பின்னே இருக்கிற இசையும், தாளமுந்தான்.

இன்னும் கொஞ்சம் எட்டி யோசிப்போமானால் அந்த இசைக்கும் தாளத்துக்கும் பின்னால் கிடக்கிற கவிஞரின் பக்தியும் ஆனந்தமும்தான் என்பது தெரியும்.

கவிஞரின் அனுபவமும் ஆனந்தமும் இசையாகவும் தாளமாகவும் துள்ளி விளையாடுகின்றன. அந்த ஆட்டமும் பாட்டமுந்தான் தில்லை, சபாபதி என்றெல்லாம் வார்த்தைகளாய் அவதரித்து வந்துள்ளன. மற்றப்படி அகராதியிலும், நிகண்டிலும் உள்ள தில்லை, சபாபதி என்னும் வார்த்தைகள் இல்லை இவை.

அகராதியில் உள்ள தில்லை என்ற சொல்லுக்கு, சிதம்பரம் என்று பொருள் இருக்கலாம். அவ்வளவுதான். அதற்குமேல் உயிரோ, ஒளியோ ஒன்றும் கிடையாது.

இனி கடவுள் தத்துவத்தோடு சதா ஒன்றித் திளைக்கிறவர் ஆண்டாள். அவருடைய அனுபவங்களும் ஆனந்த பரவசங்களும் பொங்கிக் கொண்டு வரும். துள்ளி விளையாடும். இசையாக வடிவெடுக்கும். தாளம் போட்டு ஆடும். அகராதியில் உள்ள மான், குயில், கருவிளை, காயாம்பூ, மயில் என்னும் வார்த்தைகளைப் போல வார்த்தைகளாகத் தெறித்துவிழும். இசை, தாளம், வார்த்தை எல்லாம் புதியவை. அனுபவத்திலிருந்து உண்டானவை.

ஒவ்வொரு கவியும் ஒவ்வொரு சிருஷ்டி. தனித்த சிருஷ்டி என்று பார்க்க வேண்டும். அப்படிப் பார்த்தால் தான் கவி தெரியும். கவியின் வேகம் தெரியும். தமிழ் தெரியும். தமிழ் விளைந்து வருகிற அற்புதம் தெரியும்.

இல்லாவிட்டால் வெறும் வார்த்தை, பதவுரை, பொழிப் புரையோடு போய்விடும் பாட்டு.

இனி ஆண்டாள் பாடலைப் பார்ப்போம்.

திருமாலிருஞ்சோலை நாயகனாகிய பெருமான் ஏமாற்றிவிட்டுப் போய்விட்டான். எப்பொழுதும் அவன் ஞாபகந்தான்.

பெண்ணின் வீட்டுத் தோட்டத்தில் கருவிளை மரம் இருக்கிறது, களாமரமும் இருக்கிறது. காயாம்பூவும் பூத்துக் கிடக்கிறது. மயில், குயில் இவற்றுக்கும் பஞ்சம் இல்லை.

விளாம்பூ, களாப்பழம், காயாம்பூ, மயில், குயில் அத்தனையும் கருப்புத்தான். நீல வண்ணந்தான். இவைகளைப் பார்க்கப் பார்க்க அந்த மோசக்காரக் கண்ணன் நினைப்பு வந்துவிடுகிறது. அவ்வளவுதான் உள்ளம் கொதித்து விடுகிறது. தேகம் முழுவதும் பற்றி எரிகிறது.

துடிக்கிறாள் பெண். துடிப்பில் சொல்கிறாள், மயில், குயில், களா, விளா, காயா என்னும் சண்டாளர்களே, நீங்கள் திருமாலின் நிறத்திடமிருந்து ஏதாவது லஞ்சம் வாங்கி இருக்கிறீர்களா? இல்லாவிட்டால் அந்தப் பாவியின் நிறம் என்னை வதைப்பது போல நீங்களும் ஏன் என்னை வதைக்கிறீர்கள்?

இப்படி அலறுகிறாள் பெண்.

**பைம்பொழில் வாழ்குயில்**
**காள், மயில் காள்! ஒண்**
**கருவிளை காள்,**
**வம்பக் களங்கனி**
**காள், வண்ணப் பூவை**
**நறுமலர் காள்!**
**ஐம்பெரும் பாதகர்**
**காள்! அணி மாலிரும்**
**சோலைநின் ற**

**எம்பெரு மானுடை**
**யநிறம் உங்களுக்(கு)**
**என்செய்த தே !**

**து**யரம் வந்து இதயத்தைத் தாக்கினால் புத்தி பேதலித்து விடும். எல்லோருமே எதிரிகளாகத் தெரியும். ஒத்துப்பேசி சதி பண்ணுகிறார்கள் என்றுபடும்.

'அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்' என்பதன் பொருள் அப்பொழுது விளங்கும்.

சந்தேகம் வந்த வண்ணமாக இருக்கும். சந்தேகம் எதுவும் பலிக்காவிட்டால், சந்தேகப்பட்ட பொருள்களிடமே வலியச் சென்று உதவிகேட்க வைத்து விடும்.

மனம் ஒரு பொல்லாத மாயைதான்.

தோட்டத்தில் உள்ள வண்டுகள், பூஞ்சுனைகள், தாமரை மலர்கள் எல்லாம் கண்ணனுடைய மேனி போலவும், கண், முகம் போலவும் இருக்கின்றன.

இருந்தாலும் அவைகளிடம் கெஞ்சி வேண்டு கிறாள் பெண். "பூக்களில் மேயும் வண்டுகளே, சுனைகளே, தாமரைப் புஷ்பங்களே! எனக்கு நீங்களாவது ஒரு ஆறுதல் சொல்லக் கூடாதா?" என்று கை எடுத்துக் கும்பிடுகிறாள்.

**துங்க மலர்ப்பொழில்**
**சூழ்திரு மாலிருஞ்**
**சோலைநின் ற,**
**செங்கண் கருமுகி**
**லின்உருப் போல்மலர்**
**பூவின்நின் று**
**தொங்கிய வண்டினங்**
**காள் ! தொகு பூஞ்சுனை**
**காள் ! சுனை யில்**

**தங்குசெந் தாமரை**
**காள் ! எனக் கோர்சரண்**
**சாற்றுமி னே !**

# நீறுபூத்த நெருப்பு - 3

இருபதாம் நூற்றாண்டைப் பற்றிச் சொல்லும் போது பயங்கரமான நூற்றாண்டு என்று சொல்வார்கள்.

கொடிய மரணத்தின் திறந்த வாய் வரை உலகம் இரண்டு மூன்று தடவை போய் வந்திருக்கிறது. ஆனாலும் விஞ்ஞான வளர்ச்சியும் கண்டபடி விரிந்து பரந்திருக்கிறது.

சினிமா என்பது விஞ்ஞான வளர்ச்சியில் முக்கியமான ஒரு அம்சந்தான். நூற்றுக்கணக்கில் படங்கள் வந்த வண்ணமாக இருக்கின்றன.

ஒவ்வொரு படத்திலும் மலை, கடல், ஆறு, வனம், பறவை, விலங்கு, புஷ்பம், சூரியோதயம், சந்திரோதயம் முதலிய இயற்கைக் காட்சிகள் கட்டாயம் இருக்கும்.

மனித வாழ்க்கையில் உள்ள மேடு பள்ளங்கள், முண்டு முடிச்சுகள் இவைகளை எடுத்துக் காட்டுவதுதான் சினிமாவின் நோக்கம். அப்படி எடுத்துக்காட்டுவதற்கு அச்சாரம் கொடுக்கிறது இயற்கைக்காட்சி.

பூர்வமான பாடல்களிலும் அப்படித்தான். உணர்ச்சியை வெளிப்படுத்தும் கலை, கவிதை எந்தக் காலத்தைச் சேர்ததானாலும் சரி, அவற்றுக்கு அஸ்திவாரம் போடுகிறது இயற்கைக்காட்சி.

ஆண்டாளுடைய பக்தி கனிந்த காதல் பாசுரங்களிலும் மயில், குயில், புஷ்பம், சூரியன், மழை முதலிய இயற்கை காட்சிகள் வந்து கொண்டே இருக்கின்றன.

**தி**ருமாலிருஞ் சோலையில் கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கிறான் பெருமான். அவன் வடக்கே நெடுந்தூரத்தில் உள்ள துவாரகையிலும் கொலு வீற்றிருப்பான். அவனுடைய ராஜதானிப் பட்டணம் பிரளய சமுத்திரத்தின் ஆல இலைதான். அத்தகைய பெருமான் ஒரு பெண்ணோடு பழகினான். உறவாடினான். பிறகு, 'இதோ வந்து விடுகிறேன்' என்று சொல்லி விட்டுப் போய்விட்டான். போனவன் திரும்பி வரவே இல்லை.

பெண்ணின் மனம் இடிந்துவிட்டது. உறக்கமே இல்லை. இரவெல்லாம் விழிப்புத்தான்.

ஒருநாள் விடியலுக்கு ஒரு நாழிகை முன்பே தோட்டத்தில் இருந்த கருங்குருவி கூட்டமாக எழுந்து உல்லாசமாகச் சிறகடித்துப் பாட ஆரம்பித்து விட்டன. குருவியின் சத்தத்தில் பெருமானின் பெயர் தொனிப்பதாகப் படுகிறது பெண்ணுக்கு. கண்ணன் வரவு பற்றி கட்டியம் கூறுவதாகவே நினைக்கிறாள் பெண்.

இது உண்மையாக இருக்குமா, இல்லை மயக்கம் (மருள்) தானா என்கிற சந்தேகமும் வந்துவிடுகிறது பெண்ணுக்கு. அப்படியும் இப்படியுமாக அலை மோதுகிறாள் பெண்.

**காலை எழுந்திருந்**
**து, கரி யகுரு**
**விக்கணங் கள்,**
**மாலின்வ ரவுசொல்**
**லி, மருள் பாடுதல்**
**மெய்ம்மைகொல் லோ ?**
**சோலை மலைப்பெரு**
**மான், துவ ரைப்பதி**
**எம்பெரு மான்,**

**ஆலின் இலைப்பெரு**
**மானவன் வார்த்தை**
**உரைக்கின்ற தே !**

*திருமால்மேல் காதல் கொண்டு தவிக்கிறாள் பெண். அவனை மறக்க முடியவில்லை. அவனுடைய பளபளக்கும் முகமும், பவள வாயும், அள்ளி அணைக்கும் கரமும் அப்படியே கண்முன் நிற்கின்றன.*

*அவன் வாயில் வைத்து ஊதுகிற சங்கின் நாதமும், கையில் வைத்து வளைக்கும் வில்லின் ஓசையும் செவிப் புலனைவிட்டு அகலவில்லை.*

*இவ்வளவையும் நேருக்கு நேர் நின்று என்று பார்ப்பேன் நான் என்று தவிக்கிறாள்.*

*திருமாலிருஞ்சோலையில் தரை முழுவதையும் மூடிவிட்டது கோங்க மலர்கள். இவள் மேனி முழுவதையும் பொன் முலாம் பூசியது போல மூடிவிட்டது தேமல். (கொன்றை மேல் தூங்குபொன் - தேமல்)*

*துயர வெறியிலேயே கிறங்கிப் போய் (தூங்குகிறாள்) கிடக்கிறாள் பெண். ஆனாலும் தேட்டம் குறையவில்லை.*

**கோங்கல ரும்பொழில்**
**மாலிரும் சோலையில்**
**கொன்றைகள் மேல்**
**தூங்குபொன் மாலைக**
**ளோடுட னாய்நின்று**
**தூங்குகின் றேன்,**
**பூங்கொள் திருமுகத்**
**துமடுத்(து) ஊதிய**
**சங்கொலி யும்,**
**சார்ங்கவில் நாண்ஒலி**
**யும்தலைப் பெய்வ(து) எஞ்**
**ஞான்றுகொ லோ !**

# நினைப்பது ஒன்று நடப்பது ஒன்று – 1

மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்பதற்காகவே மனிதன் பிறக்கிறான். அதற்காகவே வளர்கிறான். படிக்கிறான். பாடுபடுகிறான். பணம் தேடுகிறான். கல்யாணமும் பண்ணிக் கொள்கிறான்.

ஆனால் மகிழ்ச்சியாக மட்டும் அவனால் இருக்க முடியவில்லை.

மனிதனுடைய ஆனந்தத்தைக் கெடுப்பதற்கு எத்தனையோ தொல்லைகள். அத்தனையும் அணிவகுத்து நிற்பதைப்போல நிற்கின்றன.

உற்றார் தொல்லை, உறவினர் தொல்லை, எதிரிகளின் கொடுமை.

எதிரிகள் நம்மை இம்சிப்பார்களோ என்னும் எண்ணம் படுத்துகிற தொல்லை.

அதைவிட வேண்டியவர்கள் படுத்துகிற பாடு.

கடன் கொடுத்தவன் தொல்லை. கடன் வாங்கியவன் கொடுக்கிற தொல்லை.

இவ்வளவும் போதாதென்று உடம்பால் வருகிற கஷ்டம்.

அதைவிட உணர்ச்சியால் வருகிற துன்பம்.

யோசித்துப் பார்த்தால் வசமாக எதற்குள்ளேயோ நாம் மாட்டிக் கொண்டோம். மீளமுடியாதபடியே மாட்டிக் கொண்டோம் என்பது தெரியும்.

பருவம் அடைந்த ஒரு பெண் - மங்கை நல்லால் ஒருத்தி, எப்படித்தவம் இருக்கிறாள்? திருமணம் ஆக வேண்டுமே, புருஷனோடு ஆனந்தமாக வாழவேண்டுமே என்று அவள் இருக்கிற தவத்துக்கு அளவு உண்டா?

மாப்பிள்ளைக்காரனும் தவம் இருக்கத்தான் செய்கிறான்.

இவர்கள் இருக்கிற தவத்தைவிட இவர்கள் பெற்றோர் செய்கிற தவம் அதிகம்.

தக்க ஒரு ஆண்மகன் கையில் பெண்ணை ஒப்படைத்துவிட்டு நிம்மதியாக இருக்க வேண்டுமே என்று பெண்ணின் தாயும் தகப்பனும் தவியாய்த் தவிக்கிறார்கள்.

அப்படியே வாய்ப்பான இடத்தில் சம்பந்தம் பண்ணி மகனை வளமான சந்தோஷத்தில் பார்க்க வேண்டும் என்று பையனின் பெற்றோரும் நடையாய் நடக்கிறார்கள்.

மேளதாள முழக்கத்தோடு திருமணமும் நடக்கிறது. மாப்பிள்ளையும் பெண்ணும் உல்லாசமாகவே இருக்கிறார்கள்.

உல்லாசத்தை நிலைக்க விடுகிறார்களா?

அவர்கள் சந்தோஷத்தைப் பார்த்துப் பார்த்து மாப்பிள்ளையின் கூடப் பிறந்த சகோதரிகளே வயிற்றெரிச்சல் படுகிறார்கள்.

அதுவும் வாழாக்குடியாகவோ, கணவனைப் பறிகொடுத்தோ ஒரு சகோதரி அந்த வீட்டில் வந்து குடிபுகுந்து விட்டால் போதும்.

அவள் இவர்களைப் பார்க்கிற பார்வையே ஆலகால விஷமாக இருக்கும்.

நை, நை என்று பெண்ணை நச்சரித்து விடுவார்கள் மாப்பிள்ளையின் உடன்பிறப்புகள்.

போதாக்குறைக்கு மாப்பிள்ளையைப் பெற்றெடுத்து மடிமேல் போட்டு வளர்த்த தாய் இருக்கிறாளே, அவள் படுத்துகிற பாடு சொல்ல முடியாது.

தேள் கொட்டுவது போலக் கொட்டிக் கொண்டே இருப்பாள் மருமகளை. வரதட்சணையில் பாக்கி, பேசிக்கொண்டபடி நகைபோடவில்லை, சீர்வரிசையில் ஏமாத்து, பெண்ணுக்குப் பொறுப்பில்லை, ஒருவேலையும் சரியாய்ப் பார்க்கத் தெரியவில்லை, அடக்கம் ஒடுக்கம் காணாது என்பதெல்லாம் வெறும் சாக்குப் போக்குத்தான்.

உண்மை என்னவென்றால் அன்பு என்பது இல்லை.

மற்றவர்கள் சந்தோஷமாக வாழ்வதைப் பார்த்துப் பரவசம் அடையும் பண்பு என்பது இல்லவே இல்லை.

தொல்லைகளுக்கெல்லாம் காரணம் பொறாமை தான்.

அடர்ந்த காட்டில் ஆங்காங்கு நீர் ஓடைகள் இருக்கும். நீரோடைகளை ஒட்டி காடாய் மண்டிக் கிடக்கும் புதர். அந்தப் புதருக்குள் புலி பம்மிக் கிடக்கும்.

"ஓடையில் இறங்கி நீர்பருக எப்பொழுது மான் வரும். அதன்மேல் பாய்ந்து அதன் உடம்பை தும்புதும்பாய்க் கிழித்தெறிந்து உதிரத்தில் முக்கி முக்கி மாமிசத்தை எப்பொழுது தின்போம்?'' என்னும் ஆத்திரத்தில் புலி பம்மிக் கிடக்கும்.

மானும் வரும். நீருண்ண படித்துறையில் இறங்கும். ஆனந்தமாய் நீருண்டு, தாகம் தணிகிற வேளையில் ஒரே பாய்ச்சலில் மான்மேல் பாய்ந்து விடும் புலி. பதினாறடி வேங்கை.

பொறாமையும் அப்படித்தான்.

சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது.

வாய்ப்புக் கிடைத்தவுடன் ஒரே பாய்ச்சலில் பாய்ந்துவிடும். தொல்லைக்கு மேல் தொல்லையைக் கொடுக்கும்.

இந்த விஷயத்தில் மனிதர்கள் எல்லோருமே ஒன்றுதான். ஒருவர் அப்படி இன்னொருவர் இப்படி என்று சொல்வதற்கு இல்லை. மனித காரியம் என்றாலே அப்படித்தான்.

அதனால் எந்த ஒரு மனிதனையும் நொந்து கொள்வதில் பயன் இல்லை. விதியின் விளையாட்டு என்று விட்டு விடவேண்டியதுதான்.

கடவுளின் திருவிளையாடல் என்று சொல்கிறார்களே அதற்கு மனித வாழ்க்கைதான் விளக்கம்.

இப்படி ஒரு விளையாட்டை நடத்த விதிக்கு நல்லவர்களும் படைவீரர்கள்தாம்; கெட்டவர்களும் படைவீரர்கள்தாம்.

வேண்டியவர்களை விட்டும் விளையாடும். வேண்டாதவர்களை விட்டும் விளையாடும் எல்லாம் வல்ல விதி.

ஒரு பெண். அவள் குழந்தையாக இருக்கும் பொழுதே அவளுக்குக் கண்ணன்மேல் காதல் உண்டாகி விட்டது.

அவளுடைய பாட்டிமார் குழந்தை உஷாராக இருக்க வேண்டும் என்பதற்காக கண்ணனுடைய வீரப்பிதாபங்களை அவளுக்கு அடிக்கடி கதையாய்ச் சொல்லி வந்தார்கள்.

கண்ணனுடைய வீரம், குறும்பு, விளையாட்டு, அன்பு, அவனுடைய முகவெட்டு, கரிய நீலநிறத்தின் மினுமினுப்பு, அதில் கசிந்து ஊறிய அழகு இவ்வளவையும் குழந்தைக்கு கதை கதையாகச் சொல்லி வந்தனர் பாட்டிமார்.

கதையைக் கேட்கக் கேட்க குழந்தைக்கு கண்ணன் மேல் ஒரு ஆசையே உண்டாகிவிட்டது.

குழந்தை வளர வளர காதலும் சேர்ந்து வளர்ந்து வந்தது.

மங்கைப் பருவம் அடைந்து பெண் வளர்ந்து விட்டாள்.

பாட்டிமார் சொல்லியவை எல்லாம் அடிக்கடி ஞாபகத்துக்கு வரும்.

கண்ணனுடைய கருணை இருக்கிறதே - அன்பர்களின் துயர் தீர்க்க அவன் விரைந்தோடி வருகின்ற கனிவு, வந்து உதவுகிற பெருந்தன்மை.

இந்த அம்சங்கள், மற்றவற்றை ஒதுக்கி வைத்து விட்டு மங்கை நல்லாளின் உள்ளத்தில் ஒய்யாரமாக ஏறி வந்து கொலுவிருக்கும்.

அப்படியே மனக்கண்ணால் கண்ணனைப் பார்த்து மயங்குவாள் பெண்.

மயக்கம் காதலாகவே பூத்து விட்டது. தன்னை அப்படியே கண்ணனிடம் அர்ப்பணித்து விட்டாள் பெண்.

தன் நாயகனாகிய கண்ணன் - நீலநிற சாமள வண்ணனாகிய பேராளன் இன்னும் தன்னை அங்கீகரிக்க வில்லையே என்பதில் பெண்ணுக்கு ஒரு பெரிய ஏமாற்றம்.

"அவனை நினைந்து நினைந்து சதா உருகிக் கொண்டிருக்கிறேன். ஆனால் ஒரு தடவைகூட என்னை வந்து பார்க்க மாட்டேன் என்கிறானே!" என்ற எண்ணம் அடிக்கடி வருகிறது.

அப்பொழுதெல்லாம் அவள் இதயம் இடிந்து விடுகிறது.

அடக்கமுடியாத துயரவெறியை எப்படியோ சமாளித்துக் கொள்கிறாள் பெண்.

ஆனால் உற்ற தோழிமார்களாகிய சிநேகிதிகள் இருக்கிறார்களே, அவர்கள் இவள் மோக வெறியை அடிக்கடி கிளப்பி விடுகிறார்கள்.

இவள்மேல் அனுதாபப்பட்டு பரிந்து உருகுவதைப் போல பேசுகின்றனர்.

"கொஞ்சமாவது ஆம்பளைக்கு இரக்கம் வேண்டாம். ஒரு தடவை வந்து எட்டிப் பார்த்துவிட்டுப் போனால் அவருக்கு என்ன குறைந்து விடுகிறது?" என்றெல்லாம் உசுப்பி விடுகிறார்கள்.

*புண்ணில் புளியை வைத்து அப்புவதுபோல் இருக்கிறது அவர்கள் பேச்சு. கண்ணன் கொடுமையைவிட தோழிமார் கொடுமை தாங்க முடியாததாக இருக்கிறது பெண்ணுக்கு.*

*"ஜாடை மாடையாகப் பேசி என்னைக் கொதிக்க வைக்கிறது போதும்; என்னைக் காப்பாற்ற வேண்டும் என்னும் நினைப்பு உங்களுக்கு இருந்தால் கண்ணனைக் கூட்டிக் கொண்டு வாருங்கள்.*

*முடியாவிட்டால் அவன் வல்ல வேட்டாகத் தோளில் போட்டிருக்கும் மேலாடையை - பீதாம்பரத்தை யாவது வாங்கிக்கொண்டு வந்து என் வெப்பம் தணிய அதனால் விசிறுங்கள்" என்று அதட்டிக் கூப்பாடு போடுகிறாள் பெண்.*

**கண்ணன் என்னும் கருந்தெய்வம்**
**காட்சி பழகிக் கிடந்தேனை**
**புண்ணில் புளிபெய்தால்ப் போல**
**புறம்நின்(று) அழகு பேசாதே;**
**பெண்ணின் வருத்தம் அறியாத**
**பெருமான் அரையில் பீதகம்ஆம்,**
**வண்ண ஆடை கொண்டென்னை**
**வாட்டம் தணிய வீசிரே !**

*அருமையான பாடல், கோடி ரூபாய் கொடுத்தாலும் இப்படி ஒரு பாடல் கிடைக்காது.*

*ஒரு தடவை பாடிவிட்டால் போதும், பிறகு சும்மாவிடாது நம்மை. வளைத்து வளைத்து பாட வைத்துவிடும்.*

*பாடப்பாட வாய் மணக்கும். மனமோ கல்கண்டாய் கரைந்துவிடும்.*

# நினைப்பது ஒன்று நடப்பது ஒன்று - 2

*பார்ப்பதற்கு சிறிதாகத்தான் இருக்கும் புண். ஆனாலும் அதன் தொந்தரவு பெரிதுதான்.*

*எரிச்சலும் காந்தலும் சேர்ந்து அழ அழ வைத்துவிடும். விண் விண் என்று தெறிக்கும். அதனால் தேகம் முழுவதும் வலிக்கும்.*

*இவ்வளவு கொடிய புண்ணின் மேல் அக்கினி திராவகத்தைவிட்டால் தாங்க முடியுமா?*

*புளியம்பழத்துச் சாறும் அக்கினித் திராவகம் போலத்தான்.*

*புண்ணின் வாயில் இரண்டு சொட்டு விழுந்தால் போதும். தீயாயாப் பொசுக்கும்.*

*தன்னைப் புகழ்ந்தும் தன் காதலனைப் பழித்தும் பெண்கள் பேசப் பேச பெண்ணுக்கு ஆங்காரம் உண்டாகிவிட்டது.*

*தான் எவ்வளவு வேண்டுமானாலும் தன் நாயகனைப் பழித்துரைக்கலாம். மோசக்காரன் ஏமாத்துப் பேர்வழி என்றுகூடத் திட்டலாம்.*

மற்றவர்கள் தன் நாயகனைப் பற்றி ஒரு வார்த்தைக்கூட தவறாகச் சொல்லக்கூடாது. சொல்லி விட்டால் தாங்காது பெண்ணுள்ளம்.

தாங்காமல் துடிக்கிற துடிப்பு எப்படி வெட்டொன்று துண்டிரண்டு என்று விழுகிறது.

"புறம் நின்று அழகு பேசாது" என்று விழுகிறது.

அது மட்டுமா?

"உங்களுக்கு என் மேல் அக்கறை இருக்குமானால், ஆர்வம் இருக்குமானால் அவன் மேலாடையைக் கூட வாங்கி வர முடியாதா? வாங்கி வந்து என் வாட்டம் தீர - உலை கொதிக்கிற மாதிரி கொதிக்கின்றனவே என் உள்ளமும் உடலும், அவற்றின் காந்தல் தீர வீசத்தான் முடியாதா?" என்று அதட்டியே கேட்கிறாள் பெண்.

"வண்ண ஆடை கொண்டென்னை வாட்டம் தீர வீசிரே" என்பது ஈற்றின் நின்று உணர்ச்சியின் உச்ச வெறியை அபிநயம் பிடித்துக் காட்டுகிறது.

பெண்ணின் உச்ச வெறி இன்னும் எப்படி எல்லாம் தாண்டவம் ஆடிக்கொண்டு வருகிறது என்று பாருங்கள்.

கையிலே கட்டைக் கம்பை வைத்துக்கொண்டு பசுவையும் கன்றையும் மேய்ச்சல் காட்டுக்குக் கொண்டு போய் மேய்த்து வருகிற கண்ணன் - என் நாயகன் சாதாரணமானவன் அல்ல.

அவன் சகல உலகங்களையும் காக்கின்ற இறைவன். ஊழிக் காலத்தில் பாற்கடலில் ஆல இலையில் அமர்ந்து ஆனந்தத் துயில் புரிந்த பரமன்.

கும்பகோணத்தில் கோயில் கொண்டு எழுந்தருளி அருள்பாலிப்பவன்.

பக்தர்கள் கண்டுகளிக்க தலையில் கும்பக்குடங்களை அடுக்கி வைத்து, அவை கீழே விழுந்து விடாதபடி, லாகவமாக குதித்து ஆடும் கரக ஆட்டக்காரன். அவன் கழுத்தில் கிடந்து அசையும் துளப மாலையை -

*தும்பிக்கைபோல நீண்டு தொங்கி அசைந்தாடும் துளபமாலையை -*

*உடனே போய் அவனிடமிருந்து வாங்கி வாருங்கள்.*

*வாங்கி வந்து என் கூந்தலில் வைத்து முடியுங்கள்.*

*இதையாவது செய்யுங்கள்.*

*"வெந்த புண்ணை வேல் கொண்டு துளைப்பது போல் கன்னா பின்னா என்று உளறிக்கொண்டு இருக்காதீர்கள்" என்று பொருத்தில் அடித்தது போலச் சொல்கிறாள் பெண்.*

**பால்ஆல் இலையில் துயில்கொண்ட**
**பரமன் வலைப்பட்(டு) இருந்தேனை**
**வேலால் துன்னம் பெய்தால்போல்**
**வேண்டிற் றெல்லாம் பேசாதே**
**கோலால் நிரைமேயத்(து) ஆயனாய்**
**குடந்தை கிடந்த குடம்ஆடி**
**நீலார் தண்ணம் துழாய்கொண்டென்**
**நெறிமென் குழல்மேல் சூட்டீரே !**

*அன்பு மயமானது பெண்ணின் மனம். அதனால் அது மென்மையானது. எத்தனையோ வேதனைகளையும் சோதனைகளையும் தாங்கிக் கொள்கிறது.*

*புன்முறுவலோடும் மிகுதியான பொறுமை யோடும் தாங்கிக் கொள்கிறது. அதனால் அது வன்மையாகவும் இருக்கிறது.*

*கஷ்டங்களை அந்த உள்ளம் சாமான்யமாக வெளிக்காட்டாது.*

*தன் துயரங்களை வாய்திறந்து கொட்ட ஆரம்பித்துவிட்டால் அது விண்ணுக்கும் மண்ணுக்கும் எதிரொலிக்கும்.*

*இங்கே பெண்ணின் துயரவெறி அப்படி எதிலொலிப்பதை எடுத்துக் காட்டுகிறது பாடல்.*

கண்ணனுடைய வீரத்தையும், புகழையும், சாகசத்தையும் பாட்டிமார் சொல்லச் சொல்லக் கேட்டுக் கேட்டு மகிழ்ந்தாள் சிறு பெண்.

அந்தச் சின்னஞ்சிறு பேதையை கோயிலுக்கு அழைத்துக் கொண்டு போனாள் தாய்.

அப்பொழுது பெருமானுக்கு அலங்காரம் ஆகி புது மாப்பிள்ளை மாதிரி இருந்தான்.

பட்டர்கள் தீப ஆராதனை செய்தார்கள்.

மேளதாளம் முழங்கியது.

கோடி சூரியப் பிரகாசமாய்ப் பிரகாசித்தன பெருமானின் முகமும் கண்ணும் புன்முறுவலும்.

அன்றலர்ந்த செந்தாமரை மலர்போல இருந்தன நயனங்கள்.

இந்தப் பெருமான்தான் பாட்டி சொல்லிய கண்ணன் என்று விளக்கம் கொடுத்தாள் தாய்.

அப்படியே ஆசையோடு பார்த்தாள் பெண்.

அதைவிட ஆசையோடு ஒரு சாயலில் வளைந்து அன்பொழுகக் கடைக்கண்ணால் தன்னையே வளைத்து வளைத்துப் பெருமான் பார்ப்பது போல இருந்தது பெண்ணுக்கு.

திகைத்து மயங்கிவிட்டாள் பெண்.

அவளை அப்படியே ஒரு மோக வலைக்குள் சிக்க வைத்துவிட்டான் பெருமான்.

ஒரு சுண்டு சுண்டி பெண்ணைத் தன்வசப்படுத்தி சிக்க வைத்துவிட்டான் பெருமான்.

அவன் மயம் ஆகிவிட்டாள் பெண். தனித்து நிற்க முடியவில்லை.

இந்த ஞாபகம் ஒவ்வொன்றாய் படலம் படலமாய் இப்பொழுது விரிந்து கண்முன் வருகிறது பெண்ணுக்கு.

எப்படித்தாங்க முடியும் பெண்ணால்?

கோபம் விலகி, தோழிமார்களிடம் கெஞ்சி வேண்டுகிறாள்.

*பெருமானிடம் போங்கள். என் நிலையை எடுத்துச் சொல்லுங்கள். ஆறுதலாக அவன் ஒரு வார்த்தை சொன்னால் போதும்.*

*அப்படியே அவன் கழுத்தில் கிடந்தசையும் வன மாலையை - கதம்பப் பூமாலையை வாங்கி வாருங்கள். அதில் ஒரு கண்ணியையாவது வாங்கி வாருங்கள்.*

*வாங்கி வந்து அதை "என் மார்பில் போடுங்கள்" என்று கெஞ்சுகிறாள் பெண்.*

**கஞ்சைக் காய்ந்த கருவில்லி**
**கடைக்கண் என்னும் சிறைக்கோலால்**
**நெஞ்சூ(டு) உருவ ஏஉண்டு**
**நிலையும் தளர்ந்து நைவேனை**
**அஞ்சேல் என்னான் அவன்ஒருவன்**
**அவன் மார்(பு)அணிந்த வனமாலை**
**வஞ்சி யாதே தருமாகில்**
**மார்பில்க் கொணர்ந்து பூட்டீரே!**

*வாழ்க்கை என்றாலே பிரச்சனைதான். படித்தவன், பாமரன், ஏழை, பணக்காரன், நல்லவன், கெட்டவன் எல்லோரையும் புரட்டிப் புரட்டி எடுக்கிறது பிரச்சினை.*

*பிரச்சினை இல்லை என்றால் வாழ்க்கையும் இல்லைதான்.*

*காதலுக்கு உயிரும் உணர்வும் கொடுத்து வாழ வைப்பதும் பிரச்சினை தான்.*

## நினைப்பது ஒன்று நடப்பது ஒன்று – 3

ஏழைக் குடும்பத்தில் ஒரு பெண். குடிசை அவள் வீடு.

யார் செய்த புண்ணியமோ பெரிய பணக்காரன் மகன் அவளைக் கல்யாணம் பண்ணிக் கொண்டான்.

மாட மாளிகை கூடகோபுரத்தோடு அரண்மனை போல இருக்கிறது, மாப்பிள்ளையின் வீடு. நன்செய், புன்செய், தோப்பு, ரொக்கம் எல்லாம் ஏராளம்.

வைர வைடூர்யமாய் ஜொலிக்கிறது அவள் நகைகள். கட்டுவதெல்லாம் காஞ்சிபுரம் பட்டுப்புடவை தான்.

அன்பைப் பொழிந்து கொண்டே இருக்கிறான் கணவன். அவனும் இவளைப்போல அழகன்தான். நல்ல படிப்பாளி. பண்பாளனும் கூட.

பெண்ணின் வாழ்க்கையில் ஒரு குறைவும் இல்லை. அமைதியாகவும் ஆனந்தமாகவும் பூரிப்பில் திளைக்கிறாள் பெண்.

ஆனாலும் ஆறுமாதம் அல்லது ஒரு வருடம் முடிவதற்குள் அவள் இதயத்தில் ஓர் ஏக்கம், ஒரு சோர்வு, இனந்தெரியாத ஒரு தளர்ச்சி ஏற்படுகிறது.

*தாய்வீட்டுக்கு வருகிறாள். பெற்றெடுத்த தாயைப் பார்த்த உடனேயே அவளுடைய தளர்ச்சியும், சோர்வும் ஓடி விடுகின்றன. புதிய பிறப்பே பெற்று விடுகிறாள் பெண்.*

*தாயோடு இரண்டு மூன்று நாட்கள் அந்தச் சின்னஞ்சிறு குடிசையில் வாழ்ந்து விட்டால் போதும். அவளுடைய உணர்ச்சியில் புதிய ரத்தம் பாய்ந்து விடுகிறது.*

*ஊக்கமும் எழுச்சியும் பெற்று நிமிர்ந்து நிற்கிறது அவள் உள்ளம்.*

*தாயைப் பார்த்தாலே போதும். அவள் பார்வையிலேயே ஒரு ஜீவசத்து நிரம்பி இருக்கிறது.*

*கல்யாணம் ஆகிப்போன பெண்ணின் நிலையே இது என்றால் குழந்தைகளைப் பற்றிச் சொல்லவா வேண்டும்?*

*தாயின் அன்பான பார்வைதான் சாப்பாடு. அதுதான் தண்ணீர். அதுதான் உயிர். அதுதான் மனக்கவலையை எல்லாம் நீக்கும் சஞ்சீவி.*

*காதலின் கதையும் அப்படித்தான்.*

*ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டாலே போதும். புன்முறுவல் பூத்துக் கொண்டாலே போதும். காதல் செழித்து வளரும்.*

*முகத்தை ஒருதடவை காட்டினாலே போதும். ஒரு சிரிப்புச் சிரித்தாலே போதும்.*

*“என்ன இப்படி ஒரு மாதிரியாக இருக்கிறாய். கவலையை விடு” என்று இரண்டு வார்த்தை ஆறுதலாகச் சொன்னால் போதும்.*

*கோட்டையும் கொத்தளமுமாக எழுந்து நிற்கும் கவலைகள் எல்லாம் தூள் தூளாய் நொறுங்கிவிடும்.*

*அன்புக்காகவும், ஆதரவுக்காகவும் அப்படி ஏங்கித் தவிக்கிறது உலகம்.*

*‘நம்மை ஒரு பொருளாக அங்கீகரிக்க வேண்டுமே’ என்கிற தவிப்புத்தான் மனித உள்ளத்தைத் துளை போட்டுக் குடைகிற துயரம்.*

லியோ டால்ஸ்டாய் மாபெரும் சிந்தனையாளர். உலகப் பிரசித்திப் பெற்ற கலைஞர். கருணையே உருவான ஞானி.

அவர் ஒரு கூட்டத்தில் பேசப் போகிறார். அவரைப் பார்க்க ஆண்களும் பெண்களும் கூடிவிட்டார்கள்.

ஏழைச்சிறுவன் ஒருவன். ஆவலோடு டால்ஸ்டாயைப் பார்த்துக் கொண்டே நிற்கிறான்.

அந்தச் சிறுவனைப் பார்த்த டால்ஸ்டாய் அவன் பக்கம் வந்து அவன் கையைப் பிடித்தார். புன்முறுவல் பூத்தார். அவன் முதுகைத் தடவிக் கொடுத்தார்.

"அந்தப் பையன் அப்பொழுது பெற்ற ஆனந்தத்துக்கு அளவே இல்லை" என்று எழுதி இருக்கிறார்.

"அவன் கையை அவர் பிடிக்கும் பொழுது ஆனந்தத்தைத் தாங்க முடியாமல் அவன் உடம்பெல்லாம் நடுங்கியது" என்றும் எழுதி இருக்கிறார்.

அதே டால்ஸ்டாய் சாரட் வண்டியில் ஒரு தடவை மாஸ்கோ நகர வீதியில் வந்து கொண்டிருக்கிறார். பிச்சைக்காரர் கூட்டம் அவர் வண்டியைச் சுற்றி முற்றுகையிட்டது.

"பிரபு, நாங்கள் பசியால் துடிக்கிறோம். எங்களுக்கு ஏதாவது கொடுத்து உதவுங்கள்" என்று கூப்பாடு போட்டார்கள் அவர்கள்.

டால்ஸ்டாய் நீண்ட அங்கி அணிந்திருக்கிறார். அங்கியின் இரண்டு பக்கங்களிலும் பெரிய பெரிய பைகள். பைக்குள் கையைவிட்டுத் தடவுகிறார். ஒரு காசுகூடப் பையில் இல்லை.

வேதனையோடு கூட்டத்தைப் பார்த்து, "சகோதரர்களே என் பையில் ஒன்றும் இல்லையே" என்று வருந்தினார்.

அவ்வளவுதான். கூட்டத்தில் உள்ள அத்தனை பேரும் ஒரே குரலில், "பெருமானே! எங்களுக்குக் காசு வேண்டாம். சகோதரர்களே என்று எங்களைச்

சொன்னீர்களே! அதைத் திரும்பத் திரும்பச் சொல்லுங்கள். எங்களுக்கு அது ஒன்று போதும்" என்று கதறினார்கள்.

அங்கீகரிக்க வேண்டுமே என்பதற்காக மன்பதைக் கூட்டம் என்ன பாடுபடுகிறது. எப்படி எல்லாம் ஏங்கித் தவிக்கிறது.

குழந்தைகளும், காதலர்களும், பக்தர்களும், உலகம் முழுவதுமே அங்கீகாரம் ஒன்றுக்காகவே தவிக்கிறது. ஏங்குகிறது. உருகுகிறது.

ஒரு பெண். கண்ணன் என்றால் அவளுக்கு உயிர்.

கண்ணனும் ஆரம்பத்தில் மிக்க பிரியமாகத்தான் வளைத்து வளைத்து இவளைப் பார்க்க ஓடிவருவான். ஆவலோடு இவளை மாறி மாறிப் பார்ப்பான். அள்ளி எடுத்து மடியில் வைப்பான். கொஞ்சுவான். குலாவுவான். மாறி மாறி முத்தம் கொடுப்பான்.

அவள் உதறி நழுவினாலும் விடமாட்டான். கெஞ்சுவான். நீதான் எனக்கு உயிர். உன்னை நான் கைவிட மாட்டேன் என்று சத்தியம் செய்வான்.

நாளும் பொழுதும் இப்படி ஓடின. பிறகு ஆளையே காணவில்லை.

வருவான் வருவான் என்று பெண் எதிர்பார்த்தாள். ஒரு தடவை வந்து முகத்தைக் காட்டினால் போதுமே என்று மயங்கினாள்.

"சௌக்கியமா? சந்தோஷமாக இரு. பயப்படாதே!" என்று நாலு வார்த்தை சொன்னால் போதுமே என்று ஏங்கினாள்.

தரிசனத்திலும் அங்கீகாரத்திலும் அப்படி ஈடுபாடு கொண்டாள் பெண்.

அவன் வரவே இல்லை.

இரவும் பகலும் எதிர்பார்த்து எதிர்பார்த்து ஏமாந்தாள் பெண். அழுகை அழுகையாக வரும் பெண்ணுக்கு. அவ்வளவையும் அடக்கிக் கொண்டாள்.

பலசமயம் விம்மிப் பெருமூச்சு விடுவாள். அவளை அறியாமலே கண்ணீர் மாலை மாலையாகக் கோத்து நிற்கும்.

தோழிமார்களிடம் வேண்டுகிறாள். அவன் வாய் வைத்து ஊதும் குழலில் நீரைவிட்டு நிரப்பி, அதை என் முகத்தில் தெளிக்க மாட்டீர்களா? என்று கதறுகிறாள்.

**அழிலும் தொழிலும் உருக்காட்டான்**
**அஞ்சேல் என்னான் அவன்ஒருவன்;**
**தழுவி முழுவிப் புகுந்தென்னை**
**சுற்றிச் சுழன்று போகானால்;**
**தழையின் பொழில்வாய் நிரைப்பின்னே**
**நெடுமால் ஊதி வருகின்ற**
**குழலின் தொளையின் நீர்கொண்டு**
**குளிர வாய்முகத்துத் தடவீரே !**

மேலும் சொல்லுகிறாள் பெண்.

"அவனை என்னால் மறக்க முடியவில்லை. அந்தப் பாவியை மறக்க முடியவில்லை. வேறு எதைப்பற்றியும் என்னால் யோசிக்க முடியவில்லை.

உங்களைக் கும்பிட்டு வேண்டுகிறேன். அவன் நடந்து போன இடத்தில் அவன் காலடிப்பட்ட புழுதியை எடுத்து வந்து என் உடம்பெல்லாம் பூசுங்கள். சந்தனத்தைப் பூசுவதைப் போலப் பூசுங்கள். அதுபோதும் எனக்கு."

**நடைஒன்(று) இல்லா நானிலத்து;**
**நந்த கோபன் மகன்என்னும்**
**கொடிய கடிய திருமாலால்**
**குளப்புக் கூறு படப்பட்டு**
**புடையும் பெயரகில்லேன் நான்**
**போட்கன் மிதித்த அடிச்சுவட்டில்**
**பொடித்தான் கொணர்ந்து பூசீர்கள்**
**போகா உயிரின் உடம்பையே !**

பாடல்கள் ஒவ்வொன்றும் கணகண என்று ஒலிக்கின்றன. கண்ணன் மறைந்து விடுவான். பெண்ணும் மறைந்து விடுவாள்.

அன்பு என்னும் தத்துவமும், அதுவிடும் பெரு மூச்சும் எப்பொழுதும் நம் கண்முன் நிற்கும்.

# நினைப்பது ஒன்று நடப்பது ஒன்று - 4

ஒன்றையும் எதிர்பாராதவர்களுக்கு யாதொரு கஷ்டமும் இல்லை.

ஒன்றை எதிர்பார்த்து நிற்பவர்களுக்கு நிம்மதி இருக்காது.

நிச்சயம் கிடைக்கும் என்று எதிர் பார்த்த ஒன்று கிடைக்காவிட்டால் துன்பம் தான்.

நோயானது உடம்பில் உட்கார்ந்து கொண்டு தொந்தரவுபடுத்துவது போல, இந்த ஏமாற்றம் உணர்ச்சியில் உட்கார்ந்து கொண்டு சதா தொல்லைப் படுத்தும்.

ஏமாற்றத்தின் வேதனை கண்ணனுக்கும் நன்றாகத் தெரியும்.

பெண்ணின் உறவு கிடைத்தபொழுது அவளை எதிர்பார்த்து எத்தனை நாட்கள், எத்தனை பொழுதுகள் அவன் காத்துக் கிடந்திருக்கிறான்.

அப்படிக் காத்துக் கிடக்கும் போது அவன் எப்படி எல்லாம் துடியாய்த் துடித்திருக்கிறான்.

சில சமயங்களில் சொன்னபடி கண்ணனை வந்து சந்திக்க முடியாமல் பெண்ணுக்கு நேர்ந்ததுண்டு.

எதிர்பார்த்து ஏமாந்த கண்ணன் அந்த நேரங்களில் புழுவாய்த் துடித்தான்.

வேண்டும் என்றே தன்னை அவமானப்படுத்தி ஏமாற்றிவிட்டாள் பெண் என்றுகூட எரிச்சல் அடைந்திருக்கிறான்.

உலகமே ஒத்துப்பேசி தன்னை மோசம் செய்து விட்டது என்றுகூட வருந்தி இருக்கிறான்.

ஒன்றை எதிர்பார்த்து ஏமாறுவது எவ்வளவு துன்பம் என்பது கண்ணனுக்குத் தெரியும்.

ஒருவரை எதிர்பார்க்க வைத்து ஏமாற்றுவது எவ்வளவு கொடுமை என்பதும் அவனுக்கு நன்றாகவே தெரியும்.

எல்லாவற்றையும்விட தன்மேல் உயிரையே வைத்திருக்கும் ஒருவரை அலட்சியப்படுத்துவது பெரிய பஞ்சமா பாதகம் என்பதும் அவனுக்கு நன்றாகவே தெரியும்.

இவ்வளவும் தெரிந்திருந்தும் பெண்ணை ஏமாற்றிவிட்டான் கண்ணன்.

வருகிறேன் வருகிறேன் என்று சொல்லி அவளைக் காக்க வைத்துப் பரிதாபமாக ஏமாற்றி விட்டான் கண்ணன்.

ஏமாற்றத்துக்கு உள்ளான பெண், மனம் ஒடிந்து தவிப்பாளே என்று பதறவில்லை அவன்.

நொந்து நொந்து அவள் கரைவாள். உணர்ச்சி ஓய்ந்து அவள் உயிர் தத்தளிக்கும்.

அப்படித் தத்தளித்துத் தடுமாறும் உயிரை தனக்காகவே கையில் பிடித்து வைத்துக் கொண்டிருப்பாள் என்று ஒரு கணமாவது அந்தக் கண்ணன் யோசித்துப் பார்த்தானா?

என்ன ஆனாள் என்று அவன் ஒருதடவையாவது கவனித்தானா?

அன்பு ஒன்றுக்காகவே, ஆறுதல் ஒன்றுக்காகவே போகின்ற உயிரைப் போகவிடாமல் பிடித்து வைத்துக் கொண்டிருக்கும் அபலையை,

கடைசியாக ஒருதடவையாவது பார்த்து விடுவோம் என்று அந்த மோசக்காரன் நினைத்தானா?

இல்லை, இல்லவே இல்லை.

பொறுப்பில்லாத குறும்புக்காரன் அவன்.

அவனுடைய குறும்புத்தனம் ஒரு உயிரை கதறக் கதற அடிக்கிறதே என்னும் நினைப்பே இல்லாத கொடுமைக்காரன் அவன்.

**"உள்ளே உருகி நைவேனை**
**உளளோ இலளோ என்னாத**
**கொள்ளை கொள்இக் குறும்பன்"**

என்று கண்ணனை நோக்கி இடிக்கிறது பெண்ணின் இதயம்.

விருந்தினர் வருவார் என்று வடை பாயசத்தோடு சமையல் பண்ணி வைக்கிறாள் பெண்.

எதிர்பாராத காரணமாக விருந்தினர் வரவில்லை. அப்படியே சோர்ந்து விடுகிறாள் பெண்.

விருந்தினர் வரவில்லை. சாப்பாடு மிச்சம். வயிறுபுடைக்க நாமே மாறி மாறிச் சாப்பிடுவோம் என்று மகிழவா செய்கிறாள் பெண்.

ஆற்றாமைப்படுகிறாள். உணர்ச்சியே கசந்து விடுகிறது அவளுக்கு.

பதார்த்தம் எதிலும் அவளுக்கு ருசி இல்லை. யார் யாருக்கோ அதை அள்ளிக் கொடுக்கிறாள்.

வாங்குவதற்கு ஆள் இல்லாவிட்டால், ஊசிப்போக விடுகிறாள். மாட்டுத் தொட்டியில் கொட்டுகிறாள். இல்லாவிட்டால் வெளியே கொண்டு வீசுகிறாள்.

சாதாரணச் சாப்பாட்டிலேயே மனம் இப்படிக் கசந்து விடுகிறது.

கண்ணனுக்காகவே பிறந்து, அவனுக்காகவே வளர்ந்து, அவன் உறவுக்காகவே உடம்பையும்,

உள்ளத்தையும் புடம்போட்டுப் புடம்போட்டு வாழ்ந்து கொண்டிருக்கிறாள் பெண்.

ஆனால் அவள் விருப்பம் நிறைவேறவில்லை.

தன்னை அங்கீகரிக்காமல் அலட்சியப்படுத்தி விட்டான் கண்ணன் என்னும் தீர்மானத்திற்கு வந்து விட்டாள் பெண்.

பிறகு உயிரைப் பற்றி அவளுக்கு என்ன அக்கறை. உடம்பைப் பற்றித்தான் என்ன அககறை?

ஆபரணங்களும் படாடோபமான ஆடை அணிகளும் அவளுக்குப் பாரமாக இருப்பதைப்போல, வளம் கொழிக்கும் அவள் மேனியும், மேனியில் உள்ள செழிப்பு மிக்க அங்கங்களும் அவளுக்குப் பாரமாக இருக்கின்றன.

**உள்ளே உருகி நைவேனை;**
**உளளோ இலளோ என்னாத**
**கொள்ளை கொள்இக் குறும்பனைக்**
**கோவர்த் தனனைக் கண்டக்கால்;**
**கொள்ளும் பயன்ஒன்(று) இல்லாத**
**கொங்கை தன்னைக் கிழங்கோடும்**
**அள்ளிப் பறித்திட்(டு) அவன்மார்பில்**
**எறிந்தென் அழலை தீர்வேனே !**

அற்புதமானப் பாட்டு. பாடப்பாட ஆண்டாளுடைய அனுபவமும் ஆனந்தமும் கனிந்து கனிந்து ஜொலிக்கும்.

மனித வாழ்க்கையை எவ்வளவு பரிவோடும் பாசத்தோடும் பார்த்து அனுபவிக்கிறார் ஆண்டாள்.

அப்படிப் பார்த்தால்தானே பாஷையானது தாளமும் இசையும் புடைசூழ கிட்டவந்து நெருங்கும்.

அப்படி நெருங்கி நெருங்கி உறவாடினால்தான் கவி பிறக்கும்.

மனம் என்பது உணர்ச்சிகள் விளையும் தங்கச் சுரங்கம்.

நேரான உணர்ச்சிகள் மட்டும் அல்ல, ஒன்றுக்கொன்று முரண்பட்ட உணர்ச்சிகளும் மனம் என்னும் சுரங்கத்தில் விளைந்து வந்த வண்ணமாக இருக்கும்.

மனதிலிருந்து உதித்துவரும் உணர்ச்சிகளையும், அதன் வேகங்களையும், நயங்களையும் நம்மவர்கள் பார்த்துப் பார்த்து பரவசப்பட்டிருக்கிறார்கள்.

சிக்மண்ட்பிராய்டு, ஜே. யு. ஐங் முதலிய மேல்நாட்டு நிபுணர்களும் இந்த அதிசயத்தைப் பார்த்து வியந்திருக்கிறார்கள்.

அந்த நிபுணர்கள் - பிராய்டு போன்ற மேல் நாட்டு நிபுணர்கள் தமிழ்ப்பாடல்களைப் பார்த்தால் - ஆண்டாள் பாசுரங்களை அனுபவிக்க நேர்ந்தால் அப்படியே மண்டி போட்டுப் பிரார்த்தனை செய்வார்கள்.

உண்மையான உணர்ச்சி அல்லவா கவி ரூபம் எடுத்து வருகிறது.

# விட்டகுறை தொட்டகுறை - 1

பிராமணர்கள் இந்தியா முழுவதும் இருக்கிறார்கள். எங்கிருந்தாலும் அவர்கள் பிராமணர்கள்தான்.

அவர்கள் முகத்தில் ஒருகளை இருக்கிறது. அன்பும் ஆர்வமும் அவர்களிடம் பொங்கிவழிகிறது.

ஆசாரமாகவும் பிராமணன் இருக்கிறான். ஆர்வம் பொங்கப்பொங்க உறவாடியும் பழகுகிறான். ஆசாரம் இல்லாதவர்களுடனும் பழகுகிறான்.

இந்த அருமையான பண்பாடு எப்படிக் கிடைத்தது பிராமணனுக்கு.

சங்கீதத்தில் ஈடுபாடு. பரதநாட்டியத்திலும் அப்படியே.

ஓவியம், வழிபாடு, பக்தி இவற்றில் உயிரையே வைத்திருக்கிறது அந்த இனம்.

சங்கீதம் முதலிய அம்சங்களை அவர்கள் கலாசாலையில் போய் படிப்பதில்லை. வீட்டுவீட்டுக்கு அது செழித்து வளர்கிறது. ஆணும் பெண்ணும் குழந்தையும் பாடிப்பாடி மகிழ்கிறார்கள். ஒவ்வொரு வீடும் கலைக்கோயிலாக இருக்கின்றன.

சமையல் பண்ணுவது, சாப்பிடுவது, கோலம் போடுவது எப்படி இயல்பாய் அமைந்துவிட்டனவோ, அப்படியே பாடுவது ஆடுவது அனுபவிப்பது ஆனந்தத்தில் திளைப்பது என்பனவும் அவர்களிடம் இயல்பாய் அமைந்துவிட்டன.

வேறு இனத்தார்களிடம் இந்தப் பண்பாடு இல்லையா என்று கேட்கலாம்?

அங்கொன்றும் இங்கொன்றுமாக மற்ற இனத்தார்களிடம் இந்தப் பண்பாடு இருக்கலாம்.

பிராமண இனத்தார்களிடம் இது வாழ்க்கை யோடு வாழ்க்கையாய் ஒன்றிவிட்டதைப் போல, மற்ற இனத்தார்களிடம் ஆர்வத்தோடு ஒன்றவில்லை.

இனி, ஒன்றிரண்டு பிராமணர் இந்தப் பண்பாட்டை விட்டு விலகிப் போயிருக்கலாம்.

மொத்தத்தில் அவர்களிடம் இந்தக் கலை உணர்வு பொருந்தி நிற்கிறது.

ஆனாலும் பிராமணர்களிடம் — தற்காலப் பிராமணர்களிடம் தைர்யம் இல்லை. உயிரைக் கொடுத்து எதிரிகளை விரட்டி அடிக்கும் வேகம் இல்லை. பழைய காலத்துப் பிராமணர்களிடம் அந்த வீரம் இருந்தது.

அதற்குக் காரணம் அவர்கள் பண ஆசை இல்லாமல் இருந்தார்கள். சேர்த்து வைக்கும் தரித்திரபுத்தி இல்லாமல் இருந்தார்கள்.

ஞானத்தையும் தெளிவையும் நம்பினார்கள்.

தர்ப்பைப்புல்லை வைத்துக் கொண்டே ரௌடிகளையும், போக்கிரிகளையும் அடக்கி விட்டார்கள்.

அரக்கர்கள் — ராட்சதர்கள் என்னும் சமூக விரோதிகளை ஒடுக்குவதற்கு, அவர்களுக்குச் சாதனமாக இருந்தது பேராசை இல்லாத யோக நெறிதான்.

போதும் என்ற திருப்திதான்.

எல்லாவற்றையும் நமக்கே சொந்தமாக்கிக் கொள்ள வேண்டும் என்னும் ஆசை இல்லாதவரைக்கும்,

அவர்களால் மன்னாதி மன்னர்களைக் கூட சொன்னபடி கேட்கும்படி செய்ய முடிந்தது.

காலப்போக்கில் அவர்கள் நிலை பிறழ்ந்து விட்டது. சம்பாத்யம் பண்ணுவதற்கே பாடம் படித்தார்கள். அதற்காகவே உத்யோகம் பார்த்தார்கள்.

பணம் வந்து குவிந்தது. சொத்து சுகம் என்று சேர்த்துவைத்தார்கள். பிறகு பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் தலையில் விழுந்துவிட்டது.

அவ்வளவுதான், தைர்யம் போய்விட்டது. பயம் வந்து விட்டது. பயந்தாம்கொள்ளியாய்ப் போய்விட்டான் பிராமணன்.

பணம் சொத்து என்று சேர்ந்துவிட்டால் பயம் வந்துவிடும். பூட்டு, சாவி எல்லாம் வந்துவிடும்.

நம்மைப் பாதுகாக்க நம்மால் முடியாது. பிறகு காவல்காரன்தான் துணை.

பூர்வ காலத்தில் கோயிலுக்குள் பக்தர்கள் தாராளமாகப் போவார்கள்; கர்ப்பக்கிரகத்துக் குள்ளேயே போவார்கள்.

தண்ணீர் கொண்டு போய் படிக்கட்டுகளை அலம்பி விடுவார்கள். மூர்த்திக்குக் குடம் குடமாய் தண்ணீரைத் தலையில் விட்டு அபிஷேகம் பண்ணுவார்கள்.

நந்தியா வட்டை முதலிய மலர்களை மூர்த்தியின் மேல் சார்த்தி அலங்கரிப்பார்கள்.

மூர்த்தியின் கையைப் பிடித்தும், காலைப் பிடித்தும், தொட்டும் துழாவியும் வழிபடுவார்கள்.

அப்பொழுதெல்லாம் கோயில் கோயிலாக இருந்தது. இப்பொழுதோ வெள்ளியும், தங்கமும், பணமும் வந்து கோயிலை மூடி விட்டன. அதனால் பக்தர்களுக்கும், தெய்வத்துக்கும் இடைவெளி ஏற்பட்டு எட்டாத தூரத்துக்கு போய்விட்டது.

இனி... வயதான பெண் தெரு வழியே தாராளமாக நடமாடுவாள். அதுவும் அழகில்லை என்றால் கவலையே இல்லை.

இளமையும் அழகும் உள்ள பெண் அப்படி நடமாட முடியாது; விலை உயர்ந்த ஆபரணங்கள் போட்டுக் கொண்டாலோ சொல்லவே வேண்டாம்.

உற்றார் உறவினர் வந்தாலும் கதவை ஓரளவு சார்த்தி அதன் பின்னால் நின்றுதான் பதில் உரைப்பாள். பல வீடுகளில் பூட்டிய கதவைத் திறக்கவே மாட்டார்கள் பெண்கள்.

கேள்வியும் பதிலும் ஜன்னல் வழியாகத்தான். பணம் அந்தப்பாடு படுத்துகிறது மனித ஜென்மத்தை.

அண்ட பிண்ட சராசரங்களை எல்லாம் படைத்தும் காத்தும் ஆனந்தமாய் விளையாடிக் கொண்டே இருக்கிறாரே கடவுள்... அவர் பணம், சொத்து என்று சேர்த்து வைத்தால் இந்த உல்லாச விளையாட்டில் ஓய்வே இல்லாமல் சதா செயல்பட முடியுமா? முடியவே முடியாது. அதனால்தான் பேரண்டம் முழுவதுக்கும் நாயகனான பெருமான் ஒரு காசு கூடச் சேர்த்து வைக்கவில்லை.

கையில் திரு ஓட்டை ஏந்திக் கொண்டு வீடு வீடாகப் போய் பிச்சை எடுத்துச் சாப்பிடுகிறார். அதுவும் இல்லாவிட்டால் மாடுகளையும் கன்றுகளையும் காட்டில் மேய விட்டு தன் வண்டியை ஓட்டுகிறார்.

உண்மையை உணர்ந்த பரம ஞானி ஆண்டாள். தத்துவங்களையும் சித்தாந்தங்களையும் கரைத்துக் குடித்த பெரிய பெரிய பண்டிதர்களைப் பார்த்தவர் ஆண்டாள்.

அவர்களிடம் அடிக்கடி ஒரு கேள்வியைக் கேட்பார் ஆண்டாள், "புலவர் சிகாமணிகளே... கடவுளை எப்பொழுதாவது நீங்கள் நேருக்கு நேராகப் பார்த்திருக் கிறீர்களா?" என்று. அத்தனை பேரும் "இல்லை" என்று ஒரே குரலில்தான் பதில் சொன்னார்கள். அவர்களில் ஒரு வியாக்யான கர்த்தா கேட்டார், "எம்பெருமானைத் தாங்கள் தரிசித்தது உண்டா?" என்று.

"ஓ! எப்பொழுதும் நான் அவனைப் பார்த்த படியேதான் இருக்கிறேன்" என்று சொல்லிவிட்டார் ஆண்டாள்.

"எப்படி இருக்கிறார் இறைவன்? எங்கே பார்த்தீர்கள் அவனை?" என்று ஒரு குறுக்குக் கேள்வி விழுந்தது.

"மாட்டுக்கும் கன்றுக்கும் பின்னே நடந்து போய் கொண்டே இருக்கிறான் பெருமான். பிருந்தாவனத்தில் மாடுகளை மேய விட்டு விட்டு, அவன் குதித்துக் குதித்துக் குழலூதிக் கொண்டே இருக்கிறான். உங்கள் கண்ணுக்கு அவன் தெரியவில்லையா?" என்றார் ஆண்டாள்.

சத்தம் இல்லாமல் ஒதுங்கி விட்டார்கள் பண்டிதர்கள். அந்த ஆண்டாளையே அந்த இறைவன் இப்பொழுது விளையாட்டுக் காட்டுகிறான். மாயமாய் மறைந்து ஒளிந்து விளையாடுகிறான் பெருமான்.

அடையாளம் சொல்லி... மேனி ஒரே கருப்பு, மனமும் அப்படித்தான் என்று சொல்லி... இப்படி ஒரு நபரை யாராவது பார்த்தீர்களா? என்று கேட்கிறார் ஆண்டாள். அவன் அலங்காரத் தோரணை நட்சத்திரங்கள் பூத்தவானம் போல இருக்குமாம்.

**பொருத்தம் உடைய நம்பியை**
**புறம்போல் உள்ளும் கரியானை**
**கருத்தைப் பிழைத்து நின்றஅக்**
**கருமா முகிலைக் கண்டீரே!**
**அருத்தித் தாரா கணங்களால்**
**ஆரப் பெருகு வானம்போல்**
**விருத்தம் பெரிதாய் வருவானை**
**விருந்தா வனத்தே கண்டேனே!**

கண்ணனுடைய கண்களும் அவன் பார்த்த பார்வையும் அப்படியே பெண்முன் வந்து நிற்கின்றன.

மழைக்காலத்தில் பூத்து தண் என்றிருக்கிற தாமரைப் புஷ்பம் போல் ஜொலிக்கின்றன அவன் நயனங்கள்.

அந்தப் பார்வையில்தான் எத்தனை பரிவு, எத்தனை வேட்கை, எத்தனை வசியம்.

*அப்படியே பாசக் கயிற்றை வீசி சுண்டி இழுத்து விட்டது பெண்ணை. வசப்பட்டு விட்டாள் பெண்.*

*இப்பொழுது ஆசாமியைக் காணவில்லை. விசாரித்து விலாசம் தேட வேண்டியதுதானே...*

*பெண் சொல்கிறாள்:*

**கார்த்தண் கமலக் கண்என்னும்**
**நெடுங்கயிற்றால், படுத் தென்னை**
**ஈர்த்துக் கொண்டு விளையாடும்**
**ஈசன் தன்னைக் கண்டீரே !**
**போர்த்த முத்தின் குப்பாயப்**
**புகர்மால் யானைக் கன்றேபோல்**
**வேர்த்து நின்று விளையாட**
**விருந்தா வனத்தே கண்டேனே !**

*யானையின் நெற்றியில் தோலுரிந்து வட்ட வட்டமாய் வெண்புள்ளிகள் விழுந்து கிடக்கும். முத்துச்சரம் கோர்த்து முகபடாம் வைத்துப் போர்த்தியது போல இருக்கும்.*

*அந்த யானையின் கன்று உற்சாகத்தால் துள்ளிக் குதித்து விளையாடுவது பார்க்கப் பார்க்க அழகாக இருக்கும். பிருந்தாவனத்தில் அப்படி விளையாண்டானாம் கண்ணன். வேர்வை சொட்டச் சொட்ட விளையாண்டானாம் கண்ணன்.*

*அங்குதான் கண்ணனைப் பார்த்து ஆட்பட்டு விட்டாள் பெண்.*

# விட்டகுறை தொட்டகுறை - 2

இப்பொழுது ராஜா அண்ணாமலை மன்றத்தில் நடக்கும் தமிழிசைக் கச்சேரிகள், நாற்பத்து ஐந்து வருடங்களுக்கு முன், செயிண்ட் மேரீஸ் ஹாலில் நடந்து வந்தது.

1946ஆம் வருடம் என்று நினைக்கிறேன். அப்பொழுது சென்னை மாநகர போலீஸ் கமிஷனராக ஓர் ஐ.சி.எஸ். அதிகாரி இருந்தார். அவருடைய மகள் பரத நாட்டிய அரங்கேற்றம் அன்று.

அந்த விழாவுக்கு ரசிகமணி, டி.கே.சி. அவர்கள் என்னை அழைத்துக் கொண்டு போனார்கள். அரங்கேற்றம் பண்ணும் பெண்மணியை ரசிகமணி, டி.கே.சி. அன்று வாழ்த்திப் பேச வேண்டும் என்று ஏற்பாடு.

இசை அரங்க வாசலில் போய் எங்கள் கார் நின்றது. பிரமுகர்கள் பலர் வந்து ரசிகமணியை வரவேற்கிறார்கள்.

அப்படி வரவேற்றவர்களில் ஒருவர் பெரும் தொழிலதிபர், கல்லூரிகள் போன்ற கல்வி நிலையங்கள் சில அவர் பொறுப்பில் இருந்தன.

இன்னொருவர் டி.கே.சியின் உற்ற நண்பர். அவர் ஒரு கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றினார்.

பேராசிரியரை தொழிலதிபருக்கு அறிமுகப் படுத்தினார் டி.கே.சி.

வெறும் வாத்தியார்தானே இவர் என்னும் செருக்கில் அவரை ஏறெடுத்துப் பார்க்கவில்லை முதலாளி. அலட்சியமாகப் புறக்கணித்து விட்டார்.

பேராசிரியர் வளைந்து நெளிந்து தொழிலதி பரிடம் ஏதோ பாராட்டிச் சொன்னார்.

அந்த வார்த்தைகளைக் காதிலேயே வாங்கிக் கொள்ளவில்லை. தன்னொத்த பெருந்தனக்காரர்களிடம் சல்லாபம் செய்ய ஆரம்பித்து விட்டார் முதலாளி.

நானும் டி.கே.சியும் அரங்கத்துக்குள் வந்தோம். முன் வரிசையில் பிரமுகர்கள் அமர்ந்திருந்தார்கள். நடுநாயகமாக ரசிகமணி அமர்ந்தார்கள்.

அவர்களுக்கு இடதுபுற நாற்காலியில் நான் இருந்தேன். வலதுபுற நாற்காலி வெறுமனே கிடந்தது. அதையும் தாண்டி ஆசனங்களில் பிரமுகர்கள் இருந்தார்கள்.

ஐந்து நிமிடங்கள்கூட ஆகி இருக்காது. நடனம் ஆரம்பமாகி விட்டது. அது ஆரம்பம் ஆகும்போதே சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் அவர்கள் அங்கு வந்தார்கள்.

காலியாக இருந்த ஆசனத்தில் அழைத்து வந்து ராதாகிருஷ்ணன் அவர்களை அமரச் செய்தார் ராஜா சர் முத்தையாச் செட்டியார்.

டி.கே.சி.யும் சர். ராதாகிருஷ்ணன் அவர்களும் பழைய நண்பர்கள். மனம் விட்டு அளவளாவிக் கொண்டிருக்கிறார்கள்.

பின் வரிசையில் இருந்த அந்தப் பெருந்தனக்காரர் பூனை போல பம்மிப்பம்மி வந்தார்.

மேல் துண்டை எடுத்து இடுப்பில் கட்டிக் கொண்டார். வளைந்து நெளிந்து கூனிக்குறுகி ராதாகிருஷ்ணனைக் கும்பிட்டார்.

அவர் பாதங்களைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொண்டார்.

அப்படியே ராதாகிருஷ்ணன் காலடியில் உட்கார்ந்து இரண்டொரு வார்த்தைகள் பேசிவிட்டு நகர்ந்துவிட்டார்.

நடனம் நடந்து கொண்டிருக்கிறது. அனுபவிக்க வேண்டிய காட்சி அல்லவா இது. ஐந்து ரூபாய், பத்து ரூபாய் என்று கொடுத்து டிக்கட் வாங்கியே வந்து அனுபவிக்க வேண்டிய காட்சிதான் இது.

பிரமுகர்கள் பலரும் பார்த்து இந்த அட்டகாசமான வேடிக்கையை அனுபவித்தார்கள்.

நடனம் நடந்து முடிந்தது. பாராட்டும் நடந்து முடிந்தது. நானும் டி.கே.சி.யும் திரும்பி வந்து கொண்டிருக்கிறோம்.

அப்பொழுது ரசிகமணி இந்தக் காட்சியை ஞாபகப்படுத்திச் சொன்னார்கள்.

"மனிதர்களுக்கு ஒருவர் மேலும் மரியாதை இல்லை. பயந்தான் இருக்கிறது. பயம் ஒழிந்தால் அல்லவா மரியாதை வரும்" என்று முடித்தார்கள்.

பல்கலைக் கழகங்களின் மானியக்குழுவுக்கு ராதாகிருஷ்ணன் தலைவர் என்பதையும் ரசிகமணி சுட்டிக் காட்டினார்கள். தொழிலதிபர் கல்வி நிலையங்களின் தாளாளர் அல்லவா?

வலுவில்லாதவர்களை விரட்டி விரட்டி அடிக்கிறான். ஆனால் வலுத்தவர்களிடமோ பம்மி விடுகிறான். பாவலாக்கு மேல் பாவலாக்களைப் போட்டுக் காட்டுகிறான்.

மனித ஜாதகத்தை அப்படி எழுதிவிட்டார் கடவுள்.

அந்தக் கடவுளே மனிதனாக அவதாரம் எடுக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். கிட்டத்தட்ட அவர் கதையும் அப்படித்தான்.

மகாத்மா காந்தி போல அபூர்வ அவதாரம் எடுக்கும் பொழுதுதான் விதிவிலக்கு. மற்றப்படி எல்லாக் கட்டங்களும் ஒரே போக்குத்தான்.

**எ**ங்கும் நிறைந்த பரம்பொருள் கண்ணனாக அவதாரம் எடுத்துவிட்டார்.

சிறுவன் கண்ணன் படுத்துகிற பாடு கொஞ்சம் நஞ்சம் அல்ல. ஆயர்பாடியையே ஒரு கலக்குக் கலக்கி விடுகிறான்.

மலையைத் தூக்கிக் குடையாகப் பிடிக்கிறான். கன்றைத் தூக்கி கிறுகிறு என்று நாலு சுற்றுச் சுற்றி விளாமரத்தில் வீசி எறிகிறான். சீறிப்பாயும் பாம்பின் படத்தின் மேல் பாய்ந்து நடனம் ஆடுகிறான்.

கோபிகைகளின் சேலை, ரவிக்கை எல்லாவற்றையும் சுருட்டி மடக்கி ஒளித்து வைத்து விடுகிறான்.

அவன் வீட்டில் இருந்தால் ஆயர்பாடியே அலறுகிறது. பசுவை மேய்க்கக் காட்டுக்கு வந்தாலோ அண்ட பகிரண்டமே அலறுகிறது.

யாராலும் அடக்க முடியவில்லை கண்ணனை.

ஆனால் அவனுக்கு ஓர் அண்ணன். பெயர் பலதேவன். அண்ணன் ஒரு முழிமுழித்தால் போதும். அப்படியே சப்த நாடியும் ஒடுங்கி விடுகின்றன கண்ணனுக்கு.

வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் இருக்கத்தானே செய்கிறான்.

அந்தக் கண்ணன் நீருண்ட காளமேகம் போல் தளதள என்று இருக்கிறான். பசுக்களை, காட்டுக்குக் கொண்டு போய் மேப்பதென்றால் அவனுக்கு ஒரே ஆனந்தம். குறும்புத் தனம் செய்வதிலும் ஆனந்தம்தான். ஆனாலும் அண்ணன் என்றால் அடங்கி விடுவான்.

**“பட்டி மேய்த்தோர் கார் ஏறு;**
**பல தேவற்கோர் கீழ்க்கன்று."**

*மற்றவர்களுக்கு இடியோடும் மின்னலோடும் கூடிய காளமேகந்தான். பலதேவனுக்கோ கன்றுக்குட்டி மாதிரியேதான்.*

*அந்தக் கண்ணன் நடந்து வந்தால் 'ஜம் ஜம்' என்று இருக்கும். பூமியே குலுங்கித் தாளம் போடுவது போலிருக்கும் அவன் ஒய்யார நடை.*

*பெரிய பட்டத்து யானை - கொம்பன், எப்படி அடிமேல் அடி எடுத்து வைத்து நடந்து வரும்? அப்படி ஒரு கம்பீரம், வனப்பு, தோரணை அவ்வளவையும் கண்ணனுடைய ராஜ நடையில் பார்க்கலாம்.*

*அந்த நடையே பெண்ணை மயக்கிவிட்டது. நடையழகில் மனதைப் பறிகொடுத்த பெண்ணை தவிக்கவிட்டு விட்டான் கண்ணன். "அவனை இந்தப் பக்கம் பார்த்தீர்களா" என்று கேட்கிறாள் பெண்.*

**"இட்டீறு இட்டு விளையாடி**
**இங்கே போதக் கண்டீரோ ?"**

*மேய்ந்த பசுக்களை அக்கறையோடு நீர்த்துறைப் பக்கம் அழைத்துப் போவான் கண்ணன். நீர் அருந்த விடுவான்.*

*இப்போது பாடல் முழுவதையும் பாருங்கள்.*

**பட்டி மேய்த்தோர் கார் ஏறு;**
**பலதே வுற்கோர் கீழ்க்கன்றாய்;**
**இட்டி றிட்டு விளையாடி,**
**இங்கே போதக் கண்டீரே ?**
**இட்ட மான பசுக்களை**
**இனிது மறித்து நீர்ஊட்டி,**
**விட்டுக் கொண்டு விளையாட**
**விருந்தா வனத்தே கண்டேனே !**

*பசுக்கள் மேய்ந்து முடித்தவுடன் தாகத்துக்கு தண்ணீர் குடிக்க வேண்டும். தண்ணீர் ஊட்ட வேண்டுமே என்னும் அக்கறையில் மந்தையை ஒன்றாகத் திரட்டி நீர்த்துறைக்கு மறித்து ஓட்டுகிறான் கண்ணன்.*

பசுக்கள் என்றால் அவ்வளவு இஷ்டம் அவனுக்கு. பசுக்கள்தாம் அவனுக்கு உயிர்.

பசுக்கள் காட்டில் மேய்ந்து கொண்டிருக்கும். கண்ணனோ அங்குப் பூத்துக் குலுங்குகிற புஷ்பங்களைப் பறித்து மாலையாகத் தொடுப்பான். அப்படியே கழுத்தில் போட்டுக் கொள்வான். பூச்சரங்களை தலையில் குடுமியோடு சேர்த்து வைத்துக் கட்டியும் கொள்வான்.

காட்டுப்பூக்கள் பல நிறத்தில் இருக்கும். பச்சை, சிவப்பு, நீலம், மஞ்சள் என்று விதவிதமான வண்ணங்களில் ஒளிரும் மலர்கள்.

பலவகை வண்ணங்களோடு கூடிய வனமாலை கண்ணனுடைய மேகம் போன்ற நீலநிற மார்பில் கிடந்து அப்படியும் இப்படியும் அசைந்து புரள்வது ஓர் அழகுதான்.

மின்னலானது மேகத்தை விட்டு விலகி, பிறகு ஒன்றை ஒன்று கலந்து தழுவினால் எப்படி இருக்கும். அப்படிக் கண்கொள்ளாக் காட்சியாக இருக்குமாம்; அவனுடைய அழகிய திருமேனியும் அதில் கிடந்து அசையும் வனமாலையும்.

இந்த அழகிய திருக்கோலத்தைப் பார்த்துப் பார்த்து அனுபவித்திருக்கிறாள் பெண்.

அனுபவித்ததோடு நிற்கவில்லை. மனதையே பறிகொடுத்துவிட்டாள் பெண்.

**"கணங்க ளோடு மின்மேகம்**
**கலந்தால்ப் போல வனமாலை**
**மினுங்க நின்று விளையாட."**

என்று மயங்குகிறாள் பெண்.

ஆயர்பாடியில் உள்ள வெண்ணெயைத் தெரிந்தும் தெரியாமலும் அள்ளி அள்ளி உண்டவன் அவன்.

அதனால் அவன் பக்கத்தில் வரும் பொழுதே நெய்வாசம் அடிக்கும்.

''குனுங்கு நாறி'' என்று அனுபவித்துச் சொல்கிறாள். ஐந்து நிமிஷம் கூட என்னைத் தனிமையில்

*விட்டு வைக்க மாட்டான். என்னையே சுற்றிச் சுற்றி வருவான். கொஞ்சுவான், குலாவுவான். "அனுங்க என்னைப் பரிவு செய்து."*

*இப்படி எல்லாம் கூடிக் குலாவிய கண்ணன் இப்பொழுது எங்கே போனான் என்று தெரியவில்லை.*

**அனுங்க என்னைப் பரிவு செய்து,**
**ஆயர் பாடி கவர்ந்துண்ணும்,**
**குணுங்கு நாறிக் குட்டேற்றைக்**
**கோவர்த் தனைக் கண்டீரே ?**
**கணங்க ளோடு மின்மேகம்**
**கலந்தால் போல வனமாலை**
**மினுங்க நின்று விளையாட**
**விருந்தா வனத்தே கண்டேனே !**

*அற்புதமாய் இருக்கின்றன பாடல்கள். விலை மதிக்க முடியாத செல்வத்தை - கலைப் பொக்கிஷத்தை நம் கையில் முன்னோர்கள் கொடுத்துவிட்டுப் போயிருக்கிறார்கள்.*

*அவர்களில் ஆண்டாளும் ஒருவர். இந்தப் பாசுரங்களை அடிக்கடி பாடி அனுபவிக்க வேண்டும். அனுபவிக்க, அனுபவிக்க நம் ஆயுள் நாள் பத்து வருடம் பதினைந்து வருடம் என்று கூடுதலாக ஏறிக்கொண்டே வளரும்.*